MAHAMAHOPADHYAYA
Dr. U.V. SWAMINATHA IYER LIBRARY
TIRUVANMIYUR, MADRAS 41

கணிமேதையார்

இயற்றிய

# ஏலாதி,

மஹாவித்வான்

கோ. இராஜகோபாலப்பிள்ளையவர்கள்

இயற்றிய

உரையுடன்.

---

இது

சென்னைப் பச்சையப்பன் காலேஜ்

தமிழ்ப்பண்டிதர்

கா. ர. கோவிந்தராஜ முதலியாரால்

பார்வையிடப்பட்டது.

---

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலை,

87, தம்புசெட்டி வீதி, சென்னை.

1915

விலை அணா 6

Copyright Registered.

கரே என்பது விளங்குகின்றது. இவற்றால் இவ்விரு நூலாசிரியர்களும் ஒருசாலை மாணாக்கர்கள் என்பது நன்கு விளங்குதல் காண்க. 'மல்லிவர்த்தோண் மாக்காயன்' என்கிற விசேடணத்தால் அம்மாக்காயனார் பேர்வீரரா யிருந்தவர் என்பதும், இவ்விரு நூலாசிரியர்களுக்கும் ஆசிரியர் என்பதனால் பெரும்புலவராய் விளங்கியவர் என்பதும் நன்கு விளங்குகின்றன. இந்நூலாசிரியர் கணிமேதாவியார் என்றும் வழங்கப்படுவர்.

மஹாவித்துவான் கோமளபுரம்-இராஜகோபாலப்பிள்ளையவர்கள் இந்நூலில் தற்சிறப்புப்பாயிரச் செய்யுள் ஒன்றும், நூற்செய்யுட்களில் முதலிலிருந்து நாற்பத்தொன்பது செய்யுளுமாகிய ஐம்பது செய்யுட்களுக்கே யுரை யியற்றியிருக்கின்றனர் எனத் தெரிகின்றது. அவற்றிற்குமேல் உள்ள இந்நூலின் மற்றச் செய்யுட்களுக்கு அவர் உரை யியற்றியிருப்பதாகப் புலப்படவில்லை. ஆகையால், இந்நூலின் மற்றைய முப்பத்தொரு செய்யுட்களுக்கும், சிறப்புப்பாயிரச் செய்யுள் ஒன்றுக்கும் என்னா லியன்றாங்கு உரை யியற்றினேன். இதுபோன்ற பதினெண்கீழ்க்கணக்கு நூற்களும், அவற்றுள் சிலவற்றிற்கு மேற்படி பிள்ளையவர்கள் இயற்றிய உரையும் வெளிவந்து மாணவர்க்குப் பயன் செய்வனவாதல் வேண்டும் என்னுங் கருத்துக்கொண்டே இது செய்தேனாகலின், இது பிழைச்செயலென வெண்ணி இதுபற்றி என்னைப் பெரியோர்கள் முனியாதிருப்பார்களாகவென அவர்தங்களை பலவும் பிரார்த்திக்கின்றேன்.

இங்ஙனம்:

கா. ர. கோ.

ஸ்ரீ

ஏலாதியின்

# செய்யுள் முதற்குறிப்பகராதி.


| செய்யுள். | பக்கம். | செய்யுள் | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| அ | | உரையான் | 36 | கு | |
| அவாவறுக்க | 16 | உலையாமை | 44 | குடியோம்பல் | 22 |
| அழப்போகா | 41 | ஊ | | குணநோக்கான் | 28 |
| அறநால்வ | 2 | ஊனொழிந்துடைமை | 68 | குறுகான் | 45 |
| அறவர்தந்நாலு | 80 | எ | | கூ | |
| அஃகுநீ | 31 | எடுத்தன | 75 | கூத்தும்விழவு | 67 |
| ஆ | | எழுதிறனு | 42 | கூர்ப்பு | 73 |
| ஆர்வமே | 65 | எனைப்பொருந்தி | 53 | கொ | |
| இ | | ஐ | | கொலைக்களம் | 17 |
| இடர்தீர்த்த | 9 | ஐயமேயிச்சை | 76 | கொலைபுரியான் | 7 |
| இடைவனப்பு | 79 | ஒ | | கொல்லாறுடன் | 46 |
| இல்லறநூ | 86 | ஒல்லுவகல்ல | 81 | கொல்லான் | 24 |
| இல்லிழுத்தார் | 59 | க | | சா | |
| இழுக்கா | 49 | கடம்பட்டார் | 57 | சாக்காடு | 83 |
| இளமைகழியும் | 26 | கண்போல்வார் | 20 | சாதல்பொருள் | 74 |
| இன்சொலளாவ | 12 | கருஞ்சிரத்து | 61 | சாவதெளி | 43 |
| ஈ | | களியான் | 50 | சி | |
| ஈன்றாளின் | 59 | கற்றாளை | 14 | சிதைபுரையான் | 33 |
| உ | | கா | | சு | |
| உடன்படான் | 18 | காமாடார் | 62 | சுதலமான் | 47 |
| உணராமை | 78 | காலனைநீடுறுத்தல் | 70 | செ | |
| உண்ணீர்வளம் | 54 | காவிவலார் | 40 | செங்கோலான் | 15 |
| உயர்ந்தான் | 69 | | | சென்றபுகழ் | 6 |

## தற்சிறப்புப் பாயிரம்.

### கடவுள் வணக்கம்.

அறுநால்வ ராய்புகழ்ச் சேவடி யாற்றப்
பெறுநால்வர் பேணி வழங்கிப்—பெறுநால்
மறைபுரிந்து வாழுமேன் மண்ணொழிந்து விண்ணோர்க்
கிறைபுரிந்து வாழ்த லியல்பு.

(பதவுரை.) அறுநால்வரும் - (மந்திரி முதலிய) இருபத்து நால்வரும், ஆய் புகழ் - குற்றமில்லாத புகழ் அமைந்த, சேவடி - தனது சிவந்த பாதங்களாலிட்ட தொழிலை, ஆற்ற - செய்யாநிற்க, பெறு - (ஒழுக்கத்தின் பயனைப்) பெறுகின்ற, நால்வர் - (பிரமசாரி முதலிய) நால்வர், பேணி - விரும்பிய பொருளை, வழங்கி - கொடுத்து, பெறு - கற்றுணர்ந்தடைந்த, நால்மறை - நான்கு வேத ஒழுக்கத்தை, புரிந்து - விரும்பி நடந்து, வாழுமேல் - ஒருவன் வாழ்வானானால், மண் ஒழிந்து - பூமியினின்று நீங்கி, விண்ணோர்க்கு - தேவர்க்கு, இறை புரிந்து - அரசனால் விரும்பப்பட்டு, வாழ்தல் - (சுவர்க்கத்தில்) வாழ்தல், இயல்பு - உண்மையாம், என்றவாறு.

---

* இச்செய்யுளுக்குப் பழைய உரை காணப்படாமையின் இதற்குப் பொருள் கூறவந்த ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமாகப் பொருள் கூறினர். அவருள் ஒருவர்மட்டும் இதனை அருகக்கடவுள் வணக்கமெனக்கொண்டு பொருள் கூறியிருக்கின்றனர். அங்ஙனங் கூறுதலே அமைவுடைத்தாம் என்பது இதனை உற்று நோக்குவார்க்கு நன்கு விளங்கும்; ஆதலின் இதற்கு அடியில்வரும் விதம் பொருள் கொள்ளுதலே தகுதியாகும் எனத் தோன்றுகின்றது.

(பதவுரை.) அறுநால்வர் - இருபத்தினான்கு தீர்த்தகர்களின் ஆய் - யாவரும் ஆராய்ந்து தேர்தற்குரிய, புகழ் - புகழினையுடைய,

(விசேடவுரை.) மந்திரி முதலிய இருபத்து நால்வராவர்: மந்திரி, புரோகிதன், படைத்தலைவன், தூதன், ஒற்றனென்னும் அரசனுக்குரிய கூட்டமாகிய ஐவரும்; மந்திரி, காரியமெடுத்தவோன், சுற்றத்தான், வாயில்காப்பவன், நகரமாக்கள், படைத்தலைவன், குதிரைவீரன், யானைவீரனென்னும் அரசனுக்குத் துணையாகிய எண்மரும்; கட்பாளன், அந்தணன், படைத்தொழிலாளன், மருத்துவன், சகுனத்தின் பயன் கூறுவோனென்னும் நீங்குதலில்லாத சுற்றமாகிய ஐவரும்; மந்திரி, நாடு, அரண், பொருள், படை, நட்பென்னும் அங்கமாகிய ஆறுமென்பவர். மந்திரி: கூட்டமுதலிய நான்கிலும் இன்றி

சேவடி - செம்மையாகிய பாதங்களை, ஆற்றப்பெறும் - தாங்கப்பெற்ற, நால்வர்-நான்கு வகைத் தேவராசி புருடர்கள். பேணி - காத்து, வழங்கி - அளிக்க, பெறும் - நாம் அடைந்த, நான்மறை - நான்குபயனையுந்தரும் வேதங்களினாலுணர்த்தப்படும் கடவுளை, புரிந்து - எப்பொழுதுஞ் சொல்லித் துதித்து, வாழும் - வாழுங்கள், மண்ணுநீத்து - (நீங்கள்) இப்பூமியை விட்டு நீங்கினால் (இறந்தால் என்பது), என்- (பிறகு நீங்கள் உய்தற்காகச் செய்யக்கூடியது) யாதுளது; விண்ணோர்க்கு இறை - தேவர்களுக்கு அரசனாகிய இந்திரனுக்கும், புரிந்து வாழ்தல் - கடவுளைச்சொல்லித் துதித்து வாழ்வது, இயல்பு - கடமையாம், என்றவாறு.

(விசேடவுரை.) இருபத்துநான்கு தீர்த்தகர்களாவார்:—ரிஷப தீர்த்தகர் முதலிய அவதார புருஷர்கள் இருபத்துநால்வர். நான்கு வகைத் தேவராசி புருஷர்களாவார்:—சக்கரவர்த்திகள் பன்னிருவர், பலதேவர்கள் ஒன்பதின்மர், வாசுதேவர்கள் ஒன்பதின்மர். பிரதி வாசுதேவர்கள் ஒன்பதின்மர் என்பவர்கள். இவர்கள் அருகக்கடவுளருளிய பன்னிரண்டு வேதங்களிற் சொல்லப்பட்ட கொல்லாமை முதலாகிய தருமங்களை உலகினர்க்கு எடுத்துச்சொல்லிப் பரவச்செய்தவர்களாதலின் 'நால்வர் பேணி வழங்கி' என்றார். அறு என்பது நால்

யமையாதவனாதலால் அச்சான்கினும் கூட்டப்பட்டனன். படைத்
தலைவனும் கூட்டத்திலும், தனியிலும் அன்னவனென்க. அதனால்
வர்-மிகுதியினால் வந்த திணைவழுவமைதி. பிரமசாரி முதலிய நால்வ
ராவார் - ஆசிரியனிடத்து ஓதலும் விரதம் கோடலுமாகிய ஒழுக்

கர் என்பதன் பகுதியாகிய நான்கு என்பதனைக்கொண்டு முடிந்தது.
அறநான்கு - அறமாகிய நான்கு என்றதலிற் பண்புத்தொகைநிலைத்
தொடர். புகழ்ச்சேவடி - இரண்டனுருபும் பயனு முடன்தொக்கது.
ஆற்றப்பெறு என்பது ஈண்டு ஒரு சொல்லாய் முதனிலையாய் நின்று
நால்வர் என்பதனோடு கூடி வினைத்தொகையாயிற்று. இது இறந்த
காலப் பெயரெச்சப்பொருளில் வந்த வினைத்தொகை; இதனை இர
ண்டு சொல்லாகக் கொண்டால் ஆற்ற என்னும் வினையெச்சத்தைத்
தொழிற்பெயராக்கி ஆற்றுதலைப் பெற்ற என்றுரைக்க. உழக்கி என்
பது செயவெனெச்சத்திரிபு. நான்மறை என்பதில் நான்கு என்பதன்
ஈறுகெட்டு நின்றது. நால் என்பது அறம், பொருள், இன்பம், வீடு என்
னும் நாற்பயனை புணர்த்திய தொகைக்குறிப்பு. மறை என்பது
கருவியாகுபெயராய் மறையினால் உணர்த்தப்படுங் கடவுளை யுணர்த்தி
யது. மாந்தர் கடவுளை யுணர்தற்கு மறை துணைக்கருவியாக நிற்ற
லின் அஃது ஈண்டுக் கடவுளை யுணர்த்தியது கருவியாகுபெயரெனப்
பட்டது. புரிதல் - எப்பொழுதுஞ் சொல்லுதல்; இஃது இப்பொரு
ளுடையதாதலை "இருள்சேர் இருவினையுஞ் சேரா இறைவன்
பொருள்சேர் புகழ்புரிந்தார் மாட்டு" என்ற திருக்குறளின் விசேட
வுரையில் 'புரிதல் எப்பொழுதுஞ் சொல்லுதல்' என்ற பரிமேலழகர
கூறியதனாலறிக. மறைபுரிந்து என்பதற்கு மறையிற் சொல்லப்பட்ட
நெறிகளை விரும்பிச்செய்து என்றுரைத்தலுமாம். 'விண்ணோர்க்
கிறைபுரிந்து வாழ்தலியல்பு' என்பதற்கு விண்ணோர்க்கு இறை -
தேவர்களுக்கெல்லாம் தலைவனாகிய கடவுளை, புரிந்து - எப்பொழுதுஞ்
சொல்லித் துதித்து, வாழ்தல் - வாழ்வது, இயல்பு - யாவர்க்கும் இயற்
கையாம் என்றுரைத்தலுமாம்.

முடைய பிரமசாரி, இல்லற ஒழுக்கமுடைய இல்லறத்தான், இல்லை விட்டு வனத்துக்குத் தீயோடு சென்று மனையாள் வழிபாடு செய்யத் தவஞ்செய்யும் வானப்பிரத்தன், முற்றத்துறந்த யோக ஒழுக்கமுடைய துறவறத்தா னென்பவர். நால்வரென்பதற்குத் தென்புலத்தார், கடவுள், விருந்தினர், உறவினர் என வுரைத்தலுமாம். பாடபேதங் கூறி வேறுபொருள் உரைப்பாரு முண்டு; இந்நூலைப்பின் பெருக்க. பேணி-தொழிலடியாகப் பிறந்தபெயர்; பேண்-பகுதி, இ-செயப்படுபொருண்மை விகுதி. இறை - தொழிலடியாகப் பிறந்தபெயர்; இற-பகுதி (கடத்தல்), ஐ - வினைமுதற்பொருண்மை விகுதி, பகுதி ஈற்றகரங்கெட்டு கடைக்குறை; யாவர்க்கும் மேலாய் நிற்பவனென்பது பொருள்; திருமாலாகிய இறைவனுடைய கூறன்னவன் அரசனுமாகலின் அரசனை 'இறை' என்றார். விகாரமின்றி, எப்போதுமுள்ளதாதலின் உண்மை இயல்பெனப்பட்டது. சேவடி என்பதில் செம்மை அடியென்னும் உயிர்முதன்மொழிப் புணர்ச்சியில், ஈறு கெட்டு, ஆதி நீண்டு, முன்னின்ற மெய்யாகிய மகரம் வகரமானது; சேயடியென யகரமாதலுமுண்டு; செ - பகுதியெனின் எகரம் மெய்யோடு கூடி ஏகார மாதலால் அது குற்றமென்க; காலாலிடுந்தொழிலைச் சேவடி யென்றது காரணவாகுபெயர்; காலாலிடுந் தொழிலென்றது இழிதொழிலை; "தாற்றொழிலென்று கருதற்க" எனப் பிறர் கூறலாலுங் காண்க. (க)

தற்சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

## நூல்.

1. சென்ற புகழ் செல்வ மீக்கூற்றஞ் சேவகம்
நின்ற நிலைகல்வி வள்ளன்மை—என்றும்
வழிவந்தார் பூங்கோதா யாறு மறையின்
வழிவந்தார் கண்ணே வனப்பு.

(ப-ரை.) பூங்கோதாய் - மலரையணிந்த கூந்தலையுடையாளே! சென்ற புகழ்-(யாவரும்) ஒப்புக்கொண்ட புகழும், செல்வம் - (பிறர்க்குப் பயன்படும்) செல்வமும், மீக்கூற்றம் - (யாவரும்) மேன்மையாகச் சொல்லுஞ் சொல்லும், சேவகம் - வீரத்தில், நின்றநிலை - அசையாது நின்ற நிலையும், கல்வி - கல்வியறிவும், வள்ளன்மை - ஈகைத்தன்மையும், ஆறும் - ஆகிய இவ்வாறும், வழிவந்தார் - உயர்குடியிற் பிறந்து, மறையின் வழி - வேதநெறியில், வந்தார்கண்ணே - நடப்பவரிடத்திலேதான், என்றும் - எக்காலத்திலும், வனப்பு - அழகைப் பெறுவன ஆம், எ-று.

(வி-ரை.) மற்றவரிடத்தில் இவ்வாறும் நிலைநிற்பன அல்ல; நிற்பினும் சிலநாளே நின்று மாறுவனவாம். ஆதலின் வழிவந்தார் கண்ணே வனப்பைப் பெறுவன. எ-பிரிநிலை. செல்லல் - யாவரும் ஒப்புக்கொள்ளல்; ‘செல்லாவா நல்கூர்ந்தார் சொல்’’ என்பதனாலு முணர்க. மீக்கூற்றம் - பண்புத்தொகைநிலைத்தொடர். கூற்றம் - தொழிலடியாகப் பிறந்த பெயர்ச்சொல்; கூறு-பகுதி, அம்-செயப்படு பொருண்மை விகுதி, பகுதி ஒற்றிரட்டலும், உகரக்கேடும் சந்தி; இது காரண இடுகுறிப்பெயராயினும், இங்கு இடுகுறிமாத்திரமாய் எழுத்தாலாகிய சொல்லை யுணர்த்திற்று. வள்ளன்மை-பண்புப்பெயர்; வள்-பகுதி, ள்-சந்தி, அல்-பகுதிப்பொருள் விகுதி, மை-மாட்சிமை யென்பதிற்போல வந்த விகுதிமேல் விகுதி. வழி - உயர்குடி. வந்தா ரென்னும் இரண்டில் முன்னது வினைமுற்று வினையெச்சமான

தென்றும், பின்னது வினையாலணையும் பெயரென்றுங் கொள்க. பூங்கோதாய் - இரண்டாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர்; ஈற்றையகாரம் ஆயெனத் திரிந்தது; (நன் - பெயர் - ௫ - சூ;) இது மகடூஉமுன்னிலை. (௪)

2. கொலைபுரியான் கொல்லான் புலான்மயங்கான் கூர்த்த
அலைபுரியான் வஞ்சியான் யாதும்—நிலைதிரியான்
மண்ணவர்க்கு மன்றி மதுமலிபூங் கோதாய்
விண்ணவர்க்கு மேலாய் விடும்.

(ப - ரை.) மது மலி - தேன்நிறைந்த, பூ - பூவையணிந்த, கோதாய் - கூந்தலையுடையாளே! கொலை புரியான் - பிறர் புரியும் கொலைத்தொழிலை விரும்பாதவனும், கொல்லான்-(தான் ஒருயிரை யும்) கொல்லாதவனும், புலால் - (வேறொன்றின்) தசையை, மயங் கான் - அறிவு மயங்கித் தின்னாதவனும், கூர்த்த - மிகுந்த, அலை - (பிறரை) வருத்துந்தொழிலை, புரியான் - செய்யாதவனும், வஞ்சி யான் - பொய்யொழுக்க மில்லாதவனும், யாதும் - சிறிதும், நிலை திரியான்-(தான் மேற்கொண்ட) விரதநிலையினின்றும் மாறாத வனாகிய ஒருவன், மண்ணவர்க்கும் - மண் உலகத்தாருக்கும், அன்றி - அல்லாமல், விண்ணவர்க்கும் - தேவர்களுக்கும், மேல் - மேன்மையுள்ளவன், ஆய் விடும் - ஆகாமலிரான், எ - று.

(வி - ரை.) பிறர் செய்யுங் கொலையை விரும்பாமை முதலிய அறத்தொழிற்கு வினைமுதல் ஒருவனே ஆதலால், இதனைப் பெயர்ச் செவ்வெண் என்க. கொலை-தொழிற்பெயர்; கொல்-பகுதி, ஐ-புடை பெயர்ச்சி விகுதி; அலை - முதனிலைப் பிறவினைத் தொழிற்பெயர்; அலைந்தான், அலைத்தானென்னத் தன்வினை பிறவினைகளுக்குப் பொது வாயினும், இங்கு முதனிலை பிறவினையாய் நின்றது. தன்வினையாக வைத்துரைப்பினும் பொருந்தும். முன்னுள்ள உம்மை முற்றுப்

பொருளோடு இழிவுசிறப்பில் வந்தது. பின்னுள்ள இரண்டில் முன்னது இழிவுசிறப்போடு எதிரதுதழீஇயதிலும், பின்னது உயர்வுசிறப்போடு இறந்ததுதழீஇயதிலும் வந்தன. ஈண்டு ஐருபிரண்டும் ஐந்தாவதனெல்லைப்பொருளன. மேல்-பண்பாகுபெயர். ஆய்விடும்-எதிர்காலச் செய்யுமென் முற்று; ஆ-பகுதி, ய்-சாரியை, விடு-துணைவினைப்பொருண்மை விகுதி, அனைத்து மொருபகுதி, உம் - எதிர்கால வினைமுற்று விகுதி, உகரக்கேடு சந்தி; இது பெயரெச்சமே வினைமுற்றானது. (உ)

3. தவமெளிது தான மரிதுதக் கார்க்கேல்
அவமரி தாத லெளிதால்—அவமிலா
இன்பம் பிறழி னியைவெளிது மற்றதன்
துன்பந் துடைத்த லரிது.

(ப - ரை.) தவம் எளிது - (யார்க்கும்) விரதஞ்செய்தல் எளியது; தானம் அரிது-(நல்லோர்க்குப்)பொருளீதல் அருமையுடையது; தக்கார்க்கு எல் - தகுதியுடையார்க்கானால், அவம் அரிது - குற்றஞ்செய்தல் அரிது; ஆதல் எளிது - நல்வழியில் சார்தல் எளியது; அவம் இலாத - குற்றமில்லாத, இன்பம் - (முத்தியுலகத்து) இன்பம், பிறழின் - தவறநடப்பானாயின், இயைவு-(பிறப்பு) தொடர்தல், எளிது-எளியது; அதன் துன்பம்-பிறப்புத்தொடர்ச்சியினாலாம் துன்பத்தை, துடைத்தல் அரிது - நீக்குதல் அரிது, எ - று.

(வி - ரை.) கைவிட்டுப் பொருள் போகாமையினால் தவமெளிதும், கைவிட்டுப் பொருள் போகுதலால் தானம் அரிதுமாயின. பின்னின்ற அவம் என்றும் நிலைத்ததல்லாமல் தன்னின் ஒப்பதும், மிக்கது முடைமையாகிய குற்றம். இயைவு - தொழிற்பெயர்; இயை - பகுதி, வு - புடைபெயர்ச்சியை யுணர்த்தும் விகுதி. எளிது - பண்படியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று. எண்மை பகுதி, து-ஒன்றன்

படர்க்கை விகுதி, ஐயீறு கெட்டது சந்தி, இ - சாரியை. அரிது - இதுவும் பண்படியாகப் பிறந்த அஃறிணைமுற்று; பகுதி - அருமை; மற்ற உறுப்பு மேலதனோடொக்கும். (௩)

4. இடர்தீர்த்த லெள்ளாமை கீழினஞ் சேராமை
படர்தீர்த்தல் யார்க்கும் பழிப்பின் — கடைதீர்த்தல்
கண்டவர் காமுறுஞ்சொற் காணிற் கலவியின்கண்
விண்டவர் நூல் வேண்டா விடும்.

(பொ - ரை.) இடர் தீர்த்தல்-(பிறர்க்கு நேரிட்ட) இடுக்கணை நீக்குதலையும், எள்ளாமை-(பிறருடைய) பழியை எடுத்துப் பேசாமையையும், கீழ் இனம் சேராமை - கீழ்மக்களது இனத்தைச் சேராமையையும், யார்க்கும் - (வறியார்) யாவர்க்கும், படர் தீர்த்தல் - பசித்துன்பத்தை நீக்குதலும், பழிப்பின் கடை - (அறிவுடையோர்) பழித்தலையுடைய கடையினின்றும், தீர்த்தல் - தன்னை நீக்குதலையும், கண்டவர் - (தன்னை) எதிர்ப்பட்டவர், காமுறும் - விருப்பமடைகின்ற, சொல் காணின் - சொல்லையும் (ஒருவன்) செய்வானாயின், கலவியின் கண் - (மனைவியோடு கூடியிருத்தலாகிய) இல்வாழ்க்கையினின்று, விண்டவர்-நீங்கிய முனிவர் செய்த, நூல் வேண்டா-நூல்கள் வேண்டாதன ஆய், விடும் - ஒழியும், எ - று.

(வி - ரை.) இடர்தீர்த்தல் முதலிய ஆறையும் செய்பவனுக்கு முனிவர்கள் சொல்லிய நூலைக்கற்றலாவது, கற்பித்தலாவது வேண்டுவதில்லை யென்பதாம். கீழ் - பண்பாகுபெயர்; கீழினம் - ஒன்றன் கூட்டத் தற்கிழமைப்பொருளதாகிய ஆறாம் வேற்றுமைத் தொகை நிலைத்தொடர். எள்ளாமை-எதிர்மறைத் தொழிற்பெயர்; எள்-பகுதி, ஆ-சந்தி, ஆ-எதிர்மறை விகுதி, அனைத்து மொருபகுதி, மை-புடைபெயர்ச்சி விகுதி; உடன்பாட்டில் எள்ளினமை, எள்ளுகின்றமை என வரும்; எதிர்காலத்தில் வராது. காமுறும்: காமமென்னும் பெய

றை விளைப்பித்தற்கு உறு என்னும் உரியடியாகப்பிறந்த வினைமுதனிலை புணர்ந்தபோது, அம் கடைக்குறையாய் நின்ற காமுறு-பகுதி, உம்-நிகழ்காலப் பெயரெச்சவிகுதி, உகரக்கேடு சந்தி. கலவி-தொழிற்பெயர். விண்டவர்-ஈறுதிரிந்த வினையாலணையும் பெயர்; ஈறு திரியதாயின் விண்டாரென வரும்; விள்-பகுதி. நால்-உவமையாகுபெயர்; இதனை (நன்-பொதுப்பாயிரம் ௫ - ௨௪, ௨௫-) ஆல் உணர்க. (௪)

5. தனக்கென்று மோர்பாங்கற் பொய்யான் மெய்யாக்கும்
எனக்கென்றியையான் யாதொன்றும்—புனக்கொன்றை
போலு மிழையார் சொற் றேறான் களியானேல்
சாலும் பிறநூலின் சால்பு.

(ப - ரை.) தனக்கு என்றும் - தனக்கு எனவும், ஓர் பாங்கன் என்றும் - தன்னைச்சார்ந்தவனுக்கு எனவும், பொய்யான் - பொய் கூறான்; மெய் ஆக்கும் - உண்மையையே சொல்லுவான்; யாதொன்றும் - யாதொரு பொருளையும், எனக்கு என்று - எனக்குரியதென, இயையான் - (அப்பொருளின் மேல்) அன்புவையான்; புனக் கொன்றை - முல்லை நிலத்திலுள்ள கொன்றைமலரை, போலும் - ஒக்கும், இழையார் - ஆபரணங்களையணியும் மாதர்களது, சொல் தேறான் - சொல்லை உண்மையென்று நம்பான்; களியான் எல் (யாம் செல்வப் பொருளுடையோமென்று) செருக்குக் கொள்ளானாயின் (அவனிடத்து), நூலின் சால்பு - அறநூல்களிற் சொல்லிய மேன்மையாகிய பொருள்களெல்லாம், சாலும் - வந்து நிரம்பும், எ - று.

(வி - ரை.) தனக்கென்றும், தன்னைச் சார்ந்தவனுக்கென்றும் சொல்லுதலால் பொய் இரண்டுவகை; எனவே இச்செய்யுளும் ஆறு பொருளைக் கூறியதாயிற்று. பிற-அசைச்சொல். பாங்கன்-தோழன்; இது சார்ந்தவன்மேலது. இச்சொல்லி னீற்றில் நான்காம்வேற்றுமை தொகையாய்நிற்றலின், ஈற்று னகரம் திரிந்தது. முன்னுள்ள என்று

மென்பதனை இதனோடுஞ் சார்த்தி யுரைக்க. சொன்றை - முதலாகு பெயர். கடையில் நின்ற எமெலன்பதனைப் பொய்யான் முதலியவற் றோடுங் கூட்டுக; இது கடைநிலைத்தீவகம். சாலும்-உரிச்சொலடியா கப் பிறந்த செய்யுமென் முற்று. சால்பு அத்தொழிற்பெயர். (5)

6. நிறையுடைமை நீர்மை யுடைமை கொடையே [மை
பொறையுடைமை பொய்ம்மை புலாற்கண்—மறையுடை
வேயன்ன தோளா யிவையுடையான் பல்லுயிர்க்கும்
தாயன்ன னென்னத் தகும்.

(ப - ரை) வேய் அன்ன தோளாய் - மூங்கிலையொத்த தோளை யுடையாளே! நிறை - (பிறர்பொருள் முதலியவற்றில் செல்லாமல்) மனத்தை நிற்கச்செய்தலை, உடைமை எ - உடையனாதலும், நீர்மை - கற்றுணர்தலை, உடைமை எ-உடையனாதலும், கொடை - (வறியவர்க்குப் பொருளைக்) கொடுத்தலை, உடைமையே - உடைய னாதலும், பொறை-(தனக்குத் தீங்குசெய்தவனுக்குத் தானுஞ் செய் யாமல்) பொறுத்தலை, உடைமை எ - உடையனாதலும், பொய்ம் மைக்கண் - பொய் கூறுதலினும், புலாற்கண் - தசை உண்ணலினும், மறை - (தன்னை) மறைத்தலை, உடைமை எ - உடையனாதலும், இவை உடையான் - ஆகிய இச்செயல்களையுடையான், பல் உயிர்க் கும் - பல உயிர்களுக்கும், தாய் அன்னன் - தாயை ஒத்த தன்மை யான், என்னத்தகும் - என்று சொல்லுதல் தகும், எ - று.

(வி - ரை.) இவனிடத்து யாவரும் அன்பு பாராட்டுதலே யன்றி, விலங்குகளும் அங்ஙா நிருக்குமென்பது. உடைமை என் பன செயப்படுபொருள் தன்றுக் குறிப்புத்தொழிற்பெயர். நிறை-பிற வினைத் தொழிற்பெயர்; நில் - தன்வினை முதனிலை. று - பிறவினை விகுதி, இதன் புணர்ச்சியில் லகரங்கெட நின்ற நிறு-பகுதி, ஐ-புடை பெயர்ச்சி விகுதி, உகரங்கேடு சந்தி. கொடை, மறை - தன்வினைத்

தொழிற்பெயர். எண்ணுப்பொருளதாகிய ஏகாரத்தை உடைமை யென்பவற்றி னீற்றிலெல்லாங் கொள்க. தொல் - இடை - கக - சூ: "எண்ணேகாரம் இடையிட்டுக் கொளினும், எண்ணுக் குறித்திய லும் என்மனார் புலவர்." வேய்-வடி வுவமை. எழனுருபைப் பொய்ம் மை யென்பதனோடுங் கூட்டுக. (சு)

7. இன்சொ லளாவ லிடமினி தூண் யாவர்க்கும்
வன்சொற் களைந்து வகுப்பானேல்—மென்சொல்
முருந்தேய்க்கு முட்போ லெயிற்றினாய் நாளும்
விருந்தேற்பர் விண்ணோர் விரைந்து.

(ப - ரை.) முருந்து - மயிலிறகின் அடியை, ஏய்க்கும் - ஒத் திருக்கும், முள் எயிற்றினாய் - கூரிய பற்களையுடையாளே! யாவர்க் கும் - எல்லோர்க்கும், நாளும் - என்றும், இன்சொல் - இன் சொல்லையும், அளாவல் - மனங்கலந்துறவாடலையும், இடம் - தங்கு தற்கிடத்தையும், இனிது - இனிய பொருளையும் ஊண் - உணவை யும், வன் சொல் - கடுஞ்சொல்லை, களைந்து - நீக்கி, மெல் சொல் - மென்மையாகிய சொல்லையும், வகுப்பான் ஏல்-(ஒருவன்) கொடுப்பா னாயின், விண்ணோர் - தேவர்கள், விரைந்து-விரைந்துவந்து, விருந்து ஏற்பர் - விருந்தினனாக ஏற்றுக்கொள்ளுவர், எ - று.

(வி - ரை.) இந்த அறங்களைச் செய்பவன் மறுமையில் விண் ணுலகத்தில் இன்பம் நுகர்வா னென்பது. இன்சொலாவது-தன்னை நோக்கி வந்தவர்களைக் கண்டமாத்திரத்தில் தன் மனத்திலுள்ள மகி ழ்ச்சியை வெளிப்படுக்குஞ் சொல்; மனத்தி னினிமையைச் சொல் லின்மே லேற்றியது ஒருமரபுவழுவமைதி; ஆயினும் பண்புத் தொகைநிலைத்தொடரென்க. மென்சொலாவது - தன் பணிவை வெளிப்படுத்துஞ் சொல்; மேலே உரைத்தாற்போல உரைத்துக் கொள்க மென்மை-பணிவு. போல்-அசை. விருந்து-பண்பாகுபெயர். இனிய பொருள்-பொன், ஆடை முதலிய பொருள். (எ)

8. உடன்படான் கொல்லா னுடன்றார்நோய் தீர்த்து
மடப்படான் மாண்டார்நூன் மாண்ட—இடம்பட
நோக்கும்வாய் நோக்கி நுழைவானேன் மற்றவனை
யாக்குமவர் யாக்கு மணைந்து.

(ப - ரை.) உடம் படான்-(பிறர் செய்யுங் கொலைக்குத்) தான் உடன்படாமல், கொல்லான் - (தானும்) கொல்லாமல், உடன்றார் நோய் - (பிணியால்) வருந்துகின்றவருடைய நோயை, தீர்த்து - (மருந்து முதலியவற்றைத் தந்து) தீர்த்து, மடம் படான் - அறிவில்லாச் செயலில் சேராமல், மாண்டார் - அறிவின் பெருமையுடையார் செய்த, நூல் - நூல்களை, மாண்ட - மாட்சிமைப்பட்ட தன்மையும் செயலும், இடம்பட - (தனக்குப்) பெருகும்படி, நோக்கும் வாய் - ஆராய்வதற்குரிய பெரியாரிடத்தில், நோக்கி - ஆராய்ந்து, நுழைவான் எல் - (அவை கூறிய ஒழுக்கத்தில்) ஒழுகுவானானால், அவனை - அவ்வறிவுடையானை, யாக்குமவர் - விட்டு நீங்காதவரை, அணைந்து - (மேற்கூறிய ஒழுக்கமெல்லாம்) கூடி; யாக்கும் - விட்டு நீங்குதலில்லை, எ - று.

(வி - ரை.) உடன்படாமை, கொல்லாமை, தீர்த்தல், மடம் படாமை, நோக்கல், நுழைதலென ஆறு பொருளமைந்து கிடத்தல் காண்க. யாத்தல் - கட்டுதல்; அது விட்டுப் பிரியாமை. மேற்கூறிய ஆறு செயலும், அவற்றை மேற்கொண்டு நடப்பவனை நெருக்கி யிருப்பவர்களுக்கும் அவை தாமே வந்து அடையுமென்பது. உடன்றார் - இறந்தகால வினையாலணையும் பெயர்; உடல் - பகுதி, ற்-இறந்தகால இடைநிலை, ஆர்-பல்லோர்படர்க்கை விகுதி, லகரம் றகரமானது சந்தி, அது னகரமாதல் மெலித்தல்; இடம் - விரிவு. யாக்குமவர் - ஈறு திரிந்த எதிர்கால வினையாலணையும்பெயர்; யா - பகுதி, க்-சந்தி, கு-சாரியை, உம்-எதிர்காலவிடைநிலை, உகரக்கேடு சந்தி, அ-சாரியை, வ்-சந்தி, அர்-பல்லோர் படர்க்கைவிகுதி; இதனை யாக்கும் அவரெனப்

பிரித்திரண்டு சொல் என்பாருமுண்டு; ஆய், மேய் இவ்வினையெச்சங்களில் விகுதியாய் நின்ற யகரமெய் ஆயான், மேயானென்பவற்றில் இடைநிலையாய் நிற்றல்போல உம் விகுதி இடைநிலையானதென்க. (அ)

9. கற்றாரைக் கற்ற துணரா ரெனமதியார்
உற்றாரை யன்னண மோராமல்—அற்றார்கட்
குண்டி யுறையு ளுடுக்கை யிவையீந்தார்
பண்டிதராய் வாழ்வார் பயின்று.

(ப-ரை) கற்றாரை - கற்றுவல்லாரை, கற்றது-(தாம்) கற்ற கல்விப்பொருளை, உணரார் என-அறியமாட்டாரென்று, மதியார் - எண்ணார்; உற்றாரை - நட்பினரை, அன்னவண்ணம் - அப்படி, (நாம் அவர்மேல் அன்பு வைத்திருத்தல்போல நம்மேல் வைத்திலரென்று) ஓராமல்-மதியாமல், அற்றார்கட்கு-துறவிகளுக்கு, உண்டி-உணவும் மருந்தும், உறையுள் - இருப்பிடமும், உடுக்கை - ஆடையும், இவை-ஆகிய இவற்றை, ஈந்தார்-கொடுப்பவர், பண்டிதர் ஆய் - (உலகரால்) பண்டிதரென மதிக்கப்பட்டு, பயின்று - (யாவரோடும்) பகையில்லாமல், வாழ்வார்-உயிர் வாழ்வார், எ-று.

(வி-ரை.) கற்றது - வினைமுதல்வினையைச் செயப்படுபொருளின் மேலேற்றிக் கூறிய வினையாலணையும் பெயர்; கல்-பகுதி, ற்-இறந்தகால இடைநிலை, அ-சாரியை, து-ஒன்றன் படர்க்கைவிகுதி. அன்னவண்ண மென்பது அன்னணமென மரீஇயது; இன்னண மென்பது மிது. அற்றார் - யான், எனதென்னு மிருவகைப் பற்றும் நீங்கினோர்; இதற்குப் பொருளற்றாரென வறியார்மேலேற்றிக் கூறினும் பொருந்தும். உண்டி - உண்ணப்படுவதென்னும் பொருளில், தொழிலடியாகப் பிறந்தபெயர்; உண்-பகுதி, டு-சாரியை, இ-செயப்படுபொருண்மை விகுதி தகரம் டகரமாதலும், உகரக்கேடும் சந்தி.

மருந்தும் உண்ணப்படுவதாதலின் உண்டியெனப்பட்டது. உடுக்கை-தொழிலடியாகப் பிறந்தபெயர். உடு-பகுதி, க்-சந்தி, கு-சாரியை. உகர+கேடும் சந்தி, ஐ-செயப்படுபொருண்மை விகுதி; கை விகுதியெனின் தொழிற்பெயரென்க. உறையுள் - உள் புடைபெயர்ச்சி விகுதியெனக்கொண்டு, தொழிலாகுபெயரென்க; இருமொழியாகக் கொள்ளின், உள் இடப்பெயராக வைக்கின், இத்தொடரை வினைத்தொகைநிலைத்தொடரென்க. (௯)

10. செங்கோலான் கீழ்க்குடிகள் செல்வமுஞ் சீரிலா
வெங்கோலான் கீழ்க்குடிகள் வீந்துகவும்—வெங்கோல்
அமைச்சர் தொழிலு மறியலமொன் றாற்ற
வெனைத்து மறியாமை யான்.

(ப - ரை.) செங்கோலான் - முறைசெய்யும் அரசனது, செல்வமும் - செல்வப்பொருள் வளர்தலும், கீழ்க்குடிகள்-(அவனது ஆணையின்) கீழ்வாழுங் குடிகளது, செல்வமும் - செல்வப்பொருள் வளர்தலும், சீர் இல்லாத - புகழில்லாத, வெங்கோலான் செல்வம்-முறை தவறுகின்ற அரசனது செல்வம், உக்கு வீவும் - அழிந்தொழிதலும், கீழ்க்குடிகள் - (அவனது ஆணையின்) கீழ்வாழுங் குடிகள் செல்வம், உக்கு வீவும் - அழிந்தொழிதலும், வெங்கோல் - முறை தவறுதலும், அமைச்சர் உக்கு வீவும் - மந்திரிமார் அழிந்தொழிதலும், தொழில் உக்கு வீவும் - எடுத்ததொழில் முடியாமலொழிதலும், ஒன்று-(இவ்வாறுக்கும்) ஒரு காரணத்தை, எனைத்தும் - எவ்வளவும், அறியாமையான் - அறியாமையினால், ஆற்ற - மிகுதியும், அறியலம் - அறியமாட்டோம், எ-று.

(வி - ரை.) செல்வமு மென்பதைச் செங்கோலா னென்பதனோடும், உம்மையை நீக்கி வெங்கோலான் கீழ்க்குடிக ளென்பவற்றோடும், வீந்துகவு மென்பதை அமைச்சர்தொழி லென்பவற்றோடுஞ்

கூட்டுக. இத்தொடரில் நிலைமொழி வருமொழிகளைப் பின்முன்னாக நிறுத்தி விகுதிகளைப் பிரித்துக்கூட்டி உரைக்க. அரசன் செய்முறை ஒரு பக்கத்தில் சாயாமல் செவ்விய கோல்போலுதலால் செங்கோல் உவமையாகுபெயர்; வெங்கோல் அதற்கு மாறாகிய கோல். உகவு - தொழிற்பெயர்; உகு பகுதி, அ-சாரியை, வு-புடைபெயர்ச்சி விகுதி, உகரக்கேடு சந்தி. அமைச்சர் - பக்கத்திலுள்ளார்; இது அமாத்திரிய ரென்னும் வடமொழி. ஒன்று - எண்ணலளவையாகுபெயர். எனைத்தும்-உம்மை முற்றும்மை; எனைத்து-எத்தனைத்தென்பதன் மரூஉ. செங்கோலும், வெங்கோலுமே காரணமாயமைதலால், அறியலொன்றென்றது புறம்பாகிய காரணத்தை. (௧௦)

11· அவாவறுக்க லுற்றான் றளரானவ் வைந்தின்
அவாவறுப்பி னாற்ற வமையும்—அவாவான்
ஆகு மவனாயி னைங்களிற்றி னாட்டுண்டு
போகும் புழையுட் புலந்து.

(ப - ரை.) அவா - விருப்பினை, அறுக்கல் உற்றான் - முற்றுங் களையத் தொடங்கினவன், தளரான் - கலங்குதலில்லாதவனாகி, அவ வைந்தின் - அப்பொறிகளினது ஐம்புலங்களின், அவா - விருப்பை, அறுப்பின் - களைவானானால், ஆற்ற - மிகுதியும், அமையும் - (துறவி னொழுக்கம்) நிரம்புவான்; அவன் - அத்தொடங்கியவன், அவா - விருப்பு, அறான் ஆகும் ஆயின்-நீங்கானாவானானால், ஐங்களிற்றின் - ஐம்பொறிகளாகிய யானைகளினால், ஆட்டு உண்டு - அலைப்புண்டு, புழையுள் - (நரகத்தின்) வாயிலில், புலந்து போகும் - துன்பமுற்றுச் செல்லுவான், எ-று.

(வி - ரை.) இது துறவியைக் குறித்ததாதலால், அவா என்பது முன் துறந்து ஐம்புலங்களின்மேல் பழைய பழக்கத்தினால் மீளவும் செல்லும் விருப்பம். அவ்-பலவின் படர்க்கைச் சுட்டுப்பெயர்; பொறி

கள் செய்யுங் கொடுமையைப்பற்றி, அவற்றின் பெயர்கூற அஞ்சி 'அவ்' என்றார். பொறிகளாவன - மெய், வாய், கண், மூக்கு, செவி. ஐம்புலன்களாவன - ஊறு, சுவை, ஒளி, நாற்றம், ஓசை. அவ்வைந்தின் என்பதற்குப் புலன், களாவேசம் (பெண்ணின்பம்), உடல், செல்வப்பொருள், மேம்பாடு என்பாருமுளர். ஐந்தின் அவாவறுத்தலாகிய தொழிலுந்தும், ஐந்களிற்றினால் புகழுயுட் போகுதலொன்றுமாகிய ஆறுபொருள் இச்செய்யுளி லமைந்துகிடத்தல்காண்க. ஆட்டு - முதனிலை திரிந்த தொழிற்பெயர். உண்ணல் - அநுபவித்தல். ஆட்டுண்டு, கொலையுண்டு, அடியுண்டு, கடியுண்டு என விகுதிபெற்ற தொழிற்பெயரோடும், முதனிலைத் தொழிற்பெயரோடும் உண்ணென்பது வாலால் இத்தொடரை இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடரென்க; ஒரு சொல்லெனக்கொண்டு செயப்பாட்டு வினையென்னற்க. (கக)

12. கொலைக்களம் வார்க்குத்துச் சூதாடு மெல்லை
அலைக்களம் போர்யானை யாக்கு— நிலைக்களம்
முச்சா ரிகையொதுங்கு போரிடத்து மின்னவை
நச்சாமை நோக்காமை நன்று.

(ப - ரை.) கொலைக்களம் உம் - போர்செய்து கொல்லுதலையுடைய இடத்தும், வார்க்குத்து உம் - நீர் நிலத்தைப் பிளந்தோடும் இடத்தும், சூதாடும் எல்லை உம் - சூதாடுகின்ற இடத்தும், அலைக்களம் உம் - வருத்துகின்ற சிறைச்சாலையிடத்தும், போர் யானை - போர்செய்யவல்ல யானைகளை, ஆக்கு - கொலை கற்பிக்கின்ற, நிலைக்களம் உம் - நிலையாகிய இடத்தும், முச்சாரிகை ஒதுங்கும் - யானை தேர் குதிரை இம்மூன்றும் சாரிகையோடுகின்ற, ஓர் இடத்தும் - போரிடத்தும், இன்னவை - கொல்லுதல்முதல் சாரிகையோடலீறாகிய இவற்றை, நச்சாமை - விரும்பாமையும், நோக்காமை - போய்ப் பார்க்காமையும், நன்று - நன்மையைத் தரும், எ-று.

(வி - ரை.) சென்று நோக்கினால் கொலைக்களத்தினிடத்தும், வாள்பயிலுமிடத்தும், யானைக்குக் கொலை பயிற்றுமிடத்தும், மூச் சாரிகை யொதுங்குமிடத்தும் உடற்கு ஊறுண்டாம்; சூதாடுமிடத் துப் பழியும், பொருளிழவுக்குக் காரணமாகிய விருப்பும், சிறைச் சாலையினிடத்தப் பழியுமுண்டாம்; ஆதலால் விரும்பாமையும், அதன் காரியமாகிய நோக்காமையும் நலந்தருவன வாயின. நன்று - பண்படியாகப் பிறந்த ஒன்றன்படர்க்கைக் குறிப்பு வினைமுற்று; நல்-பகுதி, று-ஒன்றன்படர்க்கை விகுதி, லகரம் றகரமானது சந்தி, அது னகரமானது மெலித்தல் விகாரம்; இது பண்மையினொருமை வந்த வழுவமைதி. உம்மை கடைநிலைத்தீவகமாதலால் மேலவற்றோ டுங் கூட்டுக. அலை-முதனிலைத்தொழிற்பெயர். வார்க்குத்தென்பதில் குத்து என்னு முதனிலைத் தொழிற்பெயர் தொழிலாகுபெயர். (கஉ)

13. விளையாமை யுண்ணாமை யாடாமை யாற்ற
உளையாமை யுட்குடைத்தா வென்று—களையாமை
நூற்பட்டார் பூங்கோதாய் நோக்கி னிவையாறும்
பாற்பட்டார் கொண்டொழுகும் பண்பு.

(ப - ரை ) நூல் - நூலில், பட்டு - சேர்ந்து, ஆர் - நிரம்பிய, பூ - மலரை அணிந்த, கோதாய் - கூந்தலையுடையாளே! நோக்கின் - ஆராயின், விளையாமை - பயிர் விளைக்காமையும், உண்ணாமை-(ஊறு முதலிய ஐம்புலங்களை) அநுபவியாமையும், ஆடாமை - (பயனில் சொற்களைப்) பேசாமையும், ஆற்ற உளையாமை - (பிறர் கடுஞ் சொல்லுக்கு) மிக வருந்தாமையும், உட்கு உடைய - நாணுதலுடைய, தா - வருத்தத்தை, வென்று - வெல்லுதலும், களையாமை - (மேற் கொண்ட ஒழுக்கங்களை) விட்டுவிடாமையும், இவை ஆறும் - (ஆகிய) இவை யாறுசெயலும், பால் பட்டார்-துறவில் சேர்ந்தவர், கொண்டு- பூண்டு, ஒழுகும் பண்பு - நடக்கும் இயல்புகளாம், எ-று.

(வி - ரை.) ஒருவன் மேற்கொண்டொழுகல் இல்லறம், துறவறமென இரண்டு பகுப்புடைமையால் பாலென்பது விளையாமை முதலிய செயலால் துறவறத்துக்காயிற்று. விளையாமை - தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாயினும் இங்குப் பிறவினை. உட்கு - முதனிலைத் தொழிற்பெயர்; அது மனக்கிளர்ச்சியின்றி மடங்குதல். உடை-உடையவென்னுங் குறிப்புப்பெயரெச்சம் ஈறுதொகுத்தலாய் நின்றது உட்குடைத்தா ஆவது காமத்தினுல் வருந்தும் வருத்தம். காமவொழுக்கத்தை இவர்களிடத்துண்டாயின் காமுகர்களும் பழிப்பாராதலால், அவ்வருத்தத்துக்கு உட்குடைய என விசேடணம் தந்தார். வென்று - தொழிற்பெயர்; வெல் - பகுதி, து - புடைபெயர்ச்சியையுணர்த்தும் விகுதி, லகர தகரங்கள் றகரமாதல் சந்தி, பகுதியீற்று றகரம் னகரமாதல் மெலித்தல். நூலில் கோக்கப்படுகையில் பேரரும்பாய்ப் பின் மலர்தலின் 'நூற்பட்டார் பூ' என்னலாயிற்று. (கங)

14. பொய்யான் புலாலொடு கட்போக்கித் தீயன
செய்யான் சிறியா ரினஞ்சேரான்—வையான்
கயலியலுண் கண்ணுய் கருதுங்கா லென்றும்
அயல வயலவா நூல்.

(ப - ரை.) கயல் - சேல்மீனைப்போல, இயல் - பிறழ்கின்ற, உண்கண்ணுய் - மையையணிந்த கண்களையுடையாளே! என்றும் - எப்போதும், பொய்யான்-ஒருவன் பொய்சொல்லாமல், புலாலொடு-ஊனுண்ணலையும், கள் - கள்ளுண்ணலையும், போக்கி-நீக்கி, தீயன - தீமையைத்தருஞ் செயல்களை, செய்யான் - செய்யாமல், சிறியார் இனம் - சிறியாருடைய இனத்தை, சேரான் - சேராமல், வையான்-(பிறரை) நிந்தியாமல் நடப்பானுயின், (அவனுக்குக்) கருதுங்கால் - நோக்குமிடத்து, நூல் - (பிறராய்ந்துணரும்) நூல்கள், அயல்வயல - வேண்டுவனவே அல்ல, எ-று.

(வி - ரை.) இந்த ஆறு தொழில்களையு மியல்பா யுடையானுக்கு, இத் தொழில்களை யியல்பா யில்லாதவர்கள் ஆராய்கின்ற நூல்கள் ஆராய்ந்துணர வேண்டுவன அல்ல என்பது கருத்து. அயல்-அந்நியம்; அது வேண்டாமைமேல் நின்றது. அடுக்குத் துணிவுப்பொருளது. ஒடு வருபு உடனிகழ்ச்சிப்பொருளது. ஒடுவை எண்ணுப்பொருள தாம் இடைச்சொலெனினும் பொருந்தும்; கள் என்பதனோடுங் கூட்டுக. கருதுங்கால் - இறந்தகால வினையெச்சம்; கருது - பகுதி, உம் - சாரியை, சால்-இறந்தகால வினையெச்ச விகுதி, உகரக்கேடும் மகரத் திரிபுஞ் சந்தி. சிறியாரினம் - இருவினைப்பயனு மில்லையென்பாரும் காமநூ லுணர்ந் தொழுகுவாரும், மோசஞ்செய்வாரும் முதலானோ ருடைய கூட்டம். (௧௪)

15. கண்போல்வார்க் காயாமை கற்றா ரினஞ்சேர்தல்
பண்போல் கிளவியார்ப் பற்றாமை—பண்போலும்
சொல்லார்க் கருமறை சோராமை சிறிதெனினும்
இல்லார்க் கிடர்தீர்த்த னன்று.

(ப - ரை.) கண்போல்வார் - கண்ணைப்போல நன்னெறியில் நடத்தவல்ல சினேகரை, காயாமை-கோபியாமையும், கற்றார் - கல்வி யறிவுடையாரையும், இனம் - பெரியாரினத்தையும், சேர்தல்-விட்டுப் பிரியாமையும், பண்போல்-யாழினரம்பி னிசைபோன்ற, கிளவியார்-சொற்களைப் பேசுகின்ற மாதரை, பற்றாமை - நம்பாமையும், பண் போலும் - யாழினரம்பிசையை ஒக்கும், சொல்லார்க்கு - சொற்களை யுடைய மாதர்க்கு, அருமறை - (பிறருக்குத் தெரிவித்தல் கூடாத) இரகசியத்தை, சோராமை - மறந்து சொல்லாமையும், சிறிது எனினும் - சிறிது பொருளாயினும், இல்லார்க்கு - இல்லாதவறியவர்க்கு, இடர்தீர்த்தல்-(சேர்ந்த) ஆபத்தை ஒழித்தலும், நன்று-நன்மையைத் தருவன ஆம், எ-று.

(வி - ரை.) கற்றார்-கல்வியறிவுடையார். பெரியாரினம்-காமம், சினம், உலோபம், களிப்பு, செருக்கு, பொறாமையாகிய ஆறு குற்றங்களுமில்லாத கூட்டம். பண்போலுஞ் சொல்லார் சுட்டுப்பொருளது; இதற்கு இவ்வாறன்றி இரகசிய இடத்தில்வைத்து யாழினரம்பை மெல்லெனத் தடவினும், உடனே தடவுதலைப் பிறர்க்கு ஓசையால் உணர்த்தல்போல, பிறரது இரகசியத்தைச் சொல்லுத லுடையாரென உரைத்தலுமாம். சொல்லார் - தொழிலடியாகப் பிறந்த குறிப்பு வினைப்பெயர். கிளவி - தொழிற்பெயர்; கிள - பகுதி, வி-புடைபெயர்ச்சி விகுதி; இம் முதனிலையடியாகக் கிளந்தான், கிளந்த, கிளந்து என வினைவிகற்பங்கள் பிறக்கும். மறை - தொழிலடியாகப் பிறந்தபெயர்; மறு-பகுதி, ஐ-செயப்படுபொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி உம்மை இழிவு சிறப்பும்மை. போல்வார்-இடைச்சொலடியாகப் பிறந்த எதிர்கால வினையாலணையும் பெயர்; போல்-பகுதி, வ்-எதிர்கால இடைநிலை, ஆர் - பல்லோர் படர்க்கை விகுதி; போல்கின்றார், போன்றார் என மற்றகாலங்களில் வரும். போல்வார்க்காயாமை-இத்தொடர் இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராதலாலும், நிலைமொழி உயர்திணைப்பெயராதலாலும், (நன்-உயிர்-சூ-கூ) ஆல் இயல்பாகாமல், (உருபு - சூ - கசு) ஆல் இயல்பின் விகாரமாயிற்று இடர்தீர்த்தல் - இதுதொடர் இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராயினும், நிலைமொழி அஃறிணைப்பெயராதலால், (நன்-மெய் - சூ-உக) ஆல் மிகாது, (உருபு - சூ-கசு) ஆல் விகாரத் தியல்பாயிற்று. (கரு)

16. துறந்தார்கட் டுன்னித் துறவார்க் கிடுதல்
இறந்தார்க் கினிய விசைத்தல்—இறந்தார்
மறுதலை சுற்ற மதித்தோம்பு வானேல்
இறுதலில் வாழ்வே யினிது.

(ப - ரை) துறந்தார்கண் - துறவியரிடத்து, துன்னி - சார்ந்து அறங்களைக்கேட்டு, துறவார்க்கு - துறவாமல் இரப்பவர்க்கு, இடுதல்-

(வேண்டுவனவற்றைக்) கொடுத்தலையும், இறந்தார்க்கு-'கல்வியினால்) மிகுந்தவர்க்கு, இனிய - இனிய சொற்களை, இசைத்தல் - சொல்லுதலையும், இறந்தார்-(ஒருவருமில்லாமல் வந்து) இறந்தவரையும், மறுதலை - (தனக்குப்) பொல்லாங்கு செய்பவரையும், சுற்றம்-உறவினரையும், மதித்து - நன்குமதித்து, ஓம்புவானேல் - (ஒருவன்) காப்பானாயின், இறுதல்-அழிதலையுடைய, இல்வாழ்வே - இல்வாழ்க்கையே, இனிது - (துறவறத்தினும்) நல்லது, எ-று.

(வி - ரை.) ஐம்பொறிகளுக்குரிய அநுபவட்பொருளைப் பெறுமையாலாயினும் துறவு பூணவேண்டுமாதலால் அக்காலத்தும் அது செய்யாமையைப்பற்றி வறியவரைத் 'துறவார்' என்றார்; "உடாஅது முண்ணாதுந்தம் முடம்பு செற்றும், கெடாஅத நல்லறமுஞ் செய்யார்" என்பதனாலுமுணர்க. மறுதலை பகைமை; இது பண்புப்பெயர்; மறு-பகுதி, தலை-பகுதிப்பொருள்விகுதி, இங்குப் பண்பாகுபெயராயிற்று. சுற்றம்-தொழிலடியாகப் பிறந்தபெயர்; சுற்று - பகுதி, அம் - வினைமுதற்பொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி; பொருள்-சூழவிருப்பதென்பது; "சுற்றத்திற்கழகு சூழவிருத்தல்" என்பதனாலு முணர்க.

17. குடியோம்பல் வன்கண்மை நூல்வன்மை கூடம்
மடியோம்பு மாற்ற லுடைமை—முடியோம்பி
நாற்றஞ் சுவைகேள்வி நல்லா ரினஞ்சேர்தல்
தேற்றானேற் றேறு மமைச்சு.

(ப - ரை.) குடியோம்பல் - குடிகளைப் பாதுகாத்தலையும், வன்கண்மை-(தொழில்செய்தலில்) அசைவின்மையையும், நூல்வன்மை-பலநூற்புலமையில் கலங்காத அறிவையும், கூடம் - வஞ்சனையும், மடி - சோம்பலும், ஓம்பும் - (தன்னிடத்து வாராமல்) காக்கும், ஆற்றல் உடைமை - வலியுடைமையையும், முடி ஓம்பி - (தன் அரசனது) முடியையும் காத்து, நாற்றம் - நன்மணத்தையும், சுவை - வாய்க்கினிய உணவையும், கேள்வி - நல்லிசையைக் கேட்டலையும்,

நல்லார் இனம் சேர்தல்-அழகியமாதர் கூட்டத்தையும் விரும்பி அநுபவித்தலை, தேற்றானேல் - நன்மை தருவனவென்று உணரானானல், அமைச்சு - (அவன்) மந்திரியாக, தேறும் - (அரசனால்) நம்பப்படுவான், எ - று.

(வி - ரை.) முடியென்றது தன்னைக் கவித்துச் செய்யும் ஆளுகையை. உடைமை-செயப்படுபொருள் குன்றாத குறிப்புத் தொழிற்பெயர். நல்லாரினம் - ஒன்றன்கூட்டத் தற்கிழமைப்பொருளதாகிய ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். ஐம்புலன்களின் அநுபவங்களை மிகவுஞ் செய்யாதானென்னுங் கருத்தால் 'நாற்றஞ் சுவை கேள்வி நல்லா ரினஞ்சேர்தல், தேற்றான்' என்றார். அமைச்சு-மந்திரித்தன்மை; இது பண்பாகுபெயர்; பொருள்: பக்கத்தி லுள்ளவன்; அமா என்னும் வடமொழிக்குப் பொருள் அருகு. (கள)

18. போகம் பொருள்கேடு மான்வேட்டம் பொல்லாக்கள்
சோகம் படுஞ்சூதே சொல்வன்மை—சோகக்
கடுங்கதத்துத் தண்ட மடங்காமை காப்பின்
அடுங்கதமி லேனை யரசு.

(ப-ரை.) போகம் ஏ - சிறந்த சுகங்களில் இச்சையும், பொருள் கேடு ஏ - தேடிய பொருளை வீணே அழித்தலும், மான்வேட்டம் ஏ - (பலமுறை) விலங்குகளை வேட்டையாடுதலும், பொல்லாக்கள் ஏ - பொல்லாங்கைத் தருகின்ற கள்ளுண்ணலும், சோகம் படும் - துன்பம் விளைகின்ற, சூதே - சூதாடுதலும், சொல் வன்மை - கடுஞ்சொல் சொல்லலும், சோகம் - பின் துன்பத்தைத் தருகின்ற, கடுங்கதத்து - பெருங்கோபத்தினால், தண்டம் ஏ-பகைத்துப் போர்செய்தலும், அடங்காமை ஏ - தன்னிடத்துத் தங்காமல், காப்பின் - (அவற்றைத்) தடுப்பானாயின், ஏனை அரசு - மற்ற அரசர்கள், அடும் கதம் - (இவ்வரசனோடு) போர்செய்யும் கோபம், இல் - இலர், எ-று.

(வி - ரை.) எண்ணேகாரத்தை முன்னும் பின்னுங் கூட்டுக. பொருள்கேடு-எழுவாய்த் தொகாநிலைத்தொடர்; பொருட் கேடெனவரின் தொழிற்பண்புத் தற்கிழமைப் பொருளதாகிய ஆறாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராம்; அவ்வாறாவதும் வினைமுதற்பொருளின்கண் வந்ததாகும். மான் என்பதில் னகரம் சாரியை. மான்வேட்டம் - தொழிற்பண்புத் தற்கிழமைப் பொருளதாகிய ஆறாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராயினும், இவ்வாறாவது செயப்படுபொருளின்கண் வந்தது. வேட்டம் - முதனிலையில்லாத தொழிற்பெயர். இல் - இல்லையென்பது கடைகுறைந்தது. அரசு - பண்பாகுபெயர். ஏனை - பிறிதென்னும் பொருளதாகிய இடைச்சொல் ஏலாதி ஆறு மருந்து கூடியதன்றே; இஃது எழுபொருளை அடக்கியிருப்பது அம்மருந்தோடு கண்டசருக்கரையுங் கூட்டுத லுண்மையாலென்க. பின்வருஞ் செய்யுளுக்கும் இஃதொக்கும். (௧௮)

19. கொல்லான் கொலைபுரியான் பொய்யான் பிறர்பொருண்மேல்
செல்லான் சிறியாரினஞ் சேரான்—சொல்லும்
மறையிற் செவியிலன் றீச்சொற்கண் மூங்கை
இறையிற் பெரியாற் கிவை.

(ப - ரை.) கொல்லான் - (ஓருயிரையும்) கொலைசெய்யான்; கொலை புரியான் - (பிறர் செய்யும்) கொலையை விரும்பான்; பொய்யான் - பொய்சொல்லான்; பிறர் பொருள்மேல் - பிறர் பொருளின் மேல், செல்லான் - (தன்மனத்தால்) செல்லான்; சிறியார் இனம் - கீழ்மக்களுடைய கூட்டத்தை, சேரான்-சேர்தலிலான்; சொல்லும்-(ஒருவரோடொருவர் சொல்லுகின்ற, மறையில் - இரகசியச் செய்தியில், செவி இலன் - கேட்குங் காதிலன்; தீச்சொற்கள் - தீச்சொற்களைச் சொல்வதில், மூங்கை - ஊமை; இவை - ஆகிய இவ்வேழு செயலும்; இறையில் - முதன்மைப்படுதலில், பெரியாற்கு - மிக்கவனுக்கு உரியவையாம், எ - று.

(வி - ரை.) பிறர் பொருண்மேற் செல்லாமையாவது பிறருடைய பொருளை வெளவக்கருதாமை. சிறியாரினம் - ௧௬-ம் பாட்டுரையிற் காண்க. பிறர்-இடைச்சொலடியாகப் பிறந்த பல்லோர் படர்க்கைப் பெயர்; பிற - பகுதி, அர்-பல்லோர படர்க்கை விகுதி, பகுதியீற்று உகரங் கெட்டதெனின் கடைக்குறை, விகுதிமுதல அகரங் கெட்டதெனின் முதற்குறையெனக; இவ்வாறன்றி ரகரமெய் விகுதியெனினும் பொருந்தும். மறை - தொழிலடியாகப் பிறந்த பெயர்; மறு - பகுதி, ஐ - செயப்படுபொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி, பிறரறியாதபடி மறைக்கப்பட்டதென்பது பொருள். 'பிறர் மனைமேல் செல்லான்' எனவும், 'பல்லார் மறையில்' எனவும் பாடமுண்டு. (௧௯)

20. மின்னே ரிடையார்சொற் றேறான் விழைவோரான்
கொன்னே வெகுளான் கொலைபுரியான்—பொன்னே
உறுப்பறுத் தன்ன கொடையுவப் பான்றன்னின்
வெறுப்பறுத்தான் விண்ணகத்து மில்.

(ப - ரை) பொன்னே - திருமகளை ஒத்தவளே! மின் - மின்னலை, நேர்-ஒத்த, இடையார் சொல் - இடையையுடைய மாதர்களது சொல்லை, தேறான் - நம்பான்; விழைவு - (அவர்களது) விருப்பத்தை, ஓரான் - கருதான்; கொன்னே - பயனில்லாமலே, வெகுளான்-(ஒருவரையும்) கோபியான்; கொலை புரியான்-கொல்லுந்தொழிலை விரும்பான்; உறுப்பு - தன் உடலை, அறுத்தால் அன்ன - அறுத்துக் கொடுத்தாலொத்த, கொடை உவப்பான் - கொடைத்தொழிலை விரும்பிச் செய்வான்; தன்னின் - தன்மனத்தில், வெறுப்பு - (பிறன்மேற் கொண்ட) வெறுப்பை, அறுத்தான் - நீக்கினானாகிய ஒருவன், விண் அகத்தும் - விண்ணுலகத்திலும், இல் - இல்லை, எ - று.

(வி - ரை.) உறுப்பு அறுத்தீந்த கொடையாவது சிபிசக்கரவர்த்தி தன்னை யடைந்த புறாவுக்காகத் தன்னுடலை யரிந்து வேடனுக்

கீந்த கொடை. கொன்-பயனின்மைப் பொருளதாகிய இடைச்சொல். ஏ-பிரிநிலை. அறுத்தன்ன என்பவற்றை அறுத்தால் அன்ன, அறுத்தது அன்ன எனப் பிரிக்க; முன்னது வினையெச்சத்திறு தொகுத்ததெனவும், பின்னது தொழிற்பெயரீறு தொகுத்ததெனவுங் கொள்க. உறுப்பு - சினையாகுபெயர். உம்மை - உயர்வுசிறப்பு. விண்ணகத்துமில்லென்றது இப்படிப்பட்டவன் உலகத்துண்டாயிருத்தலி னருமை குறித்தது. (௨௦)

**21.** இளமை கழியும் பிணிமூப் பியையும்
வளமை வலியிவை வாடும்—உளநாளால்
பாடே புரியாது பால்போலுஞ் சொல்லினுய்
வீடே புரிதல் விதி.

(ப - ரை.) பால்போலும் - பாலையொக்கும், சொல்லினுய் - சொல்லையுடையாளே! இளமை - இளம்பருவம், கழியும் - நிலைபெறுமல் ஒழியும்; பிணி மூப்பு - நோயும் கிழத்தனமும், இயையும் - வந்தடையும்; வளமை - செல்வமும், வலி - (உடலின்) வலியும், இவை வாடும் - ஆகிய இவை தேயும்; உள நாளால்-தான் உடலோடுவாழும் நாளில், பாடே புரியாது - துன்பத்தை அநுபவிக்க விரும்பாமல், வீடே - வீடடைதலொன்றையே, புரிதல் விதி - விரும்புதல் (ஒருவர்க்குக்) கடமை, எ-று.

(வி - ரை.) பாடாவது இல்வாழ்க்கைக்குரிய பொருள்தேடுதல் முதலியவற்றுல் வருந்துன்பம். இளமையில் மேலெழ வலியில்லா தடங்கியிருந்த நோய் இளமை கழிந்தமாத்திரத்தில் மேலெழுதலால் பிணியை மூப்பொடுவைத் தெண்ணினுர். இளமை மூப்பென்னும் பெயர்கள் உயிர் உடலோடு கூடி வாழ்நாளின்மேல் நின்றன. மூப்பு-தொழிற்பெயர்; மூ - பகுதி, ப் - சந்தி, பு - புடைபெயர்ச்சி விகுதி. பிணி-தொழிலடியாகப் பிறந்தபெயர்; பிணி (கட்டு)-பகுதி, இ-வினை

முதற்பொருண்மை விகுதி புணர்ந்து கெட்டது. நாளால்-வேற்றுமை மயக்கம். பாடே, வீடே இவ்விரண்டனுள் ஒன்றனில் ஒன்றைப் பிரித்தலால் ஏகாரங்கள் பிரிநிலை. (௨௧)

௨௨. வாளஞ்சான் வன்கண்மை யஞ்சான் வனப்பஞ்சான்
ஆளஞ்சா னாய்ப்பொருடா னஞ்சான்—நாளெஞ்சாக்
காலன் வரவொழிதல் காணின்வீ டெய்திய
பாலினா லெய்தப் படும்.

(ப - ரை.) வாள் அஞ்சான்-(ஒருவன் பகைவனுடைய) கூரிய வாளை அஞ்சான்; வன்கண்மை அஞ்சான் - இரக்கமின்மையை அஞ்சான்; வனப்பு அஞ்சான்-(பிறரஞ்சத்தகும்) தோற்றத்தை அஞ்சான்; ஆள் அஞ்சான் - வெற்றியாண்மையை அஞ்சான்; ஆய் - குற்றமற்ற, பொருள் அஞ்சான் - செல்வப்பொருளை அஞ்சான்; (ஆயினும்) நாள் எஞ்சாத-(தான் கொண்டுபோகும்) நாள் குறையாது வரும், காலன் - காலனானவன், வரவு - (தன்மேல்) வருந்தொழில், ஒழிதல் - நீங்குதலை, காணின்-காண விரும்புவானாயின், வீடு-முத்தியுலகு, எய்திய - அடையும்படி, பாலின் - அத்தன்மையையுடைய, நூல் எய்தப்படும் - நூலிற்கூறிய ஒழுக்கத்தை அடைதலே தகுதி, எ - று.

(வி - ரை.) வாள் முதலிய ஐந்துக்கும் அஞ்சுதல் அச்சமன்று; காலன் வரவுக்கஞ்சுதலே அச்சமெனப்படுமென்பது கருத்து. காலன் வரவென்றது மரணத்தை ஆதலால், அதனை இனி ஒழித்தற்கு உபாயமாவது வீட்டுநெறி அடைதலாமென வுணர்க. எஞ்சா என்பதை ஈறு தொகுக்கப்பட்ட பெயரெச்சமாகக் கொள்ளாமல் எதிர்மறை வினையெச்சம் மல் விகுதி தொகுக்கப்பட்டதெனக்கொண்டு, அது வரவென்னும் தொழிற்பெயர் கொண்டதெனக் கொண்டு உரைப்பினும் பொருந்தும். காலன் - காலக்கடவுள். குற்றமற்ற பொருள் - நல்வழியிற் றேடிய பொருள். (௨௨)

**23.** குணநோக்கான் கூழ்நோக்கான் கோலமு நோக்கான்
மணநோக்கான் மங்கலமு நோக்கான்—கணநோக்கான்
கால்காப்பு வேண்டான் பெரியார்நூல் காலற்கு
வாய்காப்புக் கோடல் வனப்பு.

(ப-ரை.) கால் காப்பு - காலுக்குத் தளைபோன்ற இல்வாழ்க்கையை, வேண்டான்-வேண்டாத ஒருவன், குணம்-நற்குணத்தைப் பெற, நோக்கான் - மதியாமலும், கூழ் - செல்வத்தைப்பெற, நோக்கான் - மதியாமலும், கோலமும் - அலங்காரத்தைப் பெறுதலையும், நோக்கான் - மதியாமலும், மணம் - கல்யாணத்தைப் பெற, நோக்கான் - மதியாமலும், மங்கலமும் - புண்ணியத்தைப் பெறுதலையும், நோக்கான் - மதியாமலும், கணம் - சுற்றத்தைத் தழுவ, நோக்கான் - மதியாமலும், பெரியார் நூல் - பெரியாரால் கூறப்பட்ட நூற்பொருளை, காலற்கு-காலனுடைய, வாய்-வருவழியை, காப்புக் கோடல் - தடுப்பதாகக் கொள்ளுதல், அழகு - அழகாம், எ-று.

(வி-ரை.) கால்காப்பு வேண்டாதான் செயலைக் கூறியதாகலால் குணநோக்கான்முதல் வாய்காப்புக்கோடலீறாகக் கிடந்த ஏழும் இச்செய்யுள் கூறியதெனக்கொண்டு, பதினெட்டாஞ் செய்யுட் குரைத்தாங்குரைக்க. பெரியார் நூற்பொருளைக் காலற்கு வாய்காப்புக் கோடலாவது பெரியார் கூறிய நூற்பொருளை நன்குணர்ந்து, அது கூறியபடி துறவுபூண் டொழுகுவானாயின் அவ்வொழுக்கம் காலனைத் தன்னிடம் வாராமல்தடுத்தல். 'காதலற்கு வாய்காப்புக் கோடல்'எனவும் பாடமுண்டு. அதில் கால்காப்புவேண்டா னென்பதைப் பிதாவெனக் கொண்டு, நோக்கானென்னும் வினைகளை அவன்மே லேற்றிக் கோடலென்பதில் விவ்விகுதி தொகுத்தலெனக்கொண்டு பிறவினைத் தொழிற்பெயராக்கிப் பொருளுரைக்க. உம்மைகளிரண்டும் உயர்வு சிறப்போடு இறந்ததுதழீஇய பொருளின்கண் வந்தன. (உ௩)

24. பிணிபிறப்பு மூப்பொடு சாக்காடு துன்பம்
தணிவின்நிரப் பிவைதா மூழா—அணியின்
அரங்கின்மே லாடுநர்போ லாகாம னன்றும்
நிரம்புமேல் வீட்டு நெறி.

(ப - ரை.) பிணி ஒடு - நோயும், பிறப்பு ஒடு - பிறத்தலும், மூப்பொடு - மூப்பும், சாக்காடு ஒடு - சாவும், துன்பம் ஒடு - (பொருளைத்தேடுதல் முதலியவற்றால் வரும்) துன்பமும், தணிவு இல் - (போதுமெனத்) திருப்தியின்மையாகிய, நிரப்பு ஒடு - வறுமையும், இவை-ஆகிய இவ்வாறும், தாழா - தாமதியாமல் (ஒருவனை) அடையும்; (ஆதலால்) அரங்கின்மேல் - நர்த்தனசபையில், அணியின் - (மாறிமாறித்) தரிக்கும் வேடத்தினால், ஆடுநர்போல-ஆடுகின்றவரைப் போல, ஆகாமல் - மாறிமாறிப் பிறந்திறவாமல், வீட்டுநெறி - வீட்டுலகத்தை யடைதற்குரிய துறவு ஒழுக்கம், நிரம்புமேல் - நிரம்புவானாயின், நன்று ஆம் - (ஒருவனுக்கு) இன்பமுள்ளதாகும், எ-று.

(வி-ரை.) எண்ணுப் பொருளதாகிய ஒடுவை முன்னும் பின்னுங் கூட்டுக; (நன் - இடை-சூ - ௧0.) சாக்காடு-தொழிற்பெயர்; சா-பகுதி, காடு-புடைபெயர்ச்சியை யுணர்த்தும் விகுதி, க் - சந்தி; வேக்காடு, நோக்காடு என்பவற்றாலு முணர்க. குறையை நிரப்பென்றது மங்கலவழக்கு; நிரப்பென்னுந் தன்வினைப் பகுதியோடு தல் விகுதி புணர்ந்து கெட்டமாத்திரையில், அம்முதனிலை நிரப்பெனத் திரிந்தமையினால் முதனிலை திரிந்த தொழிற்பெயரெனக. வீடு-முற்றவிடுதல் காரணமாக உண்டாம் மீளாப்பதத்துக்காதலால் காரணவாகு பெயர்; இதுவும் அத்தொழிற்பெயர். ஆடுநர் - பலர்பாற்படர்க்கை நிகழ்கால வினையாலணையும் பெயர்; ந்-நிகழ்கால இடைநிலை; "அறிஞனுண்டிருக்குநன்" என்பதனாலு முணர்க. (உ௪)

25. பாடகஞ் சாராமை பாத்திலார் தாம்விழையும்
நாடகஞ் சாராமை நாடுங்கால்—நாடகம்
சேர்ந்தாற் பகைபழி தீச்சொல்லே சாக்காடே
தீர்ந்தாற்போற் றீரா வரும்.

(ப-ரை.) பாத்திலார் - ஒருவகைப்படாத வேசியர், பாடு அகம் - பாடுகின்ற இடத்தை, சாராமை - (ஒருவன்) சாராமலொழியக்கடவன்; தாம் விழையும் - அவர்கள் விரும்பியாடுகின்ற, நாடகம் - நாடகத்தை, சாராமை - சேர்ந்து காணாதொழியக்கடவன்; நாடுங்கால் - (அப்பாட்டைக்) குறிப்பாகக் கேட்பானாயினும், நாடகம் - அந்நடனத்தை, சேர்ந்தால் - சேர்ந்து காண்பானாயினும், பகை ஏ - பகையும், பழி ஏ - பழியும், தீச்சொல்லே - கடுஞ்சொல்லும், சாக்காடே - (இடையில் நேரும்) சாவும், தீர்ந்தால்போல - இல்லாதனபோலத்தோன்றி, தீரா வரும் - நீங்காதனவாய் வந்து சேரும், எ - று.

(வி-ரை.) பாடகஞ் சார்தலும், நாடகஞ் சார்தலும் இழுமக்களது செயலாதலால், அங்குச் சார்ந்தானுக்குப் பகைமுதலிய நான்கும் தான் எதிர்பாராதபோதும் வந்து சேர்தல் துணிவென்பது கருத்து. பாத்திலார் - இறந்தகால வினையாலணையும் பெயர்; பகு என்பதன் மரூஉவாகிய பா-பகுதி, த்-சந்தி, த்-இறந்தகால இடைநிலை, செயலையும், காலத்தையும் மறுக்க வந்த இல் எதிர்மறை விகுதி, அனைத்துமொருபகுதி, ஆர்-பல்லோர் படர்க்கை விகுதி. பகை-தொழிற்பெயர்; பகு-பகுதி, ஐ-புடைபெயர்ச்சியை யுணர்த்தும் விகுதி, உகரக்கேடு சந்தி. தீரா - பலவின்படர்க்கை எதிர்மறை வினைமுற்று; இங்கு வினையெச்சமாயிற்று; மல் விகுதி தொகுத்தல்பெற்ற வினையெச்சமெனினும் பொருந்தும். (உரு)

26. மாண்டமைந்தா ராய்ந்த மதிவனப்பே வன்கண்மை
ஆண்டமைந்த கல்வியே சொல்லாற்றல்—பூண்டமைந்த

காலமறிதல் கருதுங்காற் றூதுவர்க்கு
ஞாலமறிந்த புகழ்.

(ப-ரை.) மாண்டு - (நல்லொழுக்கத்தில்) மாட்சிமைப்பட்டு, அமைந்து - அடங்கி நடந்து, ஆராய்ந்த-(நீதிநூல்களை) ஆராய்ந்தடைந்த, மதி ஏ - அறிவுடையராதலும், வனப்பே - தோற்றப்பொலிவுடையராதலும், வன்கண்மை ஏ - (பகைவர்க்கு) அஞ்சாமையுடையராதலும், ஆண்டு - மறவாமல் காத்து, அமைந்த - (அதனால் தம்மில்) நிரம்பிய, கல்வியே - கல்வியறிவுடையராதலும், சொல் ஆற்றல் ஏ - (பகைவரை உடன்படுத்தும்) சொல்லுதலின் வன்மையுடையராதலும், பூண்டு - (தாம் சொல்லுதலை) மேற்கொண்டு, அமைந்த-(அதனைப் பகைவர் ஏற்றுக்கொள்ளுதற்குத்) தகுந்த, காலம் அறிதல் - காலத்தை அறியவல்லராதலும், கருதுங்கால்-ஆராயின், தூதுவர்க்கு - தூதர்களுக்கு, ஞாலம்-உயர்ந்தோர், அறிந்த புகழ் - அறிந்த புகழைத்தருவன ஆம், எ - று.

(வி-ரை.) தாம் வகுத்துச் சொல்லுவோர், பிறர் சொல்லியதைச் சொல்லுவோர் எனத் தூதுவர் இருவகைப்படுவோர்; இது முன்னவரைக் குறித்தது. புகழ்தருவனவற்றைப் புகழெனக் காரணத்தைக் காரியமாகக் கூறினார்; இது மரபுவழுவமைதி. தூதுவர்: பகுதி வடமொழியாதலால், குற்றியலுகரங் கெடாமல் வந்தது; தூதனெனக் கெட்டும் வருதலுண்டு. ஞாலம் தனக்குக் கண்ணாகவுடைய உயர்ந்தோர்க்கு இடவாகுபெயர். (உசு)

27. அஃகுநீ செய்ய லெனவறிந் தாராய்ந்தும்
வெஃகல் வெகுடலே தீக்காட்சி—வெஃகுமான்
கள்ளத்த வல்ல கருதி னிவைமூன்றும்
உள்ளத்த வாக வுரை.

(இ-ள்.) வெஃகல்-(பிறர்பொருளைக்) கவரவிரும்புதல், அஃகு-குறை, வெகுடல் - கோபித்தலை, நீ - விடு; தீக்காட்சி - தீமையைத் தரும் பொருளைக்காண்கையை, செய்யல்-செய்யாதை; எனவு-என்று (அறிவுடையார்) சொல்லுதலை, ஆராய்ந்து-(நூல்களினால்) எண்ணி, அறிந்தும்-துணிந்தும், வெஃகுமான்-(ஒருவன்) விரும்புவானாயின், இவை மூன்றும் - வெஃகல் வெகுடல் தீக்காட்சியாகிய மூன்றும், கருதின் - ஆராயின், கள்ளத்த அல்ல - (புறத்தில் செய்யப்படாமையால்) வஞ்சமுள்ளன அல்ல, உள்ளத்த ஆக-அகத்தில் உள்ளனவாக, உரை - நீ சொல், எ-று.

(வி-ரை.) வெஃகல், வெகுடல், தீக்காட்சி இம்மூன்றும் நடவாமையையும், நடந்தமையையுங் கூறியதாதலால் இச்செய்யுள் ஆறு பொருளமைந்ததென்க. இம்மூன்றும் உள்ளத்தின்மட்டில் நின்றதே அன்றி, அவற்றின்காரிய நிகழ்ந்து பிறனைத் துன்பப்படுத்தில ஆதலால் 'கள்ளத்த அல்ல' என்றார். அஃகு, நீ, செய்யல் இம்மூன்றும் ஏவலொருமை வினையாயினும் பின்னதொன்றும் எதிர்மறையென்க; செய்-பகுதி, ய்-சந்தி, அல்-ஏவலொருமை எதிர்மறை விகுதி; செய்க எனப் பொருள்படின், உடன்பாட்டு வியங்கோளாகும்; இதுவே எதிர்மறை வியங்கோளெனின், ஐம்பால் மூவிடங்களில் செல்லாமையால் குற்றமென்னுக; செய்யற்க வென்பது எதிர்மறைவியங்கோளென்க. ஆராய்தலின் காரியம் துணிதலாதலால் ஆராய்ந்தறிந்தெனப் பின்முன்னாகக் கூட்டுக. உம்மை-உயர்வு சிறப்பு. ஆயி னென்பதன் மரூஉ ஆன். அஃகு, நீ, செய்யல், வெஃகல், வெகுடல், தீக்காட்சி அது முறைநிரனிறைப்பொருள்கோளும், அவ்வணியும் படவந்ததென்க. (உஎ)

28. மைமேயர் தடங்கண் மயிலன்னாப் சாயலை
மெய்யே புணர்ந்தார் மிகவுரைப்பர்—பொய்யே
குறளை கடுஞ்சொற் பயனிலசொ லான்கும்
மறலையின் வாயினவா மற்று.

(இ-ள்.) மை - மையிட்ட, ஏர் - அழகுள்ள, தடவுக்கண்-பெரிய கண்களையுடைய, மயில் அன்னாய் - மயிலை ஒத்தவளே! உணர்ந்தார் - (நன்மைகளைப்)பகுத்துணர்ந்தவர், சாயலே-மேம்பாடாகிய சொல்லையும், மெய்யே - மெய்ம்மையையும், மிகவு உரைப்பர் - பெருமையாகச் சொல்வார்; பொய்யே - பொய்யும், குறளை ஏ - புறங்கூறலும், கடுசொல் ஏ - வன்சொல்லும், பயனில சொல் ஏ - ஒருபயனையுந்தாராத சொற்களைச் சொல்லுதலும், நான்கும் - ஆகிய நான்கும், மறலையின் - புல்லறிவுடையானது, வாயின - வாயினிடத்தன, எ - று.

(வி - ரை.) மேம்பாடாகிய சொல் - உயர்ந்த பொருளைத்தருஞ் சொல். பெருமையாகச் சொல்லல்-அறம் பொருள் இன்பங்களுள் ஒன்றனைத்தருஞ் சொல்லையே சொல்லுவாராதலால் அதனை அச்சமின்றிச் சொல்லல். இல - பண்படியாகப்பிறந்த குறிப்புவினைப்பெயர். மறல்-எரிபோரால் மறுக்கப்பட்ட அறியாமை; அது பண்பாகுபெயராய்ப் பேதையரை உணர்த்தியது; ஐ-சாரியை. வாயின-இடமடியாகப்பிறந்த குறிப்பு வினைமுற்று. ஆம், மற்று-அசை. (உஅ)

**29.** நிலையளவி னின்ற நெடியவர்தா நேரா
கொலைகளவு காமத்தீ வாழ்க்கை—அலையளவி
மையெனநீள் கண்ணாய் மறுதலைப விம்மூன்றும்
மெய்யள வாக விதி.

(ப-ரை.) அலை அளவி - அலைக்குந்தொழிலை அடைந்து, மை என - (கருமையால்) மையென்று சொல்ல, நீள் கண்ணாய் - (கடைவரையும்) நீள்கின்ற கண்களையுடையாளே! நிலை அளவின்நின்ற - (தமக்குச் சொல்லிய) ஆச்சிரமத்தினளவில் தவறாமலுள்ள, நெடியவர் - பெரியவர், கொலை-(ஓருயிரைக்) கொல்லுதலையும், களவு-களவு செய்தலும், காமம் - காம இன்பத்தை விரும்புகின்ற, தீ வாழ்க்கை-தீயவாழ்க்கையும், நேரா - செய்ய உடன்படாதன; மறுதலைப-இவற்

சகோடன்-கலியாணத்தின்போதே கருப்பமிருந்து பின்பெற்ற மகன். கிருத்திரமன்-திக்கில்லாமையேயன்றி, நன்னடக்கையையுங் கண்டு வளர்த்துக்கொள்ளப்பட்டவன். புத்திரி புத்திரன் - மகள் மகன். அபவித்தன் - தாய்தந்தையர்களால் காக்கமுடியாமையினால் விடப்பட்டு, ஒருவனால் வளர்த்துக்கொள்ளப்பட்டவன். உபகிருதன் - காணிக்கை போல வந்து சேர்ந்தவன்; இவனைச் சுவயந்தத்தனெனவுங் கூறுவர்; பொருள் தானேவந்து ஔரசனோடொத்தலின், ஒருவனுக்குப் பிள்ளையானவன். மகள் மகனை நீக்கி சௌத்திரனைக் கூட்டுவாருமுளர்; பொருள் அந்தணனை அல்லது அரசனைச் சூத்திரப்பெண் புணர்ந்துபெற்ற பிள்ளை. ஔரசன், கேத்திரசன், தத்தன், கிருத்திரமன், கூடோத்துபன்னன், அபவித்தன். அன்றி, மகள் மகன் இவ்வறுவருமே தாய் பாகம் பெறுதற்குரியார். (௩௧)

**32.** உரையான் குலன்குடிமை யூனம் பிறரை
உரையான் பொருளொடுவாழ் வாயு—உரையானைப்
பூவாதி வண்டுதேர்ந் துண்குழலா யீத்துண்பான்
தேவாதி தேவனாத் தேறு.

(இ-ள்.) பூ ஆதி - மலர்முதலியவற்றை, வண்டு - வண்டுகள், தேர்ந்து - ஆராய்ந்து, உண் குழலாய் - மொய்த்துண்ணுகின்ற கூந்தலையுடையாளே! குலன் - தன்குலத்தின் உயர்வையும், குடிமை - குடிப்பிறப்பின் உயர்வையும், உரையான் - சொல்லாமல், பிறரை - அவ்விரண்டுமில்லாத மற்றவர்மேல், ஊனம் உரையான் - குற்றங் கூறாமல், பொருளொடு - தனது பொருளினளவோடு, வாழ்வு-அநுபவிக்கும் செல்வத்தையும், ஆயு-ஆயுளையும், உரையான் ஆய்-வெளிப்படுத்தானாகி, ஈந்து உண்பான்-(இரப்பவர்க்குக்) கொடுத்து(த்தானும்) அநுபவிப்பன், தேவ அதி தேவன் ஆக - தேவர்களில் சிறந்த தேவனாக, தேறு - தெளியாய், எ-று.

(வி-ரை.) குலன், குடிமை-பொருளாகுபெயர். பிறரை - உருபு மயக்கம். ஒடு - உடனிகழ்ச்சி. பூவாதியாவன - பூ, மரு, குருவேர் பூசிய கஸ்தூரி, மயிர்ச்சாந்தென்பன. இவற்றைத் தேர்ந்துண் குழ லென்பதனில் உண்ணுதற்குப் பூவாதியைச் செயப்படுபொருளாகக் கொண்டால் குழலைநிலப்பெயராகவும், பூவாதியை ஆராய்ந்து அவற்றி னும் மணமுடையதென்று குழலை யுண்ணுமெனக் கருத்துக்கொண் டால், குழலைச் செயப்படுபொருளாகவுங் கொள்க; இதனை "நனை சின்னமூழ்த்தநல்லார் - வெறுங்கூந்தன் மொய்க்கின்றன வேண்டல வேண்டுபோதும்" என்பதனாலு முணர்க. தேவாதிதேவ னென்ப தைத் தேவ ஆதிதேவ னெனப் பதம் பிரித்து, தேவர்களுக்கு முதன் மைத் தேவனென வுரைத்தலுமாம். தேவாதிதேவனாதல்-நூறு அசுவ மேதப் புண்ணியமடைந்து இந்திரனாதல். கீழ்ப்பாட்டில் விண்ணோர் க்கு வேந்தனென்றது மிது. (௩௨)

33. பொய்யுரையான் வையான் புறங்கூறான் யாவரையும்
மெய்யுரையா னுள்ளனவும் விட்டுரையான்—எய்யுரையா
கூந்தன்மயி லன்னாய் குழீ இபவான் விண்ணோர்க்கு [ன்
வேந்தனா மிவ்வுலகம் விட்டு.

(ப-ரை.) கூந்தல் - கூந்தலானது, மயில் அன்னாய் - மயில் போன்றவளே! பொய்யுரையான்-பொய்யைச் சொல்லான்; வையான்-(ஒருவரையும்) இகழான்; யாவரையும்-(தனக்குத்) தீமை செய்தவரை யும், புறங்கூறான் - புறத்தில் அவமதித்துப் பேசான்; மெய் உரை யான் - (ஒருவருக்கு நேர்ந்த இடுக்கண் ஒழிப்பதற்கு) நடந்த உண் மையைச் சொல்லான்; உள்ளனவும்-(தன்பால்) உள்ள பொருள்களை யும், விட்டு உரையான் - வாய்விட்டுச் சொல்லான்; எய் உரையான் - (தன் சிநேகனிடத்தும்) தன் வறுமைத் துன்பத்தைச் சொல்லான்; (ஆகிய இவன்) இவ்வுலகம் விட்டு - இந்த உலகத்தை விட்டு, வான் -

சுவர்க்கத்தில், குழீஇய - கூடியுள்ள, விண்ணோர்க்கு - தேவர்களுக்கு, வேந்தன் ஆம் - அரசனாகிய இந்திரனாவான், எ-று.

(வி - ரை) எய்-முதனிலைத்தொழிற்பெயர். உள்ளன-பண்படியாகப் பிறந்த பலவின்படர்க்கைக் குறிப்புவினைப்பெயர்; உண்மை-பகுதி, அ - பலவின் படர்க்கை விகுதி, மையீறு கெடுதலும் ளகரம் இரட்டலும் சந்தி, அன்-சாரியை. உள்ளன விட்டுரையாமை மெய்யுரையாமையோ டொக்குமாதலால் உள்ளனவுமென்ற உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. (௩௩)

34. சிதையுரையான் செற்ற முரையான்சீ றில்லான் [க்குக்
இயல்புரையா னீன முரையான் முனியான்—நசையவர்
கூடுவ தீவானைக் கொவ்வைபோல் செவ்வாயாய்
நாடுவர் விண்ணோர் நயந்து.

(ப - ரை.) கொவ்வைபோல் - கோவைக்கனி ஒக்கின்ற, செவ்வாயாய் - சிவந்த வாயையுடையாளே! சிதை உரையான் - கீழ்மையாகிய சொற்களைப் பேசாமலும் செற்றம் உரையான் - (பிறர்) கோபத்துக்குக் காரணமாகிய சொற்களைப் பேசாமலும், சீறு இல்லான் - (பிறர்மேல்) சீறுதலில்லாமலும், இயல்பு உரையான் - (தனது) நற்குணத்தைப் புகழாமலும், ஈனம் உரையான் - (பிறரது) குற்றங்களைச் சொல்லாமலும், நசையவர்க்கு - விரும்பி வந்தடைந்தவர்க்கு, கூடுவது - (தன்னால்) கூடிய பொருளை, ஈவானை - கொடுக்கு மியல்புடையானை, விண்ணோர் தேவர்கள், நயந்து - மகிழ்ந்து, நாடுவர் - (உடனிருக்க) விரும்புவார், எ-று.

(வி-ரை.) கீழ்மையாகிய சொற்கள்: பொய், குறளை, வன்சொல், பயனில ஆயினும், வன்சொல் செற்ற முரைப்பதிலும், குறளை ஈன முரைப்பதிலும் அடங்குதலால் மற்ற இரண்டுமெனக்கொள்க. சிதை-பண்பாகுபெயர். செற்றம் - காரியவாகுபெயர்; செறு - பகுதி, அம் -

புடைபெயர்ச்சி விகுதி, உகரக்கேடும் தன்னொற்றிரட்டலும் சந்தி. சிற்றம், உருக்கம், நெருக்கம், ஒற்கமென வன்றொடர், ஆய்தத்தொடரல்லாத குற்றியலுகரப் பகுதிகளும் அம் விகுதிப்புணர்ச்சியில் விகாரப்படும். சீறு - முதனிலைத்தொழிற்பெயர். கூடுவது - ஒன்றன்படர்க்கை எதிர்கால வினையாலணையும்பெயர். கொவ்வை-முதலாகுபெயர்.

35. துறந்தார் துறவாதார் துப்பிலார் தோன்று
இறந்தா ரீடற்றா ரிளையர்—சிறந்தவர்க்கும்
பண்ணாளுஞ் சொல்லாய் பழியிலூண் பாற்படுத்தான்
மண்ணாளு மன்னனாய் மற்று.

(ப - ரை.) பண் - இசையை, ஆளும்-(தனக்குக் கீழ்ப்படுத்தி) ஆளுகின்ற, சொல்லாய் - சொல்லையுடையாளே! துறந்தார்க்கு - ஆதரிப்பவர்களால் கைவிடப்பட்டவர்களுக்கும், துறவாதார்க்கு - விருந்தினர்களுக்கும், துப்பிலார்க்கு - வறியவர்களுக்கும், இறந்து தோன்றார் - இறந்து காணப்படாதவர்களுக்கும், ஈடு அற்றார்க்கு-(செல்வப் பொருள் தொலைந்தமையினால்) பெருமை யிழந்தவர்களுக்கும், இளையர்க்கு-(காப்பாரில்லாத) சிறுவர்களுக்கும், சிறந்தவர்க்கு-(ஆச்சிரமங்களில்) சிறந்த துறவாச்சிரமத்தவர்களுக்கும், பழி இல் ஊண்-(அறிவுடையோரால்) பழிக்கப்படுதலில்லாத உணவை, பால் படுத்தான் - பகுப்புச்செய்து பின் உண்டவன், மன்னன் ஆய் - (மறுபிறப்பில்) அரசனாகி, மண் ஆளும் - பூமியை ஆளுவான், எ-று.

(வி - ரை.) துறந்தார் - செயப்பாட் டிறந்தகால வினையாலணையும்பெயர்; துற-பகுதி, க்-சந்தி, கு: அ-சாரியை, உகரக்கேடும் பகரத்தோற்றமுஞ் சந்தி, படு - செயப்பாட்டுவினைப்பொருண்மை விகுதி, அனைத்து மொருபகுதி, ஆர்-பல்லோர் படர்க்கை விகுதி, பகுதி ஒற்றிரட்டியதும், உகரக்கேடும் சந்தி, இரட்டிய ஒற்று இறந்தகாலங் காட்டியது; படு விகுதி தொகுக்கப்பட்டது. துறவாமல், துறந்தார் போன்று இல்லறத்தார் மனையிற்சென் றுண்ணலால் விருந்தினரைத்

'துறவார்' என்றார். துப்பு - தொழிற்பெயர்; து-பகுதி, ப்-சந்தி, பு - புடைபெயர்ச்சி விகுதி; பொருள் உண்ணல்; அது ஐம்பொறிகளால் உண்ணும் இனிய பொருள்களுக்குத் தொழிலாகுபெயர். தோன்று இறந்தாரென்பதைப் பின்முன்னாக நிறுத்தி விகுதி பிரித்துக்கூட்டி உரைக்க. துறந்தார் முதலிய அறுவர் கண்ணுக்குத் தோன்றுவாராதலின் இறந்தாரைத் 'தோன்றுஇறந்தார்' என்றார். இவர்க்கு ஊண் பாற்படுத்தலாவது அவரை நோக்கித் தான தருமங்களைச் செய்தல். பழியில்லாமை யென்னும் காரணத்தின் அடை ஊணென்னுங் காரியத்தின்மேல் நின்றது. மண் - கருவியாகுபெயர். இறந்தவர்க்கென்னும் நான்கனுருபை மேலவற்றோடுங் கூட்டுக. (௩௫)

36· காலில்லார் கண்ணில்லார் நாவில்லார் யாரையும்
பாலில்லார் பற்றிய நூலில்லார்—சாலவும்
ஆழப் படூஉ ணமைத்தா ரிமையவரால்
வீழப் படுவார் விரைந்து.

(ப - ரை.) கால் இல்லார் - காலில்லார்க்கும், கண் இல்லார் - குருடர்க்கும், நா இல்லார் - ஊமைகளுக்கும், யாரையும் - எவர்களையும், பால் இல்லார் - தம்பக்கம் இல்லாதவர்க்கும், பற்றிய - (தம் அறிவில்) பதியும்படி, நூல் இல்லார் - நூலறிவில்லாதவர்க்கும், சாலவும் - மிகவும், ஆழப்படும் - (உண்டபின் வயிற்றில்) தங்குதற்குரிய, ஊண் அமைத்தார் - உணவைச்சமைத்து ஈந்தவர், இமையவரால் - தேவர்களால், விரைந்து - விரைவாக, வீழ்ப்படுவார் - விரும்பப்படுவார், எ - று.

(வி-ரை.) காலில்லாரெனவே "ஒருமொழி யொழிதன், இனங்கொளற் குரித்தே" என்பதனால் கையில்லாரையுங் கொள்க. பேசுதற்கு இதழ், நா, பல், அண்ணம் இவற்றில் சிறந்த கருவி நா ஆதலால் ஊமைகளை 'நாவில்லார்' என்றார். கண் கட்புலனுக் காதலால் பொரு

ளாகுபெயர். யாரையும் பாலில்லா வென்றது யாருமற்றவரை. ஆழப்படு மூணாவது கண்ணுக்கு அருவருக்கத்தக்கதும், மூக்குக்கு நறுமணமில்லதும், நாவுக்குச் சுவையில்லது மல்லாமையால், உண்டபின் வயிற்றில் தங்குதற்குரிய ஊண். பற்றிய - காரியப்பொருட்டாகிய செய்யியவென்னும் வாய்பாட் டெதிர்கால வினையெச்சம்; இதில் விகுதி இய இல்லார்-செயப்படுபொருள் குன்றியவினையும், செயப்படுபொருள் குன்றாவினையுமாகிய குறிப்புவினைமுற்று; இதனை இச்செய்யுளிற் காண்க. ஆழப்படும் - செய்வினையாகிய செய்யுமென் பெயரெச்சம்; ஆழ்-பகுதி, அ-சாரியை, ப்-சந்தி, படு-பகுதிப்பொருள் விகுதி; அனைத்து மொருபகுதி, உம்-எதிர்காலப் பெயரெச்சவிகுதி, உகரக்கேடு சந்தி. இமைத்த லில்லாதவரை இமையவரென்றது மங்கலவழக்கு. ஊண்-உண்ணப்படுவதென்னும் பொருளில் தொழிலடியாகப் பிறந்த பெயர்; உண்-பகுதி, ஐ-செயப்படுபொருண்மை விகுதி, புணர்ந்துகெட்ட மாத்திரத்தில் முதனீண்டது; தல் விகுதி புணர்ந்து கெட்ட மாத்திரத்தில் முதனீண்டதெனக்கொண்டு தொழிலாகுபெயரெனினும் ஒக்கும். (௩௬)

37. அழப்போகா னஞ்சா னலறினாற் கேளான்
எழப்போகா னீடற்றா ரென்றும்—தொழப்போகான்
என்னையிக் காலநீ டோரான் றவமுயலான்
கொன்னே யிருத்தல் குறை.

(ப - ரை) ஈடு அற்றார் - வரிகட்டுந் திறமில்லாத குடிகள், அழ - (வரிகட்டுதற்கு நிர்வாகமில்லாமையால்) அழுதுகொண்டிருக்க, போகான் - போய் என் என்று கேளான்; அஞ்சான் - (மிக்க வரியை விதிப்பதற்கு) அஞ்சான்; அலறினால் - (இடுக்கண்நேரிட்டு) அலறிக்கூவினால், கேளான் - செவிசாய்க்கான்; எழப்போகான் - (அவ்விடுக்கண்) நீங்கும்படி சென்று நோக்கான்; தொழ - தன் குடிகள் தொழும்படி, என்றும் - எக்காலத்திலும், போகான் - புறத்தில்

உலாவான்; என்னே-யாது காரணமோ, இக்காலம் நீடு - இந்தக்காலம் (வீணே) கழிதலை, ஓரான் - அறியாமல், தவம் முயலான் - தவஞ் செய்ய முயற்சி செய்யாமல், கொன்னே - (பிறர்க்கும் தனக்கும்) பயன்படாமலே, இருத்தல் - (அரசன்) உயிர்வாழ்தல், குறை - குற்றமாம், எ-று.

(வி - ரை) அழப்போகுதல், அஞ்சுதல், அலறினால் கேட்டல், எழப்போகல், தொழப்போகல் இவ்வைந்தும் பிறர்க்கும்: காலக்கழிவை ஓர்தல், தவமுயன்றிருத்தல் இவ்விரண்டும் தனக்கும் பயன் தருவன. தொழப்போகுவானாதல் ஆங்காங்குள்ளார் தங்குறைகளைச் சொல்லுதலைக் கேட்டறிதலே யன்றித் தன் கண்ணால் காணலுங் கூடுமாதலால், அதுவும் பிறர்க்குப் பயன்தருதலாக எண்ணப்பட்டது. ஈடு-தொழிலடியாகப் பிறந்தபெயர்; இடு-பகுதி, ஐ செயப்படுபொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி, ஐ புணர்ந்து கெட்டமாத்திரையில் முதனீண்டது; தொழிலாகுபெயருமாம். நீடு-காலத்தின்மேல் நின்ற முதனிலைத் தொழிற்பெயர். கொன்-இடைச்சொல். (௩௭)

38. எழுத்தினா னீங்காதெண் ணாலொழியா தேத்தி
வழுத்தினான் மாறாது மாண்ட—வொழுக்கினால்
சேராமை சால வுணர்வார் பெருந்தவம்
போகாமை சாலப் புலை.

(ப - ரை) சால - மிகுதியாக, உணர்வார் - (ஞானநூல்களை) உணர்ந்தவர், எழுத்தினால் - மந்திர எழுத்தினின்றும், நீங்காது - நீங்காமலும், எண்ணால் - தியானத்தினின்றும், ஒழியாது - ஒழியாமலும், ஏத்தி வழுத்தினால் - துதிசெய்தலினின்றும், மாறாது - மாறாமலும், மாண்ட - மாட்சிமைப்பட்ட, ஒழுக்கினால்-நறவொழுக்கத்தில், சேராமை - சேராமையும், பெரு தவம் - பெரியதவவழியில், போகாமை - செல்லாமையும், சால - மிகவும், புலை - இழிவைத்தருவன ஆம், எ-று.

(வி-ரை.) முதலிலுள்ள மூன்றனுருபுகள் மூன்றையும் நீக்கற் பொருளவாகிய ஐந்தனுருபுகளாகவும், இறுதியிலுள்ள ஒன்றையும் இடப்பொருளதாகிய ஏழாவதாகவும் திரித்துக்கொள்க. நீங்காது, ஒழியாது, மாறாது என்னும் எதிர்மறை வினையெச்சங்கள் நேரானமை யென்னும் எதிர்மறைத் தொழிற்பெயரின் முதனிலை கொண்டன. எத்தி என்னும் உடன்பாட்டு வினையெச்சம் வழுத்தென்னும் முதனிலைத் தொழிற்பெயரோடு முடிந்தது; இது ஒருபொருட் பன்மொழி. எழுத்து: எழுதப்படுவதென்னும் பொருளில் எழுது பகுதி, ஐ செயப்படுபொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி, விகுதி புணர்ந்து கெட்டமாத்திரத்தில் தன்னொற்றிரட்டியது, இது கருவியாகுபெயராய் ஒலிவடிவை யுணர்த்தியது. இங்ஙனமன்றி, தல் விகுதி புணர்ந்து கெட்டமாத்திரையில் தன்னொற்றிரட்டிய முதனிலை திரிந்த தொழிற்பெயர் எழுதுதலா லுண்டாகிய வரிவடிவிற்குக் காரணவாகுபெயராய், ஒலிவடிவிற்குக் கருவியாகுபெயராயிற்றெனினும் பொருந்தும்; வரிவடிவிற்குத் தொழிலாகுபெயரென்பாரு முண்டு. பின்னின்ற சால என்னும் உரிச்சொலடியாகப் பிறந்த செயவென் வாய்பாட்டு வினையெச்சத்துக்குப் பயனிலையாகிய ஆம் என்னும் வினை சொல்லெச்சமாய் நின்றது புலை - பண்புப்பெயர்; ஐ - பகுதிப்பொருள்விகுதி. (௩அ)

39. சாவ தெளிதரிது சான்றாண்மை நல்லது
மேவ லெளிதரிது மெய்போற்றல்—ஆவதன்கண்
சேற லெளிது நிலைபரிது தெள்ளியராய்
வேற லெளிதரிது சொல்.

(ப-ரை.) சாவது - உயிர்விடுகை, எளிது - (அறிவுடையார்க்கு) எளியதாம்; சான்று-(கல்வி யறிவு கேள்வி ஒழுக்கங்களினால்) நிறைந்து, ஆண்மை - அவற்றை ஆளுந்தன்மை, அரிது-அரியதாம்; நல்லது - அறத்தில், மேவல் - சார்தல், எளிது - எளியதாம்; மெய் போற்றல் - உண்மையாக அதனை வழுவாமல் காத்துக்கொள்ளல்,

அரிது - அரியதாம்; ஆவதன்கண் - (தன்னுயிர்க்கு) நன்மைதரும் துறவறத்தில், சேறல் - செல்லுதல், எளிது - எளியதாம்; நிலை - குற்றம்வராமல் நிற்றல், அரிது - அரியதாம்; சொல்-(ஐம்பொறிகளை வெல்லுவோமென்று) சொல்லுதல், எளிது - எளியதாம்; தெள்ளியர் ஆய் - குற்றமற்ற அறிவுடையராய், வேறல் - ஐம்பொறிகளையும் வெல்லுதல், அரிது அரியதாம், எ-று.

(வி - ரை.) அறிவுடையார் சான்றாண்மையைக் காத்தலே அரிதாகக் கருதுவாரே அன்றி, அதற்கு ஊழினால் குறைபாடு நேர்ந்தால் உயிர் விடுகையை அரிதாகக் கருதாராதலின் அவர்க்குச் சாவு தெளிதாயிற்று. உயிர் வீட்டுலகை யடைந்து பேரின்பம் உண்ணுதற்குரியதாதலால் துறவறத்தை 'ஆவது' என்றார்; இது வினைமுதல் வினையைக் கருவியின்மே லேற்றிக் கூறும் எதிர்கால வினையாலணையும் பெயர். சேறல் - தொழிற்பெயர்; செல்-பகுதி, தல்-புடை பெயர்ச்சி விகுதி, பகுதி முதல் நீண்டது நீட்டல் விகாரம், லகரக்கேடும் தகரத் திரிபும் சந்தி. (௩௯)

40. உலையாமை யுற்றதற் கோடி யுயிரை
அலையாமை யையப் படாமை—நிலையாமை
தீர்க்கும்வாய் தேர்ந்து பசியுண்டி நீக்குவான்
நோக்கும்வாய் விண்ணி னுயர்வு.

(ப - ரை) உற்றதற்கு - நேர்ந்த துன்பத்தைப் போக்குதற்கு, ஓடி-(பல இடங்களிலும்) விரைந்து சென்று, உலையாமை-வருந்தாமலும், உயிரை - பிறவுயிர்களை, அலையாமை - வருத்தாமலும், ஐயப்படாமை - (மறுமையுளதோ இலதோ என்று) சந்தேகப்படாமலும், நிலையாமை - பிறப்பை, தீர்க்கும்வாய் - நீக்கவல்லவழியை, தேர்ந்து - ஆராய்ந்து துணிந்து, பசி-ஐம்பொறிகளின் விருப்பத்தையும், உண்டி-விடயங்களையும், நீக்குவான்-நீக்கவல்லவன், நோக்கும்வாய் - (தான்

சங்குதற்கு) ஆராயும் இடம், விண்ணின் உயர்வு - விண்ணவருலகத்துக்கு மேலாகிய வீட்டுலகம், எ-று.

(வி - ரை.) சேர்ந்த துன்பங்களைப் பொறுத்து, பிறவுயிர்களை வருத்தாமல், இருவினையும் அவ்வினைப்பயனாக உளதாகும் மறுமையுமுள என்று துணிந்து, இனிப் பிறவாத வழியாகிய துறவு பூண்டு ஐம்புல விருப்பை நீக்கினவன் வீட்டுலகை அடைவானென்பது கருத்து. உலையாமை, அலையாமை, ஐயப்படாமை - எதிர்மறை வினையெச்சங்கள். நிலையாமை - எதிர்மறைத் தொழிற்பெயர். நிலையாமையுடைய பிறப்பை நிலையாமையென்றது ஒரு மரபுவழுவமைதி. அலையாமை தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாயினும் இங்குப் பிறவினையாய் நின்றது. பசுமையில்லதனைப் பசியென்றது மங்கலவழக்கு; பசுமை-ஈரம் உண்டி - உண்ணப்படுவது; உண் - பகுதி, டு - சாரியை, இ - செயப்படுபொருண்மை விகுதி, தகரத்திரிபும் உகரக்கேடும் சந்தி. விண்ணினுயர்வு நிலமிசை யென்பதுபோல நான்காம் வேற்றுமைத் தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர். ஐம்புலன்களாவன - ஒலி, பரிசம், உருவம், சுவை, மணம். (௪௦)

41. குறுகான் சிறியாரைக் கொள்ளான் புலால்பொய்
மறுகான் பிறர்பொருள் வெளவான்—இறுகானாய்
ஈடற் றவர்க்கீவா னாயி னெறிநூல்கள்
பாடிறப்ப பன்னு மிடத்து.

(ப - ரை.) சிறியாரை - சிறியவரை, குறுகான் - (ஒருவன்) நெருங்காமலும், புலால் - ஊனுணவுதலை, கொள்ளான் - விரும்பாமலும், பொய் - பொய்ச்சொல்லை, மறுகான் - மறந்து சொல்லாமலும், பிறர் பொருள் - பிறர்பொருளை, வெளவான் - கவரவிரும்பாமலும், இறுகான் ஆய் - (செல்வப்பொருளை) இறுகப் பிடியாமல், ஈடு

அற்றவர்க்கு-மீண்டு கொடுக்கும் வலியில்லாதவர்க்கு, ஈவான் ஆயின்- கொடுப்பானானால், (அவனுக்குப்) பன்னுமிடத்து - உத்தேசித்தால், நெறி நூல்கள் - அறத்தின் வழியை யுணர்த்தும் நூல்கள், பாடு இறப்ப - பயன்படுதலல்லன, எ - று.

(வி - ரை.) அறநூல்கள் ஒருவனுக் கிருக்கவேண்டிய செயல்கள் இவையாமெனக் கூறலால், அவை மேற்கொண் டொழுகுவானுக்கு அறநூற்பொருள் சொல்ல வேண்டுவ தன்றென்பது கருத்து. ஈடு-முதனிலை திரிந்த தொழிற்பெயர்; இடுதல்-கைம்மாறு செய்தல். பாடு - தொழிலடியாகப் பிறந்த பெயர்; படு-பகுதி, இ-வினைமுதற் பொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி, விகுதிபுணர்ந்து கெட்ட மாத்திரத்தில் முதனீண்டது; படுதல் உண்டாதல் ஆதலால் இது பயனுக்காயிற்று. பன்னுமிடத்து-இறந்தகால வினையெச்சம்; பன்-பகுதி, ன்-சந்தி, உம்-சாரியை, இடத்து - இறந்தகால வினையெச்ச விகுதி. இறப்ப - பலவின்படர்க்கை எதிர்கால வினைமுற்று; இற-பகுதி, ப்-சந்தி, ப்-எதிர்கால இடைநிலை, அ-பலவின்படர்க்கை விகுதி; பகரவுயிர்மெய் விகுதியாயின், பல்லோர் படர்க்கை முற்றென்க. இறத்தல்-அப்புறப்படுதல். (௪௧)

42 கொல்லா னுடன்படான் கொல்வா ரினஞ்சேரான்
புல்லான் பிறர்பாற் புலான்மயங்கல்—செல்லான்
குடிப்படுத்துக் கூழீந்தான் கொல்யானை யேறி
அடிப்படுப்பான் மண்ணாண் டரசு.

(ப-ரை.) கொல்லான் - (பிறிதோருயிரைக்) கொலைசெய்யாமலும், உடன்படான்-(பிறர் கொல்வதற்கு) உடன்படாமலும், கொல்வார் இனம் - கொல்லுதல் உடன்படுதலுடையாரது இனத்தை, சேரான் - சேராமலும், பிறர்பால் - அயலவராகிய புதியவரிடத்து, புல்லான் - நட்புக்கொள்ளாமலும், புலால்-ஊனுண்ணலோடு, மயங்

கல் - கலத்தலில், செல்லான்-செல்லாமலும், குடி உம்-(பிறருடைய) குடும்பங்களையும், படுத்து - (நல்லநிலைமையில்) நிறுத்தி, கூழ் ஈந்தான் - (வேண்டிய அளவு) பொருளை ஈதலைச்செய்தவன், மண் ஆண்டு - பூமி முழுமையும் ஆண்டு, சொல் யானை எறி-(பகைவரைக்) கொல்லவல்ல யானையின் மேலேறி, அரசு - மற்ற அரசர்களை, அடிபடுப்பான் - தன்காலின் கீழடங்கச் செய்பவனாவான், எ - று.

(வி-ரை.) நற்குணம் நற்செயல் உடையார், உடையரல்லரென ஆராயாமல் பிறரோடு நட்புச்செய்யின், பின் தீக்குணந் தீச்செயலுடையாராயின் அவரால் தனக்கும் தீமை நேருமாதலால் 'புல்லான் பிறர்பால்' என்றார். படுத்து, படுப்பான் இரண்டும் பிறவினை; படு-தன்வினை பிறவினைகளுக்குப் பொதுவாயினும், இங்குப் பிறவினைப் பகுதி, த்-சந்தி, த்-இறந்தகால இடைநிலை, உ-வினையெச்சவிகுதி; படுத்தி யெனவரின் படுத்து பகுதியென்க. படுப்பான் படுத்துவானெனவரும்; தன்வினை பட்டு, படுவானெனவரும். மண் - கருவியாகுபெயர். அரசு - பண்பாகுபெயர்; இது சாதியொருமை. (சஉ)

43. சூதுவவான் பேரான் சுலாவுரையான் யார்திறத்தும்
வாதுவவான் மாதரார் சொற்றேறான்—காதுதாழ்
வான்மகர வார்குழையாய் மாதவர்க் கூணீந்தான்
தான்மகர வாய்மாடத் தான்.

(ப - ரை.) காது தாழ் - (தாங்கப் பொறுமையால்) காது தாழ்கின்ற, வான் - பெரிய, மகரம் - முதலையி னுருவாகச்செய்த, வார் - நீண்ட, குழையாய் - குண்டலங்களை யணிந்தவளே! சூது உவவான் - சூதாட்டத்தை விரும்பாமலும், பேரான் - (நன்னிலையினின்று) நீங்காமலும், சுலாவு உரையான் - (பிறர்மனம்) கலங்குஞ் சொற்களைச் சொல்லாமலும், யார்திறத்தும் - தன்னின் பெரியாரிடத்தும்சிறியாரிடத்தும், வாது உவவான் - வாதுபேசுதலை விரும்பாமலும், மாது

நார் சொல் - பெண்மக்களுடைய சொற்களை, தேருன் - (உண்மை யென) நம்பாமலும், மாதவர்க்கு - பெருந்தவத்தினர்க்கு, ஊண் ஈந்தான் - உண்டியைக் கொடுத்தலைச்செய்தவன், மகரவாய்-முதலையின் உருப்போலத் தொழில்செய்த வாயிலையுடைய, மாடத்தான் - சிறந்த மனையிலிருந்து செல்வங்களை அநுபவிப்பான், எ - று.

(வி - ரை.) சுலாவல் - சுழலல்: அது இங்கு மனங்கலங்குதல். யார்-யாவரென்னும் வினைப்பெயரின் மரூஉ; முற்றும்மை சார்ந்து நின்றமையினால் யா எஞ்சாமைப்பொருளது. மாதரார்: மாது (விருப்பம்)-பகுதி, காரியவாகுபெயராய்க் காரணமாகிய பெண்ணையுணர்த்தியது, ஆர் சுரும்பர் என்பதிற்போலப் போலி, ஆர் - பல்லோர்படர்க்கை விகுதி; ஒருமையில் மாதராளென வரும். (சு௩)

44. பொய்யான்பொய் மேவான் புலாலுண்ணான் யாவரையும்
வையான் வழிசீத்து வாலடிசில்—நையாதீத [யும்
ஈத்துண்பா னாகு மிருங்கடல்சூழ் மண்ணரசாய்ப்
பாத்துண்பா னேத்துண்பான் பாடு.

(ப - ரை.) பொய்யான் - பொய் சொல்லாமலும், பொய் மேவான் -(பிறர்சொல்லும்) பொய்க்கு உடன்படாமலும், புலால் உண்ணான் - ஊனை உண்ணாமலும், யாவரையும் - உயர்ந்தோரையும் இழிந்தோரையும், வையான் - இகழாமலும், வழி சீத்து - (பலர்நடக்கும்) வழியைத் திருத்தி, வால் அடிசில் - தூய்மையாகிய உண்டியை, நையாது - (விருந்தினர் முதலியோர் பசியினால்) வருந்தாமல், ஈந்து உண்பான் - அவர்க்குப் பகுத்தீந்து உண்பவன், இரு கடல் சூழ் - பெரியகடலால் சூழப்பட்ட, மண் அரசு ஆய் - பூமிக்கு அரசனாகி, பாத்து - (குறைவின்றி) ஐம்புலங்களை, உண்பான் - அநுபவிப்பவனும், ஏத்து - (பிறரால் கூறப்படும்) துதியையும், பாடு - மேம்பாட்டையும், உண்பான் - உரியனவாக அடைபவனும், ஆகும் - ஆவான், எ - று.

(வி - ரை.) வால் - வெண்மை; அது தூய்மைக்காயிற்று. ஏ- ற்றசை. பாத்து-உணவின் பொதுப்பெயர்; அது பரிசமுதலிய ஐம் புலன்களுக்காயிற்று. எத்து - முதனிலைத் தொழிற்பெயர்; பாடென்ப தும் அது. சீத்தல் - தூய்தாக்கல். (சஉ)

45· இழுக்கா னியனெறி யின்னாத வெஃகான்
வழுக்கான் மனைபொருள் வௌவான்—ஒழுக்கத்தால்
செல்வான் செயிரிலூ ணீவா னரசாண்டு
வெல்வான் விடுப்பான் விரைந்து.

(ப - ரை.) இயல் நெறி - தான் நடக்கின்ற விரதவழியினின்று, இழுக்கான் - வழுவி நடவாமலும், இன்னாத - (பிறர்க்குத்) துன்பந் தருவனவற்றை, வெஃகான் - (செய்ய) விரும்பாமலும், மனை - இல்லற ஒழுக்கினின்று, வழுக்கான் - தவறாமலும், பொருள் - பிறர்பொருளை, வௌவான் - கவர்தல்செய்யாமலும், ஒழுக்கத்தால் - நல்ல நடையில், செல்வான் - விடாமல் சென்று, செயிர் இல் ஊண் - குற்றமற்ற உணவை, ஈவான் - (விருந்தினர் முதலியோர்க்குக்) கொடுத்தலைச் செய்பவன், அரசு ஆண்டு - அரசாட்சிசெய்து, விரைந்து விடுப்பான் -விரைவாய் நீங்கும்படி, வெல்வான்-(பகைவரை)வெற்றி கொள்வான், எ-று.

(வி - ரை.) இழுக்கான்-ஆண்பாற் படர்க்கை எதிர்மறை வினை முற்று; இழுக்கு - பகுதி, ஆ - எதிர்மறை விகுதி, உகரக்கேடு சந்தி, ஆன்-ஆண்பாற்படர்க்கை விகுதி, விகுதி ஆகாரக்கேடு முதற்குறை; வழுக்கானென்பதும் இது. மனைதன்னிலிருந்து இல்லாளோடு செய்யும் அறத்துக்காதலால் இடவாகுபெயர். இன்னாத - பண்படியாகப் பிறந்த பலவின் படர்க்கைக் குறிப்புவினைப்பெயர்; இன்னு-பகுதி; த்- விரித்தல் விகாரம், அ-பலவின்படர்க்கை விகுதி; இதில் இன்-பகுதி, ன்-சந்தி, ஆ - எதிர்மறை விகுதி எனின், எதிர்மறை விகுதி தெரி

நிலைக்கல்லாமல் குறிப்புக்கு வாராமையால் அது குற்றமென்க. ஒழுக்கத்தால் - உருபுமயக்கம். (சரு)

46. களியான்கள் ளுண்ணான் களிப்பாரைக் காணான்
ஒளியான் விருந்திற் குலையான்—எளியாரை
எள்ளானீத் துண்பானே லேதமின் மண்ணாண்டு
கொள்வான் குடிவாழ்வான் கூர்ந்து.

(ப-ரை.) களியான் - செருக்காமலும், கள் உண்ணான் - மதுவை யுண்ணாமலும், களிப்பாரை - மதுவெறிகொள்பவரை, காணான் - காண விரும்பாமலும், விருந்திற்கு - விருந்தினனுக்கு, ஒளியான் - பொருளை மறைத்து இல்லை என்னாமலும், உலையான் - ஒழுக்கத்துக் குத் தளராமலும், எளியாரை - வறியவரை, எள்ளான் - அவமதியாமலும், ஈந்து உண்பானேல் - (இரப்பவர்க்குக்) கொடுத்துத் தானும் உண்பானானால், ஏதம் இல் - குற்றமில்லாத, மண் கொண்டு - தேயத்தைப் பெற்று, ஆள்வான் - ஆள்பவனும், குடிகூர்ந்து - குடும்பம் பெருகி, வாழ்வான் - வாழ்பவனும் ஆவான், எ-று.

(வி - ரை.) எனி லென்பதன் மரூஉ ஆகிய ஏல் தானடுத்த வினைமுற்றுற வினையெச்ச மாக்குவது. உண்பன தின்பன எனப் பிரித்துக் கூறும்போது உண்ணல் சிறப்புவினையாயினும், பசி நீங்க உட்கொள்வன எல்லாம் உணவெனப்படுதலின், பருகப்படுவதாகிய கள்ளுண்ணு னென்பதில் உண்ணலைப் பொதுவினையென்க. ஏதமின்மையாவது குறையாத விளைவுடைமையும், பன்றி புலி காடி முதலியவும், வழிபறிக்குங் கள்வரும் இன்மையும் முதலியவை யுடையதாதல். கூர்ந்து-உரிச்சொலடியாகப்பிறந்த இறந்தகால வினையெச்சம். (சசு)

74. பெரியார்சொற் பேணிப் பிறழாது நின்று
பரியா வடியார்ப் பறியான்—கரியார்சொல்

தேறா னியையான் றெளிந்தடிசி லீந்துண்பான்
மாறான்மண் ணாளுமா மற்று.

(ப-ரை.) பெரியார் சொல் - (அறிவு ஒழுக்கங்களில்) பெரியவரது சொற்பொருளை, பேணி - மறமாவல் காத்து, பிறழாது - தப்பாமல், நின்று - (அந்நெறியில்) நடந்து, அடியார் - தன் ஆணைக்கடங்கி வாழ்வாரை, பரியாது - விரும்பாமல், பறியான் - நீக்குதல் செய்யாதவனாகி, கரியார் சொல் - வஞ்சகர் சொல்லை, தேறான் - நம்பாமல், இயையான் - (அவரோடு) நட்புக்கொள்ளாமல், தெளிந்து - (இம்மை மறுமைப்பயனை) ஆராய்ந்துணர்ந்து, அடிசில் - உணவை, ஈந்து உண்பான் - (விருந்தினர் முதலியவர்க்குக் கொடுத்துத் தானும்) உண்பவன், மாறான் - ஒழியாமல், மண் ஆளும் - பூமியை ஆளுவான், எ - று.

(வி - ரை.) பெரியார்-பண்படியாகப் பிறந்த குறிப்பு வினையாலணையும் பெயர். பிறழாது-எதிர்மறை வினையெச்சம்; பிறழ்-பகுதி, ஆ-எதிர்மறை விகுதி, அனைத்து மொருபகுதி; த் - எழுத்துப்பேறு, உ-வினையெச்ச விகுதி. பரியா-பண்புப் பெயரடியாகப் பிறந்த எதிர்மறை வினையெச்சம்; இதில் மல்விகுதி தொகுத்தல் பெற்றது. கரியாரென்பதில் பகுதிக் கருமை பிறரால் உணரப்படாத வஞ்சத்துக்காயிற்று. 'மாறாமை மண்ணாலுமற்று' எனவும் பாடமுளது. மாறாமை-எதிர்மறை வினையெச்சம், மை - உடன்பாட்டு வினையெச்சத்துக்குமுரிய விகுதி. (சஎ)

48. வேற்றரவஞ் சேரான் விருந்தொளியான் றன்னில்லுள்
சோற்றரவஞ் சொல்லியுண் பானாயின்—மாற்றரவம்
கேளான் கிளைஓம்பிற் கேடி லரசனாய்
வாளான்மண் டாண்டு வரும்.

(ப - ரை.) வேறு அரவம் - பழிபாவங்களைத் தரும் சொற்களைப் பேச, சேரான் - மனம் ஒருமியாமலும், விருந்து-விருந்தினர்

க்கு, ஒளியான் - பொருளை மறைத்து இல்லையெனச் சொல்லாமலும், தன் இல்லுள் - தன் மனையில், சோறு அரவம் - சோறிடுதற்குரிய சொல்லை, சொல்லி-வறியவர்க்குச் சொல்லி அழைத்து, உண்பான் ஆயின் - முன் அவர்க்கிட்டு உண்பானானாலும், மாறு அரவம் - பகைவருடைய புகழை, கேளான் - கேளாமல், கிளை ஓம்பின் - தனது சுற்றத்தாரைப் பாதுகாப்பானாயினும், கேடு இல் - (அவன் கடுவே) அழிதலில்லாத, அரசன் ஆகி - அரசனாகி, வாளால் - வாள் வெற்றியினால், மண் ஆண்டுவரும்-பூமியை ஆண்டுவருவான், எ-று.

(வி - ரை.) ஒருவன் இம்மைக்குப் புகழையும், மறுமைக்கு அறத்தையும் அடையவேண்டுதலால், பழிபாவங்களைத் தருஞ் சொற்கள் அவற்றின் வேற்றரவமாயின. அரவம் - ஒலி; அது ஒலிவடிவவாகிய சொல்லுக்காயிற்று. சோறிடுதற்குரிய முகமலர்ந்து கூறும் இனிய சொல் சோற்றரவம். மாறு-பண்பாகுபெயர். அரவம் புகழ்மேலது. பகைவர் புகழைக் கேட்டல் கூடாதென்றது கேட்டமாத்திரத்தில் உண்டாகின்ற பொறாமை இம்மையில் செல்வத்தை அழித்து, மறுமையில் நரகத்தில் செலுத்தலால். கிளை - உவமையாகுபெயர். வாள் - காரணவாகுபெயர். ஆண்டுவரும் - எதிர்காலச் செய்யுமென் முற்று; ஆள்-பகுதி, து-சாரியை, ளகர தகரங்கள் டகரமானது சந்தி, பகுதியீற்று டகரம் ணகரமானது மெலித்தல், வா-தொழிலிடையறுமையை யுணர்த்தும் விகுதி, அனைத்து மொருபகுதி, உம்-எதிர்கால முற்று விகுதி, ரு - விரித்தல் விகாரம், பகுதி ஆ அவ்வாதல் குறுக்கல் விகாரம்; இது பெயரெச்சமே வினைமுற்றாதலால் திணைபால்களுக்குப் பொதுவாயினும், சோரான் முதலிய வினைமுற்றுகளால் அப்பொதுமை நீங்கி உயர்திணை ஆண்பாலுக் குரியதாயிற்று. (சஅ)

49. யானை குதிரைபொன் கன்னியே யானிரையோ
டேனை யொழிந்த விவையெல்லாம்—ஆனெய்யால்
எண்ணனுப் மாதவர்க் கூணீந்தான் வைசிர
வண்ணனாய் வாழ்வான் வகுத்து.

(ப - ரை.) எண்ணன் ஆய் - ஆராய்ச்சியுடையானாகி, (தவசிக ளல்லாதவர்க்கு) யானை ஏ - யானையும், குதிரை ஏ - குதிரையும், பொன் ஏ - பொன்னும், கன்னி ஏ - கன்னிகையும், ஆன் நிரையோடு - பசுவின் கூட்டத்தோடு, ஏனை ஒழிந்த ஏ - மற்ற தானப்பொருள்களும், இவை எல்லாம் - ஆகிய இப்பொருள்க ளெல்லாவற்றையும், மாதவர்க்கு பெருந் தவத்தினர்க்கு, ஆன் நெய்யால் - பசுவினெய்யோடு, ஊண் - உணவையும், ஈந்தான் - கொடுத்தவன், வைசிரவண்ணன் ஆய் - குபேர சம்பத்துடையானாகி, வகுத்து - (அறிவுடையார்களால் மக்க ளுள்) பிரித்து மதிக்க, வாழ்வான் - வாழ்பவனாவான், எ - று.

(வி - ரை.) ஏ - எண்ணுப் பொருளதாதலால் முன்னும் பின்னும் எண்ணப்பட்டனவற்றோடுங் கூட்டுக. மாதவர்க்கு யானை முதலியன வேண்டப்படாதன ஆதலால் தவசிக ளல்லாதவர்க்கென ஏற்றுக்கோ டற்பொருள் வருவிக்கப்பட்டது. தீயொழுக்க முடையார்க்குக் கொடுத்தால், அத்தானம் தீமையைத் தந்தேவிடு மாதலால் நல் லொழுக்க முடையாரை ஆய்ந்து கொடுக்க என்பார் 'எண்ணனாய்' என்றார். எண்ணன் - தொழிலடியாகப் பிறந்த ஆண்பாற் படர்க்கை ஆக்கவினைக் குறிப்புமுற்று. விசிரவசுவினுடைய குமாரனாதலால் குபேரனுக்கு வைசிரவணனெனப் பெயராயிற்று. இராவணனும் அவ னுடைய குமாரனாயினும், கேசினியென்னும் இராக்கதப் பெண்வயிற் றிற் பின்பிறந்தவனாதலால் இப்பெயர் வழங்கிலதாயிற்று. ஏனை ஒழிந் தவை - வெள்ளி, செம்பு, நிலம், ஆடை முதலியவை. (௪௯)

50. எள்ளே பருத்தியே யெண்ணெ யுடுத்தாடை
வள்ளே துணியே யிவற்றொடு—கொள்ளென
அன்புற் றசனங் கொடுத்தான் றுணையினோ
டின்புற்று வாழ்வா னியைந்து.

(ப - ரை.) எள்ளே - எள்ளும், பருத்தியே - பஞ்சினாலாகிய நூலும், எண்ணெய் (ஏ) - எண்ணெயும், உடுத்து ஆடை - கட்டிக்

கொள்ளுதற்குரிய ஆடையும், வள்ளே - படுக்கையும், துணியே - துணியுமாகிய, இவற்றொடு - இவற்றுடன், அசனம் - உணவை, கொள் என்ன - கொள்ளுவீர் என்று சொல்லி, அன்புற்று - அன்புகொண்டு, கொடுத்தான் - கொடுத்தவன், துணையினோடு - மனைவிமுதலிய சுற்றத்தாரோடு, இயைந்து - கூடி, இன்புற்று வாழ்வான் - சுகமாய் வாழ்வான், எ-று.

(வி - ரை.) ஏகாரங்கள் எண்ணுப்பொருளன. வெல்லங்கலந்த எள்ளைக் கொடுத்துப் பிறகு தேய்த்துக்கொள்ள எண்ணெய் கொடுக்க வேண்டும் என்பது பண்டைய தருமநூல் வழக்கு. பருத்தி - கருவியாகுபெயராய்ப் பூணூலை யுணர்த்தியது. உடுத்து ஆடை - வினைத்தொகை; உடுத்த ஆடை எனக்கொண்டு இல்லறத்தார் தம்பால் வந்த சந்நியாசிகளுக்கு தாம் உடுத்துக் களைந்த ஆடையைக் கொடுக்கவேண்டும் எனக் கொள்ளுதலுமொன்று; இப்பொருளில் நிலைமொழியின் ஈற்றகரந் தொக்கதெனக் கொள்க. துணை - பண்பாகுபெயர். இச்செய்யுளில் எள், பருத்தி, எண்ணெய், ஆடை, படுக்கை, உணவு ஆகிய ஆறு பொருள் கூறப்பட்டன. (௫0)

51. உண்ணீர் வளங்குளங் கூவல் வழிப்புரை
தண்ணீ ரம்பலந்தான் பாற்படுத்தான்—பண்ணீர
பாடலோ டாடல் பயின்றுயர் செல்வனாய்க்
கூடலோ டேனுளான் கூர்ந்து.

(ப ரை.) உள் - நாட்டினுள், நீர்வளம் (ஏ) - நீர்வளத்தினையும், குளம் (ஏ) - குளத்தையும், கூவல் - (ஏ) கிணற்றையும், வழி - (பலருஞ் செல்லுதற்குரிய) வழிகளில், புரை (ஏ) - அவர்கள் தங்குதற்குரிய சிறு வீடுகளையும், தண்ணீர் - தண்ணீர்ப்பந்தல்களையும், அம்பலம் - மண்டபங்களையும், பாற்படுத்தான் - (தக்க) வகையினால் அமைப்பித்தவன், செல்வனாய் - (சிறந்த) செல்வமுடையவனாய், பண் நீர - சுருதியினோடு

பொருந்திய நீர்மையினையுடைய, பாடல் ஒடு - பாடலையும், ஆடல் - ஒடு - ஆடலையும், பயின்று-(பலகாலும் கேட்டுக்கண்டு) அநுபவித்து, ஊடலொடு கூடல் - (உள்ளன்புடைய மாதர்களை அவர்களின்) ஊடலோடு கூடுதலை, கூர்ந்து உளான் - மிக்குள்ளவன் ஆவான், எ - று.

(வி-ரை.) உள் - ஈாட்டினுள் என்க. தண்ணீரே என்பதிலுள்ள ஏகாரத்தை எல்லாவற்றோடுங் கூட்டுக. இவ்வேகாரம் எண்ணுப் பொருளது. உண்ணீர்வளமே, குளமே, கூவலே, வழிப்புரையே, தண்ணீரே, அம்பலமே எனக்கொண்டு இச்செய்யுளில் ஆறு பொருள்கள் வந்தமை யறிக. தண்ணீர் என்பது தானியாகுபெயராய்த் தண்ணீர் வார்க்கும் இடத்தை யுணர்த்தியது. பால் என்பது பகல் என்பதன் மரூஉ; இது தொழிற்பெயர்; பகுத்தல் என்பது பொருள். பண் என்றது ஈண்டுச் சுருதியையுணர்த்தியது. நீர என்பது குறிப்புவினையாலணையும் பெயர்; இதில் ஈற்றகரம் பலவின்படர்க்கை விகுதி. நீரப் பாடல் என்பது நீரனவாகிய பாடல்கள் என்றுதலின் இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத்தொடர். பாடலொடு ஆடலொடு என இயைக்க. இவ்வொடு எண்ணிடைச்சொல்.

கூடலொடூடல் என்பதை ஊடலொடு கூடல் என இயைக்க. ஊடலானது கூடலின்பத்தை மிகச் செய்வதாகலின் அறிஞர் அவ் வூடலை விரும்புவர். அதனை,

"புலத்தலிற் புத்தேணா டுண்டோ நிலத்தொடு
நீரியைந் தன்ன ரகத்து." எனவும்,

"ஊடுக மன்னோ வொளியிழை யாமிரப்ப
நீடுக மன்னோ விரா." எனவும்,

"ஊடுதல் காமத்திற் கின்ப மதற்கின்பங்
கூடி முயங்கப் பெறின்." எனவும்

திருக்குறளிற் காமத்துப்பாலில் ஊடலுவகை என்னும் அதிகாரத்திற் கூறப்பட்டனவற்றாலறிக. (௰௯)

52. இல்லிழந்தார் கண்ணிழந்தா ரீண்டிய செல்வமிழந்தார்
நெல்லிழந்தா ரானிரை தானிழந்தார்க்—கெல்லுழந்து
பண்ணியூ ணீய்ந்தவர் பல்யானை மன்னராய்
எண்ணியூ ணார்வா ரியைந்து.

(ப - ரை.) இல் இழந்தார்க்கு - (தம்) வீட்டை இழந்தவர்களுக்கும், கண் இழந்தார்க்கு - கண்ணை இழந்தவர்களுக்கும், ஈண்டிய - (தொகையாய்ச்) சேர்ந்திருந்த, செல்வம் இழந்தார்க்கு - செல்வத்தை இழந்தவர்க்கும், நெல் இழந்தார்க்கு-விளைந்த நெல்லை இழந்தவர்க்கும், ஆன் நிரை இழந்தார்க்கு-பசு மந்தையை இழந்தவர்க்கும், எல் உழந்து- (பகலிலே வருந்தி உழைத்ததேயன்றி) இரவினும் வருந்தி முயன்று பொருளை யீட்டி, ஊண் பண்ணி-உணவுகளைச் சமைத்து, ஈய்ந்தவர்- கொடுத்தவர், பல் யானை-பலவாகிய யானைச்சேனையையுடைய, மன்னராய்-அரசர்களாய், எண்ணி-(யாவராலு மிக மேலானவர்களாய்) மதிக்கப்பட்டு, இயைந்து - மனை மக்கள் முதலியவர்களோடு கூடி, ஊண் ஆர்வார் - (இனிய) உண்பொருள்களை யுண்பர், எ - று.

(வி-ரை.) இச்செய்யுளில் இல்லிழந்தார் முதலிய ஐந்து பொருளும் அவர்களுக்கு ஊண் ஈய்ந்தவர் மன்னராய் இயைந்து ஊண் ஆர்தல் ஒன்றும் ஆக ஆறுபொருள் கூறப்பட்டனவெனக்கொள்க. ஆன் நிரை இழந்தார்க்கு என்பதிலுள்ள குவ்வுருபை இல்லிழந்தார் முதலிய மற்றப் பொருளோடுங் கூட்டுக. இல்லிழந்தார் முதலிய ஐந்தினும் எண்ணும்மை தொக்கது செய்யுள் விகாரம். எல் என்பதில் இறந்தது தழுவிய எச்ச உம்மை தொக்கது எனக்கொள்க. இதுவுஞ் செய்யுள் விகாரமே. இழந்தார் என்னும் ஐந்தும் விகுதிவிகாரப்படாமல் வந்த வினையாலணையும் பெயர்கள். ஈய்ந்தவர் என்பது விகுதி விகாரப்பட்டுவந்த வினையாலணையும் பெயர். ஆன் என்பதின் னகர மெய் சாரியை; இதற்கு விதி (நன்-உரு-இ-கூ-ம் சூ) "ஆமா கோனவ் வணையவும் பெறுமே" என்பது. பண்ணி ஊண் ஈய்ந்தவர் என்பதை

ஊண் பண்ணி ஈய்ந்தவர் என மாற்றுக. உழந்து பண்ணி ஊண் ஈய்ந்தவர் என்பதற்கு உழந்து - வருந்தி, பண்ணி - பொருளைச் செய்து (பொருளையீட்டி என்பது), ஊண் ஈய்ந்தார் - உணவு கொடுத்தார் என்றுரைத்தலுமாம். உரையில் முதலியோர் என்றதனால் சுற்றத்தார் நட்பினர் முதலியவர்களைக் கொள்க. இயைந்து என்பதற்கு எல்லாச் செல்வங்களும் பொருந்தி என்றுரைத்தலுமாம். ஈய்ந்தவர் என்பதில் ஈ - பகுதி, யகரமெய் - விரித்தல்விகாரம் என்க. செல்வம்மிழந்தார் என்பதின் மகரமெய்யும் விரித்தல் விகாரமாய் வந்ததே. தான் - அசை. எண்ணப்பட்டு என்னுஞ் செயப்பாட்டுவினை எண்ணி எனச் செய்வினையாக நின்றது. (ருஉ)

53· கடம்பட்டார் காப்பில்லார் கைத்தில்லார் தங்கான்
முடம்பட்டார் மூத்தார் மூப்பில்லார்க்—குடம்பட்
டுடையரா யில்லுளூ ணீத்துண்பார் மண்மேல்
படையராய் வாழ்வார் பயின்று.

(ப - ரை.) கடம் பட்டார்க்கு - கடன்பட்டவர்களுக்கும், காப்பு இல்லார்க்கு - தம்மைக் காப்பவர் ஒருவரும் இல்லாதவர்களுக்கும், கைத்து இல்லார்க்கு - பொருள் இல்லாதவர்களுக்கும், தம் கால் - தமது கால், முடம்பட்டார்க்கு-முடமாய்விட்டவர்களுக்கும், மூத்தார்க்கு-(வயதில்) முதிர்ந்தவர்களுக்கும், மூப்பு இல்லார்க்கு - பெற்றோர் முதலிய பெரியவர்கள் இல்லாதவர்களுக்கும், உடம்பட்டு - (அவர்களைக் காக்க) மனமியைந்து, உடையராய்- அன்புடையவர்களாய், இல் உள் - தமது வீட்டில், ஊண் ஈத்து - உணவு கொடுப்பித்து, உண்பார் - (பிறகு தாம்) உண்பவர், மண்மேல் - பூமியின்மீது, படையராய் - நால்வகைச் சேனைகளையுமுடைய மன்னவர்களாய். பயின்று - (மனைமக்கள் முதலியவர்களுடன்) கூடி, வாழ்வார் - (இன்பமுடன்) வாழ்வார்கள், எ - று.

(வி-ரை.) கைத்து - கையிலிருப்பது; கை - பகுதி, த் - சந்தி, து - ஒன்றன்படர்க்கைப்பெயர் விகுதி. கால் முடம்பட்டார் - இதிற் சினைவினை முதலின்மேலேற்றிக் கூறப்பட்டது. உடையராய் என்றதில் அன்பு என்பது சொல்லெச்சமாய் வருவிக்கப்பட்டது. ஈந்து - பிறவினை வினையெச்சம்; இதற்குத் தன்வினை ஈந்து என்க. மண்மேல் - இதில் மேல் ஏழனுருபு. (ரு௩)

54. பார்ப்பார் பசித்தார் தவசிகள் பாலர்கள்
கார்ப்பார் தமையாதுங் காப்பிலார்—தூப்பால
நீண்டாரா லெண்ணாது நீத்தவர் மண்ணாண்டு
பண்டாரம் பற்றவாழ் வார்.

(ப-ரை.) பார்ப்பார் - பார்ப்பாரும், பசித்தார்-பசித்தவர்களும், தவசிகள் - (ஐம்பொறிகளையும் புலன்கள்மேற் செல்லவிடாமற் றடுத்து உடல்வாடத்) தவஞ் செய்கின்றவர்களும், பாலர்கள் - குழந்தைகளும், கார்ப்பார் - (நோய் முதலியவற்றால் உடம்பை) வெறுக்கின்றவர்களும், தமை - தங்களை, காப்பு - காத்தற்குரிய ஆதரவு, யாதும் இல்லார் - எதுவும் இல்லாதவர்களும், தூப்பால - தூய்மையாகிய தன்மையை யுடையனவாகிய அறநெறிகளில், நீண்டார் - மிக்கவர்களும் ஆகிய இவர்களுடைய துன்பங்களை, எண்ணாது - யாதொரு பயனையும் விரும்பாமல், நீத்தவர் - போக்கினவர்கள், மண் ஆண்டு - பூமியை ஆண்டு, பண்டாரம் பற்ற - செல்வம் தம்மைச்சூழ்ந்திருக்க, வாழ்வார் - (இன்புடன்) வாழ்வார்கள், எ-று.

(வி - ரை.) பார்ப்பார் - உண்மைப்பொருளைத் தமது ஞானக் கண்ணாற் பார்ப்பவர்; இது காரணங் கருதியவழி அத்தன்மையை யுடையார் யாவரையுங் குறிப்பதாகவும், காரணங் கருதாதவழி ஒரு வகுப்பினரைக் குறிப்பதாகவும் இருத்தலின் காரண இடுகுறிப் பெயர். பசித்தார், கார்ப்பார், இல்லார், நீண்டார், நீத்தவர் என்பன

வினையாலணையும் பெயர்கள். இவற்றுள் கார்ப்பார் என்பதில் கார் - பகுதி, ப் - சந்தி, ப்-எதிர்கால இடைநிலை, இஃது ஈண்டுத் தன்மைப் பொருளை யுணர்த்திநின்றது, ஆர் - விகுதி; இப் பகுதியினடியாகக் கார்த்தல், கார்த்த, கார்த்து, கார்த்தது என வினைவிகற்பங்கள் உண்டாதலறிக. இப்பகுதி புவ் விகுதிபெற்றுக் கார்ப்பு என்றானபோது அச்சுவையை யுணர்த்தும் தொழிற் பண்புப்பெயராம். கார்த்தல் - உறைத்தல் (அதாவது காரமாயிருத்தல்); அஃது ஈண்டு வெறுப்பை யுணர்த்தியது. தவமாவது ஐம்பொறிகளையும் புலன்களின்மேற் செல்லவிடாமற் றடுத்து உடலைத் தபிக்கச்செய்வதாகலான் தவசிகள் என்பதற்கு அங்ஙனம் பொருள் கூறப்பட்டது; இதனை "ஊன்வாட வுண்ணாதுயிர் காவலிட், டுடலிற் பிரியாப் புலனைந்து நொந்து, தாம் வாடவாடத் தவஞ்செய்ய வேண்டா" என்று பெரியார் பணித்தருளியதனு லறிக. தமையாதுங் காப்பில்லார் என்பதைத் தமைக் காப்பு யாதுமில்லார் என இயைக்க. தூப்பால என்பது தூய்மையாகிய பான்மையையுடையன என்றாதலின் பண்புத்தொகைநிலைத்தொடர். ஆல் - அசை. (டுச)

55. ஈன்றாளீன் காற்றளர்வார் சூலார் குழவிகண்
மான்றார் வளியான் மயங்கினார்க்—கானொன்
றாணீய்த் துறுநோய் களைந்தார் பெருஞ்செல்வம்
காணீய்த்து வாழ்வார் கலந்து.

(ப - ரை.) ஈன்றார்க்கு - பிள்ளையைப் பெற்றவர்களுக்கும், ஈன்கால் - பிள்ளையைப் பெறுங்காலத்தில், தளர்வார்க்கு - வருந்துகின்றவர்களுக்கும், சூலார்க்கு - கருவுற்றிருப்பார்க்கும், குழவிகட்கு - குழந்தைகளுக்கும், மான்றார்க்கு - புத்திமயங்கினவர்களுக்கும், வளியால் மயங்கினார்க்கு-வாதநோயால் புத்திகெட்டவர்களுக்கும், ஆனார் என்று - அவர்களைக் காத்தற்கு அமைந்தவர்கள் என்று யாவருஞ் சொல்லும்படி, ஊண் ஈய்த்து - உணவைக் கொடுத்து, உறு நோய் -

(அவர்களுக்கு) உண்டாகிய துன்பங்களை, களைந்தார் - நீக்கியவர்கள், பெருஞ்செல்வம் - மிக்கபொருளை, ஈய்த்து - பிறருக்குக் கொடுத்து, கலந்து - (தம் உறவினர் முதலியவர்களுடன்) கூடி, வாழ்வார் - (சுகமாய்) வாழ்வார்கள், எ-று.

(வி - ரை.) ஈன்கால் - வினைத்தொகை நிலைத்தொடர். மான்றூர் என்பது பண்புப்பெயரடியாகப் பிறந்த வினையாலணையும்பெயர்; மால் - பகுதி, ற் - இடைநிலை, ஆர் - விகுதி, லகரம் றகரமானது சந்தி, அது னகரமானது மெலித்தல் விகாரம். வளி-வாதம்; இஃது இப்பொருளுடையதாதலை "மிகினுங் குறையினு நோய்செய்யு நூலோர், வளிமுதலா வெண்ணிய மூன்று" என்னுங் குறளானும் அதற்குப் பரிமேலழகர் கூறிய உரையானு முணர்க; வளி என்பது அதனலாகு நோயைக் காரணவாகுபெயராய் உணர்த்தியது. ஆனர் - ஆயினவர்கள்; அதாவது காத்தற் கமைந்தவர்கள்; இதில் ஆ - பகுதி, இன் - இறந்தகால இடைநிலை, அதில் இகரங்கெட்டது முதற்குறை, ஆர்-விகுதி. ஈய்ந்து என்பது வலித்தல் விகாரமும் விரித்தல் விகாரமும் பெற்று ஈய்த்து என்றாயிற்று. காண்-முன்னிலையசை. (55)

56. தளையாளர் தாப்பாளர் தாழ்ந்தவர் பெண்டீ
ருளையாள ரூணொன்று மில்லார்—கிளைஞராய்
மாவலந்த நோக்கினு யூணீய்ந்தார் மாக்கடல்சூழ்
நாவலந்தீ வாள்வாரே நன்கு.

(ப-ரை.) மா அலந்த - மான்கள் வருந்துதற்குக் காரணமாகிய, நோக்கினாய் - கண்களையுடைய மாதே! தளையாளர் - (குற்றத்திற்காகக் காலில்) தளையிடப்பட்டவர்களும், தாப்பாளர் - (தமக்குச் சோறிடுவார்) குறித்த நேரத்தை எதிர்பார்ப்பவர்களும், தாழ்ந்தவர் -(தமது உயர்நிலையினின்று தாழ்வடைந்தவர்களும், பெண்டீர் - மாதர்களும், உளையாளர் - (நோய் முதலியவற்றால்) வருந்துதலை யுடையவர்களும்,

ஊண் ஒன்றும் இல்லார் - உணவு சிறிதும் இல்லாதவர்களுமாகிய இவர்களுக்கு, கிளைஞராய் - உறவினராய், ஊண் ஈய்ந்தார் - உணவு கொடுத்தவர்கள், மாக்கடல் சூழ் - பெரிய கடலாற் சூழப்பட்ட, நாவலந்தீவு - (இந்தச்) சம்பூத்துவீப முழுதையும், நன்கு ஆள்வார் - நன்றாய் ஆள்வார்கள், எ-று.

(வி - ரை.) உளையாளர் - வருத்தத்தை யாளுதலுடையவர்கள்; உளை-வருத்தம்; இது முதனிலைத் தொழிற்பெயர்; உளைதல்-வருந்துதல். ஈய்ந்தார் என்பதில் யகரமெய் விரித்தல் விகாரம். மாக்கடல் - உரிச்சொற்றொடர். (ருசு)

57. கருஞ்சிரங்கு வெண்டொழுநோய் கல்வளி காயும்
பெருஞ்சிரங்கு பேர்வயிற்றுத் தீயார்க்—கருஞ்சிரம
மாற்றியூ ணீத்தவை தீர்த்தா ரரசராய்ப்
போற்றியூ ணுண்பார் புரந்து.

(ப-ரை.) கருஞ்சிரங்கு நோய் - கருஞ்சிரங்கு நோயும், வெள்தொழு நோய் - வெள்ளைக் குட்டநோயும், கல் நோய் - கல்லெரிப்பு நோயும், வளி நோய் - வாதநோயும், காயும் - வருத்துகின்ற, பெருஞ்சிரங்கு நோய்-கழலை (கட்டி) நோயும், பேர் வயிற்றுத்தீ நோயார்க்கு-மிக்க வயிற்றெரிச்சல் நோயுமாகிய இந்நோயை யுடையவர்களுக்கு, அரும் சிரமம்-(அவர்களது) பொறுத்தற்கரிய வருத்தத்தை, ஆற்றி - தணியச்செய்து, ஊண் ஈந்து-(அவர்களுக்கு) உணவைக் கொடுத்து, அவை தீர்த்தார் - அந்நோய்களை நீக்கியவர்கள், அரசராய் - மன்னவராய், போற்றி - (யாவராலும்) போற்றப்பட்டு, புரந்து - (உலகை) ஆண்டு, ஊண் உண்பார்-(விரும்பிய) உணவுகளை யுண்பார்கள், எ-று.

(வி - ரை.) நோய் என்பதை எல்லாவற்றோடுங் கூட்டுக. கல் நோய் என்பதற்குக் கல்லெரிப்புநோய் எனப் பழைய வுரையிற் பொருள் கூறப்பட்டிருக்கின்றது; அது கல்லடைப்புநோய் எனவும்வழங்கு

தல் உண்டு. சிறுநீர்த் துவாரத்தில் கல்போலும் ஏதோ அடைத்துக் கொள்ளுதலால் உண்டாகும் ஒருவகை நோய். புரந்து என்பதற்குப் பதிலாகப் புரிந்து எனவும் பாடமுண்டு; அதற்கு விரும்பி எனப் பொருள் கூறுக. ஈந்து என்பது ஈத்து என்றானது வலித்தல் விகாரம். போற்றி என்பது செயப்பாட்டு வினைப்பொருளில் வந்த செய் வினையாகிய வினையெச்சம். (ருஎ)

58. காமாடார் காமியார் கல்லா ரினஞ்சேரா
ராமாடா ராய்ந்தார் நெறிநின்று—தாமாடா
தேற்றாரை யின்புற வீய்ந்தார்முன் னிம்மையான்
மாற்றாரை மாற்றி வாழ்வார்.

(ப - ரை.) இம்மையான் - இப்பிறப்பில், மாற்றாரை - பகைவர்களை, மாற்றி - (போரில்) முதுகிடச்செய்து, வாழ்வார்-அரசர்களாய் வாழ்பவர்கள் (யாரெனின்), முன் - முற்பிறப்பில், காம் ஆடார் - (தீவழியிலாகும்) காமத்தை நுகராமல், காமியார் - பிறர் பொருளை விரும்பாமல், கல்லார் இனம் - படிக்காதவர்களுடைய கூட்டத்தில், சேரார் - சேராமல், ஆம ஆடார் - நீரில் விளையாடாமல், ஆய்ந்தார் - நூற்களை ஆராய்ந்துணர்ந்த பெரியோர்களது, நெறி நின்று தாம் ஆடாது-வழியிலிருந்து தாம் வழுவாமல் ஒழுகி, ஏற்றாரை-(தம்மை யடுத்து) ஏற்பவருக்கு, இன்புற - (அவர்கள்) மகிழும்படி, ஈய்ந்தார் - (அவர்களுக்கு வேண்டியவற்றைக்) கொடுத்தவர்களேயாவர், எ - று.

(வி-ரை.) காமம் என்பது கடைக்குறையாய்க் காம் என நின்றது. ஆடார் என்பன மூன்றும், காமியார் சேரார் என்பனவு முற்றெச்சங்கள். ஆய்ந்தார், ஈய்ந்தார், வாழ்வார் என்பன வினையாலணையும் பெயர்கள். ஆய்ந்தார் நெறி - இடப்பிறிதின்கிழமைப்பொருளதாகிய ஆறன்றொகை. நெறிநின்று - இதில் நின்று என்பது நீக்கப் பொருளில் வந்த ஐந்தனுருபு. ஆய்ந்தார் நெறிநின்று தாம் ஆடார் என்

பதை இரண்டு பொருளாகக்கொண்டு ஆய்ந்தார் நெறி - ஆய்ந்தாரது வழியில், நின்று - நிலைத்திருந்து, தாம் ஆடாது-தாம் தப்பாதொழுகி என்று பொருள் கூறுவாரும் உண்டு. இப்பொருளில் நின்று என்றதனானே ஆய்ந்தார் நெறியில் தப்பாமலிருந்தொழுகுதல் அமைதலின் மீண்டும் தாம் ஆடார் - தாம் தப்பாமல் ஒழுகி என்று கூற வேண்டுவது மிகையாமாதலின் அஃது அவ்வளவு சிறப்புடையதன்றென்க. இம்மையான் என்பதில் ஏழனுருபில் மூன்றனுருபும், ஏற்றுரை என்பதில் நான்கனுருபில் இரண்டனுருபும் வந் - உருபுமயக்கங்கள். இம்மையான் மாற்றுரை மாற்றி வாழ்வார் இங்ஙன மொழுகி ஈய்ந்தவர் என முடித்துக்கொள்க. (நிஅ)

59. வணங்கி வழியொழுகி மாண்டார் சொற்கொண்டு
நுணங்கிய நூனோக்கி நுழையா—விணங்கிய
பானோக்கி வாழ்வான் பழியில்லா மன்னனாய்
நூனோக்கி வாழ்வா னுனித்து.

(ப-ரை.) வணங்கி-(இம்மையிற்)பெரியோரைப் பணிந்து, வழி ஒழுகி-(நல்ல) வழியிலே நடந்து, மாண்டார்-(கல்வி. ஒழுக்க முதலிய வற்றால்) மாட்சிமைப்பட்டவர்களது, சொல் கொண்டு-சொற்களைக் கேட்டு, நுணங்கிய நூல் - நுட்பமான பொருளுடைய நூற்களை, நோக்கி-ஆராய்ந்து, நுழையா - அந்நூல்களிலே நுழைந்து (தன்னறிவைச் செலுத்தி), இணங்கிய - (இம்மைக்கும் மறுமைக்கும் நன்மை செய்வனவாகப்) பொருந்திய, பால் நோக்கி - பகுதிகளை ஆராய்ந்து, வாழ்வான்-வாழ்கின்றவன், பழி இல்லா (த)-(மறுமையில் பழித்தற்குரிய) குற்றமில்லாத, மன்னனாய் - அரசனாகி, நூல் - பல நூற்களையும், நுனித்து நோக்கி - நுட்பமாக ஆராய்ந்தறிந்து, வாழ்வான்-வாழ்வான், எ - று.

(வி - ரை.) மாண்டார் என்பது மாண் என்னும் பண்படியாகப் பிறந்த வினையாலணையும்பெயர். நுணங்கி யாராயவேண்டிய

பொருளை நுணங்கிய வென்றது காரியத்தைக் காரணமாகக் கூறிய உபசாரவழக்கு. நுழையார் - செய்யா என்னும் வாய்பாட்டிறந்தகால வினையெச்சம். பால்-பகல் என்பதன் மரூஉ; இது தொழிற்பண்புப் பெயர். பழிக்குக் காரணமாகிய குற்றத்தைப் பழி என்றது காரணத்தைக் காரியமாகக் கூறிய உபசாரம். நூல் நோக்கி வாழ்வா னுனித்து என்பதை நூல் நுனித்து நோக்கி வாழ்வான் என இயைக்க. (ருக)

60. பெருமை புகழறம் பேணாமை சீற்றம்
அருமைநூல் சால்பில்லார் சாரி—னிருமைக்கும்
பாவம் பழிபகை சாக்காடே கேடச்சம்
சாபம்போற் சாருஞ் சலித்து.

(ப - ரை.) பெருமை - பெருமையும், புகழ் - புகழும், அறம் - அறமும், சீற்றம் பேணாமை-கோபத்தை விரும்பாமையும், அருமை நூல்-அரிய நூலுணர்ச்சியும், சால்பு-(இவைபோன்ற பிற) மேலான குணங்களும், இல்லார் - இல்லாதவர்கள், சாரின் - (ஒருவனைவந்து) சேர்ந்தால், இருமைக்கும் - (அவனுக்கு இம்மை மறுமை என்னும்) இரண்டிலும், பாவம் (ஏ) - பாவமும், பழி (ஏ)-பழியும், பகை (ஏ) - பகையும், சாக்காடு ஏ - மரணமும், கேடு (ஏ) - (பொருள் முதலிய வற்றின்) அழிவும், அச்சம் (ஏ) - பயமும், சாபம்போல்-(பெரியோர் களா லிடப்படும்) சாபத்தைப்போல, சலித்து-(அவனைக்) கோபித்து, சாரும் - (தவறாமல்) வந்தடையும், எ-று.

(வி - ரை.) பேணாமை சீற்றம் என்பதைச் சீற்றம் பேணாமை என் இயைக்க. பேணாத சீற்றம் என்பது பாடமாயின் விரும்பாத கோபம் என்க; இதற்கும் கோபத்தை விரும்பாமை என்பதே கருத் தென்க; இப்பாடம் அவ்வளவு சிறப்புடையதன்று; இது தமிழ்நடை யன்று, வடமொழி நடை. சாக்காடே என்பதிலுள்ள ஏகாரத்தை முன்னுள்ள சாபமுதலிய மூன்றனோடும், பின்னுள்ள கேடுமுதலிய

இரண்டனோடுங் கூட்டுக. இச்செய்யுளில் முன்னிரண்டடியில் ஆறு பொருளும், பின்னிரண்டடியில் ஆறு பொருளுங் கூறப்பட்டன. அங்ஙனங் கூறப்படினும் ஆறுபொருள் கூறப்பட்டனவெனவே கொள்க. இல்லார் - குறிப்பு வினையாலணையும் பெயர். இல்லார்ச் சாரின் என்பது பாடமாயின் இல்லாரை ஒருவன் சார்ந்தால் அவனைப் பழிமுதலிய அவ்வாறு திறத்தனவும் சாரும் எனக் கொள்க. (௬௰)

61. ஆர்வமே செற்றங் கதமே யறையுங்கால்
ஓர்வமே செய்யு முலோபமே—சீர்சாலா
மானமே மாய வுயிர்க்கூன மென்னுமே
ஊனமே தீர்ந்தவ ரோத்து.

(ப - ரை.) ஊனம் தீர்ந்தவர் - குற்றத்தினின்று நீங்கிய பெரியோர்களுடைய, ஓத்து - நூற்கள்; ஆர்வம் ஏ - (அறம் பிறழ்ந்து மாதர்கள்மேல் வைக்கும்) அன்பும், செற்றம் (ஏ) - பகை பாராட்டுதலும், கதம் ஏ - கோபமும், அறையுங்கால் - (நியாயங்) கூறுமிடத்து, ஓர்வம் ஏ - ஒருபாற் சார்தலும், செய்யும் - (மனத்தால்) செய்யப்படும், உலோபம் ஏ - உலோபமும், சீர்சாலா (த) - சிறப்பு வளராத, மானம் ஏ - பெருமையும் ஆகிய இவ்வாறு திறத்தனவும், மாய உயிர்க்கு - (இவ்வுலகத்தின்) மாயத்துட்பட்டுள்ள மாந்தர்க்கு, ஊனமே - கெடுதியைச் செய்வனவேயாகும், என்னும் - என்று சொல்லும், எ - று.

(வி - ரை.) ஊனந்தீர்ந்தவர் - ஐந்தன்றொகை; குற்றம் நீங்கியவர் எனக்கொண்டு அல்வழிப் புணர்ச்சி எழுவாய்த்தொடர் என்றலுமாம். ஆர்வம் என்பதன் ஏகாரத்தைச் செற்றம் என்பதனோடுங் கூட்டுக. என்னுமே என்பதில் ஏகாரம் அசை. ஊனமே என்பதன் ஏகாரம் தேற்றப்பொருளது. மற்ற ஏகாரங்கள் எண்ணுப்பொருளன. ஆர்வம் - சுற்றத்தார்மேல் அன்பு என்பது பழையவுரை. ஓர்வம் - ஒருபாற்சார்தல்; இதனைப் பாங்கோடுதல் என்றார் பழைய உரைகாரர்.

ஓர்வம் என்பதே இக்காலத்து ஓரம் என வழங்குகின்றது போலும். உலோபம்-ஈயாமை; ஈயாமைக்குப் புறக்காரணங்களின் செயலின்மையின் செய்யும் உலோபம் என்பதற்கு 'மனத்தாற் செய்யப்படும் உலோபம்' என்று பொருள் கூறப்பட்டது. சீர் - சிறப்பு. சாலுதல்-வளர்தல், மிகுதல். மானம - பெருமை. சிறப்பு வளராத பெருமையாவது-கல்வி, நல்லொழுக்க முதலிய உயர்ந்த தன்மைகள் பிறர் மதிக்கும்படி தன்னிடம் வளரப்பெற்றிராத ஒருவன் குலமுதலிய சிறப்பிலாத தன்மைகளால் தன்னை உயர்ந்தவன் என்று பாராட்டிக் கொள்ளுதல். அத்தகைய பெருமை பெருமையாகாதென்பதனை,

"கல்லா வொருவன் றகைமை தலைப்பெய்து
சொல்லாடச் சோர்வு படும்." எனவும்,

"மேற்பிறந்தா ராயினுங் கல்லாதார் கீழ்ப்பிறந்துங்
கற்றா ரனைத்திலர் பாடு." எனவும்,

"நுண்மா ணுழைபுல மில்லா னெழினல
மண்மாண் புனைபாவை யற்று." எனவும்,

"மேலிருந்து மேலல்லார் மேலல்லர் கீழிருந்துங்
கீழல்லார் கீழல் லவர்." எனவும்

வருவனவற்றா லறிக.

கல்வி முதலிய உயர்ந்த குணங்கள் தங்கண் பிறர் மதிக்கும்படி வளரப்பெறாமற் சிறிது வாய்க்கப் பெற்றவர்கள் பெருமை பாராட்டிக் கொள்ளுதலுங் குற்றமாம் என்பார் 'சீர்சாலா' என்றார். அவை அங்ஙனம் வளரப்பெற்றோர் பெருமை பாராட்டிக்கொள்ளுதலாமோ எனின் அவ ரதுபுரியாராதலால் அவர்க்கது கூறவேண்டாம் என்க. அவ ரதுபுரியார் என்பதனை,

"பணியுமா மென்றும் பெருமை சிறுமை
அணியுமாந் தன்னை வியந்து."

என்பதனாலறிக.

இபல்பிலேதானே தம்மைக் கெடுக்கவுள்ள இவ்வுலக மாய்கைக்குட்பட்டுள்ள உயிர்கட்கு இவ்வாறு திறத்தனவும் கூடின் நீமேயாடு கூடிய காற்றென மேன்மேலுந் துன்பஞ் செய்வனவாம் என்பார் 'மாய உயிர்க் கூனம்' என்றார். உயிர் என இருதிணையுங் கொள்ளக்கூறினாரேனும் இவற்றை யெல்லாம் பகுத்துணர வல்லார் மாந்தர்களேயாதலின் உயிர்க்கு என்றதற்கு மாந்தர்க்கு எனப் பொருள் கூறப்பட்டது. (சு உ)

63\. கூத்தும் விழவு மணமுங் கொலைக்களமு
மார்த்த முனையுள்ளும் வேறிடத்து — மோத்து
மொழுக்கு முடையவர் செல்லாரே செல்லி
னிழுக்கு மிழவுந் தரும்.

(ப-ரை.) ஒத்தும்-நூலுணர்ச்சியும், ஒழுக்கும்-(நல்ல) நடக்கையும், உடையவர்-உடைய பெரியோர்கள், கூத்து (உள்) உம்-கூத்தாடும் இடத்திலும், விழவு (உள்) உம்-திருவிழா நடக்கும் இடத்திலும், மணம் (உள்) உம் - கலியாண நடக்கும் இடத்திலும், கொலைக்களம் (உள்) உம் - (பிறரைக் கொலைபுரிந்த குற்றவாளிகளைக்) கொல்லுதலைச் செய்யும் இடத்திலும், ஆர்த்த - (போர்வீரர்களாற்) சூழப்பட்ட, முனை உள் உம் - போர்க்களத்திலும், வேறு இடத்தும் - இவற்றைப்போன்ற மற்ற இடங்களிலும், செல்லார்-போகார்; செல்லின் - போவார்களானல், (அங்ஙனம் போதலானது), இழுக்கும் - தாழ்வையும், இழவும் - (பொருள்) அழிவையும், தரும் - உண்டாக்கும், எ - று.

(வி - ரை.) ஆர்த்தல் - கட்டுதல்; இச்செய்வினை கட்டப்படுதல் என்னும் செயப்பாட்டுவினைப்பொருளதாய் இலக்கணைபால்

போர்வீரர்களாற் சூழப்படுதலை யுணர்த்தியது. ஆர்த்த என்பதற்குப் போர்வீரர்கள் ஆரவாரிக்கின்ற என்றுரைப்பாருமுண்டு. முனையுள்ளும் என்பதிலுள்ள உள் ஏழனுருபு; அதனை அதன்முன்னுள்ள மற்றைய நான்கனோடுங் கூட்டுக. உம்மை யாவும் எண்ணுப்பொருளன. ஓது என்னும் முதனிலை திரிந்த ஒத்து என்னுஞ் செய்வினைத் தொழிற்பெயர் ஓதப்படுதல் என்னுஞ் செயப்பாட்டுவினைப் பொருளதாய்ப் பிறிது அல்லாகுபெயராய் ஓதப்படும் நூற்களை யுணர்த்தியது. ஒழுக்கம் - தொழிற்பெயர்; ஒழுகு - பகுதி, க் - விரித்தல்விகாரம், உகரக்கேடு சந்தி, அம் - விகுதி. உடையவர் - குறிப்பு வினையாலணையும்பெயர். இழுக்கு-முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; இழுகுதல் - பின்போதல் இழவு - விகுதிபெற்ற தொழிற்பெயர்; இழ - பகுதி, வு - தொழிற்பெயர் விகுதி. செல்லின என்பதினின்று செல்லுதல் என்பதைக்கொண்டு செல்லுதல் தரும் என வினை முடிக்க. 'சொல்லார்' எனவும 'சொல்லின்' எனவும் பாடமுண்டு. ()

**64.** ஊணொடு கூறை யெழுத்தாணி புத்தகம்
பேணொடு மெண்ணு மெழுத்திவை—மாணொடு
கேட்டெழுதி யோதிவாழ் வார்க்கீய்ந்தா ரிம்மையான்
வேட்டெழுத வாழ்வார் விரிந்து.

(ப - ரை.) இம்மையான் - இப்பிறப்பில், வேட்டு எழுத - (பிறர் தமது ஆணையை) விரும்பி எழுத, விரிந்து - (உறவு, செல்வம் முதலியவற்றிற்) பெருகி, வாழ்வார் - (மன்னர்களாய்) வாழ்பவர் (யாரெனில்), பேண் ஒடும் - விருப்பத்துடனும், மாண் ஒடும் - (மாணாக்கர்க்குரிய) மாட்சிமையான தொழில்களுடனும், எண்ணும் - கணிதமும், எழுத்தும் - இலக்கணமுமாகிய, இவை - இவைகளை, கேட்டு - (உபாத்தியாயர்களைக்) கேட்டு, எழுதி - (ஏட்டில்) எழுதி, ஓதி - (அவற்றைப்) படித்து, வாழ்வார்க்கு - வாழ்கின்ற மாணவர்களுக்கு, ஊண் ஒடு - உணவையும், கூறை (ஒடு) - உடையையும்

எழுத்தாணி (ஒடு) - எழுத்தாணியையும், புத்தகம் (ஒடு)-புத்தகத்தையும், ஈய்ந்தார் - கொடுத்தவரேயாவர், எ-று.

(வி - ரை.) இங்ஙனம் வாழ்வார் இவற்றை இவர்க்கு ஈய்ந்தாரே யாவர் என முடிக்க. பேனொடு மாணொடு என்பவற்றில் உள்ள ஒடுக்கள் உடனிகழ்ச்சிப் பொருளன. ஊணொடு என்பதிலுள்ள ஒடுவை கூறை முதலிய மற்றைய மூன்றனோடுங் கூட்டுக; அஃது எண்ணிடைச்சொல். பேனொடும் என்பதிலுள்ள உம்மையை மாணொடு என்பதனோடும், எண்ணும் என்பதிலுள்ள உம்மையை எழுத்து என்பதனோடுங் கூட்டிப் பேனொடும் மாணொடும் எண்ணும் எழுத்தும் கேட்டெழுந்தி ருந்துவாழ்வார் என இயைக்க. வாழ்வார் விரிந்து என்பதனை விரிந்து வாழ்வார் என இயைக்க. இம்மையான் என்பதில் ஆன் எழனுருபில் மூன்றனுருப வந்து பொருந்திய உருபுமயக்கம். மாண்-மாட்சிமை; அஃது இலக்கணையால் மாணவர்க்குரிய தொழில்களை புணர்த்தியது; மாணவர்க்குரிய தொழில்களாவன:— பொழுதொடு செல்லுதலும், வழிபாடாற்றலில் முனிவின்மையும், ஆசிரியனது குணத்தொடு பழகுதலும், அவன் குறிப்பிற் சார்தலும், இருவென இருத்தலும், சொல்லெனச் சொல்லுதலும், சித்திரப்பாவையின் அத்தகவு அடங்கி யிருத்தலும், செவிவாயாக நெஞ்சு களனாகக் கொண்டு கேட்டவை கேட்டவை விடாதுளத் தமைத்தலும், போவெனப் போதலும், அவ்வினையாளரொடு பயிலுதலுமாகிய இவையும் இவற்றைப்போல்வன பிறவுமாம். (௬௪)

௬5. உயர்ந்தான் றலைமன்னன் றொப்புடைத்தா மேனுக்கி
உயர்ந்தா ரேலாதி யொடுங்கி—உயர்ந்தான்
அருந்தவ மாற்றச் செயின்வீடா மென்றார்
பெருந்தவஞ் செய்தார் பெரிது.

(ப - ரை) பெருந்தவம் - மேலான தவங்களை, பெரிது - மிகவு முயன்று, செய்தார் - செய்துமுடித்த பெரியோர், ஒப்புடைத்தால் -

(ஒருவன்) தகுதியாகிய வழியினாலே, நோக்கி - ஆராய்ந்து, உயர்ந்தான் - (எல்லாவகையிலும் இயல்பாகவே) உயர்ந்திருப்பவன், தலைவன்-கடவுள், என்று - என்றுட்கொண்டு, உயர்ந்தான் - (அங்ஙனம் எல்லாவகையிலும் உயர்ந்துள்ள) கடவுளால் அருளப்பட்ட, நூல் - நூற்களை, ஓதி - கற்றுணர்ந்து, ஒடுங்கி - (அந்நூற்களிற் கூறியபடி) மனமடங்கி, உயர்ந்தான்-(அங்ஙனம்) உயர்ந்துள்ள கடவுளால் அளிக்கப்பட்ட, அருந்தவம் - அருமையாகிய தவங்களை, ஆற்ற - மிகுதியும், செயின்-செய்வானானால், வீடு ஆம்-அவனுக்கு முத்திபுண்டாம், என்றார்-என்று கூறியருளினார், எ-று.

(வி - ரை.) பெருந்தவம் பெரிது செய்தார் (இத்தகையற்கு வீடாம்) என்றார் என வினை முடிக்க. இச்செய்யுளில் ஒருவன் ஒப்புடைத்தால் நோக்குதலும், உயர்ந்தான் தலைவன் என்றுட்கொள்ளுதலும், உயர்ந்தானருளிய நூலையோதுதலும், ஒடுங்குதலும், உயர்ந்தானருளிய அருந்தவமாற்றச் செய்தலும், அவற்றால் அவன் வீடு எய்தலும் ஆகிய ஆறுபொருள்கள் கூறப்பட்டன எனக் கொள்க. உயர்ந்தான் என்பன மூன்றும் வினையாலணையும் பெயர்கள். ஒப்புடைத்து-குறிப்புவினையாலணையும் பெயர்; இதில் ஒப்பு-தெரிநிலைத்தொழிற் பெயர்; ஒ-பகுதி, ப்-சந்தி, பு-தொழிற்பெயர் விகுதி, இங்ஙனமாகிய இத்தொழிற்பெயர் உடை என்னுங் குறிப்பு வினைப்பகுதியோடு கூடி ஒப்புடை என அனைத்துமொருபகுதியாயிற்று, த் - சந்தி, து - ஒன்றன்படர்க்கை விகுதி; இஃது ஈண்டு ஒரு சொல்; இரண்டு சொல்லாகக் கொள்ளின் தகுதியையுடையதாகிய வழி என்றுரைக்க. ஆல்-மூன்றனுருபு; ஆன் எனப் பிரித்துக் கொள்ளுதலுமாம். வீடு - முதனிலை திரிந்தபெயர்; பெரிது செய்தார் - குறிப்பு வினையெச்சத் தொடர். (௬௫)

**66.** காலனார் ஈடறுத்தல் காண்குறின் முற்றுணர்ந்த
பாலனார் நூலமர்ந்து பாராது—வாலிதா

ஊறுபா டில்லா வுயர்தவந்தான் புரியின்
ஏறுமா மேலுலக மெய்ந்து.

(ப-ரை.) காலனை-எமனை, நீ-விலக, எறுத்தல்-வறுத்தற்குரியவழியை, காண்குறின்-அறிய விரும்பில், முற்றுணர்ந்த-முழுவதுமறிந்த, பாலனை - பாலன்மையையுடையவராகிய கடவுளுடைய, நூல் - நூற்களை, அமர்ந்து - விரும்பி, யாரா து - (நூற்பொருள்களைக் கற்றல் முதலிய உளவாகும் வருத்தங்களைக் காணியாமல், நூர்ந்து - நூலகத்திற் கூறியவற்றை) உணர்ந்து, மால் ... (க) - மனத்தைத்) தூய்மையுடையதாக வைத்து, ஊறுபாடு இல்லாத - கெடுதியில்லாத, உயர்தவம் - உயர்வாகிய தவத்தினை, புரியின் - ஒருவன் செய்வானானால், மேல் உலகம் - (எவற்றினும்) மேலாகிய உலகமாகிய முத்தியுலகத்தில், ஏறும் - (அவன்) ஏறுவான், எ-று.

(வி-ரை) முத்தியுலகத்தில் ஏறுதலாவது முத்தி யுலகத்திற்குப் போதல். உயிர்களின் காலத்தைக் கணித்திருப்பவனாதலின் எமனுக்குக் காலன் என்பது பெயராயிற்று; ஆர் - அன் விகுதிமேல் மரியாதை பற்றி வந்த விகுதி. முற்றுணர்ந்த என்னும் விசேடணத்தால் முற்றுணர்ந்த பாலனார் என்பதற்கு முழுது முணர்ந்தவராகிய கடவுள் எனப் பொருள் கூறப்பட்டது என்னை? முழுது முணர்ந்தவர் அவரே ஆதலின். பாலன் - பான்மையையுடையவன்; இதிலும் ஆர்-விகுதி மரியாதைபற்றிவந்த விகுதிமேல் விகுதியேயாம் என்க. ஆக என்னும் வினையெச்சம் ஈறுகெட்டு ஆஎன நின்றது. ஊறுபாடு என்பதில் ஊறு என்பது உறு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர்; பாடு என்பது படு என்னும் முதனிலை திரிந்த தொழிற்பெயர்; இவற்றுள் ஊறு என்பது ஒரு காரியத் தடையாகப் பொருந்துதல் என்னும் பொருளது; இவ்விரண்டுங் கூடி ஒரு சொல்லின் தன்மை யெய்திக் கெடுதி என்னும் பொருளினவாயின. உயர் தவம் என்பது உயர்வாகிய தவம் என்றாதலின் பண்புத்தொகை நிலைத்தொடர் எனக; உயர்ந்த தவம் என வினைத்தொகையாகக்

கொள்ளலாகாதோவெனின் தவம் முன் உயர்வின்றியிருந்து பின் உயர்ந்ததெனக் கொள்ளவேண்டிவருமாதலாலும், தவம் எக்காலத்தும் உயர்வுடையதாதலாலும் அங்ஙனங் கொள்ளலாகாதென்க. இங்ஙனமன்றி ஆன்மாக்கள் உயர்தற்குக் காரணமாகிய தவம் எனக்கொண்டு வினைத்தொகை எனின் அஃது அமைவுடையதாம். மேல் உலகம் - பண்புத்தொகைநிலைத்தொடர். ஓர்ந்து: ஓர் - பகுதி. (சுசு)

67\. பொய்தீர் புலவர் பொருள்புரிந் தாராய்ந்த
மைதீ ருயர்கதியின் மாண்புரைப்பின்—மைதீர்
சுடரின்று சொல்லின்று மாறின்று சோர்வின்
றிடரின் றினிதுயி லின்று.

(ப-ரை.) பொய் தீர் - பொய்யினின்று நீங்கிய, புலவர் - அறிவினையுடைய பெரியோர்கள், பொருள் புரிந்து - உண்மைப்பொருளை அடைய விரும்பி, ஆராய்ந்த - ஆய்ந்துணர்ந்த, மை தீர் - குற்றத்தினின்று மியல்பினீங்கிய, உயர் கதியின் - (வெற்றினுள்) மேண்மையாகிய கதியாகிய முத்தியுலகினது, மாண்பு - மாட்சிமையை, உரைப்பின் - சொல்லுமிடத்து, மை தீர் - இருளைப்போக்குகின்ற, சுடர் இன்று - சூரியன் இல்லை, சொல் இன்று - பேச்சு இல்லை, மாறு இன்று - (தன்னிலையினின்று) மாறுதல் இல்லை, சோர்வு இன்று - தளர்ச்சி இல்லை, இடர் இன்று - துன்பம் இல்லை, இனிது துயிலும் இன்று - இனிமையாகிய தூக்கமும் இல்லை, எ-று.

(வி - ரை.) இனிதுதுயில் என்னுந்தொடர் நிலைமொழி ஈற்றுத் து - கெட்டு இனிதுயில் என்றாயிற்று; இது இனிமையாகிய துயில் என்றாதலின் பண்புத் தொகைநிலைத்தொடர். தமிழ்நூற்கள் வீட்டின் இலக்கணத்தை இங்ஙனமே கூறின. இவ்வாறே புறப்பொருள் வெண்பாமாலை-பொதுவியற்படலத்தில் காஞ்சிப் பொதுவியற்பால என்னும் பகுதியில "புலவரேத்தும் புத்தேணாடு" என்னுந் துறையில் வீட்டின் இலக்கணங் கூட்டப்பட் டிருக்கின்றது. அது,

"பொய்யில் புலவர் புரிந்துறை மேலுலகம்
ஐயமொன் றின்றி யறிந்துரைப்பின் — வெய்ய
பகலின் றிரவின்று பற்றின்று துற்றின்
றிகலின் றிளிவரவு மின்று." என்பது.

இங்ஙனமே கம்பநாடரும் ராமாயணத்தில் ஆரணியகாண்டத்தில் சரபங்கர் பிறப்பு நீங்குபடலத்தில் இருபதாஞ் செய்யுளில்,

"சிறுகா லையிலா நிலையோ திரியா
குறுகா நெடுகா குணம்வே றுபடா
உறுகால் கிளர்பூ தமெலா முகினும்
மறுகா நெறியெய் துவன்வா னுடையாய்"

என்று கூறியிருத்தலையும் நோக்குக. (சுஎ)

68. கூரம்பு வெம்மணல் ஈர்மணி தூங்கலும்
சூரும் புகையிருளோ டேழுநூல் — ஆராய்ந்
தழிகதி யிம்முறையா னான்றோ ரறைந்தார்
இழிகதி யிம்முறையா னேழு.

(ப-ரை.) கூர் அம்பு (உம்)-கூர்மையாகிய பாணங்கள் உள்ள இடமும், வெம் மணல் (உம்)-வெப்பமாகிய மணல் உள்ள இடமும், ஈர் மணி (உம்)-குளிர்ச்சியாகிய மணிகளிருக்கும் இடமும், தூங்கல் உம்-(மயங்கித்) தூங்கிக்கிடக்கும் இடமும், சூர்-(பிராணிகளைத்) துன்பப்படுத்தலும், புகை (ஒடு) - புகையுள்ள இடமும், இருள் ஒடு - (சாதாரணமாகிய) இருள் உள்ள இடமும், இருள் (ஒடு) - பேர் இருள் உள்ள இடமும் (என), இழி கதி எழு - இழிவாகிய எழு நரகங்களை, இம்முறையான் - இந்த வரிசையில் வைத்து, நூல் (உயர்ந்தோர் அருளிய) நூற்களை, ஆராய்ந்து-ஆய்ந்து, அழி கதி - (பிராணிகள்) அழிதற்குக் காரணமாகிய இந்நரகங்களினுடைய, இம்முறையான் - இந்த வரிசையினின்று, ஆன்றோர் - நீங்கிய பெரியோர்கள், அறைந்தார் - கூறினார்கள், எ-று.

(வி - ரை.) கூரம்பு முதலிய ஏழும் அவைகள் உள்ள இடங்களை யுணர்த்தலின் தானியாகுபெயர்கள் என்க. ஆன்றார் என்பது அகன்றார் என்பதன் மரூஉ; அகல் - பகுதி, அதில் லகரமெய் றகரமெய்யானது சந்தி, அது னகரமெய்யானது மெலித்தல்விகாரம், ற் - இறந்தகால இடைநிலை, ஆர் - விகுதி; இது வினையாலணையும்பெயர்; ஆல் என்பதே பகுதி எனக்கொண்டு ஆன்றார் என்பதற்குக் கல்வி கேள்விகளில் தகுதி வாய்ந்தவர்கள் என் றுரைப்பாருமுண்டு; அப்பொருள் ஈண்டு இடர்ப்பாடுடையதாகும். இம்முறையான் என்பன இரண்டனுள் முதலதிலுள்ள ஆனுருபு ஐந்தனுருபில் வந்து மயங்கியது எனவும், இரண்டாவதிலுள்ள ஆனுருபு ஏழனுருபில்வந்து மயங்கியது எனவுங் கொள்க. 'வெண்மணல்' எனவும் பாடமுண்டு. ஈரம் என்பது கடைக்குறைந்து ஈர் என நின்றது. தாங்கலும் என்றதிலுள்ள உம்மையை அதன் முன்னுள்ள மூன்றனோடுங் கூட்டுக. இருளோடு என்பதிலுள்ள ஒடு என்பதைப் புகை என்பதனோடும், பின்னுள்ள இருள் என்பதனோடுங் கூட்டுக. இவ்விரண்டும் எண்ணிடைச்சொற்கள். இழிகதி ஏழு இம்முறையான் நால் ஆராய்ந்து அழ்கதி இம்முறையான் ஆன்றார் அறைந்தார் என இயைக்க (கூஅ)

69. சாதல் பொருள்கொடுத்த லின்சொற் புணர்வுவத்தல்
நோதற் பிரிவிற் கவறலை—ஓதலின்
அன்புடையார்க் குள்ளன வாறு குணமாக
மென்புடையார் வைத்தார் விரித்து.

(ப - ரை) சாதல் (ஏ) - (தம் நண்பர்கள் இறந்தால் தாமும்) இறத்தலும், பொருள் கொடுத்தல் (ஏ) - (அவர்கட்கு வேண்டிய) பொருள்களைக்கொடுத்தலும், இன்சொல் (ஏ) - இனிமையாகிய சொற்களைச் சொல்லுதலும், புணர்வு உவத்தல் (ஏ) - அவர்களோடு கூடியிருக்க விரும்புதலும், நோதல் (ஏ) - (அவர்கள் வருந்தினால் தாமும்) வருந்துதலும், பிரிவில் - (அவர்களை விட்டுப்) பிரிகையில், கவறல் ஏ -

மனங்கலங்குதலும் ஆகிய, ஆறுகுணம் - இவ்வாறு குணங்களும், அன்பு உடையார்க்கு - (உண்மையான) அன்பை யுடையவர்களிடத்தில், உள்ளனவாக - இருப்பன என்று, ஓதலின்-(உண்மை நட்பினர் தன்மையை ஆய்ந்துணர்ந்த அறிஞர்கள்) கூறுதலால், மென்புடையார் - மென்மைத்தன்மையைத் தம்மிடங்கொண்டுள்ள புலவர்கள், விரித்து - விளக்கி, வைத்தார் - (தம்முடைய நூற்களிற் கூறிவைத்தார்கள், எ-று.

(வி - ரை.) கவறலே என்பதிலுள்ள ஏகாரத்தை அதன் முன்னுள்ள நைந்தனேநிங் கூட்டுக. (இவை) ஆறுகுணம் அன்புடையார்க்குள்ளன ஆக ஓதலின் மென்புடையார் விரித்து வைத்தார் என இயைக்க. வருவிக்கப்பட்ட சொற்கள் இசை யெச்சங்கள். ஓதலின் என்பதில் ஓதல் தொழிற்பெயர்; இன் - சாரியை, ஆல் உருபு தொக்கது எனக் கொள்க. மென்புடையார் எனப் பொதுப்படக் கூறினமையின் அன்புடைய நாயகன் நாயகிக்குங் கொள்க. அன்பின் தன்மையை இவ்வாசிரியர் நன்கு விளக்கிக் கூறினார்; இதனால் இவ்வாசிரியர் அத்தகைய அன்பின் தன்மையை உடையவரா யிருந்திருப்பர் எனத் தோன்றுகின்றது. (சுக)

70. எடுத்தன் முடக்க னிமிர்த்த னிலையே
படுத்தலோ டாடல் பகரின்—அடுத்துயிர்
ஆறு தொழிலென் றறைந்தா ருயர்ந்தவர்
வேறு தொழிலாய் விரித்து.

(ப - ரை.) உயிர் அடுத்த - பிராணிகளைச் சார்ந்த, தொழில் - தொழில்களை, பகரின் - சொல்லுமிடத்து, எடுத்தல் (ஏ) - (உறுப்புக்களை) எடுத்தலும், முடக்கல் (ஏ) - முடக்குதலும், நிமிர்த்தல் (ஏ) - நிமிரச் செய்தலும், நிலை ஏ - நிலைக்கச் செய்தலும் (நிறுத்தலும்), படுத்தல் ஓடு - படுத்தலும், ஆடல் (ஓடு) - ஆடலும் (ஆகிய), ஆறு என்று - ஆறு

கும் என்று, உயர்ந்தவர் - (அறிவிற்) சிறந்தவர்கள், வேறு தொழில் ஆய் - இவற்றை வெவ்வேறு தொழில்களாக, விரித்து - விளக்கி, அறைந்தார் - கூறினார்கள், எ-று.

(வி - ரை.) நிலை என்பது நிற்பித்தல் என்னும் பிறவினைப் பொருளில்வந்த தன்வினைத் தொழிற்பெயர்; அதைச்சார்ந்த ஏகாரத்தை அதன் முன்னுள்ள எடுத்தல்முதலிய மூன்றனோடும், படுத்தல் என்பதைச் சார்ந்த ஒடு என்பதை ஆடல் என்பதனோடுங் கூட்டுக. அடுத்த உயிர் என்பது நிலைமொழியின் ஈற்றகரங்கெட்டு அடுத்துயிர் என்றாயிற்று. ஆக என்னும் வினையெச்சம் ஆய் எனத் திரிந்து நின்றது. உயிர் அடுத்த தொழில் பகரின் (இவை) ஆறு என்று உயர்ந்தவர் வேறு தொழிலாய் விரித்து அறைந்தார் என இயைக்க. (எ0)

71. ஐயமே பிச்சை யருந்தவர்க் கூணாடை
ஐயமே யின்றி யறிந்தீந்தான் — வையமும்
வானும் வரிசையாற் றானாளு நாளுமே
யீனமே யின்றி யினிது.

(ப-ரை.) ஐயம் ஏ - ஐயமும், பிச்சை (ஏ) - பிச்சையும், அருந்தவர்க்கு - அருமையாகிய தவத்தினைச் செய்வோர்க்கு, ஊண் (ஏ) - உணவையும், ஆடை (ஏ) - (ஆடையில்லாதவர்களுக்கு) ஆடையும் (ஆகிய இவற்றை), ஐயம் இன்றி - சந்தேகம் இல்லாமல், அறிந்து - (அறத்தின் தன்மையை) உணர்ந்து, ஈந்தான் - கொடுத்தவன், வையமும் - பூமியையும், வானும் - சொர்க்கத்தையும், நாளும் - எப்பொழுதும், ஈனம் இன்றி - குறைவு இல்லாமல், வரிசையான் - (தக்க) முறைமையோடு, இனிது ஆளும் - நன்றாய் ஆளுவான், எ-று.

(வி - ரை.) தான் - அசை. இச்செய்யுளில் ஐயமுதலிய நான்கு பொருளோடு வையத்தை ஆளுதலும், வானை ஆளுதலுமாகிய இரண்டு பொருளையுங் கூட்டி ஆறு பொருள்கள் கூறப்பட்டன எனக்

கொள்க. ஐயமாவது ஏற்போரெவர்க்குங் கொடுத்தல். பிச்சையாவது தவசிகளுக்கும், துறவிகளுக்குங் கொடுத்தல். நாளும் என்பதன் உம்மை முற்றுப்பொருளது. ஐயமே என்பதிலுள்ள ஏகாரத்தை மற்ற மூன்றனோடுங் கூட்டுக. மற்ற ஏகாரங்கள் அசைகள். (எக)

72. நடப்பார்க் கூணல்ல பொறைதாங்கி னார்க்கூண்
கிடப்பார்க்கூண் கேளிர்க்கூண் கேடின்—றுடற்சார்ந்த
வானகத்தார்க் கூணே மறுதலைபார்க் கூணமைத்தான்
தானகத்தேத வாழ்வான் ௭௨.

(ப-ரை.) நடப்பார்க்கு ஊண் (ஏ)-வழி நடப்பவர்க்கு உணவும், நல்ல-மிகுந்த, பொறை-சுமையை, தாங்கினார்க்கு ஊண் (ஏ)-சுமந்து தளர்ந்தவர்க்கு உணவும், கிடப்பார்க்கு ஊண் (ஏ)-(நோயாற்) கிடப்பவர்க்கு உணவும், கேளிர்க்கு ஊண் (ஏ) - சுற்றத்தவர்க்கு உணவும், உடல் சார்ந்த-(தன்) உடம்பைச் சார்ந்த, வானகத்தார்க்கு ஊண்(ஏ)-வானுலகிலுள்ள பிதிர்களுக்கு உணவும், மறுதலைபார்க்கு ஊண் ஏ - வேறு நாட்டில் இருந்து வந்தவர்களுக்கு உணவும், கேடு இன்றி - கெடுதல் இல்லாமல், அமைத்தான் - (கொடுக்கும்படி) அமைத்து வைத்தவன், அகத்து - தன் மனையில், தக வாழ்வான் - தகுதியாக வாழ்வான், எ - று.

(வி - ரை.) பிதிர்களுக்கு உணவு அமைத்தலாவது நீர்க்கடனாற்றுதல். ஏகாரத்தை மற்ற ஊண் என்னுஞ் சொற்களோடுங் கூட்டுக. ஊண் அமைத்தல் ஒன்றாயினும் இங்குக் கூறப்பட்ட அவரவரை நோக்கி வெவ்வேறாயிற்றெனக; அன்றி அவரவர் விரும்பும் வண்ணம் அமைத்தல்வேண்டும் என்பார் இங்ஙனம் வெவ்வேறாகக் கூறினர் என்றலுமாம். இங்கு வானகம் என்றது பிதிர்லோகத்தை; இஃது ஒருசொல்; இதனை வான் அகம் எனப் பிரித்து அகம் என்பதை ஏழனுருபாகக் கொள்ளுதலுமாம். நல்ல என்பதற்கு மிகுந்த என்

னும் பொருளுளதாம் என்பதனை நல்லவெய்யில், நல்லபசி என்னும் உலகவழக்கானறிக. (எஉ)

73. உணராமை யாற்குற்ற மோத்தான் வினையாம்
உணரான் வினைப்பிறப்புச் செய்யும்—உணராத
தொண்டிருந் துன்பந் தொடரும் பிறப்பினான்
மண்டிலமு மாகு மதி.

(ப-ரை.) உணராமையால - அறியாமையால், குற்றம் (ஆம்) - (காமம், வெகுளி, மயக்கம் என்னும்) குற்றங்கள் உண்டாகும்; ஓத்து ஆன் - நூலின் உணர்ச்சியினால், வினை ஆம் - நல்வினை (புண்ணியம்) உண்டாகும்; உணரான் - (நூற்களை) உணராதவனுடைய, வினை - செயல்கள், பிறப்புச்செய்யும் - பிறப்பையுண்டாக்கும்; பிறப்பினால் - அப்பிறப்பினால், உணராத - அறியப்படாத, தொண்டு - ஒன்பதாகிய, இருந்துன்பம்-பெருந்துன்பங்கள், தொடரும்-தொடர்வனவாம்; (அன்றியும்), மண்டிலமும் ஆகும் - பஞ்சபரிவர்த்தனைகளும் உளவாகும், மதி - (நீ நன்றாய்) நோக்கு, எ-று.

(வி-ரை.) அறியாமையை அவித்தை எனவும், அஞ்ஞானம் எனவுங் கூறுவர் வடநூலார். தொண்டு - ஒன்பது; ஒன்பது பெருந்துன்பங்களாவன: உயிரும், உயிரில்லாதனவும், புண்ணியமும், பாவமும், முற்றும், செறிப்பும், கட்டும், முதிர்ப்பும், வீடும் என்பன; இவை இங்ஙனம் பழைய உரையிற் கூறப்பட்டன. புண்ணியமும் பாவம்போலப் பிறவிக்கேதுவாகலின் இவற்றுடன் கூட்டப்பட்டது. வீடு - மரணம். மற்றவற்றின் விளக்கத்தை அருகநூல் வல்லார்வாய் கேட்டுணர்க. பஞ்ச பரிவர்த்தனைகளாவன:—கருமம், அவித்தை, வாசனை, உருசி, மாயாசம்பந்தம் என்பன; இவை மாறிமாறி வருதலின் பரிவர்த்தனை எனப்பட்டன; பரிவர்த்தனை-மாறிவரல். மண்டிலம் என்பது ஈண்டுப் பரிவர்த்தனை என்னுஞ் சொல்லின் பொருளைக் குறிப்பதாகும்; மண்டிலம் - வட்டமாய் ஓடுதல். (எங)

74. மனைவாழ்க்கை மாதவமென் றிரண்டு மாண்ட
வினைவாழ்க்கை யாக விழைப—மனைவாழ்க்கை
பற்றுத லின்றி விடுதல்முற் சொல்லுமேல்
பற்றுதல் பாத்திற வம்.

(ப-ரை.) மனை வாழ்க்கை-மனைவாழ்க்கையும், மா தவம்-சிறந்த தவமும், என்று இரண்டும் - என்று சொல்லப்பட்ட இரண்டையும், மாண்ட - மாட்சிமைப்பட்ட, வினை வாழ்க்கை ஆக-நல்வினைக்குரிய வாழ்க்கைகளாகவே கொண்டு, விழைப - (அறிவுடையோர்) விரும்புவார்கள்; மனை வாழ்க்கை-மனைவாழ்க்கையாவது, பற்றுதல்-(இவ்வுலகப்பொருள்களிற்) பற்றுடையனாயிருத்தல்; பாத்தில்-நீங்குதலில்லாத, தவம் - தவமாவது, இன்றி விடுதல் - அப்பற்று மனத்தில்லாதபடி அதனை விடுதலும், முன் சொல்லும்-(மேன்மையாகிய பொருள்கள் எவற்றினு முன்னனதாகச் சொல்லப்படும், மேல் பற்றுதல் - (மேன்மையானதாகிய முத்தியை) விரும்புதலும் ஆகும், எ - று.

(வி - ரை.) மேல்-பண்பாகுபெயர். பாத்து - பகுத்தல்; இதில் பகு என்பதன் விகாரமாகிய பா - பகுதி, து - தொழிற்பெயர்விகுதி. "மனைவாழ்க்கையும் மாதவமும் என்று சொல்லப்பட்ட இரண்டும் மாட்சிமைப்பட்ட நல்வினையாக விரும்புவார்கள்; அவற்றுள், மனைவாழ்க்கையாவது பொருளின்மேற் பற்றுடையனாய் ஒழுகுதலாம்; இதன்கண் முற்சொல்லிய மாதவமாவது பொருள்கண்மேற் பற்றுதல் இன்றி நீங்குதல். இனி யோகமாகிய பாத்தில் தவமாவது உலகின் உச்சிமேற் பற்றுதலாகிய வீட்டைத்தரும்" என்பது பழைய உரை; இப்பொருளில் மேல் என்பது இடவாகு பெயர். (எச)

75. இடைவனப்புந் தோள்வனப்பு மீடின் வனப்பும்
நடைவனப்பு நாணின் வனப்பும்—புடைசால்

கழுத்தின் வனப்பும் வனப்பல்ல வெண்ணோ
டெழுத்தின் வனப்பே வனப்பு.

(ப - ரை.) இடை வனப்பும் - இடையினது அழகும், தோள் வனப்பும் - தோள்களினது அழகும், ஈடின் வனப்பும் - பெருமையினது அழகும், நடை வனப்பும் - நடையினது அழகும், நாணின் வனப்பும் - நாணத்தினால் உண்டாகும் அழகும், புடைசால் - பக்கங்கள் நன்கமைந்துள்ள, கழுத்தின் வனப்பும் - கழுத்தினது அழகும், வனப்பு அல்ல - அழகாகா, எண் (இன்) ஓடு - (ஒருவர்க்குக்) கணித நூலுணர்ச்சியும், எழுத்தின் (ஓடு) - இலக்கண நூலுணர்ச்சியுமாகிய இவற்றாலாகிய, வனப்பே - அழகே, வனப்பு - அழகாகும், எ - று.

(வி - ரை.) உம்மை யாவும் எண்ணுப்பொருளன. ஓடு என்பதும் எண்ணிடைச்சொல்லே; அதை எழுத்தின் என்பதோடுங் கூட்டுக. எழுத்தின் என்பதிலுள்ள இன் சாரியை எண் என்பதனோடுங் கூட்டுக. ஈடு - பெருமை. சால் என்பது உரிச்சொல்; அஃது திண்டு வினைச்சொல்லின் தன்மை யெய்தித் தெரிநிலை வினைப்பகுதியாய்க் கழுத்து என்பதனோடு கூடி வினைத்தொகையாயிற்று. வனப்பே என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலைப்பொருளது. (௭௫)

76. அறுவர் தந்நூலு மறிந்துணர்வு பற்றி
மறுவாவு மாறான நீக்கி—மறுவாவின்
மாசா ரியனா மறுதலைச்சொல் மாற்றுதலே
ஆசா ரியன தமைவு.

(ப - ரை.) அறுவர் - அறுசமயத்தாருடைய, நூலும் - நூற்களையும், அறிந்து - கற்றறிந்து, உணர்வுபற்றி - (நல்ல) ஞானத்தை யடைந்து, மறுவாவு ஆன - குற்றமுடையனவாகிய பொருள்களையும், மாறு ஆன - மாறுபட்ட பொருள்களையும், நீக்கி - தள்ளி, மறுவாவு இல் - குற்றமில்லாத, மா - சிறந்த, சாரியன் ஆ (க) - ஒழுக்கத்தை

புடையவனாக (விருந்து), மறுதலைச்சொல்-(நல்லபுகழினுக்கு) மாறு ஙெய பழிச்சொற்களை, மாற்றுதலே - நீக்குதலே, ஆசாரியனது - தருவினது, அமைவு - இயல்பாகும், எ-று.

(வி - ரை.) அறுவர் என்பது ஈண்டு நூல் என்கிற குறிப்பால் அறுசமயத்தவர்களை யுணர்த்தலின் தொகைக்குறிப்பு மறு - குற்றம், பரவு - அது பொருந்துதல். ஆன - பலவின்படர்க்கை வினையா லணையும்பெயர். மறவாவு இல் மாசாரியனு என்பதற்கு, "மறித்துப் பிறத்தலில்லாத பெரிய சரிதையை யுடையவனாய்" என்பது பழைய டை. ஏ - பிரிநிலைப்பொருளது. (எசு)

'7. ஒல்லுவ நல்ல வுருவ வேற் கண்ணினுப்
வல்லுவ நாடி வகையினுல்—சொல்லின்
கொடையினுற் போகஞ் சுவர்க்கந் தவத்தால்
இடையாத் தவத்தினுல் வீடு.

(ப - ரை.) ஒல்லுவ - (ஒன்றோடொன்று நன்கு) ஒப்பனவும், ல்ல உருவ - அழகிய வடிவினையுடையனவுமாகிய, வேல் கண்ணி றய் - வேல்போன்ற கண்களையுடையவளே! வல்லுவ - (கற்றற்கு) ல்லனவாகிய (கூடியனவாகிய) நூற்களை, நாடி - ஆராய்ந்து, வகை னுல் - (சொல்லுதற்குரிய) விதத்தினுல், சொல்லின் - சொல்லு டத்து, கொடையினுல் - ஈகையினுல், போகம் - போகமும், தவத் ால் - தவத்தினுல், சுவர்க்கம் - சுவர்க்கமும், அடையாத-(மனம் உல ப் பொருள்களிற்) செல்லுதலில்லாத, தவத்தினுல் - தவத்தினுலே, டு - முத்தியுலகும் உளவாம், எ-று.

(வி - ரை.) ஒல்லுவ, வல்லுவ - பலவின்படர்க்கை வினையா ணையும் பெயர்கள்; முன்னது தெரிநிலை, பின்னது குறிப்பு; இவற் ன் முறையே ஒல், வல் - பகுதிகள்; முன்னதில் வகரமெய் எதிர் ல இடைநிலை, பின்னதில் வகரமெய் உடம்படுமெய்; உகரம் ரண்டிலுஞ் சாரியை. (எரு)

கழுத்தின் வனப்பும் வனப்பல்ல வெண்ணோ
டெழுத்தின் வனப்பே வனப்பு.

(ப - ரை.) இடை வனப்பும் - இடையினது அழகும், தோள் வனப்பும் - தோள்களினது அழகும், ஈடின் வனப்பும் - பெருமையினது அழகும், நடை வனப்பும் - நடையினது அழகும், நாணின் வனப்பும் - நாணத்தினால் உண்டாகும் அழகும், புடைசால் - பக்கங்கள் நன்கமைந்துள்ள, கழுத்தின் வனப்பும் - கழுத்தினது அழகும், வனப்பு அல்ல - அழகாகா, எண் (இன்) ஒடு - (ஒருவர்க்குக்) கணித நூலுணர்ச்சியும், எழுத்தின் (ஒடு) - இலக்கண நூலுணர்ச்சியுமாகிய இவற்றாலாகிய, வனப்பே - அழகே, வனப்பு - அழகாகும், எ - று.

(வி - ரை.) உம்மை யாவும் எண்ணுப்பொருளன. ஒடு என்பதும் எண்ணிடைச்சொல்லே; அதை எழுத்தின் என்பதோடுங் கூட்டுக. எழுத்தின் என்பதிலுள்ள இன் சாரியை எண் என்பதனோடுங் கூட்டுக. ஈடு - பெருமை. சால் என்பது உரிச்சொல்; அஃதீண்டு வினைச்சொல்லின் தன்மையெய்தித் தெரிநிலை வினைப்பகுதியாய்க் கழுத்து என்பதனோடு கூடி வினைத்தொகையாயிற்று. வனப்பே என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலைப்பொருளது. (எரு)

76. அறுவர் தந்நூலு மறிந்துணர்வு பற்றி
மறுவரவு மாறுன நீக்கி—மறுவரவின்
மாசா ரியனு மறுதலைச்சொல் மாற்றுதலே
ஆசா ரியன தமைவு.

(ப - ரை.) அறுவர் - அறுசமயத்தாருடைய, நூலும் - நூற்களையும், அறிந்து - கற்றறிந்து, உணர்வுபற்றி - (நல்ல) ஞானத்தை யடைந்து, மறுவரவு ஆன - குற்றமுடையனவாகிய பொருள்களையும், மாறு ஆன - மாறுபட்ட பொருள்களையும், நீக்கி - தள்ளி, மறுவரவு இல் - குற்றமில்லாத, மா - சிறந்த, சாரியன் ஆ (க) - ஒழுக்கத்தை

யுடையவனாக (விருந்து), மறுதலைச்சொல்-(நல்லபுகழினுக்கு) மாறு கிய பழிச்சொற்களை, மாற்றுதலே - நீக்குதலே, ஆசாரியனது - குருவினது, அமைவு - இயல்பாகும், எ-று.

(வி - ரை.) அறுவர் என்பது எண்டு நூல் என்கிற குறிப்பால் அறுசமயத்தவர்களை யுணர்த்தலின் தொகைக்குறிப்பு மறு - குற்றம், வரவு - அது பொருந்துதல். ஆன - பலவின்படர்க்கை வினையா லணையும்பெயர். மறுவரவு இல் மாசாரியனு என்பதற்கு, "மறித்துப் பிறத்தலில்லாத பெரிய சரிதையை யுடையவனாய்" என்பது பழைய உரை. ஏ - பிரிநிலைப்பொருளது. (எசு)

77. ஒல்லுவ நல்ல வுருவவேவற் கண்ணினாய்
வல்லுவ நாடி வகையினால்—சொல்லின்
கொடையினாற் போகஞ் சுவர்க்கந் தவத்தால்
இடையாத் தவத்தினால் வீடு.

(ப - ரை.) ஒல்லுவ - (ஒன்றோடொன்று நன்கு) ஒப்பனவும், நல்ல உருவ - அழகிய வடிவினையடையனவுமாகிய, வேல கண்ணினாய் - வேல்போன்ற கண்களையுடையவளே! வல்லுவ - (கற்றற்கு) வல்லனவாகிய (கூடியனவாகிய) நூற்களை, நாடி - ஆராய்ந்து, வகையினால் - (சொல்லுதற்குரிய) விதத்தினால், சொல்லின் - சொல்லுமிடத்து, கொடையினால் - ஈகையினால், போகம் - போகமும், தவத்தால் - தவத்தினால், சுவர்க்கம் - சுவர்க்கமும், இடையாத-(மனம் உலகப் பொருள்களிற்) செல்லுதலில்லாத, தவத்தினால் - தவத்தினாலே, வீடு - முத்தியுலகும் உளவாம், எ-று.

(வி - ரை.) ஒல்லுவ, வல்லுவ - பலவின்படர்க்கை வினையாலணையும் பெயர்கள்; முன்னது தெரிநிலை, பின்னது குறிப்பு; இவற்றுள் முறையே ஒல், வல் - பகுதிகள்; முன்னதில் வகரமெய் எதிர்கால இடைநிலை, பின்னதில் வகரமெய் உடம்படுமெய்; உகரம் இரண்டினுஞ் சாரியை. (எஎ)

கழுத்தின் வனப்பும் வனப்பல்ல வெண்ணோ
டெழுத்தின் வனப்பே வனப்பு.

(ப - ரை.) இடை வனப்பும் - இடையினது அழகும், தோள் வனப்பும் - தோள்களினது அழகும், ஈடின் வனப்பும் - பெருமையினது அழகும், நடை வனப்பும் - நடையினது அழகும், நாணின் வனப்பும் - நாணத்தினால் உண்டாகும் அழகும், புடைசால் - பக்கங்கள் நன்கமைந்துள்ள, கழுத்தின் வனப்பும் - கழுத்தினது அழகும், வனப்பு அல்ல - அழகாகா, எண் (இன்) ஓடு - (ஒருவர்க்குக்) கணித நூலுணர்ச்சியும், எழுத்தின் (ஓடு) - இலக்கண நூலுணர்ச்சியுமாகிய இவற்றாலாகிய, வனப்பே - அழகே, வனப்பு - அழகாகும், எ - று.

(வி - ரை.) உம்மை யாவும் எண்ணுப்பொருளன. ஓடு என்பதும் எண்ணிடைச்சொல்லே; அதை எழுத்தின் என்பதோடுங் கூட்டுக. எழுத்தின் என்பதிலுள்ள இன் சாரியை எண் என்பதனோடுங் கூட்டுக. ஈடு - பெருமை. சால் என்பது உரிச்சொல்; அஃது ஈண்டு வினைச்சொல்லின் தன்மை யெய்தித் தெரிநிலை வினைப்பகுதியாய்க் கழுத்து என்பதனோடு கூடி வினைத்தொகையாயிற்று. வனப்பே என்பதிலுள்ள ஏகாரம் பிரிநிலைப்பொருளது. (௭௫)

76. அறுவர் தந்நூலு மறிந்துணர்வு பற்றி
மறுவாவு மாறான நீக்கி—மறுவாவின்
மாசாரியனு மறுதலைச்சொல் மாற்றுதலே
ஆசாரியன தமைவு.

(ப - ரை.) அறுவர் - அறுசமயத்தாருடைய, நூலும் - நூற்களையும், அறிந்து - கற்றறிந்து, உணர்வுபற்றி - (நல்ல) ஞானத்தையடைந்து, மறுவாவு ஆன - குற்றமுடையனவாகிய பொருள்களையும், மாறு ஆன - மாறுபட்ட பொருள்களையும், நீக்கி - தள்ளி, மறுவாவு இல் - குற்றமில்லாத, மா - சிறந்த, சாரியன் ஆ (க) - ஒழுக்கத்தை

யுடையவனாக (விருந்து), மறுதலைச்சொல்-(நல்லபுகழினுக்கு) மாறாகிய பழிச்சொற்களை, மாற்றுதலே - நீக்குதலே, ஆசாரியனது - குருவினது, அமைவு - இயல்பாகும், எ-று.

(வி - ரை.) அறுவர் என்பது எண்டு நூல் என்கிற குறிப்பால் அறுசமயத்தவர்களை யுணர்த்தலின் தொகைக்குறிப்பு. மறு - குற்றம், வரவு - அது பொருந்துதல். ஆன - பலவின்படர்க்கை வினையாலணையும்பெயர். மறுவரவு இல் மாசாரியனு என்பதற்கு, "மறித்துப் பிறத்தலில்லாத பெரிய சரிதையை யுடையவனுய" என்பது பழைய உரை. ஏ - பிரிநிலைப்பொருளது. (எசு)

77. ஒல்லுவ நல்ல வுருவவேற் கண்ணினுப்
வல்லுவ நாடி வகையினுல--சொலவின்
கொடையினுற் போகஞ சுவர்க்கந் தவத்தால்
இடையாத தவததினுல வீடு.

(ப - ரை.) ஒல்லுவ - (ஒன்றோடொன்று நன்கு) ஒப்பனவும், நல்ல உருவ - அழகிய வடிவினையுடையனவு மாகிய, வேல கணணினுய் - வேல்போன்ற கண்களையுடையவளே! வல்லுவ - (கற்றற்கு) [illegible]வாகிய (கூடியனவாகிய) நூற்களை, நாடி - ஆராய்ந்து, வகையினுல் - (சொல்லுதற்குரிய) விதத்தினுல், சொல்லின் - சொல்லுவித்து, கொடையினுல் - ஈகையினுல், போகம் - போகமும், தவத்தால் - தவத்தினுல், சுவர்க்கம் - சுவர்க்கமும், அடையாத-(மனம் உலகப் பொருள்களிற்) செல்லுதலில்லாத, தவத்தினுல் - தவத்தினுலே, வீடு - முத்தியுலகும் உளவாம், எ-று.

(வி - ரை.) ஒல்லுவ, வல்லுவ - பலவின்படர்க்கை வினையாலணையும் பெயர்கள்; முன்னது தெரிநிலை, பின்னது குறிப்பு; இவற்றுள் முறையே ஒல், வல் - பகுதிகள்; முன்னதில் வகரமெய் எதிர்கால இடைநிலை, பின்னதில் வகரமெய் உடம்படுமெய்; உகரம் இரண்டினுஞ் சாரியை. (எஎ)

78. நாற்கதியுந் துன்ப நவைதீர்த்தல் வேண்டுவான்
பாற்கதியின் பாற்பட வாராய்ந்து—நூற்கதியின்
எல்லை யுயர்ந்தார் தவமுயலின் மூன்றைந்தேழ்
வல்லை வீடாகும் வகு.

(ப-ரை.) நாற்கதியும் துன்பம்-(தேவர்கதி, நரகர்கதி, விலங்கு கதி, மக்கள்கதி என்னும்) நான்கு கதிகளிலும் உள்ளது துன்பமே; (ஆகையால்), நவை - அத்துன்பத்தை, தீர்த்தல் வேண்டுவான்-நீக்குதலை விரும்புகின்றவன், பாற்கதியின்-(முற்கூறப்பட்ட) பகுதிகளையுடைய கதிகளினது, பால் - கூறுபாடுகளை, பட ஆராய்ந்து - பொருந்த ஆராய்ந்து, நூல் கதியின்-நூற்களிற் கூறப்பட்டுள்ள வழிகளினுடைய, எல்லை உயர்ந்தார்-எல்லையினின்று உயர்ந்தவர்களாகிய முனிவர்களது, தவம் - தவத்தினை, முயலின் - (ஒருவன்) முயன்று செய்வானானால், மூன்று-(அவனுக்கு) மூன்றாம்பிறப்பிலேனும், ஐந்து-ஐந்தாம் பிறப்பிலேனும், எழ் - ஏழாம் பிறப்பிலேனும், வல்லை - திடமாக, வீடு ஆகும் - முத்தி உலகு உளதாகும் (என்று), வகு - விரித்துச் சொல்லு, எ - று.

(வி - ரை.) நவை என்றதனோடு சுட்டைக் கூட்டுக. வேண்டுவான், உயர்ந்தார் - வினையாலணையும் பெயர்கள். பால் என்பது பகல் என்பதன் மரூஉ. படுதல் - ஈண்டுப் பொருந்துதல். நூற்கதி - ஏழாம் வேற்றுமை யுருபும்பயனு முடன்றொக்கதொகை. கதியின் எல்லை - ஆறன்றொகை. எல்லையுயர்ந்தார் - ஐந்தன்றொகை. நூற்கதியின் எல்லையுயர்ந்தார் என்றதற்கு "நூல்வழியான் எல்லை காண்கின்ற முனிவர்" என்பது பழைய உரை. வீடு என்ற குறிப்பான் மூன்று, ஐந்து, எழ் என்பன அவ்வப்பிறப்புக்களை யுணர்த்தலின் இவை தொகைக்குறிப்புகள். (எஅ)

79. தாயிழந்த பிள்ளை தலையிழந்த பெண்டாட்டி
வாயிழந்த வாழ்வினார் வாணிகம்—போயிழந்தார்

கைத்தூண் பொருளிழந்தார் கண்ணிலவர்க் கீய்ந்தார்
வைத்து வழங்கி வாழ்வார்.

(ப - ரை.) தாய் இழந்த பிள்ளை(க்கு)-தாயை இழந்த பிள்ளைக்கும், தலை இழந்த - தலைவனை (கொழுநனை) இழந்த, பெண்டாட்டி (க்கு)-மாதினுக்கும், வாய் இழந்த-வாயை இழந்த, வாழ்விலார்(க்கு)-வாழ்க்கையை யுடையவர்களாகிய ஊமைகளுக்கும், வாணிகம் போய்-வியாபாரஞ் செய்யச்சென்று, இழந்தார்(க்கு)-(முதற்பொருளை) இழந்தவர்களுக்கும், கைத்து - கையிலுள்ளதாகிய, ஊண் பொருள்-உணவுக்கு ஆதாரவாகிய பொருளை, இழந்தார்(க்கு)-இழந்தவர்களுக்கும், கண் இல்லவர்க்கு - கண்ணில்லாதவர்களுக்கும், ஈய்ந்தார் - (வேண்டியவற்றைக்) கொடுத்தவர்கள், வைத்து வழங்கி - மறுபிறப்புக்கு வேண்டியவைகளைக் கொடுத்துவைத்து, வாழ்வார் - வாழ்வார்கள், எ-று.

(வி - ரை.) நான்கனுருபைப் பிள்ளைஎன்பது முதலியவற்றோடுங் கூட்டுக. வாணிகம் என்றவிடத்துச் செய்ய என்னுஞ் சொல் இசையெச்சமாக வருவிக்கப்பட்டது. பெண்டு - பெண்தன்மை, ஆட்டி - அதனை ஆளுதலுடையவள். (எகூ)

80. சாக்காடு கேடு பகைதுன்ப மின்பமே
நாக்காடு நாட்டறை போக்குமெனை—நாக்காட்ட
நட்டார்க் கியையிற் றமக்கியைந்த கூறடம்
பட்டார்வாய்ப் பட்டது பண்பு.

(ப - ரை.) சாக்காடு (ஏ)-மரணமும், கேடு (ஏ) - கெடுதியும், பகை (ஏ) - பகையும், துன்பம் (ஏ) - துன்பமும், இன்பமே-இன்பமும், நாக்கு ஆடு - நாவினாற் சொல்லப்படுகின்ற, நாடு அறை - நாட்டிலுள்ளவர்களுடைய சொல்லில், போக்கு (ஏ) - பொருந்துதலும், என - என்று, நாக்காட்ட - நாவினாற் சொல்லப்படும் இவை, நட்டார்க்கு-நண்பர்களுக்கு, இயையின்-வந்து பொருந்தினால், தமக்கு

இயைந்த கூறு-(அவற்றுள்) தமக்கு உரியபாகத்தை, உட்பட்டார்-(ஏற்க) மனம் இயைந்தவர்களுடைய, வாய் - இடத்தில், பட்டது - பொருந்தியதே, பண்பு - நற்குணமாகும், எ-று.

(வி - ரை.) மற்றையோரிடங் காணப்படும் நற்குணம் உண்மையாகிய நற்குணமாகாது என்பது இசையெச்சம். சாக்காடு - தொழிற்பெயர்; இதிற் சா - பகுதி, க் - சந்தி, காடு - விகுதி; நோக்காடு, வேக்காடு என வேறு தொழிற்பெயர்களும் இவ் விகுதிபெற்று வருதல் காண்க. ஏகாரம் எண்ணுப்பொருளது; அதனை மூன்னும் பின்னுமுள்ளவற்றோடுங் கூட்டுக. நாக்காடு - மூன்றன்தொகை; நாவினால் ஆடுதல், அதாவது பேசுதல்; அன்றி நாக்கினது ஆட்டம் எனக் கொள்ளுதலுமாம். பேசுதற்கு இதழும், நாவும், பல்லும், மேல்வாயும் ஆகிய நான்குங் கருவியாமேனும் முதன்மைபற்றி நாவைக் கூறினர். நாக்கு என்பதில் க்-சந்தி, கு-சாரியை. நாடு என்பது நாட்டிலுள்ளவர்களை யுணர்த்தலின் இடவாகுபெயர். போக்கு - தொழிற்பெயர்; போ-பகுதி, க்-சந்தி, கு - தொழிற்பெயர்விகுதி. பட்டது - ஒன்றன்படர்க்கை வினையாலணையும்பெயர். பழைய உரைகாரர் நாக்காட்ட என்றவிடத்து நாக்காட்டார் எனப் பாடங் கொண்டு அதற்கு நாவாடாது என்று பொருள் கூறினர். (அ0)

81· புலையாளர் புண்பட்டார் கண்கெட்டார் போக்கில்
நிலையாளர் நீர்மை யிழந்தார்—தலையாளர்க்
கூண்கொடுத் தூற்று யுதவினோர் மன்னராய்க்
காண்கொடுத்து வாழ்வார் கலந்து.

(ப - ரை.) புலையாளர் (க்கு) - (பலரும் இகழும்படியான) தாழ்வையுடையவர்களுக்கும், புண்பட்டார்(க்கு) - உடலிற் புண்பட்டவர்களுக்கும், போக்கில் நிலையாளர்(க்கு) - தேசயாத்திரை செய்தலில் நிலைகொண்டிருப்பவர்களுக்கும், நீர்மை இழந்தார்(க்கு) - (தங்கள் மேலா

கிய) தன்மையை யிழந்தவர்களுக்கும், தலையாளர்(க்கு) - மேன்மை யாகிய குணங்களை யுடையவர்களுக்கும், ஊற்று ஆய் - ஆதரவாய், ஊண் கொடுத்து - உணவைக் கொடுத்து, உதவினோர்-(அவர்களுக்கு) உதவி செய்தவர்கள், மன்னர் ஆய்-அரசர்களாய், கொடுத்து-(தம்மை அடுத்து ஏற்போர்க்கு வேண்டியவற்றைக்) கொடுத்து, கலந்து - (சுற்றத்தார், நட்பினர் முதலானோருடன்) கூடி, வாழ்வார் - (இன்புற்று) வாழ்வார்கள், எ - று.

(வி - ரை.) புலை - தாழ்வு, ஆளர் - அதனை ஆளுதல் உடையவர்கள். போக்கில் நிலையாளர் - தேசசஞ்சாரஞ் செய்தலின் நிலையாயிருத்தலை ஆளுதல் உடையவர்கள்; அதாவது எப்பொழுதும் தேசசஞ்சாரஞ் செய்துகொண் டிருப்பவர்கள். தலையாளர்-தலைமையாகிய குணங்களை ஆளுதல் உடையவர்கள்; தலை என்பது ஈண்டு மேன்மையாகிய குணங்களை யுணர்த்தியது இலக்கணை. போக்கில் என்பதில் போக்கு - தொழிற்பெயர், இல் - ஏழனுருபு. ஊண் என்பது உண் என்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர், இஃது அத்தொழிலாகு பெயராய் உண்ணும் பொருளை யுணர்த்தியது. ஊற்று என்பது ஊறு என்னும் முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; இதுவும் அவ்வாகுபெயராய்க் கிணறு முதலியவற்றில் ஊறும் நீரை யுணர்த்தியது; ஊறுதல் - சுரத்தல்; இது பொருளாகுபெயராய் அஃது உலகத்துப் பிராணிகளுக்கு ஆதரவாயிருக்கும் அதன் தன்மையை உணர்த்தியது என்க. இங்ஙனமன்றி, ஊற்றாய் உதவி என இயைத்து ஊற்றுநீரைப் போல உதவிசெய்து என்றுரைத்தலுமாம். இப்பொருளில் ஆய் என்பது உவமஉருபு. தலையாளர்க்கு என்பதிலுள்ள நான்கனுருபைப் புலையாளர் முதலிய முன்னுள்ள ஐந்தனோடுங் கூட்டுக. காண்-முன்னிலையசை. (௮௦)

நூல் முற்றிற்று.

# சிறப்புப்பாயிரம்.

82. இல்லறநூ லேற்ற துறவறநூ லேயுங்கால்
சொல்லறநூல் சோர்வின்றித் தொக்குரைத்து—நல்ல
அணிமேகலை யாய்நல்ல வீட்டு நெறியுங்
கணிமேதை செய்தான் கலந்து.

(ப-ரை.) நல்ல - சிறந்த, அணிமேதையாய்-அழகாகிய அறிவை யுடையாளே! கணிமேதை - கணிமேதை என்னும் புலவர், இல் அற நூல் - இல்லறநூலும், ஏற்ற-(ஞானமடைதற்கு) உரிய, துறவு அற நூல் - துறவறநூலும் ஆகிய, சொல் - (உயர்ந்தோனாகிய கடவுளாற்) சொல்லப்பட்ட, அறநூல் - இருவகை அறநூலின் பொருள்களை யும், சோர்வு இன்றி-தளர்ச்சியில்லாமல், தொக்கு உரைத்து-தொகுத் துக் கூறி, ஏயுங்கால் - ஏற்றவிடத்தில், வீட்டு நெறியும் - முத்தி யுலகுக்குரிய (முத்தியுலகை யடைதற்குரிய) ஞானமாகிய வழியை யும், கலந்து - உடன்கூட்டி, செய்தான் - இந்நூலை யியற்றியருளி னார், எ - று.

(வி - ரை.) சொல்லப்படு என்னும் செயப்பாட்டு வினைப்பொ ருளதாகிய சொல் என்பது அறம் என்பதோடு கூடி வினைத்தொகை நிலைத்தொடராயிற்று. மூன்றுருவது அறநூல் என்பது அறநூலால் உணர்த்தப்படும் அறமாகிய பொருள்களை யுணர்த்தலின் கருவியாகு பெயர். ஏயுங்கால் - தெரிநிலைப் பெயரெச்சத்தொடர். சோர்வு - தொழிற்பெயர்; இதில் வு - விகுதி. இன்றி - எதிர்மறைக் குறிப்பு வினையெச்சம். ஞானமாகிய வழி ஞானமார்க்கம் எனப்படும். கணி மேதை - யாவருங் கணிக்கும் மேதையையுடையவர்; இது வினைத் தொகைப்புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர்.

கணித்தல் – மேலாக மதித்தல். மேதை - அறிவு. அணிமேதை என்பது அழகாகிய அறிவினையுடையான் என்றாதலின்பண்புத்தொகைப் புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர்; அன்றி (அழகு செய்யும்) அறிவினையுடையவள் எனக் கொள்ளின் இதுவும் வினைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைப் பெயரேயா மென்க. வீட்டுநெறி-நான்கனுருபும் பயனு முடன்றொக்க தொகை நிலைத்தொடர். இச் சிறப்புப்பாயிரச் செய்யுளால் இந்நூலின்கண் அறம்பொருளின்பம் வீடு என்னும் நான்கு பொருள்களுள் அறத்தின் பகுதிகளாகிய இல்லறம், துறவறம் என்னும் இரண்டும், வீடடைதற்குரிய ஞானநெறியும் கூறப்பட்டுள்ளனவென்பது நன்கு போதரும். இப்பாயிரத்தில் 'கணிமேதை' என்றதனால் ஆக்கியோன் பெயரும், 'சொல்லறநூல் தொகுத்துரைத்து' என்றதனால் வழியும், யாப்பும், 'இல்லறநூல் ஏற்ற துறவறநூல் சொல்லறநூல் தொகுத்துரைத்து' என்றதனாலும், 'வீட்டுநெறியுங் கலந்து' என்றதனாலும், நுதலிய பொருளும், வெளிப்படையாகக் கூறப்பட்டன. சிறப்புப்பாயிரத்திற்குரிய பொருள்கள் பதினொன்றனுள் ஈண்டு வெளிப்படையாகக் கூறப்பட்டன போக மற்றவற்றுள் இதிற் குறிப்பாகக் கொள்ளத்தக்கன கொள்க. (அஉ)

சிறப்புப்பாயிரத்திற்குரிய பொருள்கள் பதினொன்றாவன:— ஆக்கியோன் பெயரும், வழியும், எல்லையும், நூற்பெயரும், யாப்பும், நுதலிய பொருளும், கேட்போரும், பயனும், காலமும், களனும், காரணமும் ஆம்.

சிறப்புப்பாயிரம்

| | அ. | ப. |
|---|---|---|
| உவமானசங்கிரகம் உரை | 4 | 0 |
| சங்கீதத்தின் சரித்திரம் ... | 4 | 0 |
| அஷ்டோத்தர சதநாமாவளி | 1 | 6 |
| பிரச்னோத்தர ரத்நமாலிகை | 2 | 0 |
| சாங்கிரஸ் மகாசபை ... | 4 | 0 |
| அறப்பளீசுர சதகம் ... | 2 | 0 |
| குமரேச சதகம் ... | 2 | 0 |
| திருவேங்கட சதகம் ... | 2 | 0 |
| தண்டலையார் சதகம் ... | 1 | 0 |
| கோவிந்த சதகம் ... | 0 | 9 |
| எம்பிரான் சதகம் ... | 1 | 0 |
| சிவசங்கர சதகம் ... | 0 | 9 |
| ஜெயங்கொண்டார் சதகம் | 2 | 0 |
| அவையாம்பிகை சதகம் ... | 2 | 0 |
| கைலாசநாதர் சதகம் ... | 2 | 0 |
| குருநாத சதகம் ... | 1 | 0 |
| அண்ணாமலைச்சதகம் ... | 2 | 0 |
| தொண்டைமண்டல சதகம் | 2 | 0 |
| சௌந்தரியலகரி உரை ... | 6 | 0 |
| ஒருதுறைக்கோவை ... | 4 | 0 |
| சீகாளத்திக்கலம்பகம் ... | 2 | 0 |
| யாப்பிலக்கண வினாவிடை | 2 | 0 |
| அணியிலக்கண வசனம் ... | 4 | 0 |
| வச்சணந்திமாலை உரை ... | 2 | 0 |
| குடாரம் ... ... | 1 | 0 |
| ஔவைகுறள் ... | 2 | 0 |
| சிவபூஜைத்திரட்டு ... | 2 | 0 |
| அம்மணியம், யோகசாமியம் | 8 | 0 |
| ஜாதிபேத விளக்கம் ... | 2 | 0 |
| விஷப்பிரதி விஷத்திரட்டு | 2 | 0 |
| சைவசித்தாந்த வரலாறு ... | 4 | 0 |
| ஸ்ரீ பர்த்ருஹரி வைராக்கிய சதகம் ... ... | 3 | 0 |

| | அ. | ப. |
|---|---|---|
| நன்னூல் மூலம் ... | 2 | 0 |
| திருக்குறள் மூலம் ... | 4 | 0 |
| வேதாந்தசூளாமணி மூலம் | 2 | 0 |
| கைவல்யநவநீத மூலம் ... | 2 | 0 |
| உபாசனார்த்த தீபிகை ... | 0 | 6 |
| ஏகாந்தச்சவை ... | 1 | 0 |
| மருமூலைநகண்ட வாசகம் | 4 | 0 |
| மஹாதேவமாலை ... | 1 | 0 |
| சிவானந்தமாலை ... | 4 | 0 |
| டிஸ்கவுண்டிமாலை ... | 1 | 0 |
| இன்னாநாற்பது உரை ... | 1 | 6 |
| இனியநாற்பது உரை ... | 1 | 6 |
| சிறுபஞ்சமூலம் உரை ... | 4 | 0 |
| நான்மணிக்கடிகை உரை | 5 | 0 |
| முதுமொழிக்காஞ்சி உரை | 2 | 6 |
| களவழிநாற்பது உரை ... | 2 | 0 |
| காகாஜீவாதக்கட்டளை ... | 1 | 0 |
| பிரகலாத சரித்திரம் ... | 4 | 0 |
| அஷ்டப்பிரபந்த மூலம் ... | 8 | 0 |
| பாரதநீதி ... ... | 2 | 0 |
| ஓங்காரத்தின் மகத்துவம் | 1 | 0 |
| அஷ்டாக்ஷர மகத்துவம் ... | 1 | 0 |
| ஆரியர் சந்தியாவந்தனம் ... | 1 | 0 |
| சைவதூஷணை பரிகாரம் | 4 | 0 |
| கீதாசாரத்தாலாட்டு ... | 1 | 0 |
| பட்டணத்தார்பாடல்(சிறிது | 1 | 0 |
| பத்திரகிரியார் புலம்பல் ... | 1 | 6 |
| ஸ்தலயாத்திரை பொதுவிதி | 6 | 0 |
| மீனாக்ஷியம்மை பிள்ளைத்தமிழ் | 2 | 0 |
| நீதிநூற் கொத்து: மூலமும் உரையும் ... ... | 6 | 0 |
| நீதிநூற்றிரட்டு மூலமும் இங்கிலீஷ்மொழிபெயர்ப்பும் | 8 | 0 |

ஸ்ரீ

விளம்பிநாகனார் செய்த

# நான்மணிக்கடிகை,

மகாவித்துவான்

கோ. இராஜகோபாலப்பிள்ளையவர்கள்

இயற்றிய

## உரையுடன்.

---

இது

சென்னைப் பச்சையப்பன் காலேஜ்

தமிழ்ப்பண்டிதர்

கா. ர. கோவிந்தராஜ முதலியாரால்

பார்வையிடப்பெற்று,

சென்னை:

மதராஸ் ரிப்பன் அச்சியந்திரசாலையில்

பதிப்பிக்கப்பட்டது.

---

1914

விலை அணா 5.

[Copyright Registered]

ஸ்ரீ

# முகவுரை.

இவ்வுரையாசிரியராகிய மகாவித்துவான் கோமளபுரம் இராஜகோபாலப்பிள்ளையவர்களின் உரையில், மாணவர்கள் நன்னூல் முதலிய இலக்கணங்களிற் பலநாள் வருந்தி யன்றி யறிதற்கரிய பல அரிய இலக்கண நுட்பங்கள் இருத்தலின், அவர்தம் உரைப்புத்தகங்களை வெளியிடவேண்டும் என்றெழுந்த எனது வேட்கை பெரிதும் சித்திபெறுவதாயிற்று. அவர்தம் உரைப்புத்தகங்களில் என்னால் வெளிவரச் செய்விக்கப்பட்டவை இதனோடு நான்காகும். அவை, நீதிநெறிவிளக்கவுரை, திரிகடுகவுரை, நளவெண்பாவுரை, இந் நான்மணிக்கடிகை யுரையாம்.

இந் நான்மணிக்கடிகையின் "அலைப்பான் பிறவுயிரை" என்னும் இருபத்தாறாவது செய்யுளுக்கு இவ்வுரையாசிரியராகிய பிள்ளையவர்களின் உரை கிடைக்கவில்லை. ஆகையால், அதற்கு மாத்திரம் யான் உரை யெழுதினேன். அச் செய்யுளில் "அலைப்பான் பிறவுயிரை" என்பதைப் பாடமாகவும், 'பிறிதுயிரை' என்பதைப் பாடபேதமாகவும் கொண்டு உரை எழுதப்பட்டிருத்தலின், அதிற் 'பிறிதுயிரை' என்றிருப்பதைப் 'பிறவுயிரை' என்று திருத்திக்கொள்ளுதல் வேண்டும். பிறிதுயிரை என்பதற்கு விசேஷவுரையில் உரையும் இலக்கணமும் எழுதப்பட்டிருக்கின்றன. இவ்வுரையாசிரியராகிய ஷை பிள்ளையவர்களால் எழுதப்பெற்ற இந் நூலாசிரியர் சரித்திரம் இதன் பின்னாற் சேர்க்கப்பட்டிருக்கிறது.

ஸ்ரீ கா. ர. கோ.

# இந்நூலாசிரியர் சரித்திரம்.

நான்மணிக்கடிகையென்னும் நூல் விளம்பிநாகனார் என்னும் புலவர்திலகரால் அருளிச்செய்யப்பட்டது. இவர் இன்ன வருணத்தா ரென்பதும், இன்ன வூரின ரென்பதும் விளங்காவாயினும் காப்புச் செய்யுளை நோக்குகையில் வைணவ ரென்பது விளங்குகின்றது. இந்நூலுக்குப் பழைய வுரை யொன்றுளது. அதனை நச்சினார்க்கினியார் செய்த வுரை எனக் கூறுவாருமுளர். அவ்வுரையோ கருத்து, சொல் வகை, விசேடமுதலிய உடையதல்லாமையால், அவர் செய்த தன்றென நன்கு விளங்குகின்றது.

இந்நூல் கடைச்சங்க மருவியநூல். சங்கம்: முதற்சங்கம், இடைச்சங்கம், கடைச்சங்கமென மூன்று. அகத்தியம் முதற்சங்கத்தார் காலத்துக்கு முற்படச் செய்யப்பட்டது. தொல்காப்பியம் இடைச்சங்கத்தார் காலத்துச் செய்யப்பட்டது. முதற்சங்கப்புலவர் நாலாயிரத்துநானூற்று நாற்பத்தொன்பதின்மர்; இடைச்சங்கப்புலவர் நானூற்றுநாற்பத்தொன்பதின்பர் என்பதை:—

"நூலாநா லாயிர நானூற்று நாற்பத்தொன்பான்
பாலாநா னூற்று நாற்பத்தொன்பான்—மேலாநாற்
பத்தொன்பான் சங்கமரு பத்தூநா லாடலுக்கும்
கத்தன் மதுரையிற் சொக்கன்."

என்பதனு லுணர்க.

ஸ்ரீ

## நான்மணிக்கடிகையின்

# செய்யுள் முதற்குறிப்பகராதி.


| செய்யுள். | பக்கம். |
|---|---|
| அ | |
| அஞ்சாமை | 33 |
| அந்தணரி | 43 |
| அலைப்பான் | 34 |
| ஆ | |
| ஆசாரமென்பது | 109 |
| இ | |
| இரும்பினிரும் | 44 |
| இரைசுடு | 60 |
| இளமைப் | 107 |
| இனிதுண்பா | 70 |
| இன்சொலா | 121 |
| இன்னாமை | 21 |
| ஈ | |
| ஈத்துண்பா | 71 |
| ஊ | |
| ஊர்ந்தான் | 84 |
| ஊழியுமான் | 85 |
| ஊனுண்டு | 78 |
| எ | |
| எண்ணொக்குஞ் | 116 |
| எருதுடையான் | 63 |
| எல்லாவிடத் | 108 |
| எள்ளற்க | 6 |
| எள்ளற்பொருள | 61 |
| என்றுமுள | 69 |
| ஏ | |
| ஏதிலாரென்பா | 53 |
| ஏரிசிறிதாயி | 117 |
| ஒ | |
| ஒருவனறி | 119 |
| ஒன்றாக்கல் | 99 |
| க | |
| கடற்குட்டம் | 22 |
| கண்டதே | 49 |
| கண்ணிற் | 65 |
| கண்ணுள்ளுக் | 75 |
| கந்திற்பிணி | 1[illegible] |
| கரப்பவர் | 48 |
| கல்லா | 97 |
| கல்லிற்பிறக் | 10 |
| கள்வமென்பார் | 12 |
| கள்ளாமை | 100 |
| கள்ளிவயிற்றி | 9 |
| கள்ளினிடும் | 110 |
| கற்பக்கழி | 37 |
| கற்றூன்றளரி | 86 |
| கற்றன்னர் | 67 |
| கற்றார்முற் | 13 |
| கன்றாமை | 16 |
| கு | |
| குழித்துழி | 88 |
| கை | |
| கைத்திலார் | 80 |
| கைத்துடை | 77 |
| கொ | |
| கொடுப்பி | 94 |
| கோ | |
| கோனோக்கி | 85 |
| சா | |
| சாவாத | 91 |
| சி | |
| சிறந்தார் | 59 |
| சொ | |
| சொல்லா | 92 |
| தி | |
| திரியழல் | 76 |
| திருவொக்கும் | 11 |
| திருவிற்றிற | 39 |
| திருவுந்திணை | 50 |
| தூ | |
| தூர்ந்தழியும் | 69 |

| செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். | செய்யுள். | பக்கம். |
|---|---|---|---|---|---|
| தே | | பறைநன்று | 19 | மழையின்றி | 57 |
| தேவரனையர் | 88 | பறைபட | 7 | மறக்களி | 45 |
| ந | | பி | | மறையறிப | 104 |
| நகைநல | 32 | பிணியன்னர் | 41 | மனைக்காக்க | 25 |
| நகையினிது | 47 | பிறக்குங்கா | 51 | மனைக்குப்பாழ் | 27 |
| நல்னுமினமை | 95 | பின்னவாம் | 79 | மனைக்குவிள | 820 |
| நல்லார் | 96 | பு | | மா | |
| நன்றிசா | 55 | புகழ்செய் | 29 | மாசுபடினு | 114 |
| நா | | புகைவித்தா | 40 | மாண்டவர் | 61 |
| நாக்கினறிப | 90 | பெ | | மை | |
| நாவன்றே | 93 | பெருக்குக | 101 | மையாற்ற | 46 |
| நாற்றமுறை | 56 | பெற்றானதிர் | 26 | மொ | |
| நி | | பொ | | மொய்சிதை | 28 |
| நிலத்து | 15 | பொய்த்த | 24 | யா | |
| நீ | | பொறிகெட | 54 | யாறுளடங்கு | 62 |
| நீரான் | 98 | போ | | யானையுடை | 64 |
| நெ | | போதினு | 58 | வ | |
| நெய்விதிர்ப்ப | 72 | போரறின் | 52 | வடுச்சொ | 112 |
| ப | | ம | | வளப்பாத்தி | 20 |
| படையப | 4 | மகனுணர்க்குர் | 81 | வன்கண் | 146 |
| பட்டாங்கே | 105 | மடிமை | 103 | வா | |
| பதிநன்று | 83 | மண்ணியறிப | 8 | வாலிழையார் | 113 |
| பல்வினு | 17 | மதிமன்னு | 3 | வை | |
| பழியின்மை | 73 | மலைப்பினும் | 30 | வைதசனை | 118 |


நான்மணிக்கடிகையின் செய்யுள் முதற்குறிப்பகராதி

முற்றிற்று.

ஸ்ரீ

# நான்மணிக்கடிகை

## மூலமும் உரையும்.

நான்கென்னும் வரையறைப் பண்புப் பெயரோடு சினைத்தற்கிழமைப் பொருளதாகிய ஆறாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகப் புணர்ந்து, ஒருசொல்லின் தன்மைப்பட்டு நின்ற மணிக்கடிகை என்னும் பெயர் பண்புத்தொகைநிலைத்தொடராகப் புணர, நிலைமொழி யீற்றுயிர்மெய் கெட்டுப் பலசொற்கள் தொக்குநின்ற நான்மணிக்கடிகை என்பது அடியளந்தான், அரவணைச்செல்வன் என்பனபோல ஒருசொல்லின் தன்மைப்பட்டு, இரத்தினத்துண்டம் நான்கினாலமைந்ததோ ரணி எனப் பொருள்பட நிற்றலால் ஆறாம் வேற்றுமைத் தொகைப் புறத்துப்பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயர்; இவ்வணி தன்னை அறிந்து உயர் பொருளாகக்கொண் டணிந்தாருடலை அழகுபெறச் செய்தல்போலச் செய்வனவுந் தவிர்வனவுமாகக் கூறப்படும் பொருள் நான்கினாலமைந்த செய்யுள் தன்னையறிந்து உறுதிப்பொருளாக மேற்கொண்டாருயிரை அழகுபெறச் செய்தலால் அச்செய்யுளுக்கு உவமையாகுபெயராய், அச்செய்யுளின்பெயர் அது பலதொக்க தொகையாகிய நூலுக்குச் சினையாகுபெயராய் நின்றது. அச்செய்யுள் பலவற்றால்

அமைக்கப்பட்டது நூலாதலால் கருவியாகுபெயரெனினும் ஒக்கும்.

அடியளந்தான் அரவணைச்செல்வன் என்பன அடியளந்தானை, அரவணைச்செல்வனை என உருபேற்றலும், அடியளந்தான் பெரியோன், அரவணைச்செல்வன் உயர்ந்தோன் எனப் பயனிலை கொள்ளலும்போல இந் நான்மணிக்கடிகை என்பது அவ்வாறு உருபேற்றலும், பயனிலைகொள்ளலு மில்லாமையால் அப்பெயர்களை உவமையாகக் கொள்ளல் குற்றமன்றோ எனின், தன்பெயர் நான்மணிக்கடிகை என இப்பெயர் பயனிலையாக நின்றாற்போல இறைவன் அடியளந்தான், தனிமுதல்வன், அரவணைச்செல்வன் என அப்பெயர்கள் பயனிலையாக நின்றால் உருபேற்றலும், பயனிலை கொள்ளலும் இல்லையாதலும், இப்பெயர் பயனிலையாகாமல் நின்றபோது, நான்மணிக்கடிகையை முடித்தேன், நான்மணிக்கடிகை முடிந்தது என உருபேற்றலும், பயனிலை கொள்ளலுங் காண்க. நான்மணிக்கடிகை என்பதுபோல அவை பலசொற்கள் தொக்கு ஒருசொல்லின் தன்மைப்பட்டு நின்ற பெயர்களாதலால் உவமையாகக் கொள்ளப்பட்டன என்பதுமறிக. இப்பெற்றியறியாதார் குற்றமெனல் குற்றமென்க. மணிக்குக் கடிகை சினையாவது எவ்வாறெனின், சினைப்பொருளென்பது முதற்பொருளின் ஏகதேசமாதலால் கடிகை மணிக்கு ஏகதேசமா யமைதலின் சினையாமென்க. மரத்தில் கவடு, கோடு, கொம்பு முதலியனபோல மணியில் கடிகை அவ்வாறு தோன்றாமையால் சினையென்றல் பொருந்தாதெனின், அற்றன்று; நையாயிகர் அகண்டகாலம், திக்கு, ஆத்மா,

ஆகாயம், மனம், பரமாணு, அபாவம் இவைபோ நிரவயவப் பொருளெனவும், வேதாந்திகள் ஆத்மா அபாவமென்பனவே நிரவயவப் பொருளெனவும் கொண்டிருக்க, அவற்றின் வேறாய் அவயவியாயுள்ள மணிக்குக் கடிகை அவயவமன்றெனல் பருப்பொருளாராய்ச்சியுடையாரது கூற்றென்க. மணிக் கடிகை யென்பதை மணியாகிய கடிகையென உரைத்துப் பண்புத்தொகைநிலைத்தொட ரென்னலாகாதோ வெனின், மணியினின்றும் வேறுபடுத்திய கடிகைபோலக் குப்பையி னின்றும் வேறுபடுத்திய நெல்லைக் குப்பைநெல்லென்றால் இதனை உறப்புத்தற்கிழமை யென்றுமல் பண்புத்தொகை நிலைத்தொடரென்பதுபோ லுங் குற்றமாம். இதன் திறம் இன்னும் விரிக்கின் விரியுமாதலால் விடுத்தனம்.

## தற்சிறப்புப்பாயிரம்.

### கடவுள்வாழ்த்து.

ஐந்தடியான்வந்த பஃறொடை வெண்பா.

மதிமன்னு மாயவன் வாண்முக மொக்கும்
கதிர்சேர்ந்த ஞாயிறு சக்கர மொக்கும்
முதுநீர்ப் பழனத்துத் தாமரைத் தாளின்
எதிர்மலர் மற்றவன் கண்ணொக்கும் பூவைப்
புதுமலர் ஒக்கு நிறம்.

(இதன் பதப்பொருள்.) மதி - சந்திரனை, மன்னும் - அழியாத, மாயவன் - விசித்திர சக்தியையுடைய இறைவனது, வாள் முகம் ஒக்கும் - விளக்கமாகிய முகம் ஒத்திருக்கும்; கதிர் சேர்ந்த

ஞாயிறு - கிரணங்கள் நிரம்பிய சூரியனை, சக்கரம் ஒக்கும்-அவனது சுதரிசனமென்னும் சக்கரம் ஒத்திருக்கும்; முது நீர் - நிலையாயுள்ள நீரையுடைய, பழனத்து - வயலில்முளைத்த, தாளின்-தாளிலிருந்து, எதிர் - மேலெழுந்த, தாமரைமலர் - தாமரைப்பூவை, அவன் கண் ஒக்கும் - அவனது கண்களொத்திருக்கும்; பூவைப் புது மலர்-காயாவினது புதியமலரை, நிறம் ஒக்கும் - அவனது திருமேனி ஒத்திருக்கும், என்றவாறு.

(வி-ரை.) எல்லா நூலுள்ளும் மங்கலமொழி முதல்வருத்துக் கூறவேண்டுதலால் 'மதி' என்றும், நூற்பெயர்க்கொப்ப, இதனுள் வரும் செய்யுளொவ்வொன்றும் நன்னான்கு பொருளையே கூறுகின்றமைதோன்ற எடுத்துக்கொண்ட நூல் இனிது முடிதற்பொருட்டுச் செய்யும் இக்கடவுள் வாழ்த்திலும் இறைவனுடைய திருமுகமுதலிய நான்கையும் மதிமுதலிய நான்கையும்ஒக்குமென்றுங் கூறினர். விரோதவுவமை யணியாகக்கொண்டு சந்திரன் இறைவனுடைய முகத்தை ஒக்கும், சூரியன் சக்கரத்தை ஒக்கும், தாமரைமலர் கண்களை ஒக்கும், காயாம்பூ நிறத்தை ஒக்குமென உரைப்பினும் பொருந்தும். நீரென்பதற்கு முது என விசேடணந் தந்தமையால் அதற்கு நிலைநீரெனப் பொருள் சொல்லப்பட்டது. தாளின் என்னும் ஐந்தனுருபு நீங்கற்பொருளது. எதிர் என்னும் வினைத்தொகை மலரென்னும் செய்வதன் பெயரைக்கொண்டது. (க)

படையை மடியகத் திட்டா னடியினால்
முக்காற் கடந்தான் முழுநில மக்காலத்
தாபனி தாங்கிய குன்றெடுத்தான் சோவின்
அருமை யழித்த மகன்.

(இ - ள்.) படையை-(அவ்விறைவன் தனது சுதரிசனமென்னும்) ஆயுதத்தை, மடியகத்து - (பாரதப்போரில்) ஒளியின் சிறு

மையில், இட்டான் - வைத்தான்; அடியினால் - தனது சீர்பாதங்களினால், முழு நிலம் - எல்லாவுலகங்களையும், மூக்கால் - மூன்றுமுறை, கடந்தான் - தாவியளந்தான்; அக்காலத்து - இந்திரன் மழை பெய்வித்தகாலத்தில், ஆ பனி - பசுக்களினது நடுக்கத்தை, தாங்கிய - ஏற்றுக் கொள்ள, குன்று எடுத்தான் - கோவர்த்தனகிரியைக் குடையாக எடுத்தான்; சோவின் அருமை - (பாணாசுரனுடைய) நெருப்புமதிலினது அருமையை, அழித்த மகான் - அழியச்செய்த பெரியான், எ-று.

(வி-ரை.) சுதரிசனத்தை ஒளியின் சிறுமையில் வைத்தது - அருச்சுனன் சயிந்தவனைக் கொல்லும்படிச் சூரியனை மறைக்க அப்படையின் ஒளியை நீக்கி ஏவினது. முழுநிலத்தை மூக்காற் கடந்தது - மாபலியினிடத்து மூன்றடிமண் இரந்து, பூமியையும் சுவர்க்கத்தையும் தனதிரண்டு சீர்பாதங்களாலும் அளந்து, மற்றோரடிக்கு அவனைப் பாதாளத்தி லழுத்தியது. குன்றெடுத்தது - ஆயர்பாடியிலுள்ளார் மகர சங்கிராந்தியில் இந்திரனைக் குறித்து இட்டபொங்கலைத் தானேற்றுக் கொண்டமையால், அவன் கோபங்கொண்டு பெய்வித்த மழையைக் கோவர்த்தனத்தால் தடுத்தது. சோவினருமை யழித்தது - உஷாகன்னிகையினிடத்திருந்த அநிருத்தனை மீட்கும்படி சென்றபோது அவள் தந்தையாகிய பாணாசுரன் உருத்திரமூர்த்தி முதலிய பரிவாரங்களோடு எதிர்க்கையில் அவர்கள் யாவரையும் முறியடித்து அவனது அக்கினிக் கோட்டையை அழித்தது 'கோவினருமை யழித்த மகன்' எனப் பாடமாயின், பொருள் - நப்பின்னைப் பிராட்டிக்காக எழு ரிஷபங்களின் அருமையை யழித்த பெரியானென்பது. மகான் என்பது மகனெனக் குறுக்கலாயிற்று. ஆப்பனி - ஆ பனி எனத் தொகைநோக்கிப் பகரந் தொகுத்தலாயிற்று. பனி முதனிலைத் தொழிற்பெயர். 'படியை மடியகத்திட்டான்', 'ஆனிரைதாங்கிய' எனவும் பாடமுண்டு; முறையே 'பூமியை வயிற்றினுள் வைத்தான்' எனவும், 'பசுக்கூட்டத்தைத் தாங்கும்படி' எனவும் உரைக்க. படியென்றாயினும்

"ஒருமொழி யொழிதன் இனங்கொளற் குரித்தே" என்பதனால் மற்ற வுலகங்களையுங் கொள்க. மடி-தொழிலடியாகப் பிறந்தபெயர்; மடி - பகுதி, இ-வினைமுதற்பொருண்மைவிகுதி, உகரக்கேடு சந்தி; மடுத்தல்-உண்ணல்; அதாவது தன்னிலடக்கலென்பது. (உ)

---

## நூல்.

எள்ளற்க வென்று மெளியாரென் றென்பெறினும்
கொள்ளற்க கொள்ளார்கைம் மேலவா—உள்சுடினும்
சீறற்க சிற்றிற் பிறந்தாரைக் கூறற்க
கூறல் லவற்றை விரைந்து.

(இ-ள்.) என்றும்-நட்பாகவருங் காலத்திலும், எளியார்என்று-(வலிமுதலியன) குறைந்தவரென்று, எள்ளற்க-(பகைவரை ஒருவன்) இகழாதிருக்கக்கடவன்; என் பெறினும் - சிறந்தபொருளைப் பெறுவதாயிருந்தாலும், கொள்ளார் கை-கொள்ளத்தகாதவருடைய கைகள், மேல ஆ (தன்கைகளுக்கு) மேற்பட்டன ஆகும்படி, கொள்ளற்க-(அப்பொருளை) இரவாதிருக்கக்கடவன்; உள் சுடினும்-(வறிய குடியிற்பிறந்தார் செய்கை) மனத்தை வருத்தினும், சிறு இல் பிறந்தாரை-அவ்வறியகுடியிற் பிறந்தவரை, சீறற்க-சீறாதிருக்கக்கடவன்; கூறு அல்லவற்றை-சொல்லத்தகாத சொற்களை, விரைந்து கூறற்க-(சொல்வதில்) விரைந்து சொல்லாதிருக்கக்கடவன், எ-று.

(வி-ரை.) பகைவரை இகழ்தலாவது தீங்குசெய்யாரெனத் தேறி மகிழ்தல். என்று-வினையடியாகப்பிறந்த காலப்பெயர்; எ-பகுதி, று-காலப்பொருண்மைவிகுதி, றகரம் சந்தி, அது னகரமானது மெலித்தல் விகாரம். உம்மை முற்றுப்பொருளதாதலால் எகரவினா எஞ்சாமைப்பொருளது. என் என்பது எவனென்பதன் மரூஉ அன்று; இஃதோர் வினைப்பெயர்; இதனொடு பெறினென்பது இரண்டாம்

வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகப் புணர்ந்தது; "என்னுனும்" "என்னுக்கு" என மூன்ருவதனுருபும், நான்காவதனுருபும் ஏற்று வருதலுங் காண்க. பெறினுமென்ற உம்மை உயர்வுசிறப்பு. சிற்றில் என்பதில் சிறுமை வறுமைக்காயிற்று. சொல்லத்தகாத சொற்கள்- பொய், குறளை, வன்சொல், பயனிலாச்சொல். எள்ளற்க-எதிர்மறை வியங்கோள்வினை; எள்-பகுதி, ள்-சந்தி, அல்-எதிர்மறைவிகுதி, அனைத்துமொருபகுதி, க வியங்கோள்விகுதி, லகரம் றகரமானது சந்தி. (௬)

பறைபட வாழா வசுணமா வுள்ளம்
குறைபட வாழார் பெரியோர்—நிறைவனத்து
நெற்பட்டக் கண்ணே வெதிர்சாந் தனக்கொவ்வாச்
சொற்பட வாழாதாஞ் சால்பு.

(இ-ள்) அசுணமா - கேகயப்பறவைகள், பறை பட - பறையி ஞெலி (செவியில்) பட்டால், வாழா-உயிர்வாழா; பெரியோர்-மிக்க மானமுடையோர், உள்ளம் குறைபட-(மானக்கேட்டால்) தமது ஊக்கம் சுருங்கும்படி, வாழார்-உயிர்வாழார்; நிறை வனத்து - (மரங்கள்) அடர்ந்தவனத்தில், வெதிர் - மூங்கில், நெற்பட்டக்கண்ணே - நெல் லுண்டானபோதே, சாம்-அழியும்; சால்பு - (பலநற்குணங்களாலும்) நிறைந்தவன், தனக்கு ஒவ்வாத-தன்னிறைவுக்குத்தகாத, சொல்பட வாழாது - சொல்லுண்டாக உயிர்வாழான், எ-று.

(வி-ரை) அசுணமாவையும், வெதிரையும் பெரியாரோடும், சால்புடையானோடும்வைத்து உடனெண்ணியபடியால் இதுபுகழொப் புமைக் கூட்டமென்னும் அணி. முதல்வாக்கியத்தி னிறுதியிலும், மூன்றும் வாக்கியத்தி னிறுதியிலும் அதுபோல என்னுஞ் சொற் களை இசையெச்சமாகக்கொண்டு பொருளுரைக்கின் அவ்விரண்டும் முக்கிய வாக்கியங்களாகாமல் உவமவாக்கியங்க ளாகல்வேண்டும்;

ஆகவே இச்செய்யுள் நான்குபொருளைக் கூறவந்ததாகாமல் மூற்பெய ரோடு மூரண இரண்டு பொருளைக் கூறியதாகு மாதலால் குற்ற மென்க. உள்ளம் - ஊக்கம். பட்டக்கண்-இறந்தகால வினையெச்சம்; படு-பகுதி, கண்-இறந்தகால வினையெச்சவிகுதி, அ-சாரியை, பகுதி முற்றியலுகர மாதலால் டகரம் இரட்டியது விரித்தல் விகாரம், ககரக்கேடும் ககரத்தோற்றமும் சந்தி. வாழாதென்னும் பொருளின் தொழில் சால்பென்னும் அப்பொருளின் பண்பின்மே லேற்றப்பட் டது. ஏ - தேற்றம். ஒவ்வாத என்பது ஒவ்வா என ஈறு தொகுத்த லாய் நின்றது; ஒ - பகுதி (இடைச்சொல்), ஆ - எதிர்மறைவிகுதி, உடம்படு மெய்யாகிய வகரமும், தனிக்குறின் முன்னொற்றாகிய வக ரம் இரட்டிய வகரமும் சந்தி, அனைத்துமொருபகுதி, த்-விரித்தல் விகாரம், அ-பெயரெச்சவிகுதி. 'குறைபட வாழாருரவோர்'எனவும், 'சொற்பட்டாற் சாவதாஞ் சால்பு' எனவும் பாடமுண்டு. உரவோர் - அறிவுடையோர். (உ)

மண்ணி யறிப மணிநலம் பண்ணமைத்
தேறிய பின்னறிப மாநல மாசறச்
சுட்டறிப பொன்னி னலங்காண்பார் கெட்டறிப
கேளிரா லாய பயன்.

(இ-ள்.) மணி நலம் (காண்பார்)-இரத்தினத்தினது குணத்தை அறியு மியல்பினர், மண்ணி அறிப - கழுவி அறிவார்கள்; மா நலம் (காண்பார்)-குதிரையினது குணத்தை அறியு மியல்பினர், பண் அமை த்து - சேணத்தை (அதன்மேல்) பொருந்தவைத்து, ஏறியபின் - ஏறினபின், அறிப - அறிவார்கள்; பொன்னின் நலம் காண்பார் - பொன்னினது குணத்தை அறியு மியல்பினர், மாசு அற - குற்றம் நீங் கும்படி, சுட்டு அறிப - தீயிற்சுட்டு அறிவார்கள்; கேளிரால்-உறவின ரால், ஆய பயன் (காண்பார்) - உண்டாகும் பயனை அறியும் இயல்பி னர், கெட்டு அறிப - (தமது செல்வம்) கெட அறிவார்கள், எ-று.

(வி-ரை.) காண்பாரென்னும் வினையாலணையும் பெயரை முன்னும் பின்னுங் கூட்டுக; இது இடைநிலைப்பொருட்டீவகவணி; இச்சொல்லில் பகரம் தன்மையை யுணர்த்தியது; இவ்வாறன்றி நிகழ்காலம் இயல்பினுல் எதிர்காலமாகவந்த காலவழுவமைதி யெனினும் ஒக்கும். அறிப - பல்லோர் படர்க்கை எதிர்கால வினைமுற்று; இதில் பல்லோர்படர்க்கை எதிர்காலத்தை உணர்த்தியது விகுதியாகிய பகரமாம். ஆய என்பது செல்வங்கெட்டகாலத்துக் கேளிரால் ஆகும்பயன் தோன்றியே விடுமென்னுந் துணிவுபற்றி எதிர்காலம் இறந்தகாலமாகவந்த காலவழுவமைதி. பண்ணமைத் தென்றதனுல் மா குதிரைக் காயிற்று. பொன்னுக்கு மாசாவது வெள்ளிமுதலிய உலோகத்தோடு கலந்த குற்றம். கேளிர் - பண்படியாகப்பிறந்த பல்லோர்படர்க்கைப் பெயர்; கேள்-பகுதி, இல்-பல்லோர்படர்க்கைவிகுதி. கெட்டு - கெட என்பதன் திரிபு. பயன்-குறிலிணை மகரவீற்று மொழியாதலால் மகரத்துக்கு னகரம் போலியாக வந்தது. (ஒ)

கள்ளி வயிற்றி னகில்பிறக்கு மான்வயிற்றின்
ஒள்ளரி தாரம் பிறக்கும் பெருங்கடலுள்
பல்விலைய முத்தம் பிறக்கு மறிவார்யார்
நல்லாள் பிறக்குங் குடி.

(இ-ள்.) அகில் - அகிற்கட்டை, கள்ளி வயிற்றின் பிறக்கும் - கள்ளிமரத்தினுள்ளே பிறக்கும்; ஒள் அரிதாரம் - ஒண்மையாகிய அரிதாரம், மான் வயிற்றின் பிறக்கும் - மான் வயிற்றிற் பிறக்கும்; பல் விலைய முத்தம் - மிக்க விலையுள்ள முத்துகள், பெருங்கடலுள் பிறக்கும் - பெருமையாகிய கடலிற் பிறக்கும்; நல் ஆள் - நற்குண நற்செய்கைகளை ஆளுதலுடையான், பிறக்கும் குடி - பிறக்குங் குடியை, அறிவார் யார்-முன் அறியவல்லவர் யாவர் ஒருவருமிலர், எ-று.

(வி-ரை.) அகில் பிறக்கும், நல்லான் பிறக்கும் என்பன எழுவாய்த் தொகாநிலைத்தொடர்களாதலால் நிலைமொழியீற்று மெய்கள்

இயல்பாயின. அகில் வேறு மரமாயினும் முதிர்ந்த கள்ளியினுள்ளீடு அகிற்கட்டைபோல மணமுடையதாதலால் அதனை 'அகில்' என்றார். இதனைப் "பேய்பிளக்கொதுக்க நின்றுலர் பெருங்கள்ளியின், தாய்பிளந்துக்க காரகில்களும்" எனுங் கம்பநாடர் செய்யுளாலு முணர்க. கள்ளி என்றது சதுரக்கள்ளியை; அதனுள்ளிடத்தை வயிறென்றது இலக்கணை. பல் விலைய என்பதில் பல் என்பது குடத்துள்ள நீரைச் சிறிதென்னாமல் சிலவென்பதுபோல மிக்கதென்னும் பொருள்பட வந்ததாதலால் வழக்கென்க. விலைய - பொருளடியாகப் பிறந்த குறிப்புப்பெயரெச்சம்; வில் - பகுதி, ஐ - தொழிற்பெயர் விகுதி, இது பொருளுக்குத் தொழிலாகுபெயராய் நின்றது, இதுவே பகுதி, ய்-சந்தி, அ-பெயரெச்சவிகுதி. ஆள் - தொழிலாகுபெயர்; நற்றுணை நற்செய்கையுடையானை நல்லாளென்றது ஓர் குறிப்பு. யார்-யாவரென்பதன் மரூஉ; "யாஅருலகத்தோர் சொல்லில்லார்" என்பதுபோல இது இலரென்னும் பொருளில் வந்தது. (௪)

> கல்லிற் பிறக்குங் கதிர்மணி காதலி
> சொல்லிற் பிறக்கு முயர்மதம்—மெல்லென்
> றருளிற் பிறக்கு மறநெறி யெல்லாம்
> பொருளிற் பிறந்து விடும்.

(இ-ள்.) கதிர் மணி - கிரணங்களையுடைய இரத்தினம், கல்லில் பிறக்கும் - மலையில் பிறக்கும்; உயர் மதம் - மிக்க காமமயக்கம், காதலி - விரும்பப்பட்ட நாயகியினது, சொல்லில் பிறக்கும் - இன்சொல்லிலே பிறக்கும்; அற நெறி - அறம் நடக்கும் வழி, மெல் என்ற - மென்மையான, அருளில் பிறக்கும் - கருணையில் பிறக்கும்; எல்லாம் - (அறமுதலிய) எல்லாம், பொருளில் பிறந்துவிடும் - செல்வப்பொருளில் பிறந்துவிடும், எ-று.

(வி-ரை.) அறமுதலிய ஆவன அறமும், இன்பமும், கருதியது முடித்தலும், மதிப்பும், புகழுமென்பன. கல் - கருவியாகுபெயர்.

மெல்லென்ற - இடைச்சொலடியாகப் பிறந்த இறந்தகாலப்பெயரெச்சம்; மெல்லென்-பகுதி, ற்-இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்சவிகுதி; இது ஈறுதொகுத்தலாயிற்று; இது பெயர்முதலிய சொற்களை அடுத்தேவரும். பிறந்துவிடும் - எதிர்காலச் செய்யுமென்முற்று; பிற-பகுதி, த்-சந்தி, து-சாரியை, விடு-துணிவுப்பொருண்மைவிகுதி, அனைத்து மொருபகுதி, உம் - எதிர்கால முற்றுப்பொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி. (கூ)

திருவொக்குந் தீதி லொழுக்கம் பெரிய
அறனொக்கு மாற்றி னொழுகல்—பிறனைக்
கொலையொக்குங் கொண்டுகண் மாறல் புலையொக்கும்
போற்றாதார் முன்னர்ச் செலவு.

(இ - ள்.) தீது இல் ஒழுக்கம் - (ஒருவர் தம் வருணத்துக்குக்) குற்றம் உண்டாகாத ஒழுக்கம், திரு ஒக்கும் - செல்வத்தை ஒக்கும்; ஆற்றின் - இல்லறவழியில், ஒழுகல் - (தவறாமல்) நடத்தல், பெரிய அறன் ஒக்கும் - சிறந்த துறவறத்தை ஒக்கும்; பிறனைக் கொண்டு - (ஆராயாமல்) பிறனொருவனை நட்புக்கொண்டு, கண்மாறல் - புறங் கூறல், கொலை ஒக்கும் - கொலையை ஒக்கும்; போற்றாதார் முன்னர் செலவு - (ஒரு பயன் பெறவேண்டிப்) பகைவரிடத்துச் செல்லுதல், புலை ஒக்கும் - (கீழானோரது) இழிதன்மையை ஒக்கும், எ-று.

(வி-ரை.) துறவறம் உடம்பினிடத்தும் செல்வத்தினிடத்தும் முள்ள பற்றை விடுவதாதலால் அதனருமை நோக்கி அதனைப் 'பெரிய அறன்' என்றார். கண்மாறல்-நான்காம் வேற்றுமைத்தொகை நிலைத்தொடர்; விரிந்தால் கண்ணுக்கு மாறலென விரியும்; பொருள்-ஒருவனுக்கு எதிரில் இன்சொற் கூறிப் புறத்தில் அதற்கு மாறாகக் குற்றங் கூறல். புலை-பண்புப்பெயர்; புல்-பகுதி, ஐ-பகுதிப்பொருள் விகுதி; இவ்விகுதியை வெள்ளை, தொல்லை என்பவற்றிலுங் காண்க.

முன்னர்-பண்புப்பெயர்; முன்-பகுதி, அர் - பகுதிப்பொருள் விகுதி, னகரம் னகரமானது சந்தி; ஐ விகுதி ஏற்று முன்னை எனவும், அம் விகுதி ஏற்று முன்னம் எனவும், பு விகுதி ஏற்று முன்பு எனவும் வரும். பின்னென்பதும் ஐ விகுதி ஒழிந்த மற்ற விகுதிகளை ஏற்று வரும்; இம் முன்னரென்பது பண்புப்பொருளொழிந்து ஏழாவதனிடப்பொருளாக வந்தது. போற்றுதார் - பல்லோர்படர்க்கை எதிர்மறை வினையாலணையும் பெயர்; போற்று-பகுதி, (பொருள்-வணங்கல்), ஆ-எதிர்மறை விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்துமொருபகுதி, த் - எழுத்துப்பேறு, ஆர் - பல்லோர் படர்க்கைவிகுதி. தகர எழுத்துப்பேறு அச்சொல் உருபேலாதபோதும் வினையாலணையும் பெயரென்பதற்குச் சிறந்தகுறி என்க. 'பிறனைக் கொலையொக்குங் கொன்றுண்ணுமாற்றல்' எனவும் பாடமுண்டு; பிறனைக் கொன்று - அயலானை வருத்தி, உண்ணும் ஆற்றல் - (அவனிடத்தில் பறித்த பொருளால்) சீவனம் பண்ணுகின்ற வல்லமை, கொலை ஒக்கும்-(அவனைக்) கொல்லுதலை ஒக்கும். உண்ணுமென்னும் பெயரெச்சம் ஆற்றலென்னும் கருவிப்பெயர் கொண்டது. (௮)

கள்வமென் பார்க்குந் துயிலில்லை காதலிமாட்
டுள்ளம்வைப் பார்க்குந் துயிலில்லை யொண்பொருள்
செய்வமென் பார்க்குந் துயிலில்லை யப்பொருள்
காப்பார்க்கு மில்லை துயில்.

(இ - ள்.) கள்வம் என்பார்க்கும் - (பிறர் பொருளைக்) களவு செய்வோமென்று சோர்வு பார்ப்பவருக்கும், துயில் இல்லை-நித்திரையில்லை; காதலிமாட்டு - விரும்பப்பட்ட நாயகியினிடத்து, உள்ளம் வைப்பார்க்கும்-உள்ளத்தை (இடைவிடாது) வைப்பவருக்கும், துயில் இல்லை - நித்திரையில்லை; ஒள் பொருள் - ஒள்ளியபொருளை, செய்வம் என்பார்க்கும்-தேடுவோமென்று கருதுவார்க்கும், துயில் இல்லை-நித்திரையில்லை; அப்பொருள் காப்பார்க்கும்-தேடியபொருளைக் (கள்

ளர் கொள்ளாமல்) காப்பவர்க்கும், துயில் இல்லை - நித்திரையில்லை, எ-று.

(வி-ரை.) இந் நால்வருக்குந் துயிலில்லை எனவே அருத்தாபத்தியால் 'கள்ளேமென்பார்க்குந் துயிலுளது காதலிமாட், டுள்ளம் வைப்பார்க்குந் துயிலுள தொண்பொருள், செய்யேமென்பார்க்குந் துயிலுண் டெறுபொருள், காவார்க்கு முண்டு துயில்,' என்று கொள்க. கள்வம்-தன்மைப்பன்மை எதிர்கால வினைமுற்று; இதன் முதனிலையடியாகக் கள்ளல, கட்ட, கட்டு, கட்டான்என வினைவிகற்பம் பிறக்கும் துயில் - முதனிலைத்தொழிற்பெயர்; விகுதிபெறின் துயிலல், துயிலகை, துயில்வு, துயிறல் எனவரும். ஒருவனைப் பலருள்ளும் ஒளியுடையவ னாக்குதலால் 'ஒண்பொருள்' என்றார்; இது பண்புத்தொகைநிலைத்தொடர்; விரிந்தால் ஒண்மையாகிய பொருளென விரியும். இல்லை - ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவாயினும் இங்கு ஒன்றன்பாற் படர்க்கைக் குரியதாய் நின்றது உம்மை நான்கனுள் முதலிலுள்ளது எதிரதுதழீஇய எச்சவும்மை, ஈற்றிலுள்ளது இறந்ததுதழீஇய எச்சவும்மை; இடையே நின்ற இரண்டில் ஒவ்வொன்றும் முன்னின்றதை நோக்க இறந்ததுதழீஇய எச்சவும்மையும், பின்னின்றதை நோக்க எதிரதுதழீஇய எச்சவும்மையுமாம். (எ)

கற்றார்முற் றோன்றா கழிவிரக்கங் காதலித்தொன்
றுற்றார்முற் றோன்றா வுறுமுதல்—தெற்றென
அல்ல புரிந்தார்க் கறந்தோன்றா வெல்லாம்
வெகுண்டார்முற் றோன்றா கெடும்.

(இ-ள்.) கற்றார்முன்-(நூல்களைக்) கற்றறிந்தவரிடத்து, கழிவிரக்கம் - கழிந்தபொருளுக்கு இரங்குதல், தோன்றா - உண்டாகா; காதலித்த ஒன்று - விரும்பப்பட்ட ஒருபொருளை, உற்றார்முன் - தேடத்தொடங்கினாரிடத்து, உறுமுதல் - (அப்பொருள்) கிடையாத

காரணங்கள், தோன்றா - உண்டாகமாட்டா; தெற்றெனை - தெளிய, அல்ல புரிந்தார்க்கு - தீவினைகளை விரும்பிச் செய்தவர்க்கு, அறம் தோன்றா - அறச்செய்கைகள் தோன்றமாட்டா; வெகுண்டார்முன்- கோபித்தவரிடத்து, எல்லாம் - (பிறர்கூறும்) நன்மைகளெல்லாம், தோன்றா கெடும் - தோன்றாதனவாகிக் கெடும், எ-று.

(வி - ரை.) காதலித்த என்னும் பெயரடியாகப் பிறந்த பெய ரெச்சம் ஈறு தொகுத்தலாய் நின்றது. கழிவு - தொழிலாகுபெயர். காரணம் காரியத்தின் முன்புள்ளதாதலால் அதனைப் பண்பாகுபெய ரால் 'முதல்' என்றார். ஒன்று-எண்ணலளவை யாகுபெயர். பின்னே அறமென்றமையால் அல்ல என்னும் பண்படியாகப் பிறந்தபெயர் தீவினைக்காயிற்று; இது குறிப்பு வினைப்பெயருமாம்; பொருள் கழியு முன் பலவகையாலும் உபகார முடைமைபற்றி அப்பலவகையுங் கருதி யிரங்குதலால் இரக்கத்தையும், காதலித்த ஒன்றை அடையா மைக்கு இடையூறுகளாகிய ஏதுக்கள் பலவுண்டாதலால் முதலையும் பலவின்பாலாற் கூறினார். முதல் தோன்றாமையாவது - அடைய வேண்டுமென்னும் அவாவால் அவ்வேதுக்களை நினையாமை. அற மாவது-மனு முதலிய நூல்களில் விதித்தன செய்தலும், விலக்கிய ஒழிதலுமே யாயினும் விலக்கியவற்றை அல்ல என முற்கூறினமை யின் பின்னே அறமென்றது விதித்தனவற்றை எனக் கொள்க. தெற்றெனை அல்ல புரிதல் - அறிந்தும் அல்லவற்றைச் செய்தல். ஈற்றில் உள்ள தோன்றாவினைமுற்று வினையெச்சமானது. 'தோன் றாக் கெடும்' எனப் பாடமாயின் தோன்றாதென்னும் வினையெச்சத் தீறு தொகுத்தலெனக் கொள்க. 'உற்றார்முற் றோன்றா வுறுமது' எனவும், 'உசாவுதல்' எனவும் பாடமுண்டு; அவற்றிற்கு முறையே 'துன்பங்களும், கோபித்து ஊத்துப் பேசுதலும்' எனப் பொரு ளுரைக்க; அவை தோன்றாமையாவது விரும்பினபொருளொன்றைத் தேடத் தொடங்கினவர் துன்பங்களை இன்பங்களாகக் கொள்வர

ரென்பதும், பிறர் செய்யும் அவமதிப்புக்குக் கோபங்கொள்ளா ரென்பதும் கருத்தாகக் கொள்க. (அ)

நிலத்துக் கணியென்ப நெல்லுங் கரும்பும்
குளத்துக் கணியென்ப தாமரை பெண்மை
நலத்துக் கணியென்ப நாணந் தனக்கணிதான்
செல்லு முலகத்த தாம்.

(இ - ள்.) நிலத்துக்கு - மருதநிலத்துக்கு, நெல்லும் கரும்பும் - நெற்பயிரையும் கரும்பின் பயிரையும், அணி என்ப - அழகென்று சொல்லுவர்; குளத்துக்குத் தாமரை-குளத்தினுக்குத் தாமரைமலரை, அணி என்ப - அழகென்று சொல்லுவர்; பெண்மை நலத்துக்கு - பெண்தன்மைக்குரிய கற்பாகிய நன்மைக்கு, நாணம் - நாணமுடைமை, அணி என்ப - அழகென்று சொல்லுவர்; தனக்கு அணி - (அக்கற்புடையாளோடு கூடிய) ஒருவனுக்கு அழகாவது, செல்லும் உலகத்தது என்ப - இனிச் செல்லும் உலகத்துக்குத் துணையாகிய அறமென்று சொல்லுவார், எ-று.

(வி-ரை.) நெல்லுங் கரும்பும் அணி என்றமையால் நிலம் மருதநிலத்துக்காயிற்று. நெல் கரும்பு இரண்டும் காரணவாகுபெயர். தாமரை-சாதியொருமை; அது முதலாகுபெயர். பெண்மை - கட்புலனாகியதோர் அமைதித்தன்மை என்பர் நச்சினார்க்கினியார். பெண்மையை முற்கூறியபடியால் தனக்கென்பது ஆண்மகனுக்காயிற்று. உலகத்தது-இடமடியாகப் பிறந்த குறிப்பு வினைப்பெயர்; உலகம்-பகுதி, அத்து, அ-சாரியை, து - ஒன்றன்படர்க்கை விகுதி, பகுதியீற்று மகரக்கேடும், சாரியை முதலீறுகளிலுள்ள அகர உகரக்கேடும் சந்தி; இது செல்லுமென்ற குறிப்பால் அறத்துக்காயிற்று. அழகைத்தருவனவற்றை அழகென்றது காரணத்தைக் காரியமாகக் கூறுவதோருபசாரவழக்கு. 'தாமரைப்பெண்மை' எனவும், 'நலத்துக் கணியென்ப நாணந் தனக்கணி, தான்செல் லுலகத் தறம்' எனவும் பாடமுண்டு.()

கந்திற் பிணிப்பர் களிற்றைக் கதந்தவிர
மந்திரத் தாற்பிணிப்பர் மாநாகம்—கொந்தி
இரும்பிற் பிணிப்பர் கயத்தைச்சான் றோரை
நயத்திற் பிணித்து விடல்.

(இ-ள்.) களிற்றை - யானையை, கந்தின் பிணிப்பர்-(பாகர்கள்) கட்டுத்தறியினாலே தம் வசப்படுத்துவார்; மா நாகம் - சிறந்த சர்ப்பத்தை, கதம் தவிர - அதன் கோபம் நீங்கும்படி, மந்திரத்தால் பிணிப்பர் - (மாந்திரியர்) மந்திரத்தினால் தம் வசப்படுத்துவார்; கயத்தை - கீழ்மக்களை, கொந்தி - (அரசர் ஆயுதங்களால் அவருடலைக்) கொத்தி, இரும்பின் பிணிப்பர் - இருப்பு விலங்கால் தம் வசப்படுத்துவார்; சான்றோரை - (கல்வி யறிவு ஒழுக்கங்களால்) நிறைந்தவரை, நயத்தின் பிணித்துவிடல் - (அறிவுடையோர்) இன்சொற்களால் தம் வசப்படுத்திவிடக்கடவர், எ-று.

(வி-ரை.) பிணித்தல் - கட்டுதல். இரும்பு-காரணவாகுபெயர். கொந்தி - இறந்தகால வினையெச்சம்; இச்சொல்லைப் பெயர்ச்சொலாகக்கொண்டு கொந்தியிரும் பென்பதனைக் கொந்தியாகிய இருப்பாயுதமெனப் பொருள்பட இருபெயரொட்டுப் பண்புத்தொகை நிலைப் புணர்ச்சியெனக் கொள்ளலுமாம்; கொந்து - பகுதி, இ - கருவிப்பொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி. கயம் - பண்பாகுபெயர்; கயம் - பெருமை; இது கீழ்மக்களுக்கானது வழக்கெனல் நச்சினார்க்கினியார் மதம்; நன்னூலார் மங்கல வழக்கென்பர். ஐந்தனுருபு மூன்றும், மூன்றனுருபொன்றும் கருவிப்பொருளில் வந்தன. 'இரும்பிற் பிணிப்பர் கயவர்ச் சான்றோரை' எனவும் பாடமுண்டு. (௧௦)

கன்றாமை வேண்டுங் கடிய பிறர்செய்த
நன்றியைக் கொல்லாக் கொளல்வேண்டு மென்றும்
விடல்வேண்டுந் தங்கண் வெகுளி யடல்வேண்டும்
ஆக்கஞ் சிதைக்கும் வினை.

(இ-ள்.) பிறர் செய்த கடிய - (ஒருவர் தமக்கு) மற்றவர் செய்த அஞ்சத்தக்க தீச்செயல்களில், கன்றாமை வேண்டும் - வயிரங் கொள்ளாதிருத்தலே தகுதி; (பிறர் செய்த) நன்றியை - (தமக்குப்) பிறர் செய்த உபகாரத்தை, கொல்லாது - சிதைக்காமல், கொளல் வேண்டும் - மறவாதிருத்தலே தகுதி; என்றும் - (பிறர்) பொறுக்கக் கூடாத தீங்கு செய்த காலத்தும், தங்கண் வெகுளி - தம்மிடத்துண்டாகும் கோபத்தை, விடல் வேண்டும் - ஒழிதலே தகுதி; ஆக்கம் - (தமது) செல்வத்தை, சிதைக்கும் வினை - கெடுக்குந் தொழிலை, அடல் வேண்டும் - கெடுத்தலே தகுதி, எ-று.

(வி-ரை) கடிய - உரிச்சொலடியாகப் பிறந்தபெயர்; கடி - பகுதி, ய் - சந்தி, அ - பலவின்படர்க்கை விகுதி; பண்படியாகப் பிறந்த பெயரெனின், அ என்னும் பலவின் படர்க்கை விகுதிப் புணர்ச்சியில் கடுமை என்னும் பகுதி, மை விகுதிகெட்டு, இடை உகரம் இகரமாகி, யகரமாகிய உடம்படு மெய்ச்சந்தி பெற்றதென்க. கொல்லாதென்னும் எதிர்மறை வினையெச்சம் ஈறு தொகுத்தலாய் நின்றது. உம்மை உயர்வு சிறப்போடு முற்றுப்பொருளது. வெகுளி- தொழிற்பெயர்; வெகுள் - பகுதி, இ - புடைபெயர்ச்சிவிகுதி. ஆதற்குக் காரணமாகிய செல்வத்தை ஆக்கமென்றது காரியவாகுபெயர்; தொழிலாகுபெயருமாம்; இயல்பாகிய ஆ என்னும் பகுதி குச்சாரியை பெற்று நின்றமையால் அம் விகுதிப் புணர்ச்சியில் ஆக்கமென விகாரப்பட்டது. வினை - முதனிலைபெறாத தொழிற்பெயர். வேண்டும் - தேற்றப்பொருள் பட்டேவரும் தொழிற்பெயர். 'நன்றியை நன்றாக் கொளல்வேண்டும்' எனப் பாடமாயின், 'ஒருவர்செய்த உபகாரத்தை உறுதியாக மனத்தில் கொள்ளுதல் வேண்டும்' என உரைக்க. (கக)

பல்லிறு ளைப்செய்யும் பாம்பெலாங் கொல்லேலா
கோட்டானைப் செய்யுங் குறித்தாரை யூடி

முகத்தானேப் செய்வர் மகளிர் முனிவர்
தவத்தாற் றருகுவர் நோய்.

(இ - ள்.) பாம்பு எல்லாஞ் - எல்லாச்சாதிப் பாம்புகளுஞ், பல்லினுல் நோய் செய்யும் . (தீங்குசெய்த பிறரை) விஷப்பல்லால் துன்பஞ்செய்யும்; கொல் ஏறு - கொல்லுமியல்புடைய எருதுகள், குறித்தாரை-(நோய்செய்யக்) குறிக்கப்பட்டவரை, கோட்டால் நோய் செய்யும்-தம் கொம்புகளால் துன்பஞ்செய்யும்; மகளிர் - பெண்கள், ஊடி - பிணங்கி, முகத்தால் நோய் செய்வர் - (தம் கணவரை) முகக் குறியால் துன்பஞ்செய்வர்; முனிவர் - முனிவர்கள், தவத்தால் - தவத்தின் வல்லமையால், நோய் தருகுவர் - (தம்மை அவமதித்தவ ருக்குத்) துன்பத்தைக் கொடுப்பார், எ-று.

(வி-ரை.) பாம்பு, எருது, மகளிர் செய்யும் நோய்க்கும், முனிவர்செய்யும் நோய்க்கும் வேற்றுமையுள தென்பதும், எல்லாவுயிர்களையும் தம்மோடொக்க நோக்குபவ ரென்பதுந் தோன்றத் தவத்தினுற் செய்தவர் நோயென்னுது 'தவத்தாற் றருதவர் நோய்' என்ருர்; அந்நோய்களோடு இந்நோயிடை வேற்றுமையாவது பாம்புசெய்நோய் மந்திர மருந்துகளாலும், எருதுசெய்நோய் மருந்தினுலும், மகளிர் செய்நோய் இன்சொற் கூறியிரத்தல், வணங்கல்களினுலும் பரிகார முண்மையும், முனிவர்செய் நோய்க்கு அவர்களருளன்றி அவ்வாறு வேறுபரிகார மின்மையுமாம். மகளிர் - பொருளடியாகப் பிறந்தபெயர்; மக - பகுதி, ள் - விகுதி, இரண்டுறுப்பால் முடிந்துநின்ற பெண்பாற் படர்க்கைப்பெயர் பகுதி, இர்-பல்லோர்படர்க்கைவிகுதி; ளகர விகுதி எனக்கொள்ளாமல் அள் விகுதி எனக் கொள்ளின் விகுதி முதல் அகரக்கேடு பெற்றதென்ருவது, பகுதியீற்று அகரக்கேடு பெற்றதென்ருவது கூறலுமாம்; அக்கேட்டை முறையே முதற் குறை, கடைக்குறையென்க. நோய்செய்யு மென்பதை ஒருசொல் போலக் கொள்ளாது நோயைச் செய்யுமென இரண்டாவதை விரிக்

கின் குறித்தாரை என்னும் இரண்டாவதைக் குறித்தாருக்கு என நான்காவதாகவாவது, குறித்தாரிடத்து என ஏழாவதாகவாவது திரித்துக்கொள்க. தருதவரென்பது இடவழுவமைதி, [நன்-பொ-சூ-க0.] "தரல்வரல் கொடை—செலல் சாரும் படர்க்கை, எழுவா யிரண்டும் எஞ்சிய ஏற்கும்". 'கொல்களிறு, கோட்டாறேறுப் செய்யும்' எனவும் பாடமுண்டு. (கஉ)

பறைநன்று பண்ணமையா யாழி னிறைநின்ற
பெண்ணன்று பீடிலா மாந்தரின்—பண்ணழிந்
தார்தலி னன்று பசித்தல் பசைந்தாரின்
றீர்தலிற் றீப்புகுத னன்று.

(இ-ள்.) பண் அமையா - நரம்பிற்கட்டுதலமையாத, யாழின் - யாழிசையினும், பறை நன்று - பறையோசை நன்மையுடையது; பீடு இல்லாத மாந்தரின் - பெருங்குணமில்லாத ஆடவர் தன்மையினும், நிறை நின்ற-மனத்தைக் கற்புவழியில் நிறுத்தலமைந்த, பெண் நன்று - பெண்தன்மை நன்மையுடையது; பண் அழிந்து-பதனழிந்த உணவுகளை, ஆர்தலின் - உண்ணுதலினும், பசித்தல் - பசியால் வருந்துதல், நன்று - நன்மையுடையது; பசைந்தாரின் - உள்ளன்பு உடையாரினின்றும், தீர்தலின்-நீங்கி உயிர்வாழ்வதினும், தீப்புகுதல் நன்று - தீயில் நுழைதல் நன்மையுடையது, எ-று.

(வி-ரை.) பறை, யாழ் - கருவியாகுபெயர். பெண், நித்திய பகுவசனமாகிய மாந்தர் - பொருளாகுபெயர்கள். ஈற்றிலுள்ள பண் என்னும் முதனிலைத் தொழிற்பெயர் சமைத்தலால் ஆகும் பதத்துக்கு ஆதலால் காரணவாகுபெயர், தொழிலாகுபெயருமாம். ஐந்தனுருபு நான்கும் எல்லைப்பொருளன. பசைந்தாரினென்னும் ஐந்தனுருபு நீங்கற்பொருளது. பெருங்குணம்-செய்தற்கரியவற்றைச் செய்தல், கருவமில்லாமை, பிறர்குற்றங் கூறாமை முதலிய நற்குணம். நன்று

நான்கும் பண்படியாகப் பிறந்த குறிப்பு வினைமுற்று; மை யீறுகெட்டு நின்ற நல்-பகுதி, று - ஒன்றன்படர்க்கைவிகுதி, பகுதியீற்று லகரம் றகரமாகத் திரிந்தது சந்தி, அது னகரமானது மெலித்தல் விகாரம்; இங்கு நன்மை இன்பமெனக் கொள்க. நிறை - தொழிற்பெயர்; நிறு - பகுதி, ஐ - புடைபெயர்ச்சிவிகுதி, உகரக்கேடுசந்தி. நில் என்னுந் தன்வினைப்பகுதியை பிறவினைப் பகுதியாக்கியது றவ் விகுதி என்க. நிறைநின்ற - எழுவாய்த் தொகாநிலைத்தொடராகக் கொள்ளுதலே அன்றி, நிறையில் நின்ற எனப் பொருள்கொண்டு ஏழாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகக்கொள்ளினும்பொருந்தும். (சங)

வளப்பாத்தி யுள்வளரும் வண்மை கிளைக்குழாம்
இன்சொற் குழியு ளினிதெழூஉம் வன்சொலாம்
கரவெழூஉங் கண்ணில் குழியு ளிரவெழூஉம்
இன்மைக் குழியுள் விரைந்து.

(இ - ள்.) வண்மை - ஈகையாகியபயிர், வளப்பாத்தியுள் வளரும் - (நல்லோருடைய) செல்வமாகிய பாத்தியில் வளரும்; கிளைக்குழாம் - சுற்றத்தின் கூட்டமாகிய பயிர், இன்சொல் குழியுள் - இன்சொல்லாகிய பாத்தியில், இனிது எழும் - இடையூறில்லாமல் வளரும்; வன் சொல் ஆம் கா - கடுஞ்சொல்லாகிய சோலை, கண் இல் குழியுள் - கண்ணோட்ட மின்மையாகிய விளைநிலத்தில், எழும்-வளரும்; இரவு - இரத்தலாகிய பயிர், இன்மைக் குழியுள்-வறுமையாகிய பாத்தியில், விரைந்து எழும் - விரைவாக வளரும், எ-று.

(வி - ரை.) மூன்றாவது வாக்கியந்தவிர மற்ற மூன்று வாக்கியமும் ஏகதேசவுருவகவணி. உணவுமுதலியன பெற்றே உயிர்வாழ வேண்டுதலால் 'இரவு விரைந்தெழும்' என்றார். பொருளுடைய நல்லோரிடத்து ஈகையும், இன்சொல் கூறுவானிடத்துப் பலருமுறவாத

னும், தாட்சிணியமில்லாதவனிடத்துக் கடுஞ்சொற்பிறத்தலும், வறியானிடத்து இரத்தற்றொழிலும் உள்ளன ஆமென்பது கருத்தாகக் கொள்க. கிளை-உவமையாகுபெயர். கிளைக்குழாம்-ஒன்றன்கூட்டத் தற்கிழமைப்பொருளதாகிய ஆறாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். கண் தனது தொழிலாகிய ஓடுதலுக்கானது காரணவாகுபெயர்; அது தான் சென்றபோது அவனோடு பழகினவர் சொல்லியவற்றை மறுக்கமாட்டாத தன்மைக்கானதும் அவ்வாகுபெயரே ஆம். கண் இல் எழுவாய்த் தொகாநிலைத்தொடராயினும் ஒருசொல்போலநிற்க, இதனோடு குழி என்பது இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத் தொடராகப் புணர்ந்தது; உருவகமாதலால் இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத்தொடரென்றும். 'வன்சொற்,கரவெழுங் கண்ணில் குழியின்' எனவும் பாடமுண்டு; பொருள்: 'வல் சொல்-கடுஞ்சொல்லால், கரவு - (உடையானாயிருந்தும்) இல்லையென மறுக்கும் பயிர், கண் இல்-தாட்சிணிய மின்மையாகிய, குழியின்-பாத்தியில், எழும்-வளரும்' என வுரைக்க. (௧௪)

இன்னாமை வேண்டி னிரவெழுக விந்நிலத்து
மன்னுதல் வேண்டி னிசைநடுக தன்னொடு
செல்வது வேண்டி னறஞ்செய்க வெல்வது
வேண்டின் வெகுளி விடல்.

(இ-ள்.) இன்னாமை வேண்டின் - (ஒருவன்) இழிவை விரும்புவானானால், இரவு எழுக-(மானங்கெடவரும்) இரத்தலுண்டாகக்கடவன்; இந்நிலத்து - இவ்வுலகில், மன்னுதல் வேண்டின் - தான் நிலைபெறுதலை விரும்புவானானால், இசை நடுக - புகழை நாட்டக்கடவன்; தன்னொடு செல்வது வேண்டின் - (மறுமைக்குத்) தன்னுடனே செல்லுந் துணையாகுவதனை விரும்புவானானால், அறம் செய்க-அறத்தைச் செய்யக்கடவன்; வெல்வது வேண்டின் - (தீய சிந்தைகளை)

வெல்லுங் கருவியை விரும்புவானானால், வெகுளி விடல்-சினத்தை விடக்கடவன், எ-று.

(வி-ரை) இன்றமை இங்கு இழிவுக்காயிற்று. எழுக என்பது ஐம்பால் மூவிடங்கட்கும் பொதுவினையாயினும், தன்னொடு என்றமையால் பொதுமை நீங்கி ஆண்பாற்படர்க்கைக் குரியதாய் நிற்கின்றமையால் இரவெழுக என்பதனைத் திணைவழுவமைதி என்க. நிலம்-தொழிலடியாகப் பிறந்தபெயர்; நில்-பகுதி, அம் - வினைமுதற் பொருண்மை விகுதி; அசலே என்னும் வடமொழிக்கும் இதுவே பொருள் மன்னுதல்-இடைச்சொலடியாகப் பிறந்த தொழிற்பெயர்; மன்-பகுதி செல்வது, வெல்வது-வினையாலணையும் பெயர்; வெல்வதொன்றும் வினைமுதல் வினையைக் கருவியின்மேலேற்றிக் கூறும் வினையாலணையும்பெயர். விடல்-வியங்கோள் வினை; விகுதி அல். ()

கடற்குட்டம் போழ்வர் கலவர் படைக்குட்டம்
பாய்மா வுடையா னுடைக்கிற்குந் தோமில்
தவக்குட்டந் தன்னுடையா னீந்து மவைக்குட்டங்
கற்றான் கடந்து விடும்.

(இ-ள்) கலவர் - மரக்கலமுடையார், கடல் - கடலினது, குட்டம் - ஆழமாகிய நீரை, போழ்வர் - ஊடறுத்துச் செல்வர்; பாய் மா உடையான்-(போர்முகத்தில் அஞ்சாமல்)பாயுமியல்புள்ள குதிரையை யுடையவீரன், படைக்குட்டம் - (பகைவரது) சேனையாகிய கடற்கரையை, உடைக்கிற்கும் - உடைக்கமாட்டுவான்; தன் உடையான்-(ஐம்புலன்களிற் செல்லவிடாமல்) மனத்தைத் தன்வசப்படுத்தினவன், தோம் இல் - குற்றமில்லாத, தவக்குட்டம் - தவமாகியகடலை, நீந்தும் - நீந்துவான், கற்றான் -(நூல்களை ஐயமறக்) கற்றுணர்ந்தவன், அவைக் குட்டம்-(கற்றவர்கூடிய) சபையாகிய கடலை, கடந்துவிடும்- தாண்டிவிடுவான், எ-று.

(வி-ஊ.) குட்டம்-பண்புப்பெயர்; குண்டு-பகுதி, அம்-பகுதிப் பொருள் விகுதி, ணகரம் டகரமானது மெலித்தல் விகாரம், உகரக் கேடு சந்தி; இவ்வாறு முடிந்துநின்ற பண்புப்பெயர் கடற்குட்டம் என்றவிடத்துப் போழ்வர்கலவர் என்றகுறிப்பால் ஆழநீருக்கும், தவக் குட்டம், அவைக்குட்டம் என்றவிடத்து நீந்தும், கடந்துவிடும் என்ற குறிப்பால் கடலுக்கும் ஆனது பண்பாகுபெயர். படைக்குட்டம் என்றவிடத்துக் கடலுக்குப் பண்பாகுபெயராகி, உடைக்கிற்கும் என்ற குறிப்பால் கரைக்கானது முதலாகுபெயர். மரக்கலம் நீரை ஊடறுத்துச் செல்வதாதலால் இடந்தின்றொழிலை இடத்துநிகழ் பொருளின்மேலேற்றிக் 'கலவர் போழ்வர்' என்றார். படைக்குட்டத்தை உடைக்கிற்றலாவது - தம்சேனை ஊக்கத்தோடு நின்று போர் செய்யும்படி ஏவிக் காத்துநின்ற பகைச்சேனைத்தலைவரை அச்சேனைகளை உடைந்த கடலினீர்போலப் புறங்கொடுத்தோடும்படி வெற்றி கொள்ளல். தவக்குட்டம் நீந்துதலாவது-மனம் புலன்களிற் செல்லாமல் அடக்கவல்லான் கருதிய தவம் முற்றப்பெறக் காணல். அவை குட்டம் கடந்துவிடுதலாவது தான் குற்றமில்லாமலும் சுருக்கமாயும், பொருள் விளங்குவதாயும், செவிக்கினியதாயும், சிறந்தபயன் தருவதாயுமுள்ள சொல்லைச் சொல்லி அவையிலுள்ளோரை மகிழ்வித்தல். கலவர்-பொருளடியாகப்பிறந்தபெயர்; கலம் - பகுதி, அர் - பல்லோர் படர்க்கைவிகுதி, மகரக்கேடும் வகரத்தோற்றமுஞ் சந்தி; இது அறுமுகவ னென்பதுபோல வந்தது. உடைக்கிற்கும்-செய்யுமென் முற்று; உடை-பகுதி, க்-சந்தி, கில் - ஆற்றற்பொருண்மைவிகுதி, அனைத்துமொருபகுதி, கு-சாரியை, உம்-ஆண்பாற்படர்க்கை எதிர்காலமுற்றுப் பொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி. இவ்வினை பலர்பாலல்லாத மற்ற பால்களுக்குப் பொதுவாயினும் உடையானென்னும் சிறப்புப் பெயரால் பொதுமை நீங்கி அப்பாலுக்குரியதாயிற்று. கடந்துவிடும் அவ்வினைமுற்று; கட-பகுதி, த்-சந்தி, து - சாரியை, விடு - துணிவுப் பொருண்மைவிகுதி, சந்தித்தகரம் நகரமானது மெலித்தல் விகாரம்,

அனைத்து மொருபகுதி, உம் விகுதியும் அப்பொருளது, உகரக்கேடு சந்தி. (கக)

> பொய்த்த விறுவாய நட்புக்கண் மெய்த்தாக
> மூத்த லிருவாய்த் திளைநலந் தூக்கில்
> மிகுதி யிறுவாய செல்வங்க டத்தம்
> தகுதி யிறுவாய்த் துயிர்.

(இ-ள்.) நட்பு - நட்புக்கள், பொய்த்தல் - பொய்யாக ஒழுகுதலாகிய, இறுவாய - இறுதியுடையன; இளை நலம்-இளமைப்பருவத்தினழகு, கண்மெய்த்து ஆக-(காண்போர்) கண்களுக்கு மெய்மையுடையதாக, மூத்தல் இறுவாய்த்து - மூப்பாகிய இறுதியையுடையது; செல்வங்கள்-செல்வங்கள், தூக்கு இல் - (இம்மை மறுமைப்பயன்களை) ஆராய்தலில்லாத, மிகுதி இறுவாய - வேண்டாத செய்கையாகிய இறுதியையுடையன; தத்தம் - தங்கள் தங்களது இருவினைக்கும், தகுதி இறுவாய்த்து உயிர் - தகுந்தவாழ்நாளாகிய இறுதியையுடையதுயிர், எ-று.

(வி - ரை.) நட்புக்கொண்ட இருவருள் ஒருவனிடத்துப் பொய்யொழுக்க முண்டானவளவில் அந்நட்புக் கெடுமென்பதும், இளமைப் பருவத்திலுண்டாகிய அழகு மூப்புவந்த வளவில் பிரத்தியட்சமாகக் கெடுமென்பதும், பழியையும் பாவத்தையுந் தருவதாகிய செய்கை ஒருவனிடத்துண்டானவளவில் அவன் செல்வங்கெடுமென்பதும், இருவினைப்பயன்களையும் அநுபவிக்கும்படி நியமித்த நான் முடிவில் உயிர் உடலைவிட்டு நீங்குமென்பதும் கருத்தாகக் கொள்க. இறுவாய - இடமடியாகப்பிறந்த பலவின்படர்க்கைக் குறிப்புவினைமுற்று; வினைத்தொகைநிலைத்தொடராகிய இறுவாய் என்பது ஒரு சொல்லின் தன்மைப்பட்டுப் பகுதியாய் நின்றது; வாயென்பதை இடைச்சொலென்பாருமுளர்; இச்சொல் பொய்த்த லென்பதனோடு

பண்புத்தொகைநிலைத்தொடராகப் புணர்ந்தது; மற்றவைகளையும் இவ்வாறே கொள்க. இளை - பண்புப்பெயர்; இள - பகுதி, ஐ - பகுதிப்பொருள்விகுதி, பகுதியீற்று அகரக்கேடு கடைக்குறை. தூக்கு - முதனிலைத் தொழிற்பெயர். தத்தம் - பன்மைப் பொருட்டாகிய அடுக்கு; அது காரணவாகுபெயர். (கஎ)

மனைக்காக்க மாண்ட மகளி ரொருவன்
வினைக்காக்கஞ் செவ்விய னாதல் சினச்செவ்வேல்
நாட்டாக்க நல்லனிவ் வேந்தென்றல் கேட்டாக்கம்
கேளி ரொரீஇ விடல்.

(இ-ள்.) மாண்ட மகளிர் - நற்குண நற்செய்கையுடைய பெண்டிரிருத்தல், மனைக்கு ஆக்கம் - (கொண்டவனுடைய) மனைக்கு உயர்வைத் தருவதாகும்; சினம் - கோபமமைந்த, செம் வேல் - (பகைவருதிரத்தில் தோய்ந்ததினால்) செந்நிறமாகிய படைத்தொழிலில் ஒருவன், செவ்வியன் ஆதல் - ஒருவன் தேர்ச்சியுடையவனாதல், வினைக்கு ஆக்கம் - போருக்கு உயர்வைத் தருவதாகும்; இவ்வேந்து - இவ்வரசன், நல்லன் என்றல் - நல்லவனென்று (குடிகளால்) சொல்லப்படுதல், நாடு ஆக்கம் - (அவனுடைய) நாட்டுக்கு உயர்வைத்தருவதாகும்; கேளிர் - சுற்றத்தாரை, ஒரீஇ விடல் - (ஒருவன்) நீங்கிவிடுதல், கேடு ஆக்கம் - (அவனுக்கு வரும்) கேட்டுக்கு உயர்வைத் தரும் (மிக்க கேட்டை விளைக்கும்), எ-று.

(வி-ரை) ஆக்கம் - ஆகுதல்; அது உயர்தலுக்காயிற்று. பெரியன் நாடு என்பதுபோல நின்ற செவ்வியன் செவ்வேல் என்பதனைச் செவ்வேல் செவ்வியனெனக் கூட்டுக; பொருள் விளங்கும்படி ஏழாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராக வைத்து உரைத்தானும், செவ்வேல் செவ்வியன் என்பது இணைவிழுமைமைதியாகக் கொண்டு எழுவாய்த் தொகாநிலைத்தொடரெனக. செவ்வியன் - பண்

படியாகப் பிறந்த குறிப்புவினைமுற்று; செவ்வி-திருத்தம்; அது தேர்ச்சிக்காயிற்று. என்றல் - செயப்பாட்டு வினைத்தொழிற்பெயர்; அது பகு விகுதி முதலியன தொகுத்தலாய் நின்றது. கேடு-முதனிலை திரிந்த தொழிற்பெயர். கேளிர்-பண்படியாகப் பிறந்தபெயர்; கேண்மை என்னும் பகுதி, இர் என்னும் பல்லோர்படர்க்கை விகுதிப் புணர்ச்சியில் மை விகுதி கெட்டது.ஒரீஇ விடல்: ஒரு-பகுதி, இ-சாரியை, உகரக்கேடு சந்தி, சாரியை இகரம் ஈகாரமானதும் அது சொல்லிசை நிறைக்க அளபெழுந்ததும் நீட்டல்விகாரம், விடு - துணிவுப்பொருண்மை விகுதி, அல்லைத்து மொருபகுதி, அல்-புடைபெயர்ச்சி விகுதி, உகரக்கேடு சந்தி. (கஅ)

பெற்றான் அதிர்ப்பிற் பிணையன்னா டானதிர்க்கும்
கற்றான் அதிர்ப்பிற் பொருளதிர்க்கும் பாரிய [பின்
மண்ணதிர்ப்பின் மன்னவன் கோலதிர்க்கும் பண்ணதிர்ப்
பாடல திர்ந்து விடும்.

(இ-ள்) பெற்றான் - கொண்ட கணவன், அதிர்ப்பின் - (இல்லறத்துக்குரிய ஒழுக்கத்தினின்று) கலந்துவானாயின், பிணை அன்னாள் - பெண்மானை ஒத்த அவன் மனையாளும், அதிர்க்கும் - (அவ்வொழுக்கத்தினின்று) கலங்குவாள்; கற்றான் அதிர்ப்பின் - (நூல்களை) கற்றுணர்ந்தவன் (அறிவு) கலங்குவானாயின், பொருள் அதிர்க்கும் - (அந்நூலா லுணர்த்தப்பட்ட) பொருள்களும் கலங்கும்; பாரிய மண் அதிர்ப்பின் - தன் பெரிய நாட்டிலுள்ளார் (தன் ஆணைக்குள் அமையாமல்) கலந்துவாராயின், மன்னவன் கோல் அதிர்க்கும் - அரசனுடைய ஆணைமுறையுங் கலங்கும்; பண் அதிர்ப்பின் - யாழின் கட்டுநிலை கலங்குமாயின், பாடல் அதிர்ந்துவிடும் - பாடுதற்றொழிலும் கலங்கிவிடும், எ-று.

(வி-ரை.) அதிர்ப்பு நடுக்கமாதலால் கலக்கமெனப் பொருள் உரைக்கப்பட்டது. பொருளதிர்த்தலாவது-கற்றவன் அறிவின் கலக்

கத்தால் தான் நூற்பொருளை முன்னோடு பின்முரணக் கூறல். அர சன் கொடுமை செய்வானாயின் அவனாட்டுக் குடிகள் கலக்கத்தை யடைவார்கள்; அடையவே இவனது ஆளுகையைக் கடந்து நடப் பார்களாதலால் கோலதிர்ப்பதாயிற்று. அதிர்ப்பின் என்பது காரணப் பொருட்டாதலால் இறந்தகாலத்தில் வந்தது; அதிர்-பகுதி, ப் - சந்தி, ப்-விரித்தல் விகாரம், இன் - வினையெச்சவிகுதி, இதுவே காலங் காட்டியது. பிணை : மான், புல்வாய், நாய், பன்றி இவற்றின் பெண் ணுக்கு மரபுபற்றிய பெயராயினும் மாதருடைய கண்களுக்கு மான் கண்களைப்போ தொழிலுவமமாகக் கூறுதல் மரபாதலால் அதற்குப் பெண்மானெனப் பொருள் கூறப்பட்டது; மரபுபற்றிய பெயரென் பது "வடிவுள வுழைபுல் வாய்நாய் வராகமே பிணையின் வைக்கும்" என்னும் நிகண்டாலும் காண்க. பரிய-பண்படியாகப் பிறந்த குறிப் புப்பெயரெச்சம்; அ என்னும் பெயரெச்ச விகுதிப்புணர்ச்சியில் பருமை என்பது மை யீறுகெட்டு, பாரு என ஆதி நீண்டு, பாரி என இடை உகரம் இகரமாகி, யகர உடம்படுமெய் பெற்றது. மண் நாட்டுக்குக் கருவியாகுபெயராய், அது தன்னிலுள்ளாருக்கு இட வாகுபெயராய் நின்றது. மன்னவன்-இடைச்சொலடியாகப் பிறந்த பெயர்; மன்-பகுதி. கோல்-உவமையாகுபெயர். அன்னுள் என்பது னீற்றில் எதிரதுதழீஇயதும், பாடல் என்பதனீற்றில் இறந்தது தழீஇயதும், பொருள்,கோல் என்பவற்றி னீற்றில் எதிரதுதழீஇயத னோடு இறந்ததுதழீஇய எச்ச உம்மையும் தொகுக்கப்பட்டன. 'பற் றிய, மண்ணதிர்ப்பின்'எனவும் பாடமுண்டு; பற்றிய-கைக்கொண்ட எனவுரைக்க. (கக)

மனைக்குப்பாழ் வாணுத லின்மைதான் செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை யிருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு.

படியாகப் பிறந்த குறிப்புவினைமுற்று; செவ்வி-திருத்தம்; அது நேர்ச்சிக்காயிற்று. என்றல் - செயப்பாட்டு வினைத்தொழிற்பெயர்; இது படு விகுதி முதலியன தொகுத்தலாய் நின்றது. கேடு-முதனிலை திரிந்த தொழிற்பெயர். கேளிர்-பண்படியாகப் பிறந்தபெயர்; கேண்மை என்னும் பகுதி, இர் என்னும் பல்லோர்படர்க்கை விகுதிப் புணர்ச்சியில் மை விகுதி கெட்டது. ஒரீஇவிடல்: ஒரு-பகுதி, இ-சாரியை, உகரக்கேடு சந்தி, சாரியை இகரம் ஈகாரமானதும் அது சொல் லிசை நிறைக்க அளபெழுந்ததும் நீட்டல்விகாரம், விடு - துணிவுப் பொருண்மை விகுதி, அஃதாத்து மொருபகுதி, அல்-புடைபெயர்ச்சி விகுதி, உகரக்கேடு சந்தி. (கஅ)

பெற்றா னதிர்ப்பிற் பிணையன்னா ளதிருங்
கற்றா னதிர்ப்பிற் பொருளதிரும் பாரிப [பின்
மண்ணதிர்ப்பின் மன்னவன் கோலதிரும் பண்ணதிர்ப்
பாட லதிர்ந்து விடும்.

(இ-ள்) பெற்றான் - கொண்ட கணவன், அதிர்ப்பின் - (இல்லறத்துக்குரிய ஒழுக்கத்தினின்று) கலங்குவானாயின், பிணை அன்னாள் - பெண்மானை ஒத்த அவன் மனையாளும், அதிர்க்கும் - (அவ்வொழுக்கத்தினின்று) கலங்குவாள்; கற்றான் அதிர்ப்பின் - (நூல்களைக்) கற்றுணர்ந்தவன் (அறிவு) கலங்குவானாயின், பொருள் அதிர்க்கும் - (அந்நூலா லுணர்த்தப்பட்ட) பொருள்களும் கலங்கும்; பாரிப மண் அதிர்ப்பின் - தன் பெரிய நாட்டிலுள்ளார் (தன் ஆளுகைக்குள் அமையாமல்) கலங்குவாரானால், மன்னவன் கோல் அதிர்க்கும் - அரசனுடைய ஆளுமுறையுங் கலங்கும்; பண் அதிர்ப்பின் - யாழின் கட்டுநிலை கலங்குமானால், பாடல் அதிர்ந்துவிடும் - பாடுதற்றொழிலும் கலங்கிவிடும், எ-று.

(வி-ரை.) அதிர்ப்பு நடுக்கமாதலால் கலக்கமெனப் பொருள் உரைக்கப்பட்டது. பொருளதிர்த்தலாவது-கற்றவன் அறிவின் கலக்

த்தால் தான் நூற்பொருளை முன்னோடு பின்முரணக் கூறல். அர சர் கொடுமை செய்வானுயின் அவனுட்டுக் குடிகள் கலக்கத்தை யடைவார்கள்; அடையவே இவனது ஆளுகையைக் கடந்து நடப் பார்களாதலால் கோலதிர்ப்பதாயிற்று. அதிர்ப்பின் என்பது காரணப் பொருட்டாதலால் இறந்தகாலத்தில் வந்தது; அதிர்-பகுதி, ப் - சந்தி, ப்-விரித்தல் விகாரம், இன் - வினையெச்சவிகுதி, இதவே காலங் காட்டியது. பிணை : மான், புல்வாய், நாய், பன்றி இவற்றின் பெண் ணுக்கு மரபுபற்றிய பெயராயினும் மாதருடைய கண்களுக்கு மான் கண்களைப் தொழிலுவமமாகக் கூறுதல் மரபாதலால் அதற்குப் பெண்மானெனப் பொருள் கூறப்பட்டது; மரபுபற்றிய பெயரென் பது "வடிவுள வுழைபுல் வாய்நாய் வராகமே பிணையின் வைக்கும்" என்னும் நிகண்டாலும் காண்க. பாரிய-பண்படியாகப் பிறந்த குறிப் புப்பெயரெச்சம்; அ என்னும் பெயரெச்ச விகுதிப்புணர்ச்சியில் பருமை என்பது மை யிறுகெட்டு, பாரு என ஆதி நீண்டு, பாரி என இடை உகரம் இகரமாகி, யகர உடம்படுமெய் பெற்றது. மண் நாட்டுக்குக் கருவியாகுபெயராய், அது தன்னிலுள்ளாருக்கு இட வாகுபெயராய் நின்றது. மன்னவன்-இடைசசொலடியாகப் பிறந்த பெயர்; மன்-பகுதி கோல்-உவமையாகுபெயர். அன்னாள் என்பது ஈற்றில் எதிரதுதழீஇயது, பாடல் என்பதனீற்றில் இறந்தது தழீஇயதும், பொருள்,கோல் என்பவற்றி னீற்றில் எதிரதுதழீஇயத னோடு இறந்ததுதழீஇய எச்ச உம்மையும் தொகுக்கப்பட்டன. 'பற் றிய, மண்ணதிர்ப்பின்'எனவும் பாடமுண்டு; பற்றிய-கைகொண்ட எனவுரைக்க. (கக)

மனைக்குப்பாழ் வாணுத லின்மைதான் செல்லும்
திசைக்குப்பாழ் நட்டோரை யின்மை யிருந்த
அவைக்குப்பாழ் மூத்தோரை யின்மை தனக்குப்பாழ்
கற்றறி வில்லா வுடம்பு.

(இ-ள்.) மனைக்குப் பாழ் - வீட்டுக்குப் பொலிவின்மையாவது, வாணுதல் இன்மை - (நற்குண நற்செய்கையுடைய) மனையாளை யுடையதாயிராமை; தான் செல்லும் திசைக்குப் பாழ் - (ஒருவன்) தான் சென்ற இடத்துக்குப் பொலிவின்மையாவது, நட்டோரை இன்மை - (தன்னுடன்) நட்புக்கொண்டவரை உடையனாயிராமை; இருந்த அவைக்குப் பாழ்-(பலர்) கூடின சபைக்குப் பொலிவின்மை யாவது, மூத்தோரை இன்மை-(கல்வியறிவு கேள்விகளால்) முதிர்ந்த வரை உடையதாயிராமை; தனக்குப் பாழ் - தனக்குப் பொலிவின்மை யாவது, கற்று அறிவு இல்லா உடம்பு - (பல நூல்களையும்) கற்று அறிதலில்லாத உடம்பினனாயிருத்தல், எ-று.

(வி-ரை.) கற்றறிவில்லாமை உடலொடு கூடிய வுயிர்க்கே ஆத லால் அவ்வுயிர்க்கும் உடம்புக்கும் உளதாகிய ஒற்றுமையைக் கருதி உடலின்மேலேற்றிக் 'கற்றறிவில்லா வுடம்பு' என்றார். வாணுதல்- பண்புத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப் பெயர்; விரித்தால் வாளாகிய நுதலையுடையாளென விரியும்; இரண் டாம் வேற்றுமைத் தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகைக் காரணப்பெயருமாம்; பொருள்-ஒளியைப்பெற்ற நெற்றியை யுடை யாள் என்பது. இன்மை-குறிப்புத்தொழிற்பெயர்; இது செயப்படு பொருள் குன்றியும், குன்றாதும் வரும்; இங்குச் செயப்படுபொருள் குன்றாமல் வந்தது; இதற்கு எழுவாய் பாழ். மூத்தோர் - இறந்தகால வினையாலணையும் பெயர்; பகுதி முதிரென்பதன் மரூஉ ஆகிய மூ- விகுதி, ஆ-ஓ ஆனது செய்யுள் வழக்கம். (௨0)

மொய்சிதைக்கு மொற்றுமை யின்மை யொருவனைப்
பொய்சிதைக்கும் பொன்போலு மேனியைப் பெய்த
கலஞ்சிதைக்கும் பாலின் சுவையைக் குலஞ்சிதைக்குங்
கூடார்கட் கூடி விடின்.

(இ-ள்.) ஒற்றுமை இன்மை - (தருந்தவரோடு) ஒருமைப்பா டில்லாமை, மொய் சிதைக்கும் - தன் வலியை அழிக்கும்; பொய் - பொய்யானது, ஒருவனைப் பொன்போலும் மேனியை - (தன்னைக் கூறிய) ஒருவனது பொன்னை ஒக்கும் (உடலினது) நிறத்தை, சிதைக்கும் - அழிக்கும்; பெய்த கலம் - (பாலை) வார்த்த (கெட்ட) பாத்திரமானது, பாலின் சுவையைச் சிதைக்கும் - அப்பாலினது மதுரத்தை அழிக்கும்; கூடார்கண் - நட்புச்செய்யத்தகாதவரிடத்து, கூடிவிடின் - நட்புச்செய்துவிட்டால், குலம் சிதைக்கும்-(அந்நட்பானது) தன் குலத்தினது பெருமையை அழிக்கும், எ-று.

(வி-ரை.) ஒருமைப்பாடு தான் அவரொன்றும் வேறுபாடில் லாமை.ஒருமைப்பாடிலராயின், இஃதறிந்து பகைவர் அவனை எளிதில் வெல்வாராதலால் 'ஒற்றுமையின்மை மொய்சிதைக்கும்'எனவும்,பொய் மறைக்கப்படாதாதலால் பிறராலறியப்பட்டபோது அதற்கு நாணும் நாணத்தால் கூறினவன்மேனிவாடும்; அவ்வாட்டம் பொய்காரணமாக உண்டாவதாதலால் 'பொய் மேனியைச் சிதைக்கும்'எனவுங் கூறினர். ஒற்றுமை-பண்புப்பெயர்; பொருள்:ஒன்றுந்தன்மை; ஒன்று வலித்து நின்ற ஒற்று-பகுதி, மை-பகுதிப்பொருள் விகுதி; இதனடியாக ஒற்றினான், ஒற்றி, ஒற்றின, ஒற்றுதல் என வினைகள் பிறக்குமாறு காண்க. கண்ணுட்குத்தினான் என்பதுபோலக் கூடார்கட் கூடிவிடின் என்பது செயப்படுபொருள் இடப்பொருளாய் நின்றது. பாலின் சுவையை என்பதற்குப் பாலினது இனிய சுவையை என உரைத்தலுமாம். (உ௯)

புகழ்செய்யும் பொய்யா விளக்க மிகந்தொருவர்ப்
பேணாது செய்வது பேதைமை காணாக்
குருடனைச் செய்வது மம்ம ரிருடீர்ந்த
கண்ணாரச் செய்வது கற்பு.

(இ-ள்.) பொய்யா விளக்கம் - பொய் சொல்லாமையாகிய விளக்கம், புகழ் செய்யும் - புகழை உண்டாக்கும்; பேதைமை - யாதும் அறியாமை, ஒருவர் பேணாது - பெரியாரொருவரை (த்துணையாக) விரும்பாமல், இகந்து-(அறத்தினெல்லை) கடந்து, செய்வது - (தீங்கினைச்) செய்யவல்லது; மம்மர் - (கல்லாமையால் வரும்) மயக்கம், காணாத - (செல்லும் வழியினியல்பை) அறியாத, குருடன் ஆக செய்வது - (ஒருவனைக்) குருடனாகச் செய்யவல்லது; கற்பு - கல்வியறிவு, இருள் தீர்ந்த - மயக்கத்தினின்று நீங்கிய, கண்ணர் ஆக செய்வது - கண்களுடையாராகச் செய்யவல்லது, எ-று.

(வி-ரை.) தொழிலும் பண்பினுளடங்குமாதலால் பொய்யா விளக்கமென்பதனைப் பண்புத்தொகைநிலைத்தொடராகக் கொள்ளுதலே அன்றிப் பொய்யாத என்பது ஈறுதொகுத்தலாய் நின்ற பெயரெச்சத்தொடராகவுங் கொள்ளலாம். விளக்கமென்றது பொய்யாமையாகிய செயலை ஆதலால் பொய்யாத என்னும் பெயரெச்சம் செயற்பெயர் கொண்டதென்க. பொய்யாமையுடையானை அது யாவரும் அறிந்து நன்குமதிக்கச் செய்தலால் 'விளக்கம்' என்றார். விளக்கம் - தொழிலடியாகப் பிறந்தபெயர்; விளங்கு - பகுதி, அம் - வினைமுதற் பொருண்மைவிகுதி, மெல்லொற்று வல்லொற்றானது வலித்தல் விகாரம், உகரக்கேடு சந்தி; அதனைத் தொழிற்பெயராகக்கொண்டு விளக்கந்தருஞ்சுடரை விளக்க மென்றதனால் காரியவாகுபெயரெனவும், தொழிலாகுபெயரெனவும் கொள்ளலுமாம். விளக்கமென்பதில் அம் புடைபெயர்ச்சி விகுதி; மற்ற வுறுப்புகளை வினைமுதற்பொருண்மை விகுதிப்புணர்ச்சிக்குச் சொல்லியதுபோலவே சொல்லுக. கற்பு - காரணவாகுபெயர்; தொழிலாகுபெயரெனினும் ஆம். குருடனாக, கண்ணராக என்பவற்றில் அகரவிகுதியும், அது பற்றிவந்த சாரியையும், சந்தியும் தொகுக்கப்பட்டன. (உஉ)

மலைப்பினும் வாரணந் தாங்கு மலைப்பினும்
அன்னையென் றோடுங் குழவி சிலைப்பினும்

நட்டார் நடுங்கும் வினைசெய்யா ரொட்டார்
உடனுறையுங் காலமு மில்.

(இ-ள்.) மலைப்பினும் - (தன்னேறுபாகன்) போர் செய்தாலும், வாரணம் தாங்கும்-யானை (அவனைத்) தாங்காநிற்கும்; அலைப்பினும்- (தன்னைத் தாய்) அடித்து வருத்தினாலும், குழவி-பிள்ளை, அன்னே என்று ஓடும் - தாயே என்று சொல்லிக்கொண்டு (அவள் பின்னே) ஓடும்; நட்டார் - நட்புக்கொண்டவர், சிலைப்பினும் - (ஒருபொருளைப் பற்றித் தம்மிற்கோபங்கொண்டு) உரத்துப்பேசினும், நடுங்கும் வினை செய்யார்-ஒருவருக்கு ஒருவர்) நடுங்குதற்கேதுவாகிய தொழிலைச்செய்யார்; ஒட்டாரும் - பகைவரும், உடன் உறையும்-(ஒருவரை ஒருவர் மனத்தால்) பிரியாமல் நட்புக்கொள்ளும், காலம் இல் - காலமில்லை, எ - று.

(வி-ரை.) தாங்குமென்ற குறிப்பால் வாரணமென்னும் பலபொருளொருசொல் யானைக்காயிற்று. முன்னுள்ள உம்மைகள் மூன்றும் உயர்வுசிறப்பு; பின்னுள்ள உம்மையை ஒட்டாரென்பதனோடு கூட்டுக; இது ஒருபுடை யிறந்ததுதழீஇய வெச்சவும்மை. உடன்-நீங்காமைப் பொருளதாகிய இடைச்சொல். அன்னை என்னும் பொதுப்பெயர் விளியுருபேற்றபோது ஈற்றைகாரங் கெட்டு ஏ மிகுந்தது. குழவி-பண்படியாகப் பிறந்த பெயர்; குழவு - பகுதி (பண்புப்பெயர்), இ-ஒன்றன்படர்க்கைவிகுதி, உகரக்கேடு-சந்தி; இவ்வாறன்றிக் குழ-பகுதி, வ்-உடம்படு மெய்யாகிய சந்தி, இ அவ் விகுதி எனினுமொக்கும். சிலைத்தல்-ஒலித்தல்; நட்டார்-இறந்தகால வினையாலணையும் பெயர்; நள்-பகுதி, ட் - இறந்தகால இடைநிலை, ஆர் - பல்லோர் படர்க்கை விகுதி, ளகரம் டகரமானது சந்தி; ஒட்டார் - எதிர்மறை வினையாலணையும்பெயர்; ஒட்டு-பகுதி, ஆ - எதிர்மறைவிகுதி, உகரக்கேடு-சந்தி, அனைத்துமொருபகுதி, ஆர் - பல்லோர் படர்க்கை விகுதி, விகுதி ஆகாரக்கேடு முதற்குறைவிகாரம்; ஒட்டுதல் - மனம் பொருந்துதல். (உ௬)

நகைநல நட்டார்க ணந்துஞ் சிறந்த
அவைநல மன்பின் விளங்கும் விசைமாண்ட
தேர்நலம் பாகனாற் பாடெய்து மூர்நலம்
உள்ளானா லுள்ளப் படும்.

(இ-ள்.) நகை நலம்-முகமலர்ச்சியினது நன்மை, நட்டார்கண்-நட்புக்கொண்டவர்களுக்குள், நந்தும்-சிறக்கும்; சிறந்த அவை நலம்-(கற்றறிந்தவர் கூடியதனால்) சிறந்த சபையினது நன்மை, அன்பின் விளங்கும் - (அக்கற்றவர்கள் ஒருவர்பால் ஒருவர் வைத்த) அன்பினாலே விளங்கும்; விசை மாண்ட - விரைந்தோடுதல் மிகுந்த, தேர் நலம் - தேரினது நன்மை, பாகனால் - (நடத்துந் தேர்ச்சியுள்ள) சாரதியினால், பாடு எய்தும் - பெருமையடையும்; ஊர் நலம் - நாட்டினது நன்மை, உள்ளானால் - உடைய அரசனால், உள்ளப்படும்-நன்கு மதிக்கப்படும், எ-று.

(வி-ரை) உள்ளானெனன ஒருமையாற் கூறியதனாலும், நாடுடையவன் அவனே யாதலாலும் அச்சொல்லுக்கு அரசனெனப் பொருளுரைக்கப்பட்டது; அவன் தண்ணளிசெய்து காப்பானாதல் குடிகள் பெருகி நாடு சிறக்குமாதலால் நாட்டினது நன்மையை மதித்தற்கு அவனைக் கருவியாக்கிக் கூறினர். உள்ளுதற்குக் கருத்தா அறிவுடையாரெனக் கொள்க. பாடு - தேற்றப்பொருள்தரும் தொழிற்பெயரென்று கொள்ளற்க. உள்ளப்படும் செய்புமென் செயப்பாட்டு வினைமுற்று; உள்-பகுதி, ள்-சந்தி, அ-சாரியை, ப்-சந்தி, படு-செயப்பாட்டுவினைப்பொருண்மை விகுதி, அனைத்து மொருபகுதி, உம் - எதிர்காலச்செய்யுமென்முற்று விகுதி, உகரக்கேடு-சந்தி. நகை-தொழிற்பெயர்; நகு-பகுதி, ஐ-புடைபெயர்ச்சிவிகுதி, உகரக்கேடு - சந்தி; இவ்வாறன்றி முதனிலைத்தொழிற்பெயராகக் கொள்ளலுமாம். விகுதி பெறின் நகைத்தல், நகைப்பு எனப் பெறும்; அது முகமலர்ச்சியை யுணர்த்தவந்த குறிப்புச்சொல்; நகை நலமென்றும் பாடமுண்டு.

பொருள் விருப்பத்தினது நன்மை என்பது. விசைமாண்டதேர்-பால் வழுவமைதி; முன்னது எழுவாய்த் தொகாநிலைத்தொடர். (உச)

> அஞ்சாமை யஞ்சுதி யொன்றிற் றனக்கொத்த
> எஞ்சாமை யெஞ்ச வளவெல்லா நெஞ்சறியக்
> கோடாமை கோடி பொருள்பெறினு நாடாதி
> நட்டார்கண் விட்ட வினை.

(இ - ள்.) அஞ்சாமை - (பழிபாவங்களை) அஞ்சாதிருத்தலை, அஞ்சுதி - அஞ்சுவாய்; அளவு எல்லாம் - (தேகந்தோடு கூடிவாழ) அளவுசெய்த நாளெல்லாம், ஒன்றின் - கூடுமாயின், தனக்கு ஒத்த - வருணத்துக்குத் தகுந்த ஒழுக்கங்களினின்று, எஞ்சாமை - சுருங்காமை, எஞ்சல்-சுருங்காதே; நெஞ்சு அறிய-மனமறிய, கோடாமை- (யாவரிடத்தும்) நடுவாக நிற்றலை, கோடி - கொள்ளுவாய்; பொருள் பெறினும் - மிக்கபொருள் பெறுவதா யிருப்பினும், நட்டார்கண் - (தேறிக்கொண்ட) நட்பினரிடத்து, விட்ட வினை - செய்யவிட்ட தொழிலை, நாடாதி - ஆராயாமலிரு, எ - று.

(வி-ரை.) படர்க்கை ஒருமைப்பெயரா யிருத்தலாலும், ஒத்த என்றதனாலும் தனக்கென்பதற்கு வருணத்துக்கெனப் பொருள் கொண்டாம். நட்டார்கண் விட்டவினையை நாடினால் ஐயப்பட்டா னென நட்புக்கெடும்; கெடவே வினையைச் சோரவிடுவர். அஞ்சாமை, எஞ்சாமை, கோடாமை-எதிர்மறைத் தொழிற்பெயர்கள்; அஞ்சு-பகுதி, ஆ-எதிர்மறைவிகுதி, உகரக்கேடுசந்தி, அனைத்துமொருபகுதி, மை - பகுதிப்பொருள்விகுதி. மற்றவைகளுக்கும் இவ்வாறே பகுபத இலக்கணங் கூறுக. அஞ்சாமை, எஞ்சாமை, கோடாமை, நாடாமை என்பவைகளை எதிர்மறை வியங்கோள் வினைமுற்றென்று சிலர் கொண்டிருக்கின்றனர்; அந்தப் பக்ஷத்தில்: அஞ்சுவது ஒன்றின் - பயப்படவேண்டியதான சங்கடம் நேர்ந்தால், அஞ்சாமை - (அதற்கு

மனந்தளர்ந்து) பயப்படாம விருக்கவேண்டும்; தனக்கு ஒத்தவை களில் குறையாம விருக்கவேண்டும்; நெஞ்சு அறியக் கோடாம விருக்கவேண்டும். 'நட்டார்கண் விட்ட வினையை நாடாம விருக்க வேண்டும' என்று பொருளுரைத்துக்கொள்க. கோடுதல் - கோணு தல்; அது இங்குப் பக்ஷபாதத்துக்காயிற்று. அஞ்சுதி, கோடி என்பன ஏவலொருமைவினை; கொள் - பகுதி, இ - ஏவலொருமை எதிர்கால விகுதி, த்-எழுத்துப்பேறு, பகுதி முதல்நீண்டது நீட்டல்விகாரம், ளகரம் டகரமானதும், ளகரங் கெட்டதும் சந்தி. எஞ்சல், நடாதி-ஏவ லொருமை எதிர்மறைவினை; எஞ்சு - பகுதி, அல் - ஏவலொருமை எதிர்மறைவிகுதி, உகரக்கேடு சந்தி. நாடு-பகுதி, ஆ-எதிர்மறைவிகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்துமொருபகுதி, த-எழுத்துப்பேறு, இ-ஏவ லொருமை எதிர்கால விகுதி. உம்மை உயர்வுசிறப்பு. (உரு)

அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங் குற்றம்
விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங் குற்றம்
சொலற்பால வல்லாத சொல்லுதலுங் குற்றம்
கொலைப்பாலுங் குற்றமே யாம்.

(இ-ள்.) பிற உயிரை - (தன்னின்) வேறாயினவாகிய பிராணி களை, அலைப்பான் - கொல்லுதற்பொருட்டு, ஆக்கலும்-வளர்த்தலும், குற்றம் - குற்றமான காரியமாகும்; ஊன் - மாமிசத்தை, விலைப்பா லில் - விலையினது உரிமையினால், கொண்டு-வாங்கி, மிசைதலும் - உண்ணுதலும், குற்றம் - குற்றமான காரியமாகும்; சொலல்பால - சொல்லுதற்குரிய தன்மையையுடையன, அல்லாத - அல்லாதனவா கிய சொற்களை, சொல்லுதலும் - சொல்லுதலும், குற்றம்-குற்றமான காரியமாகும்; கொலைப்பாலும்-(ஒருயிரைக்)கொல்லுதலாகிய தன்மை யும், குற்றமே ஆம் - குற்றமான காரியமேயாகும், எ-று.

(வி-ரை.) "பிறிதுயிரை" எனவும் பாடமுண்டு. இதற்குத் தன் னிற்பிறிதாகிய ஒரு பிராணியை என்று பொருள்கொள்க. பிறவுயிர்

என்பது பிறவாகிய உயிர் என்றும், பிறிதுயிர் என்பது பிறிதாகிய உயிர் என்றும் விரிதலின் இவ்விருதொடரும் இருபெயரொட்டுப் பண்புத்தொகைகளே. பிற-பலவின் படர்க்கைப்பெயர்; பிற - பகுதி, அ-விகுதி, பகுதியீற் றகரங்கெட்டது கடைக்குறைவிகாரம். பிறிது-ஒன்றன்படர்க்கைப்பெயர்; பிற - பகுதி, இப்பகுதியின் ஈற்றகரங் கெட்டது கடைக்குறைவிகாரம், இ-சாரியை, து-ஒன்றன்படர்க்கை விகுதி. அலைப்பான் - பான் ஈற்று எதிர்காலவினையெச்சம்; அலை - பகுதி, ப்-சந்தி, பான்-விகுதி; இஃது எதிர்காலவினையெச்சம் என்பதனை, [நன்-வினை-இ-ரு-உ௪] "செய்து செய்பு செய்யாச் செய்யூச், செய்தெனச் செயச்செயின் செய்பிய செய்பியர், வான்பான் பாக்கின வினையெச்சம் பிற, வைந்தொன் றாறுமுக் காலமு முறை தரும்" என்பதனா லறிக. வினைப்பால்-ஆறன்தொகை. பாவில்-இல் இல் என்னும் ஏழனுருபு ஆல் என்னும் மூன்றனுருபின் கருவிப்பொருளில் வந்தது உம்மைகள் நான்கனுள் முதன்மூன்றும் எண்ணுப் பொருளன. ஈற்றும்மை எண்ணுப்பொருளோடு இறந்ததுதழீஇய எச்சப்பொருளது அதன் பொருள் உண்ணுதற்காகவன்றி வேறு காரணங்களினால் ஒருயிரைக் கொல்லுதலுங் குற்றமென்பது. கொல்லல் என்பது லகரந் தொகுத்தலாய்க் கொலல் என்றாயிற்று. பால, அல்லாத என்பன முறையே பான்மையையுடைய, அல்லாதனவாகிய சொற்கள் என்றாதலின் குறிப்புவினையாலணையும் பெயர்கள். பான்மை-தன்மை எ தேற்றப்பொருளது. இச்செய்யுள் அடிமறிமாற்றுப் பொருள்கோளது. அடிமறிமாற்றுப் பொருள்கோள் இன்னதென்பதனை [நன்-பொ-இ-ரு-௬அ] "ஏற்புழி யெடுத்துடன் கூட்டுறு மடியவும், யாப்பீ றிடைமுத லாக்கினும் பொருளிசை, மாட்சியு மாறா வடியவு மடிமறி" என்பதனா லறிக. (உகூ)

**கோனோக்கி வாழுங் குடியெல்லாந் தாய்முலைப்**
**பானோக்கி வாழுங் குழவிகள் வானந்**

துளிநோக்கி வாழு முலக முலக
விளிநோக்கி யின்புறூஉங் கூற்று.

(இ-ள்.) குடி எல்லாம் - குடிகளெல்லாம், கோல் நோக்கி வாழும் - (தம்மரசனது) செங்கோலை நோக்கி வாழாநிற்கும்; குழவிகள் (எல்லாம்)-இளம்பிள்ளைகளெல்லாம், தாய்-தங்கள் தாயினுடைய, முலைப்பால் நோக்கி-முலைப்பாலைநோக்கி, வாழும்-வாழாநிற்கும்; உலகம் (எல்லாம்)-உலகத்துயிர்களெல்லாம், வானத் துளி நோக்கி-மேகத்தினது பெயலை நோக்கி, வாழும் - வாழாநிற்கும்; கூற்று - யமன், உலக விளி நோக்கி - உலகத்துயிர்களினது சாதலை நோக்கி, இன்புறூஉம்-மகிழாநிற்பன், எ-று.

(வி-ரை.) கோலினாலாகிய காவலைக் கோலென்றதும், வானத் துளியினாலாகிய உணவை வானத்துளியென்றதும் கருவியாகுபெயர். நோக்கி வாழ்தல் இன்றியமையாமை ஆதலால் குடிகளுக்குச் செங்கோலினது காவலும், இளம்பிள்ளைகளுக்குத் தாய் முலைப்பாலும், உலகத்துயிர்களுக்கு மழையினாலாகிய வுணவும் இன்றியமையாப் பொருள்களென்பது கருத்து. உடலோடுகூடி வாழ்ந்தகாலத்து உயிர்கள்செய்த நல்வினை தீவினைகளை நடுநிலைமையாக ஆய்ந்து தக்கவாறு தண்டம் விதித்தல் தனக்குத் தொழிலாகக்கொண்ட யமனுக்கு உலகத்துயிர்க ளிறத்தலிலவாயின் தன் தொழில் செவ்வனடவாதாதலால் உலகவிளிநோக்கி யின்புறுவானாயினன். குடியெல்லாம்: சொல்லால் அஃறிணையாதலால் வாழுமென்னும் செய்யுமென் முற்றைக்கொண்டது. வான், உலகம்-இடவாகுபெயர்; உலகம் அன்று; உலோகமென்பது வடமொழியாதலால் அது ஆகுபெயரே ஆம். துளி, விளி - முதனிலைத்தொழிற்பெயர்கள். அளபெடை இன்னிசையளபெடை. இன்னிசை அளபெடைக்குக் குறினெடிலா யளபெடுப்பது இலக்கணமெனின் "கடாஅயினுஞ் சான்றவர் சொல்லார்" நெடிலளபு இன்னிசை நிறைக்கவந்ததாதலால் அது குற்றமென்க. இது செய்யு

ளிசை, சொல்லிசைநிறைக்கவரும் அளபெடைபோலாது செவிக்கினிமையாகிய இசைநிறைக்க வருவதென்க. இன்பு-பண்புப்பெயர்; இதில் பு - விகுதி; விகுதிமேல் விகுதியாய் அம் விகுதிபெற்று இன்பமெனவும் வரும். (உஎ)

கற்பக் கழிமட மஃகு மடமஃகப்
புற்பந்தீர்ந் திவ்வுலகின் கோளுணருங் கோளுணர்ந்
தத்துவ மான நெறிபடரு மந்நெறி [தான்
இப்பா லுலகி னிசைநிறீஇ யுப்பால்
உயர்ந்த வுலகம் புகும்.

(இ-ள்.) கற்ப-(ஒருவன் நூல்களைக்) கற்பதினால், கழி மடம் - மிகுதியாகிய பேதைமை, அஃகும்-குறைவான்; மடம் அஃக - அறியாமை நீங்குவதினால், புற்பம் தீர்ந்து - புல்லறிவு நீங்கி, இவ்வுலகின் கோள் - இவ்வுலகத்தினது இயல்பினை, உணரும்-அறிவான்; கோள் உணர்ந்தான்-அவ்வியற்கையை உணர்ந்தவன், தத்துவம் ஆன நெறி - உண்மையாகிய வழியில், படரும் - செல்லுவான்; அந்நெறி - சென்ற அவ்வழியினால், இப்பால் - இம்மையில், உலகின் - உலகத்தில், இசை நிறீஇ-புகழை நிலைபெறச்செய்து, உப்பால்-மறுமையில், உயர்ந்த உலகம் - (எல்லாவுலகங்களினும்) உயர்ந்த முத்தியுலகத்தில், புகும் - புகுவான், எ-று.

(வி-ரை.) 'புற்கந்தீர்ந்து'எனவும் பாடமுண்டு; புற்கமென்னுஞ் சொல்லும் புற்பமென்பதன் பொருளதே; புற்பம் பண்புப்பெயர்; புல்-பகுதி, பம்-பகுதிப்பொருள்விகுதி, லகரம் றகரமானது சந்தி. புற்கம்-அப்பண்புப்பெயரே ஆம்; புல்-பகுதி, கு - பகுதிப்பொருள் விகுதி, லகரம் றகரமானது சந்தி, மாட்சிமை என்பதிற்போலப் பகுதிப்பொருள் விகுதியாகிய அம் விகுதிமேல் விகுதி; இச்சொல்லை ஒற்கமென்பதுபோலத் தொழிற்பெயராகக்கொள்ளின் புல்கு-பகுதி, அம்-

புடைபெயர்ச்சிப்பொருள் விகுதி, இவ்விகுதிப் புணர்ச்சியில் லகரம் றகரமானதும், உகரக்கேடும் சந்தி எனக் கூறல்வேண்டும்; தொழிற் பெயராகக்கொள்ளின் உலகத்தோடு சம்பந்தப்படுதலை எனப்பொருள் படும்; பொருள்படின் உலகின்கோளுணர்ந்தபின் புற்கம்தீருமே அன்றிப் புற்கந்தீர்ந்து உலகின்கோ ளுணர்தலென்பது பொருளன்மையால் தொழிற்பெயராகக் கொள்ளலாகா தென்க. நிறீஇ-இதில் இகர விகுதி வந்ததென்பது பிசகு; விகுதி புணர்ந்துகெட்டு என்றிருக்க வேண்டியது; விகுதியே யன்றிப் பகுதி விகாரப்பட்டு வினையெச்சமாயிற்றென்பது முன்னோர் கொள்கை. உகரச்சுட்டு இங்கு "உப்பக் கங்காண்பர்" என்பதுபோல, அகரச்சுட்டுக்குரிய சேய்மைப்பொருளது. இது காரணமாலையணி; காரணமாலையணியாவது முன்முன் உரைப்பவை பின்பின் உரைப்பவைகளுக்குக் காரணமாகக் கூறுவது.

குழித்துழி நிற்பது நீர்தன்னைப் பல்லோர்
பழித்துழி நிற்பது பாவம்—அழித்துச்
செறிவுழி நிற்பது காமந் தனக்கொன்
றுறுவுழி நிற்ப தறிவு.

(இ - ள்.) நீர் - நீரானது, குழித்த உழி - குழிசெய்யப்பட்ட இடத்திலே, நிற்பது-நிற்கும் இயல்புடையது; பாவம்-பாவமானது, பல்லோர் - (அறிவுடையோர்) பலராலும், பழித்த உழி - பழிக்கப் பட்டவனிடத்து, நிற்பது - நிற்கும் இயல்புடையது; காமம் - காமமானது, அழித்து - (ஒருவன் தவ வொழுக்கத்தைக்) கெடுத்து, செறிவுழி-(தீய ஒழுக்கத்தில்) சேர்ந்தவனிடத்து, நிற்பது - நிற்கும் இயல்புடையது; அறிவு - கல்வியறிவானது, தனக்கு ஒன்று - கற்ற தனக்கொரு துன்பம், உறு உழி - வந்தகாலத்தில், நிற்பது - உதவி நிற்கும் இயல்புடையது, எ-று.

(வி - ரை.) குழித்த, பழித்த என்னும் இறந்தகாலச் செயப்பாட்டு வினைப்பெயரெச்சங்கள் ஈறும்,படுவிகுதிமுதலியவும் தொகுக்

கப்பட்டன. செறிவுழி, உறுவுழி என்பன இறந்தகால வினையெச்சமாகவைத்துப் பொருள் கூறினும் அமையும்; செறி-பகுதி, வ்-உடம்படு மெய்யல்லாத மெய்யாகிய சந்தி, உழி - இறந்தகால வினையெச்ச விகுதி. உறுவுழி என்பதிலும் வகரம் சந்தி. ஒன்று - எண்ணலளவையாகுபெயர். (உக)

திருவிற் றிறலுடைய தில்லை யொருவற்குக்
கற்றலின் வாய்த்த பிறவில்லை—எற்றுள்ளும்
இன்மையி னின்னாத தில்லையில் லென்னாத
வன்மையின் வன்பாட தில்.

(இ-ள்.) ஒருவற்கு - ஒருவனுக்கு, திருவின்-செல்வப்பொருள் போல, திறல் உடையது இல்லை - வலியுடையது (பிறிது) இல்லை; கற்றலின் - கல்வியறிவுபோல, வாய்த்த - நீங்காத துணைகள், பிற இல்லை - வேறில்லை; எற்றுள்ளும் (துன்பந்தருவன ஆகிய) எல்லாவற்றிலும், இன்மையின் - வறுமைபோல, இன்னாதது இல்லை - துன்பந்தருவது வேறு இல்லை; இல் என்னாத - (அவ்வறியவர்க்கு) இல்லை என்று சொல்லாத, வன்மையின் - வல்லமைபோல, வன்பாடது இல் - வேறு வல்லமையானது இல்லை, எ-று.

(வி - ரை.) இல்லென்னாத வன்மையென்றது ஈகைத்தன்மையை; இல்லையில்லென்னாத என்பதை வறியார்மேலேற்றி (எமக்கு இப்பொருள்) இல்லையென்று இரவாத என உரைத்தலுமாம். 'இலதென்னும் வன்மையின்' எனவும் பாடமுண்டு; பொருள்: இல்லையென்றுசொல்லும் கடுமைபோலக் கடுமைவேறு இல்லை என்றவாறு; அங்ஙனமன்றி இல்லையென்று சொல்லும் வலியின்மையினும் வேறு வலியின்மை இலதெனவும் உரைக்கலாம். இந்த வன்மை வன்பாடதென்னும் இரண்டும் இலதென்னும் என்ற குறிப்பால் வலியில்லாமையை உணர்த்தின. ஐந்தனுருபுகள் ஒப்புப்பொருளன; எல்லைப்

பொருளை ஆகக்கொண்டால் திருவிற்றிறலுடையதில்லை என்பதற்குச் செல்வத்தைப் பார்க்கினும் வலியுடையதில்லை என்க. மற்றவற்றிற்கும் இவ்வாறே உரைக்க. கற்றல்-தொழிலாகுபெயர்; காரணவாகு பெயராகவுங் கொள்ளலாம். வாய்த்த-பலவின் படர்க்கை இறந்தகால வினையாலணையும்பெயர். பிற-இடைச்சொலடியாகப்பிறந்த பலவின் படர்க்கைப்பெயர்; பிற-பகுதி, அ - பலவின்படர்க்கைவிகுதி, பகுதி அகரக்கேடு கடைக்குறை. எற்று-இடைச்சொலடியாகப்பிறந்த ஒன்றன்படர்க்கைக் குறிப்பு வினைப்பெயர்; என்-பகுதி, று ஒன்றன்படர்க்கை விகுதி, னகரம் றகரமானது சந்தி; என்ன என்னுங் குறிப்புப் பெயரெச்சத்திலும் னகரம் நித்தியமாய் வருதலால் என் என்பதே பகுதி, எகரமன்று. உம்மை முற்றும்மை யாதலால் என் என்பது வினாப்பொருளைவிட்டு எஞ்சாமைப்பொருள் தந்தது; இச்சொல் தொகுதிபொருமை. இல்லை என்பது குறிப்புவினையாதலால் அது இல் என்றானது தொகுத்தல்; கடைக்குறை விகாரமெனக் கூறுவாருமுளர். வன்பாடது என்பதில் து-பகுதிப்பொருள்விகுதி, அ-சாரியை. இலம்பாடென்பது போன்ற வன்பாடென்பதற்கு வலியுண்மை என்பதுபொருள்; இது முதனிலைதிரிந்த தொழிற்பெயர். 'வன்பாட்டது' எனப் பாடங்கூறின் அதைக் குறிப்பு வினைப்பெயராகக் கொள்ளல் வேண்டும்; வன்மை குணமன்றே? அதைக் குணியாகக் கூறுதல் குற்றமாமாதலால் கூறலாகாதென்க. (௩௦)

புகைவித்தாப் பொங்கழ றோன்றுஞ் சிறந்த
நகைவித்தாத் தோன்று முவகை—பகையொருவன்
முன்னம்வித் தாக முளைக்கும் முளைத்தபின்
இன்னாவித் தாகி விடும்.

(இ-ள்.) பொங்கு அழல்-(அடுக்களையில்) எரிகின்ற தீயினது இருப்பு, புகைவித்து ஆக-(புறத்தில்) புகைகாரணமாக, தோன்றும்-விளங்கும்; உவகை-(உள்ளத்தில்) மகிழ்வினது இருப்பு, சிறந்த நகை

(புறத்தில்) மிக்கமுகமலர்ச்சி, வித்து ஆக - காரணமாக, தோன்றும்- விளங்கும்; பகை - (உள்ளத்திலுள்ள) பகைமைக்குணம், ஒருவன் முன்னம் - ஒருவனது குறிப்புச்செய்கை, வித்து ஆக - காரணமாக, முளைக்கும் - (புறத்தில்) தோன்றும்; முளைத்த பின் - தோன்றின பிற்காலத்து, இன்னா வித்து ஆகிவிடும் - (செய்யப்படும்) துன்பந் தருஞ் செய்கைகளுக்கு (அப்பகைமை) காரணமாய் முடியும், எ-று.

(வி-ரை.) அழலுக்குப் புகையும், உவகைக்கு நகையும், பகைக்கு முன்னமும் காரியங்களாயினும், கண்ணுக்குப் புலப்படாமல் நின்ற அழல் முதலியவற்றினிருப்பை ஒருவன் உணர்தற்குப் புகை முதலியன கருவியாயிருத்தலால் அவற்றை 'வித்து'என்றார். வித்து- காரணத்தை உணர்த்துவதோர் குறிப்புச்சொல். புகை - தொழிலடியாகப் பிறந்தபெயர்; புகு-பகுதி, ஐ-வினைமுதற்பொருண்மைவிகுதி, உகரக்கேடு சந்தி. பகை-தொழிற்பெயர்; பகு-பகுதி, ஐ-புடைபெயர்ச்சிப்பொருள் விகுதி, உகரக்கேடு சந்தி; மனம் வேறுபடுதலென்பது பொருள். முன்னம் - தொழிலடியாகப் பிறந்தபெயர்; முன்-பகுதி, (குறி) ன் - சந்தி, அம் - செயப்படுபொருண்மைவிகுதி; பொருள்: குறிக்கப்படுவதென்பது; தொழிலாகு பெயருமாம். முளைத்தபின்- வினையெச்சமாகிய ஒருசொல் லன்று; தொடர்மொழியாகக்கொண்டு பெயரெச்சத் தொகாநிலைத்தொடரெனக் கூறுக. ஆக என்பதில் குச்சாரியையும், அதுபற்றிவந்த சாரியை முதலியவும் தொகுக்கப் பட்டன. ஆகிவிடு மென்பதில் விடு துணிவுப்பொருண்மை விகுதி.

பிணிபன்னர் பின்னோக்காப் பெண்டி ருலகிற்
கணியன்ன ரன்புடை மாக்கள்—பிணிபயிரின்
புல்லன்னர் புல்லறிவி னுடைவர் கல்லன்னர்
வல்லென்ற நெஞ்சத் தவர்.

(இ - ள்.) பின் நோக்காத பெண்டிர்-மேல்விளைவை ஆராயாத பெண்டிர்கள், பிணி அன்னர் - (கொண்ட கணவருக்கு) நோயை

ஒப்பாவர்; அன்பு உடைய மாக்கள் - (சம்பந்தமுடையாரிடத்து) அன்புடைய மனிதர், உலகிற்கு - உலகத்துயிர்களுக்கு, அணி அன்னர் - ஆபரணத்தை ஒப்பாவர்; புல் அறிவின் ஆடவர் - சிற்றறிவையுடைய ஆண்மக்கள், பிணி பயிரின் - (நீரைக்) கட்டுகின்ற பயிரிலுள்ள, புல் அன்னர் - புல்லை ஒப்பாவர்; வல் என்ற - இளகுதலில்லாத, நெஞ்சத்தவர் - மனமுடையார், கல் அன்னர் - கல்லை ஒப்பாவர், எ-று.

(வி-ரை.) மேல்விளைவை ஆராயாமையாவது - சொண்ட கணவருடைய வருவாய்ப் பொருளுக்கு மிகுதியாக உண்டி முதலியவற்றிற் றுச் செலவிட்டுப் பின்படும் இடுக்கணை உணராமை. பின் - பண்பாகுபெயர். நோய் ஒருவனை வேறுகாரியத்திற் செல்லவொட்டாமல் கட்டுதலால் அதனைப் 'பிணி' என்றது தொழிலாகுபெயர்; வினைமுதற் பொருண்மையதாகிய இகரவிகுதி புணர்ந்துகெட்ட தொழிலடியாகப் பிறந்தபெயரெனினும் ஒக்கும்: புணர்ந்துகெட்ட இகரவிகுதி கருவிப் பொருண்மையதெனின், இக்கருவியைக்கொண்ட வினைமுதல் எப்பொருளென வினுவி மறுக்க. அணி என்பதையும் இவ்வாறு கொள்க; இதில் புணர்ந்துகெட்ட ஐ-செயப்படுபொருண்மைவிகுதி. பெண்டிர்-பண்படியாகப் பிறந்தபெயர்; பெண்டு-பகுதி, இர்-பல்லோர் படர்க்கை விகுதி, உகரக்கேடு சந்தி. பெண்டு - பண்புப்பெயர்; பெண்-பகுதி, து-பகுதிப்பொருள் விகுதி, தகரம் டகரமானது சந்தி. உலகு-இடவாகுபெயர்; இது தமிழ்மொழி. உடைய என்னுங் குறிப்புப் பெயரெச்சம் ஈறு தொகுத்தலாய் நின்றது. அன்புடைமாக்களை உலகிற்கு அணியன்னரென்றது, மனைவி, புத்திரர் முதலிய சம்பந்த முடையாரிடத்து வைத்த அன்பு முற்றியபின் மற்ற உயிர்களிடத்து அருள் பிறத்தலால் அவ்வுயிர்கள் இவரைச் சிறப்பாகச் சொல்லுதலை. வல்லென்ற என்பது இடைச்சொலடியாகப்பிறந்த இறந்தகாலப் பெயரெச்சம். என் என்னும் பகுதிக்குப் பொருள் தானடுத்த வல் என்னும் பண்பின் பொருளேயாம். 'பிணிபேணும் புல்லன்னர்' எனப்

பாடங் கொள்ளின், 'நோயை நீக்காமல் வளர்க்கின்ற விஷப்புல்லை ஒப்பாவர்' என வுரைக்க. (௯௨)

அந்தணரி னல்ல பிறப்பில்லை யென்செயினும்
தாயிற் சிறந்த தமரில்லை யாதும்
வளமையோ டொக்கும் வனப்பில்லை யெண்ணின்
இளமையோ டொப்பதூஉ மில்.

(இ - ள்.) அந்தணரின் - பார்ப்பாரைப்போல, நல்ல பிறப்பு - உயர்ந்த பிறப்பினர், இல்லை - இலர்; என் செயினும் - (தனக்கு) என்ன தீங்கைச் செய்தாலும், தாயின் - தாயைப்போல, சிறந்த தமர் இல்லை-சிறந்த உறவினரிலர்; யாதும்-சிறிதும், வளமையோடு-செல்வத்தோடு, ஒக்கும் - ஒப்பாகும், வனப்பு இல்லை - அழகு இலது; எண்ணின் - ஆராய்ந்தால், இளமையோடு - (எல்லா இன்பங்களையும் அநுபவித்தற் குரியதாகிய) இளமைப்பருவத்தோடு, ஒப்பதும்-ஒத்த பருவமும், இல் - இலது, எ - று.

(வி-ரை.) அந்தணரினென்ற குறிப்பால் பிறப்புத் தொழிலாகு பெயராய் மற்றவரை யுணர்த்திற்று; அந்தணர் - அழகிய தண்மை யுடையாரெனவும், அந்தம் அணர் எனப் பதம் பிரித்து வேதமுடிவின் பொருளை அறிந்து சேர்தலுடையாரெனவும் பொருள்கொள்க; இது இடுகுறிமாத்திரத்தால் பார்ப்பார்க்கும், காரணங் கருதியபோது அக் குணமுடைய பிறர்க்கும் ஆதலால் காரண விடுகுறிப்பெயரெனக. என் - வினப்பெயர். செயினுமென்ற உம்மை உயர்வுசிறப்பினோடு எதிர்மறைக்கண் வந்தது. உயர்வுசிறப்பொன்றே கொண்டு, தமர்மே லேற்றி 'என் செயினும்' என்பதற்கு 'என்ன நன்மை செய்தாலும்' எனவும் உரைக்கலாம். அழகில்லாரையும் யாவரும் விரும்பச் செய்ய வல்லது செல்வமாதலால் அதனோடொக்கும் அழகிலதாயிற்று. இன்பங் களை அநுபவிப்பதற்குரியதும், கல்வி முதலியவற்றைப் பெறுதற்

கும், உடல்வலி உடைமைக்கும் உரியதுமாதலால் இளமையோடொத்த பருவமிலதாயிற்று. ஒடுருபிரண்டும் ஒப்புப்பொருளன. ஒப்பது-எதிர்கால வினையாலணையும் பெயர்; பகுதி - ஒ உம்மை இறந்தது தழீஇய எச்சவும்மை. யாதுமென்பது உம்மை முற்றும்மையாதலால் யாவென்னும் வினா சிறுமையை யுணர்த்தியது. வளமை என்னும் பண்புப்பெயரினிடையே அகரம் சாரியை. (௩௩)

இரும்பி னிரும்பிடை போழ்ப பெருஞ்சிறப்பின்
நீருண்டார் நீரான்வாய் பூசுப—தேரின்
அரிய வரியவற்றாற் கொள்ப பெரிய
பெரியரா னெய்தப் படும்.

(இ - ள்.) இரும்பு - இரும்பினை, இரும்பின் - இரும்பாற் செய்த கருவியால், இடை போழ்ப - (கொல்லர்) நடுவில் துண்டிப்பர்; பெரு சிறப்பின் - மிக்க சிறப்பினையுடைய, நீர் - சோற்றோடு கூடிய நீரை, உண்டார் - உண்டவர், நீரால் - நீரினாலே, வாய் பூசுப-உண்டவாயினைக் கழுவுவர்; தேரின் - ஆராயுமிடத்து, அரிய - (பிறரால் அடைதற்கு) அரியபொருள்களை, அரியவற்றால் - அருமையாகிய முயற்சிகளால், கொள்ப-(அறிவுடையோர்) செய்துகொள்வர்; பெரிய - பெரும்பேறுகள், பெரியரால் எய்தப்படும் - பேரறிவுடையோரால் அடையப்படும், எ-று.

(வி-ரை.) நீர் மிகுதியும், சோறு சிறிதுமாதலால் மிகுதிபற்றி 'நீர்' என்றார் அந்நீரைப் பெற்ற காலத்தி னருமைநோக்கப் 'பெருஞ் சிறப்பினீர்' என்றார். வெறு நீருண்டார் நீரால் வாய் கழுவாராதலால் 'சோற்றோடு கூடிய நீர்' என்றும். வாய்பூசுப-இடக்கரடக்கல். முதலினுள்ள இரும்பு - கருவியாகுபெயர்; அரிய, பெரிய பண்படியாகப் பிறந்த பலவின் படர்க்கைப்பெயர்; இரும்பினென்னும் ஐந்தனுருபும், நீரான் அரியவற்றான் என்னும் மூன்றனுருபுகளும் கருவிப் பொருளன. பெரியாரனென்பது கருத்தாப்பொருளது. (௩௪)

மறக்களி மன்னர்முற் றேன்றுஞ் சிறந்த
அறக்களி யல்லாதார்க் கீயுமுற் றேன்றும்
வியக்களி நல்கூர்ந்தார் மேற்றுங் கயக்களி
ஊரிற் பிளிற்றி விடும்.

(இ - ள்.) மறக்களி - (வீரர்களுக்கு) வீரத்தால் வரும் களிப்பு, மன்னர்முன் - (தம்மையுடைய) அரசர்க்குமுன்னே, தோன்றும்- உண்டாம்; சிறந்த அறக்களி - (ஒருவன் மனத்தில்) மிக்க அறத்தால் வருங் களிப்பு, அல்லாதார்க்கு - (மாறு ஈய) வலியில்லாதவர்க்கு, ஈயு முன் - ஈயுமிடத்து, தோன்றும் - உண்டாம்; வியக்களி - பொரு ளுடையானுக்கு) ஏவுதலால்வருங்களிப்பு, நல்கூர்ந்தார் மேற்று ஆம்- (அவ்வேவுதல்) வறியாரிடத்ததானுல் தோன்றும்; கயக்களி-கீழ்மைக் குணத்தால் வருங்களிப்பு, ஊரில் - (அக்குணமுடையோன் வாழும்) ஊரில், பிளிற்றி விடும்-(இரையும்) பலரும் அறியத்தோன்றும்,எ-று.

(வி - ரை.) இங்கு அறமென்றது அறச்செய்கை பலவற்றுள் ளும் சிறந்த ஈகையை. உயர்ந்தோரையும், ஒப்போரையும் ஒருவன் ஒன்றுசெய்ய ஏவான்; ஏவின் அவ்வேவல் பயனைத்தராமல் அவமதி ப்பைத்தருமாதலால் 'ஏவற்களிப்பு நல்கூர்ந்தார் மேற்று'என்றார். கீழ் மைக்குணத்தால் வருங்களிப்பு ஊரில் பலருமறியத் தோன்றுதலா வது-கீழ்மகன் சிறு காரியத்தைச்செய்து அதனைப் பெருங்காரியமா கக்கருதிப் பலரிடத்துஞ்சென்று சொல்லி மகிழ்தல். ஏவலென்னும் பொருள்படநின்ற வியம் முதனிலைபெருத தொழிற்பெயர். வியக் களி நல்கூர்ந்தார் மேற்றென்பதற்கு: வியக்களி - (யாதேனு மொரு பொருளைப் பெற்றால் அதைக்கண்டு)அதிசயிக்குங் களிப்பு, நல்கூர்ந் தார் மேற்று - வறியாரிடத்துத் தோன்றும், எனவும் உரைக்கலாம்; அவ்வாறுரைக்கின் விய என்னும் உரியாகிய முதனிலைத் தனிவினை பெயரெச்சப் பொருளில் வந்ததென்க. களி - முதனிலைத் தொழிற் பெயர். ஈயுமுன்-இறந்தகால வினையெச்சம்; ஈ - பகுதி, ய் - சந்தி,

உம் - சாரியை, இதன் மகரக்கேடு சந்தி, முன்-இறந்தகால வினையெச்சவிகுதி. நல்கூர்ந்தார் மேற்றும்-ஏழாம்வேற்றுமைத் தொகாநிலைத் தொடர்; மேல் - ஏழாம்வேற்றுமை உருபு; அதற்குத் து - பகுதிப்பொருள்விகுதி, லகரமுந் தகரமும் றகரமானது சந்தி. கீழ்மக்களைக் கயவரென்னும் வழக்கு நோக்கி அவரது குணமும் கயவு எனப்பட்டது. பிளிற்றிவிடல் - பேரொலி செய்துவிட்டல்; அது இங்குப் பலரறியச் செய்தலுக்காயிற்று; இவ்வாறு வருதல் "முகிலின் விம்மி முழங்கின எங்கணும்", "புன்கணீர் பூசறரும்" என்பவற்றுள்ளுங் காண்க. (௩௫)

மையாற் றளிர்க்கு மலர்க்கண்கண் மாலிருள்
நெய்யாற் றளிர்க்கு நிமிர்சுடர் பெய்யல்
முழங்கத் தளிர்க்குங் குருகிலை நட்டார்
வழங்கத் தளிர்க்குமா மேல்.

(இ - ள்.) மலர் கண்கள் - (நீலோற்பலத்தின்) மலர்போலுங் கண்கள், மையால் தளிர்க்கும் - மையினால் நன்கு விளங்கும்; மால் இருள் - பேரிருளில், நிமிர் சுடர் - ஒளி மிகுகின்ற விளக்கம், நெய்யால் தளிர்க்கும் - நெய்யினால் நன்கு விளங்கும்; குருகு-குருக்கத்தி, பெய்யல் முழங்க-(மேகம்) பெய்தலுக்கு முழங்கினால், இலை தளிர்க்கும் - இலைகள் தளிர்க்கும்; மேல் - மேன்மைக்குணமுடையோர், நட்டார் வழங்க - உறவாயினார்க்கு வழங்கும்பொருட்டு, தளிர்க்கும் - பொருள் சிறப்பர், எ-று.

(வி-ரை.) பிறர்க்கு உதவுதற்பொருட்டன்றி உண்ணுதற்கும், வைத்திருப்பதற்கும் பொருள்தேடுங் கீழாய குணத்தினர்போலன்றி மேலாய குணத்தினர் நட்டார் முதலிய பிறர்க் குதவுதற்பொருட்டே பொருள் மிகுதியாகத் தேடுவரென்பது. மாலிரு ளென்பதனைப் பண்புத்தொகைநிலைத்தொடராகக் கொள்ளுதலே அன்றி வினைத்

தொகைநிலைத்தொடராகவுங் கொள்ளலாம்; பொருள்: யாவரும் மயங்குகின்ற இருள் என்பது. மேல்-பண்பாகுபெயர். ஆம் - அசை நிலை. மூழ்ங்க என்பது காரணப்பொருட்டாதலால் இறந்தகாலத்தில் வந்த செயவென் வினையெச்சம்; வழங்க என்பது காரியப்பொருட்டாதலால் எதிர்காலத்தில் வந்த அவ்வினையெச்சம். (௩௯)

நகையினிது நட்டார் நடுவட் பொருளின்
தொகையினிது தொட்டு வழங்கின் வகையுடைப்
பெண்ணினிது பேணி வழிபடிற் பண்ணினிது
பாட லுணர்வா ரகத்து.

(இ - ள்.) நகை - முகமலர்ச்சி, நட்டார் நடுவண் - நட்பினோர்க்குள், இனிது - (அவர்க்கு) இன்பந் தருவதாகும்; பொருளின் தொகை - பொருளின் திரள், தொட்டு - (வெறுப்பில்லாமல்) எடுத்து, வழங்கின் - (உடையோரால் அறத்தின்பொருட்டுக்) கொடுக்கப்பட்டால், இனிது - இன்பந்தருவதாகும்; வகை உடை - (குணத்தின்) வகையையுடைய, பெண் - பெண்ணினது தன்மை, பேணி - (கணவனை உண்டி முதலியவற்றால்) காத்து, வழிபடின் - (அவனைத் தெய்வமாகக் கருதி) வழிபாடுசெய்தால், இனிது - (யாவர்க்கும்) இன்பந் தருவது; பண் - பாலையாழ் முதலியவை, பாடல் உணர்வாரகத்து - பாடுதற்றொழிலை அறிபவரிடத்து, இனிது - இன்பந்தருவன ஆகும், எ-று.

(வி-ரை.) இனிது-பண்படியாகப் பிறந்த குறிப்புவினைமுற்று; இதில் பகுதி இனிமை; இன்பெனக் கொள்ளின் புவ் விகுதிகெட்டு, மெலிது, வெளிது என்பனபோல இகரச்சாரியை பெற்றதெனினும் பொருந்தும். நகை என்பதுபோலத் தொகைதொழிற்பெயர்; தொகு-பகுதி, ஐ - புடைபெயர்ச்சிப் பொருள்விகுதி, உகரக்கேடு சந்தி. தொட்டு-இறந்தகால வினையெச்சம், தொடு-பகுதி, உ வினையெச்ச

விகுதி, முற்றியலுகரமாதலால் பகுதி ஒற்றிரட்டியது விரித்தல் விகாரம், உகரக்கேடு சந்தி. குணவகை-அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என நான்கு. பெண்-பொருளாகுபெயர். பண்-சாதியொருமை ( )

காப்பவர்க்குச் செல்சார் கவிழ்தலெஞ் ஞான்றும்
இரப்பவர்க்குச் செல்சாரொன் றீவார் பரப்பமைந்த
தானைக்குச் செல்சார் தறுகண்மை யூனுண்டல்
செய்யாமை செல்சா ருயிர்க்கு.

(இ-ள்.) எஞ்ஞான்றும் - எந்நாளிலும், காப்பவர்க்கு-ஒன்றும் ஈயாமல்) ஒளித்துவைக்கு மியல்புடையார்க்கு, செல் சார் - செல்லுதற்குரிய பற்றுக்கோடு, கவிழ்தல் - (அவரைக் கண்டவளவில்) முகங் கவிழ்தலாம்; இரப்பவர்க்கு-யாசிக்கு மியல்புடையார்க்கு, செல்சார் - செல்லுதற்குரிய பற்றுக்கோடு, ஒன்று ஈவார் - (அவர் வேண்டிய தாகிய) ஒரு பொருளைக் கொடுக்கு மியல்புடையார்; பரப்பு அமைந்த - (போரில்) சோம்பலின்மையுள்ள, தானைக்குச் செல் சார் - சேனைக்குச் செல்லுதற்குரிய பற்றுக்கோடு, தறுகண்மை - (போர் முகத்தில்) இரக்கமின்மை; உயிர்க்குச் செல் சார்-(ஒருவனது) உயிர்க்குச் செல்லுதற்குரிய பற்றுக்கோடு, ஊன் உண்டல் செய்யாமை - (மற்ற வுயிர்களினது) தசையை உண்ணாமை, எ-று.

(வி-ரை.) காப்பவர், இரப்பவர், ஈவார் இவ்வினையாலணையும் பெயர்களில் பகர வகரங்கள் இயல்பினை யுணர்த்தின. எதிர்காலங் காட்டுவன ஆகக்கொண்டு, இயல்பினால் நிகழ்காலம் எதிர்காலமாக வந்த காலவழுவமைதி எனினும் ஒக்கும், [நன்-பொது-சூ-௩௩] சார்-முதனிலைத்தொழிற்பெயர்; சார்தற்குத் துணையாகிய கோலினை உணர்த்தலால் தொழிலாகுபெயர்; இது இலக்கணையாகத் துணையாயமைந்த பொருளை யுணர்த்திற்று. சாரென்னும் முதனிலையோடு செயப்படு பொருண்மையாகிய ஐ விகுதி புணர்ந்துகெட்ட தொழ்

லடியாகப் பிறந்த பெயரெனினும் ஒக்கும். காப்பவர்க்கும், இரப்பவர்க்கும் செல்லுவனவாவன - காத்தலும், இரத்தலுமாம்; தானைக்குச் செல்லுவதாவது-வெற்றி; உயிர்க்குச் செல்லுவதாவது-மறுமைக்குரிய அறம். செல்சாரென்பதில் செல்லென்பது வினைத்தொகைக் குறிப்பாயினும் புணர்ச்சியிலக்கணம் வினைத்தொகைநிலைதொடரென்று கூறுக. (௩௮)

கண்டதே செய்பவாங் கம்மிய ருண்டெனக்
கேட்டதே செய்ப புலனுள்வார் வேட்ட
இனியவே செய்ப வமைந்தார் முனியாதார்
முன்னியவே செய்யுந் திரு.

(இ - ள்.) கம்மியர் - கம்மாளர், கண்டதே - (தாம்) கண்ட பொருள்போல்வதனையே, செய்ப-செய்யவல்லார்; புலன் ஆள்வார்-அறிவினை யாளுதலுடையார், உண்டு எனா - (பெரும்பயன்) உள்ளதென்று, கேட்டதே - (ஆசிரியர்பால்) கேட்ட அறத்தையே, செய்ப-செய்யவல்லார்; அமைந்தார்-(நற்குணங்களால்) நிறைந்தவர், வேட்ட-(தாம்) விரும்பினவற்றுள், இனியவே-(பிறர்க்கு) இனிமையாயினவற்றையே, செய்ப - செய்யவல்லார்; திரு - திருமகள், முனியாதார்-(தம்மின் எளியாரிடத்தும்) கோபஞ் செய்யாதவர், முன்னியவே - கருதினவற்றையே, செய்யும் - செய்வள், எ-று.

(வி-ரை.) கேட்டதே என்பதைப் பாடங்கேட்ட பொருளையே எனப் பொருள் கொள்ளின் அது இடைமாணுக்காது தொழிலாதலால் புலனுள்வார்க்கு இயையாமை காண்க. தேற்றேகாரத்தால் இந்நால்வரும் கண்டது முதலிய நான்கிற்கும் மாறுவனவற்றைச் செய்யாரென்க. கண்டது, கேட்டது, முன்னிய, வேட்ட இந்நான்கு சொற்களும் வினைமுதல் வினையைச் செயப்படுபொருளின்மே லேற்றிக் கூறும் வினையாலணையும் பெயர்கள். இங்ஙனங் கொள்ளாமல்

செயப்பாட்டு வினைப்பொருண்மைப் படு விகுதி புணர்ந்துகெட்டு நின்ற வினையாலணையும் பெயர்களெனினும் ஒக்கும். வேட்ட என்பதற்குச் செயப்பாட்டு வினைப்பெயர் வேட்கப்பட்டன என்பது. திருமுன்னியவே செய்யுமென்றது கோபமில்லாதார்க்கு அறக்கடவுள் அவர்கள் நினைத்த நற்கருமங்களையே இடையூறின்றி முடிக்குமென்பது. இவ்வேகாரத்தை பிரிநிலையாக வைத்து அவற்றிற்கு மாறாக இடையூறுகள் செய்யாதெனவுங் கொள்க. (௩௯)

திருவுந் திணைவகையா னில்லா பெருவலிக்
கூற்றமுங் கூறுவ செய்துண்ணு—தாற்ற
மறைக்க மறையாதாங் காம முறையும்
இறைவகையா னின்று விடும்.

(இ-ள்.) திருவும்-செல்வங்களும், திணை வகையால்-குடியினது வகைகளில், நில்லா - (தக்கபடி) நிலைபெறா; பெரு வலி - மிக்க வலியையுடைய, கூற்றமும் - யமனும், கூறுவ - (தன்னால் உண்ணப்படுபவனால்) சொல்லப்படுவனவற்றை, செய்து உண்ணாது - செய்து (பின் அவனுயிரைக்) கொள்ளான்; காமம்-காமமும், ஆற்ற மறைக்கவும் - மிகுதியாக மறைக்கவும், மறையாது மறைபடாது; முறையும்-செங்கோலும், இறை வகையால்-அரசனது செய்கைவகையால், நின்று விடும் - நிலைத்துவிடும், எ-று.

(வி-ரை.) குடிவகை - உயர்ந்தகுடி, இழிந்தகுடி என்பன. அவ்வகைகளில் செல்வங்கள் நில்லா என்றது உயர்ந்த குடிப்பிறப்பினர் செல்வமுடையார்களாயும், இழிந்த குடிப்பிறப்பினர் செல்வமிலராயும், இம்முறைமாறியு மிருத்தலை; ஆதலால் 'திரு திணைவகையானில்லா' என்றார். திணைவகையா லென்பது உருபுமயக்கம் [நன்-பெய-௬-௩0]. பொன் மண் என்பனபற்றிச் செல்வப்பொருள் பலவாயின. காமமென்பத னீற்றில் உம்மை தொகுத்தலாயிற்று. உம்மை

களுக்குப் பொருள் கள்வமென்பார்க்கு மென்னும் செய்யுளுரையி லுரைத்தாற்போல உரைத்துக்கொள்க. அம்முச்சாரியை பெற்ற கூற்றம் சொல்லால் அஃறிணையாதலால் உண்ணுதென்னும் அத்திணை வினை கொண்டது. உண்ணுதென்பது இலக்கணை. செய்தென்னும் இறந்தகால வினையெச்சம் உண்ணுதென்னும் எதிர்மறை வினையின் முதனிலையோடு முடிந்தது. கூற்று தன்னால் உண்ணப்படுபவனால் சொல்லப்படுவனவற்றைச் செய்தலாவது-இன்னும் சிலநாள் கழித்து வா, உயிரைத் துன்பப்படுத்தாது கொள் என்பன முதலியவற்றைச் செய்தல். அரசனது செய்கைவகை - தன் ஆளுகையின் கீழமைந்த குடிகளைப் பகைவர் வருத்தாமற் காத்தல், அவர்பாற் குற்றமுண்டாயின் தண்டித்தல், இன்சொல் சொல்லுதல், தளர்ந்தகாலத்தில் வேண்டுவனவற்றை உபகரித்தலுமாகிய தழுவுதல் முதலாயின. (௪௦)

பிறக்குங்காற் பேரெனவும் பேரா திறக்குங்கால்
நில்லெனவு நில்லா துயிரெனைத்து நல்லாள்
உடன்படிற் றானே பெருகுங் கெடும்பொழுதில்
கண்டனவுங் காணுக் கெடும்.

(இ - ள்.) உயிர் - உயிரானது, பிறக்கும்கால்-பிறக்குங் காலத்தில், பேர் - இவ்வுடலை விட்டு நீங்கு, எனவும் - என்று வேண்டிக் கொள்ளவும், (எனைத்தும்) பேராது-எவ்வளவாயினும் நீங்காது; இறக்குங்கால் - இறக்கின்றகாலத்தில், நில் எனவும் - நீங்காதை என்று வேண்டிக்கொள்ளவும், எனைத்தும் நில்லாது - எவ்வளவாயினும் நீங்காதிராது; நல்லாள் - திருமகள், உடன்படின் - உடன்பட்டுச் சேர்ந்தால், தானே பெருகும் - (செல்வம்) தானேவளரும்; கெடும்பொழுதில் - (அத்திருமகள்) நீங்குங்காலத்தில், கண்டனவும் - காணப்பட்ட பொருள்களும், காணு - காணப்படாதன ஆகி, கெடும் - அழியும், எ-று.

(வி-ரை.) போரா, நில்லா எனவும், உயிரனைத்தும் எனவும் பாடமுண்டு. அப்பாடத்தில் போர், நில் என்பன பன்மையி லொருமை வந்த பால்வழுவமைதி என்க. எனவும், கண்டனவுமென்ற உம்மை கள் மூன்றும் உயர்வுசிறப்பு. எனைத்துமென்ற உம்மை முற்றுப் பொருளோடு இழிவுசிறப்புப் பொருளது. அனைத்துமென்ற உம்மை முற்றும்மை; இவற்றுக்குப் பகுதி முறையே எத்தனை அத்தனை என் பவற்றின் மரூஉ ஆகிய எனை, அனை என்பன. ஏகாரம் தேற்றம். காணாதென்பது ஈறு தொகுத்தலாயிற்று. கண்டன என்றது உள்ள பொருள்களை, காணா கெடுமென்று பாடமாயின் வினைமுற் றெச்ச மெனக் கொள்க. நல்லாள் - பெண்ணின் சாதிப்பெயர். பின் இரண் டடியையும் மனையாள்மேலேற்றிக் கூறினும் பொருந்தும். மனை யாள் (இல்லறத்தை நடத்தக் கணவனோடு) உடன்பட்டால் செல்வந் தானே பெருகும், அவ்வொழுக்கங் கெடுங்காலத்தில் காணப்பட்ட பொருள்களும் காணப்படாதன ஆகிக் கெடும் என உரைத்துக் கொள்க. (சச)

போரறின் வாடும் பொருநர்சீர் கீழ்வீழ்ந்த
வேரறின் வாடு மரமெல்லா நீர்பாய்
மடையறி னீணெய்தல் வாடும் படையறின்
மன்னர்சீர் வாடி விடும்.

(இ - ள்.) பொருநர்-போர் செய்யவல்ல வீரர்களது, சீர்-வீரத் தின் சிறப்பு, போர் அறின் - போர் இலதானால், வாடும் - வருந்தும்; மரம் எல்லாம் - மரங்களெல்லாம், கீழ் வீழ்ந்த - கீழேபாய்ந்த, வேர் அறின் - வேரறுந்தால், வாடும் - உலரும்; நீள் நெய்தல்-(நீரினளவு) வளர்கின்ற நெய்தற்கொடி, நீர் பாய் - (வருவாயின் வழியே) நீர் பாய் கின்ற, மடை அறின்-குளம் நீர்வற்றினால், வாடும்-உலரும்; மன்னர் சீர் - அரசரது செல்வம், படை அறின் - சேனையிலதானால், வாடி விடும் - நீங்கிப்போம், எ-று.

(வி-ரை.) போர்-முதனிலை பெறாத தொழிற்பெயர்; முதனிலை திரிந்த தொழிற்பெயராயின், விடு வீடு, கூடு கூட்டு, கொள் கோள் என்பனபோல பொரு போரு என ஈற்றெழுத்துக் கெடாமல் வரல் வேண்டுமென்றே! அங்ஙனம் வாராமையால் ஆகாது. பொருநர் "ஆண்டிருக்குநன்" என்பதிற்போல நகரம் நிகழ்கால இடைநிலை யல்லாமையால், உழுநர் என்பதுபோலத் தொழிலடியாகப் பிறந்தபெயரொன்று கொள்க. காரண இடுகுறிப்பெயராகிய மடை இங்குக் குளத்துக் காயிற்று; மடை தொழிலடியாகப் பிறந்தபெயர்; மடு-பகுதி, ஐ-வினை முதற்பொருண்மை விகுதி, உகாரக்கேடு சந்தி; பொருள்:நீரைத் தன்னில் அடக்குவது என்பது.வாடிவிடும்-செய்யுமென்முற்று;வாடு-பகுதி இ-சாரியை, விடு-துணிவுப்பொருண்மை விகுதி, உகாரக்கேடு சந்தி, அனைத்துமொருபகுதி, உம்-எதிர்காலச் செய்யுமென் முற்று விகுதி, உகாரக்கேடு சந்தி; இது பெயரெச்சமே வினைமுற்றானது. (சஉ)

ஏதிலா ரென்பா ரியைபிலார் யார்யார்க்கும்
காதலா ரென்பார் தகவுடையார் மேதக்க
தந்தை யுபாத்தி யெனப்படுவான் றாயென்ப
முந்துதாஞ் செய்த வினை.

(இ-ள்.) யார் யார்க்கும்-எல்லாருக்கும், ஏதிலார் என்பார்-அயலாரெனப்படுவார், இயைபு இலார் - நட்பின்தன்மை யில்லாதவர்; (யார் யார்க்கும்) காதலார்-எல்லாருக்கும் அன்புள்ளார், என்பார்-எனப்படுவார், தகவு உடையார் - நடுவுநிலைமையுடையார்; மேதக்க - மேன்மையுள்ள, (யார்யார்க்கும்) தந்தை எனப்படுவான்-(கற்றவர்) எல்லார்க்கும் பிதா என்று சொல்லப்படுவான், உபாத்தி - நூல்களைக் கற்பித்தவன்; (யார்யார்க்கும்) தாய் என்ப-பிறந்த எல்லார்க்கும் தாயென்று

சொல்லப்படுவன, முந்து - முற்பிறப்பில், தாம் செய்த வினை - தாம் செய்த நல்வினைகள், எ-று.

(வி-ரை.) நட்பின் தன்மை யில்லாரோடு நட்புக்கொள்வா ரில்லாமையால் அவரை 'ஏதிலார்'என்றும், நடுவுநிலைமையடையார் யாவரையும் ஒப்பக்காணுதலால் அவரைக் 'காதலார்' என்றும், உபாத்தியாயன் நூல்களைக் கற்பித்தலால் அறநெறியை யுணர்வித்தவனாகுதலால் அவனைத் 'தந்தை' என்றும், முன்னை நல்வினைகள் இம்மையில் இன்பங்களை வேண்டியபடி ஊட்டுதலால் அவற்றைத் 'தாய்'என்றுங் கூறினார். ஏதிலார்: ஏதில் - பகுதி, ஆர் - பலர்பால் படர்க்கைவிகுதி. இப்பகுதி, ஏது இல் என்னுந் தொடர்மொழி. பொருள் : நட்பு, பகை என்னும் இரண்டில் ஒன்றுமில்லாரென்பது. அடுக்குப் பன்மைப் பொருளது. யார் - யாவரென்னும் வினாப்பெயரின் மரூஉ. தகவு - தொழிற்பெயர்; தகு-பகுதி, அ-சாரியை, வு-புடைபெயர்ச்சி விகுதி, உகரக்கேடு சந்தி. இப்பகுதியடியாக நடுவுநிலைமை யுடையார்க்குத் தக்காரெனப் பெயர் வழங்கும். மேதக்க-இறந்தகாலப் பெயரெச்சம்; மேன்மை தகு என்பதன் மரூஉவாகிய மேதகு-பகுதி, அ-பெயரெச்ச விகுதி, பகுதி ஒற்று இரட்டியது விரித்தல் விகாரம், அதுவே காலங் காட்டியது, அ-பெயரெச்சவிகுதி, உகரக்கேடு சந்தி. உபாத்தி - வடமொழிச்சிதைவு; உபாத்தியாயனெனவும் வழங்கும். தாயென்ற குறிப்பால் வினை நல்வினைக்காயிற்று. (௬௩)

பொறிகெடு நாணற்ற போழ்தே நெறிபட்ட
ஐவராற் றானே வினைகெடும் பொய்யா
நலங்கெடு நீரற்ற பைங்கூழ் நலமாறின்
நண்பினர் நண்பு கெடும்.

(இ-ள்.) நாண் - (தனக்கு ஒவ்வாத இழிதொழிலில் ஒருவன்) நாணுதல், அற்ற போழ்தே - நீங்கினபோதே, பொறி கெடும் - (அவ

ணது புகழாகிய) செல்வங் கெடும்; நெறி பட்ட - நல்வழியிலமைந்த, ஐவரால் - ஐம்பொறிகளால், வினை தானே கெடும் - தீவினை முயற்சி யில்லாமலே கெடும்; நீர் அற்ற பைங்கூழ் - நீரைப்பெறாத பயிர், பொய்யா - பொய்க்காத, நலம் கெடும்-விளைவு கெடும்; நலம் மாறின் - (ஒருவனது) நற்குணம் வேறுபட்டால், நண்பினர் நண்பு கெடும் - (தன்னோடு) சிநேகர் கொண்ட சிநேகம் கெடும், எ-று.

(வி-ரை.) நாணென்றமையால் பொறி புகழ்ச்செல்வமென்றும். நாண்-முதனிலைத் தொழிற்பெயர். ஏகாரமிரண்டும் தேற்றம். நெறி பட்ட - உயர்வுபற்றிவந்த திணைவழுவமைதியாகிய ஐவரென்பது தொகைக்குறிப்புச்சொல். 'நாணற்றபோழ்தே பொறிகெடும்' என்ப தற்கு 'அசைக்குங் கயிறு அறுந்தபோதே சூத்திரப்பிரதிமையி னசைவுகெடும்' எனவும் உரைக்கலாம். போழ்து - பொழுதென்பதன் மரூஉ; போதெனவும் வரும். (சச)

நன்றிசா நன்றறியா தார்முன்னர்ச் சென்ற
விருந்தும் விருப்பிலார் முற்சா மரும்புணர்ப்பின்
பாடல்சாம் பண்ணறியா தார்முன்ன ரூடல்சாம்
ஊட லுணரா ரகத்து.

(இ-ள்.) நன்று அறியாதார் முன்னர் - (ஒருவர் செய்த) உப காரத்தை மறக்கு மியல்பினரிடத்து, நன்றி சாம் - செய்த உபகாரம் அழியும்; விருப்பு இலார் முன் - அன்பில்லாதவரிடத்து, சென்ற விருந்தும் - சென்ற விருந்தினரும், சாம் - வாடுவர்; பண் அறியா தார் முன்னர் - பாலையாழ் முதலிய பண்ணையறியாரிடத்து, அரு புணர்ப்பின் - (பண்ணோடு) அருமையாகிய பொருத்தத்தையுடைய, பாடல் சாம் - பாடுதற்றொழில் கெடும்; ஊடல் - (காமத்திற் கின்ப மாகிய) ஊடுதலை, உணராரகத்து - அளவறிந்து நீங்காத நாயகரிடத் தில், ஊடல் சாம் - (அன்புடைய மாதர்) ஊடுதல் பயன்படாமல் அழி யும், எ-று.

(வி-ரை.) நன்றி சாதலென்றது அவர் நினையாமையை. விருப்பு-முதனிலை திரிந்த தொழிற்பெயர். உம்மை இறந்தததழீஇய எச்சவும்மை. விருந்து-பண்பாகுபெயர்; விருந்தினர் அறிந்துவருபவரும், அறியாமல் வருபவருமென இருவகையர். சாகும் என்பதில் குவ்வுயிர் மெய் கெட்டது; சாவுமெனக் கொள்ளினுங் குற்றமன்று. (௫௫)

நாற்ற முரைக்கு மலருண்மை கூறிய
மாற்ற முரைக்கும் வினைநலந் தூக்கின்
அகம்பொதிந்த தின்மை மனமுரைக்கு முன்னம்
முகம்போல முன்னுரைப்ப தில்.

(இ-ள்.) தூக்கின் - ஆராயுமிடத்து, மலர் உண்மை-நல்ல மலர்களினது இருப்பை, நாற்றம் உரைக்கும் - (அம்மலர்களின்) மணமானது அறிவிக்கும்; வினை நலம் - (ஒருவனுடைய) செய்கையினது நன்மை, கூறிய மாற்றம் - (அவன்) பேசிய சொல், உரைக்கும்-அறிவிக்கும்; அகம்-(ஒருவன் பிறர்க்குத் தோன்றாமல்) தன்னுள், பொதிந்த - மறைத்துவைத்த, தின்மை-தீமையை, மனம் உரைக்கும்-(அவனுக்குத்)தன் மனமே அறிவிக்கும்; முன்னம்-(ஒருவனது)கருத்தை, முகம்போல - முகத்தைப்போல, முன் உரைப்பது - முன்னே தெரிவிக்கவல்லது, இல் - இல்லை, எ-று.

(வி-ரை.) வினைநலம் ஒருவன் செய்யுந் தொழில் பொருளையே அன்றி அறத்தையும், புகழையுங் கொடுக்கு நன்மையாயிருத்தல். தீமையை மனம் அறிவித்தல்-அத்தீமைக்குத் தான் சாட்சியாய் நின்று அவனை வருத்தல். 'அகம் பொதிந்த தீமை' எனவும் பாடமுண்டு. உண்மை-குறிப்புத்தொழிற்பெயர். மலருண்மை - எழுவாய்த் தொகாநிலைத்தொடர்; தொழிற்பண்புத் தற்கிழமைப்பொருட்டாகிய ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடரெனினும் அவ்வாறுவதும் வினைமுதற்பொருளில் வந்ததேயாம். முகம் - தொழிலுவமம்; உரைப்பது-

வினையாலணையும்பெயர். நாற்ற முரைக்கும் என்பது முதலிய நான்கும் பேசாத அஃறிணைப்பொருள்களைப் பேசுவனபோல வைத்துக் கூறும் ஓர்மாபுவழுவமைதி [நன்-பொது-சூ-௩௮] "கேட்குந போலவும், கிளக்குந போலவும், இயங்குந போலவும், இயற்றுந போலவும், அஃறிணை மருங்கினும்அறையப் படுமே." முன்னம்-தொழிற்பெயர்; முன்-பகுதி, ன்-சந்தி, அம் - புடைபெயர்ச்சிவிகுதி; கருதப்பட்டதெனப் பொருள் கொண்டு, தொழிலடியாகப் பிறந்த பெயருமென்னலாம்; அம்-செயப்படுபொருண்மை விகுதி என்க. இல்லை என்பதில் ஐ-தொகுத்தல்; இதனைக் கடைக்குறை என்பாருமுளர். (௬௬)

மழையின்றி மாநிலத்தார்க் கில்லை மழையும்
தவமிலா ரில்வழி யில்லை தவமும்
அரச னிலாவழி யில்லை யரசனும்
இல்வாழ்வா ரில்வழி யில்.

(இ-ள்.) மழை இன்றி - மழை இல்லாவிட்டால், மா நிலத்தார்க்கு - பெரிய பூமியிலுள்ளார்க்கு, இல்லை - (பொருளும் இன்பமுமாகிய உலகியல்) இலதாகும்; மழையும்-(அத்தன்மையதாகிய) மழையும், தவம் இலார்-தவஞ்செயலுடையார், இல்வழி-இல்லாத இடத்து, இல்லை - பெய்தலில்லை; தவமும் - (அத்தன்மையதாகிய) தவமும், அரசன் இலாவழி - (நீதிதவறு தாளுகின்ற) அரசனில்லாவிடத்து, இல்லை - நடத்தலிலது; அரசனும் - அவ்வரசனும், இல் வாழ்வார் - இல்லறத்தோடுகூடி வாழ்பவர், இல்வழி - இல்லாவிடத்து, இல் - இலனுவான், எ-று.

(வி-ரை.) நன்மை தீமைகளைப் பகுத்துணர்தற்குரிய மக்கண்மேல் வைத்து 'மாநிலத்தார்க்கில்லை' என்றாராயினும் "ஒருமொழி யொழிதன் இனங்கொளற் குரித்தே" என்பதனால் ஒழிந்த அஃறிணைக்குங் கொள்க. விசும்பிலா ரென்பதுபோன்ற தவமிலார் என்

பது தொழிலடியாகப் பிறந்தபெயர்; தவம் - பகுதி, இல் - சாரியை, ஆர் - பல்லோர்படர்க்கைவிகுதி. இவர் வீட்டைவிட்டு வனத்தில் தீயோடு போய் மனையாள் வழிபடத் தவஞ்செய்வோர். இத்தவ வொழுக்க மில்லாதபோது வேள்வி யில்லாமையால் மழையிலதாயிற்று. நீதிதவறாத அரச னில்லாதபோது அந்தணர் முதலானோர் ஒழுக்கங் கெடுவராதலால் அவ்வரச னிலாதபோது தவமிலதாயிற்று. இல்வாழ்வாரென்றது குடிகளை. உம்மைகள் உயர்வுசிறப்பு. இல்வழி-பண்புத்தொகைநிலைத்தொடர்; விரிந்தால் இன்மையாகிய வழி என விரியும். தவமிலா ரில்வழி என்றது திணைவழுவமைதி; இதனை ஈறு கெட்ட பெயரெச்சத் தொகாநிலைத்தொடரென்பா ரொருவர்; பெயரெச்சம் ஈறுகெடின் இல்லாவழி என நிற்குமே அன்றி இங்ஙனம் நில்லாது; இதனைப் பெயரெச்சத் தொடரெனின் கருங்குதிரை, நற்கருமம் என்பவற்றையும் அத்தொடரென்னல் வேண்டும்; என்னின் பண்புத் தொகைநிலைத்தொடரொன்று இல்லையாகும்; ஆதலால் அது குற்றமாம். இலாவழி என்பதும் அத்தொகைநிலைத்தொடர். ஆகாரம் சாரியை; ஈறுகெட்ட பெயரெச்சத் தொகாநிலைத்தொடரெனினும் ஒக்கும். (சஎ)

போதினா னந்தும் புனைதண்டார் மற்றதன்
தாதினா னந்துஞ் சுரும்பெல்லாம்—தீதில்
வினையினா னந்துவர் மாக்களுந் தத்தம்
நனையினா னந்து நறா.

(இ-ள்.) போதினால் - பேரரும்பினால், புனை தண் தார்-தொடுக்கப்பட்ட மாலை, நந்தும் - மிகுதியாக விளங்கும்; அதன் தாதினால் - அம்மலர்களினுடைய தாதுக்களின் மணத்தினால், சுரும்பு எல்லாம் - வண்டுகளெல்லாம், நந்தும் - (அப்பேரரும்புகளில்) வந்து சேரும்; தீது இல்-தீங்கில்லாத, வினையினால்-நற்செய்கையினால், மாக்களும் - மனிதர்களும், நந்துவர் - உயர்வர்; தத்தம்-மாமுதலியவற்றின், நனை

வினால் - அரும்பின் செழுமையினால், நறா நந்தும் - தேன் பெருகும்,
எ - று.

(வி-ரை.) தாது, நனை - பொருளாகுபெயர். போது - காலவாகு
பெயர்; போது-சாதியொருமை. உம்மை இறந்ததுதழீஇய எச்சவும்
மை; அடுக்குப் பன்மைப்பொருளது. நறா என்னும் பெயர் குற்
றெழுத்தின் கீழ்நின்ற ஆகார ஈற்று மொழியாதலால் அவ்வாகாரங்
குறுகி நற எனவும், அதனோடு உகரம் பெற்று நறவு எனவும் வரும்.
[நன்-உயி-சூ-உஉ] "குறியதன் கீழ்ஆக் குறுகலும் அதனோ, டுகர
மேற்றலும் இயல்பும்ஆம் தூக்கின்." (சஅ)

சிறந்தார்க் கரிய செறுதலெஞ் ஞான்றும்
பிறந்தார்க் கரிய துணைதுறந்து வாழ்தல்
வரைந்தார்க் கரிய வகுத்தூ ணிரந்தார்க்கொன்
றில்லென்றல் யார்க்கு மரிது.

(இ - ள்.) சிறந்தார்க்கு - நட்பு மிகுந்தவர்க்கு, எஞ்ஞான்றும் -
(தம்முள் ஒருவர்) பொறுத்தற்கரிய குற்றஞ் செய்தகாலத்தும்,
செறுதல்-(அவரது நட்பை) விட்டொழிதல்கள், அரிய-உண்டாகா;
பிறந்தார்க்கு - (உயர்குடியில்) பிறந்தவர்க்கு, (எஞ்ஞான்றும்)-(பரத்
தையால்) மிக்க செல்வம் பெறவந்த காலத்தும், துணை - (இல்லறத்
திற்குத்) துணையாகிய மனையாளை, துறந்து - கைவிட்டு, வாழ்தல் -
(அப்பரத்தையோடுகூடி) வாழ்தல்கள், அரிய - உண்டாகா; வரைந்
தார்க்கு - (தம் உணவின் பொருட்செலவை) அளவுசெய்து வாழ்வார்
க்கு, (எஞ்ஞான்றும்) - மிக்க செல்வம்பெற்ற காலத்தும், வகுத்து
ஊண்-(விருந்தினர் முதலானோர்க்குப்) பகுத்துத் தாம் உண்ணுதல்
கள், அரிய - உண்டாகா; யார்க்கும் - (அருளுடையார்) எல்லார்க்கும்,
(எஞ்ஞான்றும்)-வறியரானகாலத்தும், ஒன்று - (அவர்க்கு வேண்டிய

தாகிய) ஒரு பொருளை, இரந்தார்க்கு - யாசித்தவர்க்கு, இல் என்றல் - இல்லை என்று மறுத்தல், அரிது - உண்டாகாது, எ-று.

(வி-ரை.) பேசுதல், மருவுதல் முதலியவற்றால் செறுதலும், தாம் அநுபவிக்கும் பலவகை இன்பங்களால் வாழ்தலும், உணவின் வகையால் உண்ணுதலும் பலவாயின; இவ்வாறன்றிச் செறுதல் அரிய என்பது முதலிய மூன்றிலும் அரிய என்பன ஒருமையிற் பன்மை வந்த பால்வழுவமைதி என்னலுமாம். இங்கு அருமை இன்மை குறித்து நின்றது. துணை - பண்பாகுபெயர். பிறந்தார்க்கு - உடன் பிறந்தவர்க்கு, துணை துறந்து - சகோதரனை நீக்கி, வாழ்தல் - சுகித்தல்கள், அரிய - உண்டாகா என உரைத்தலுமாம். ஒன்று-எண்ணலளவையாகுபெயர். எஞ்ஞான்றும் என்பதை எல்லாவற்றோடுங் கூட்டுக. உம்மைகளிரண்டும் முற்றும்மைகள். ஞான்று - காலப்பொருளதாகிய இடைச்சொல். ஊண் - முதனிலை திரிந்த தொழிற்பெயர். என்றல்-இடைச்சொலடியாகப் பிறந்த தொழிற்பெயர். (சக)

இரைசுடு மின்புறா யாக்கையுட் பட்டால்
உரைசுடு மொண்மையி லாரை—வரைகொளா
முன்னை யொருவன் வினைசுடும் வேந்தனையும்
தன்னடைந்த சேனை சுடும்.

(இ - ள்.) இரை - கொழுமையான உணவு, இன்பு உறாத - (பிணியால்) துன்பப்படுகின்ற, யாக்கையுள் பட்டால் - உடலினுள் சேர்ந்தால், சுடும் - வருத்தும்; உரை - (அறிவுடையோரது) சொல், ஒண்மை இல்லாரை - அறிவில்லாரை, சுடும் - வருத்தும்; ஒருவன் - ஒருவனது, வரை கொளாத - அறத்தினது எல்லையைக்கொள்ளாத, முன்னை வினை-முற்பிறப்பிற் செய்த தீவினையானது, சுடும்-(அவனை இம்மையில்) வருத்தும்; வேந்தனையும்-அரசனையும், தன் அடைந்த சேனை-அவனைச் சார்ந்து வாழ்கின்ற சேனை, சுடும் - (முறையறிந்து காக்காவிட்டால்) வருத்தும், எ-று.

(வி-ரை.) நன்மை தீமைகளை விளங்க உணர்தல் அறிவால் ஆதலால் அவ்வறிவை 'ஒண்மை' என்றார். யாக்கையு ளொன்றது வயிற்றை. கொளா என்னும் ஈறு தொகுத்தலாய் நின்ற எதிர்மறைப் பெயரெச்சம் காரணப்பொருட்டாய்நின்று வினை என்னும் காரியமாகிய பிறபெயர் கொண்டது. யாக்கை என்பது தொழிலடியாகப் பிறந்தபெயர்; யா-பகுதி, க் - சந்தி, கு-சாரியை, ஐ - செயப்படுபொருண்மை விகுதி, உகரக்கேடு சந்தி; பொருள்: கட்டப்பட்டதென்பது; இவ்வாறன்றிக் கை-புடைபெயர்ச்சி விகுதியாகக்கொண்டு தொழிலாகு பெயரெனினும் ஒக்கும். உம்மை - உயர்வுசிறப்புப்பொருளது. உரைசுடு மொண்மையில்லாரை என்பதற்கு ஒண்மை இல்லாரை - அறிவில்லாரை, உரை சுடும் - (அவர் கூறும்) தீச்சொல் வருத்தும், எனவும் உரைக்கலாம். (௫௦)

எள்ளற் பொருள திகழ்த லொருவனை
உள்ளற் பொருள துறுதிச்சொல்—உள்ளறிந்து
சேர்தற் பொருள தறநெறி பன்னூலும்
தேர்தற் பொருள பொருள்.

(இ-ள்.) ஒருவனை இகழ்தல் - பிறனொருவனை (ஒருவன்) அவமதித்தல், எள்ளற்பொருளது-(தன்னை அறிவுடையோர்) நிந்தித்தலாகிய பொருளமைந்தது; உறுதிச்சொல் - (ஒருவன்சொல்லும்) நன்மையாகிய சொல், உள்ளற்பொருளது-(அவனை) நன்குமதித்தலாகிய பொருளமைந்தது; அறநெறி-அறத்தினது வழி, உள் அறிந்து-(ஒருவன் தன்) உள்ளத்தில் தெளிந்து, சேர்தற்பொருளது-(பின் அதில்) சேர்ந்து நடப்பதாகிய பொருளமைந்தது; பொருள் - மெய்ப்பொருள்கள், பல் நூலும் - பலநூல்களும், தேர்தற்பொருள - ஆராய்தலாகிய பொருளமைந்தன, எ-று.

(வி-ரை.) ஒருவன் பிறனொருவனை அவமதிப்பானாயின் இவன் பிறர் செல்வங்கண்டு மகிழாதவனென்று அறிவுடையோர் கூறுவராத

லால் எள்ளற்பொருள நிகழ்தலாயிற்று. தொழிலும் பொருளெனப் படுதலால் எள்ளல் முதலிய நான்கனோடும் பொருளது பொருள என்னும் படர்க்கைக்குறிப்பு வினைமுற்றுகளின் பகுதிகளாகிய பொருளென்பன இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத் தொடர்களாகப் புணர்ந்தன. நால்கனைப்பற்றித் தேர்தற்றொழில் பலவாயின. உம்மை— முற்றும்மை. பொருளின துறுதியைச் சொல்லுக்கும் பொருளுக்கும் உண்டாகிய ஒற்றுமையைக் கருதிச் சொல்லின்மேலேற்றி 'உறுதிச் சொல்' எனக் கூறினர். இதுவும் பண்புத்தொகைநிலைத்தொடர்; நி-புடைபெயர்ச்சிவிகுதி; தொழிலடியாகப் பிறந்த பெயரெனக்கொண்டு இரண்டாம்வேற்றுமை உருபும் பயனும் உடன்தொக்க தொகைநிலைத் தொடராகவுங் கொள்ளலாம்; பொருள்: அடையப்படும் நன்மையைத் தருஞ் சொல் என உரைக்க. பகுபத உறுப்பு: உறு - பகுதி, த்-எழுத்துப்பேறு, இ-செயப்படுபொருண்மை விகுதி. (௫௧)

யாறு ளடங்குங் குளமுள வீறுசால்
மன்னர் விழையுங் குடியுள தொன்மரபின்
வேத முறுவன பாட்டுள வேளாண்மை
வேள்வியோ டொப்ப வுள.

(இ-ள்.) யாறு - நதிகள், உள் அடங்கும் - தம்முள் அடங்குகின்ற, குளம் உள - பெருங்குளங்கள் உள்ளன; வீறு சால் - எல்லாப் பெருமைகளும் நிறைந்த, மன்னர் - அரசர், விழையும் - விரும்பித் தழுவும், குடி உள - குடிகளுள்ளன; தொல் மரபின் - பழமையாகிய முறைமையையுடைய, வேதம் - வேதத்தின் பொருள், உறுவன - பொருந்துவன ஆகிய, பாட்டு உள - செய்யுள்களுள்ளன; வேள்வியோடு ஒப்ப - யாகத்தோடொப்பன ஆகிய, வேளாண்மை உள - ஈகைகள் உள்ளன, எ-று.

(வி-ரை.) யாறென்னும் இடத்தின்பெயர் அவ்விடத்து நிகழ்பொருளாகிய நீருக்காதலால் இடவாகுபெயர். பழமையாகிய முறை

மையாவது-இறைவன் அன்னவுருவாகிப் பிரமனுக்கு உபதேசித்தது முதல் அந்தணர் முதலியோரால் மேன்மையாகக் கொள்ளப்படுதல். வேதம் - கருவியாகுபெயர். பாட்டு-முதனிலைதிரிந்த தொழிற்பெயர்; செய்யுளுக்காதலால் தொழிலாகுபெயர்; இவ்வாறன்றிப் பாடு-பகுதி, செயப்படுபொருண்மை விகுதியாகிய ஐ புணர்ந்துகெட்டு, கெட்ட மாத்திரத்தில் டகரவொற்று இரட்டிய தொழிலடியாகப் பிறந்தபெய ரென்றாயினும், பாண்-பகுதி, டு - ஒன்றன்படர்க்கை விகுதி, ணகரம் டகரமானது சந்தி என முடிந்த தொழிலடியாகப் பிறந்த பெயரென்றாயினுங் கொள்ளலாம். டுவ் விகுதி எனக்கொண்ட பாட்டு பன்மையி னொருமைவந்த வழுவமைதி. ஒடுருபு ஒப்புப்பொருளது. வேள்வியோடொப்ப என்றதனால் வேளாண்மை சைம்மாறு செய்ய வலியில்லாத நல்லோர்க்குக் கொடுக்கும் ஈகை என்க. வேளாண்மை ஏற்போருடைய விருப்பத்தை ஆளுதல்; அது தலைமைபற்றிப் பொருளீகைக்காயிற்று; கொடுக்கப்படும் பொருளின் வகைபற்றி வேளாண்மை பன்மையாய் நின்றது. (௯௨)

எருதுடையான் வேளாள னேலாதான் பார்ப்பான்
ஒருதொடையான் வெல்வது கோழி—உருவோ
டறிவுடையா ளில்வாழ்க்கைப் பெண்ணென்பாள் சேனை
செறிவுடையான் சேனா பதி.

(இ - ள்.) எருது உடையான் - மிக்க உழுமாடுகளுடையான், வேளாளன் - வேளாளனாவான்; ஒரு தொடையான் - ஒரு தொடையின் வல்லமையாலே, வெல்வது - வெல்லவல்லதாகிய, கோழி - சேவல்போல, ஏலாதான் - (ஒருவரது பகையை) ஏற்றுக்கொள்ளில்லாதவன், பார்ப்பான் - பிராமணனாவான்; உருவோடு-(கணவன் விரும்பத்தக்க) உருவத்தோடு, அறிவு உடையாள்-(இல்லற வொழுக்கத்தை) அறிதலுடையவள், இல்வாழ்க்கை - இல்வாழ்க்கைக்குரிய, பெண் என்பாள் - பெண்ணென்று சொல்லப்படுவாள்; சேனை -

(போர்முகத்தில்) தன்படையை, செறிவு உடையான் - விட்டு நீங்கா மையை உடையவன், சேனபதி - படைத்தலைவனுவான், எ-று.

(வி-ரை.) ஒரு தொடையான் வெல்வது கோழி என்பதை ஒரு முடிபாகக் கொள்ளின் ஐந்து பொருள் கூறியதாகுமாதலால் உவமையாக்குக. உழுதொழிலுக்குச் சிறந்த கருவிகளி லொன்ருதலால் 'எருதுடையான் வேளாளன்' எனவும், அருளுடையனு யிருக்கவேண்டுமாதலால் பிறர் பகைத்தால் அவர்மேல் மீண்டு பகைகொள்ளாதவன் 'பார்ப்பான்'எனவும் கூறினர். இல்லறவொழுக்கத்தை அறிதலாவது-கற்பினின்றும் வழுவாமல் தன்னைக் காத்து, கணவனது பொருள் வருவாய்க்குத் தக்க செலவு செய்தலும், உண்டி முதலியவற்ருல் அவனைக் காத்தலும், விருந்தினரை உபசரித்தலு முதலியன அறிந்து நடத்தல். வேளாளன்-தொழிலடியாகப் பிறந்த ஆண்பாற்படர்க்கைப் பெயர்; வேளாள் - பகுதி, அன் - ஆண்பாற்படர்க்கைவிகுதி; எல்லாருடைய விருப்பத்தையும் ஆள்பவனென்பது. ஏலாதானென்பதற்கு மிக்க பொருளாசையால் மானங்கெட ஏற்காதவனென உரைப்பினும் பொருந்தும்; இது எதிர்மறை வினையாலணையும்பெயர். வெல்வது - உடன்பாட்டு வினையாலணையும்பெயர். உடையாள்,உடையான் இரண்டும் பண்படியாகப் பிறந்த பெயராகா; அதனடியாகப் பிறந்த குறிப்பு வினைப்பெயரொன்றேயாம். என்பாள் - செயப்படுபொருளை வினை முதல்போலக் கூறப்பட்ட வினையாலணையும்பெயர்; அன்றிச் செயப்பாட்டு வினையாலணையும் பெயரெனினும் ஒக்கும்; என் - பகுதி, அ-சாரியை, ப்-சந்தி, படு - செயப்பாட்டு வினைப்பொருண்மை விகுதி, அனைத்து மொருபகுதி, வ்-எதிர்கால இடைநிலை, ஆள் - பெண்பாற் படர்க்கைவிகுதி, படு விகுதியும், அதுபற்றிவந்த சாரியை முதலியனவும் தொகுத்தலாய் நின்றன. (ருரு)

யானை யுடையார் கதனுவப்பர் மன்னர்
கடும்பரிமா காதலித் தூர்வர் கொடுங்குழைய

நல்லாரை நல்லவர் நாணுவப்ப ரல்லாரை
அல்லா ருவப்பது கேடு.

(இ - ள்.) யானை உடையார் - யானையை ஆளுதலுடைய அரசர், கதன் உவப்பர் - (போர்முகத்தில் அதனது) கோபித்தலை மகிழ்வார்; மன்னர் - அரசர், கடு பரிமா - (ஓடுதலில்) வேகமாகிய குதிரையை, காதலித்து - விரும்பி, ஊர்வர்-நடத்துவார்; கொடு குழையவளைவாகிய காதணியணிந்த நல்லாரை-சிறந்த அழகுடைய மாதரை, நல்லவர் - நற்குணமுடையார், நாண் உவப்பர்-(அம்மாதரிடத்துள்ள) நாணமென்னுங் குணத்தினால் மகிழ்வார்; அல்லாரை - தீயாரிடத்து, அல்லார் - தீயோரால், உவப்பது - விரும்பப்படுவது கேடு - கேட்டைத்தருஞ் செய்கையாம், எ-று.

(வி-ரை.) அரசர் யானையினிடத்து அது போர்முகத்தில் அஞ்சாமல் கோபங் கொள்ளுதலையும், குதிரையினிடத்து அது விரைந்தோடும் ஓட்டத்தையும், நல்லவர் பெண்களிடத்து நாணமென்னுங் குணத்தையும், தீயவர் தீயவரிடத்துத் தீச்செயலையும் இருக்கக் கண்டு உள்ளம் மகிழ்வார். கதன் - இருகுறிலையடுத்த மகரவீற்றுப் பெயர்ச்சொலாதலால் மகரத்துக்கு னகரம் போலியாக வந்தது. கடும்பரி-பண்புத்தொகைநிலைத் தொடர்; விரிந்தால் கடுமையாகிய பரி என விரியும்; கடு என்பதைக் கடி என்னும் உரிச்சொல்லின் திரிபெனக் கொள்ளின் உரிச்சொற் றொகைநிலைத் தொடருமாம். பரிமா-இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத்தொடர். கேடு - காரியவாகு பெயர்; முதனிலைதிரிந்த தொழிலாகுபெயரெனினும் ஒக்கும். உவப்பது - எதிர்காலச் செயப்பாட்டு வினையாலணையும்பெயர். முன்னே நல்லவ ரென்றமையால் அல்லார் தீயவருக்காயிற்று. அல்லாரை உருபுமயக்கம். (௩௪)

கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கொண்டானின்
துன்னிய கேளிர் பிறரில்லை மக்களின்

ஒண்மையவாய்ச் சான்ற பொருளில்லை யீன்றாளின்
எண்ணக் கடவுளு மில்.

(இ-ள்.) கண்ணின் சிறந்த - (உயிர்களுக்குக்) கண்ணைப்போல் மேம்பட்ட, உறுப்பு இல்லை-வேறு அவயவமில்லை; கொண்டானின்- (குலமகளுக்குக்) கணவனைப்போல, துன்னிய கேளிர் - நெருங்கிய உறவினர், பிறர் இல்லை - மற்றவரில்லை; மக்களின் - (தாய் தந்தையர்க்கு) நற்குணமுள்ள பிள்ளைகளைப்போல, ஒண்மைய ஆய் - ஒளியுள்ளன ஆகி, சான்ற பொருள் இல்லை - நிறைந்த பொருள்கள் வேறில்லை; ஈன்றாளின்-(பிள்ளைகளுக்குத்) தாயைப்போல, எண்ணக் கடவுளும் இல்-(உயர்வாக) மதிப்பதற் குரிய கடவுளுமில்லை, எ-று.

"கண்ணிற் சிறந்த வுறுப்பில்லை கல்வியின்
றுண்ணிய வாய பொருளில்லை—கொண்டானின்
றுன்னிய கேளிர் பிறரில்லை யீன்றாளோ
டென்னக் கடவுளுமில்." எனவும் பாடமுளது.

(வி-ரை.) உயிர்களுக்கு அவயவங்களில் கண் சிறந்த அவயவமென்றும், குலமகளுக்கு உறவினரில் கணவன் சிறந்த உறவென்றும், தந்தை தாயர்களுக்குப் பொருள்களில் மக்கள் சிறந்த பொருளென்றும், யாவரும் அன்பால் உயர்வாக மதிக்கத் தகுந்தவள் தாயென்றுங் கொள்க. ஐந்தனுருபுகள் ஒப்புப்பொருளன. நற்குணமுள்ள பிள்ளைகள் இம்மையில் தாய் தந்தையர்களுக்கு உண்டி முதலியன தந்து விளங்கச் செய்தலே அன்றி மறுமையினும் அவர் தீவினைகள் குறைவதற்குக் காரணமாகிய தான தருமங்களைச் செய்து அவரை விளங்க வைத்தலால் அப்பிள்ளைகளை 'ஒண்மையவாய்ச் சான்றபொருள்' என்றார். கேளிர் - பண்படியாகப்பிறந்த பலர்பாற் படர்க்கைப் பெயர்; இர் என்னும் பல்லோர்படர்க்கை விகுதிப் புணர்ச்சியில் கேண்மை என்னும் பண்புப்பெயர் மையீறு கெட்டது; இர் விகுதி

பல்லோர்படர்க்கை விகுதியாய் வருதல் மகளிர், பெண்டிர், புத்தேளி ரென்பவற்றிலுங் காண்க. ஒண்மைய-பண்படியாகப் பிறந்த பலவின் படர்க்கைக் குறிப்புவினைமுற்று. சான்ற - உரிச்சொலடியாகப்பிறந்த இறந்தகாலப் பெயரெச்சம்; சால் - பகுதி, ற் - இறந்தகால விடைநிலை, அ - பெயரெச்சவிகுதி, லகரம் றகரமானது சந்தி, அது னகரமானது மெலித்தல்விகாரம். உம்மை உயர்வுசிறப்பு. (௫௫)

கற்றன்னர் கற்றாரைக் காதலர் கண்ணோடார்
செற்றன்னர் செற்றாரைச் சேர்ந்தவர்—தெற்றெண
உற்ற துரையாதா ருள்கரந்து பாம்புறையும்
புற்றன்னர் புல்லறிவி னோர்.

(இ - ள்.) கற்றாரை - கற்றுணர்ந்தவரை, காதலர் - விரும்பி அவரைப் பிரியாதவர், கற்றால் அன்னர் - கற்றாலொத்த அறிவினராவர்; கண்ணோடார் - தாட்சிணியமில்லாதவர், செற்றால் அன்னர் - கொன்றாலொத்த கெடுதியுடையார்; உற்றது - நடந்த செய்தியை, தெற்றென - தெளிவாக, உரையாதார்-(சாட்சியாகும்போது) சொல்லாதவர், செற்றாரைச் சேர்ந்தவர் - பகைவரைச் சார்ந்தவர்; புல் அறிவினோர் - சிற்றறிவினர், உள் கரந்து - உள்ளே மறைந்து, பாம்பு உறையும்-பாம்பு தங்குகின்ற, புற்று அன்னர்-புற்றை ஒப்பர், எ-று.

(வி-ரை.) கற்றன்னர் என்பதில் கற்றாலென்னும் நிலைமொழியீறு தொகுத்தலாய் நின்றது. கற்றவரென்பது ஈறு தொகுத்தலாய் நின்றதெனினும் ஒக்கும்; இவ்வாறே செற்றன்ன ரென்பதையும் பிரிக்க. காதலர் - செயப்படுபொருள் குன்றாத பல்லோர் படர்க்கைக் குறிப்பு வினைப்பெயர்; காதல் - ஒன்றின் மனமெழுந்து தாக்கும் விருப்பம்; இதனடியாகக் காதலி, காதலித்தல், காதலித்து, காதலித்த், காதலித்தான் எனத் தெரிநிலைவினைகள் பிறக்கும். கல்லாதவர், கற்றவரை விரும்பி, அவரைப் பிரியாம விருப்பாராயின், அவர் கூறுங்

கல்விப்பொருள்களைக் கேட்டு அவற்றைத் தாம் அடைதலால், அவ ரைக் 'கற்றன்னர்' எனவும், நட்பினரிருவரில் ஒருவர் தம் அறிவின் மையால் மற்றொருவர் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ளும் இயல்பில்லாமல் தண்டிக்குங் கண்ணோடாரைச் 'செற்றன்னர்' என வும், நடந்ததை உள்ளபடி நியாயத்தலத்தில் சொல்லாத சாட்சியான வர் பகைவரோ டொத்தவராதலால் அவரைச் 'செற்றாரைச் சேர்ந்த வர்' எனவும், தம்மோடு பிறர் நட்புக்கொள்ளுமுன் தமது தீயகுணங் களைப் புறத்தில் தோன்றாமல் மறையவைத்து, நெருங்கி நட்புக் கொண்டபின் தமது தீக்குணங்களைக் காட்டலால் 'புல்லறிவினர் பாம்பு உள்கரந்துறையும் புற்றன்னர்' எனவுங் கூறினர். (௯௫)

மாண்டவர் மாண்ட வினைபெறுப வேண்டாதார்
வேண்டா வினையும் பெறுபவே—யாண்டும்
பிறப்பார் பிறப்பா ரறனின் புறுவர்
துறப்பார் துறக்கத் தவர்.

(இ - ள்.) மாண்டவர் - (அறிவால்) மாட்சிமைப்பட்டவர், யாண்டும் - எக்காலத்தும், மாண்ட வினை - மாட்சிமைப்பட்ட செய் கைகளை, பெறுப - செய்யப்பெறுவர்; வேண்டாதார்-(நல்வினையை) விரும்பாதவர், வேண்டா வினையும் - (தம்மால்) வேண்டப்படாத தீவினைப்பயனையும், பெறுப - பெறுவார்கள்; பிறப்பார் - பிறப்பவர், பிறப்பு - அப்பிறப்பில் செய்த, ஆர் அறன் - அருமையாகிய அறத்தி னால், இன்பு உறுவர்-(மறுமையில் தேவராய்) இன்பத்தை அடைவர்; துறப்பார் - (யானென்னும் அகப்பற்றையும் எனதென்னும் புறப்பற் றையும்) துறப்பவர், துறக்கத்தவர் - முத்தியுலகத்தாராவர், எ-று.

(வி-ரை.) முன்செய்த சிறிது நல்வினைப் பயனையுமடைதலால் அதனை இறந்ததுதழீஇய எச்ச உம்மையால் தழுவினர். துறப்பவர் முத்தியுலகத்தை யடைதல் திண்ணமாதலால் துறக்க முறுவாரென்

ஞமல் 'துறக்கத்தவர்' எனப்பட்டார். அறிவின் பெருமையுடையார் பழிக்கப்படும் இழிதொழிலைச் செய்யக் கருதாமல் பெருமையாகிய செயல்களைச் செய்வர்; அறப்பயனை விரும்பாதவர் தம்மால் விரும் பப்படாத தீவினைப்பயனாகிய துன்பத்தையும் பெறுவார்கள்; பிறக் கும் இயல்பினராகிய மக்கள் அப்பிறப்பில் செய்த நல்வினை மிகுதி யால், மறுமையில் சுவர்க்க இன்பத்தைப்பெறுவார்; துறவிகள் முத்தி யுலகத்தைப் பெறுவார். மாண்டவர் - ஈறுதிரிந்த இறந்தகால வினை யாலணையும்பெயர்; பகுதி - மாண்; இது உரிச்சொல். யாண்டுமென் பது நடுநிலைத் தீவகமாய் நின்றதாதலால் அதனை முன்னும் பின் னுங் கூட்டுக. பெறுப - பல்லோர்படர்க்கை எதிர்கால வினைமுற்று; பெறு - பகுதி, ப-பல்லோர்படர்க்கை எதிர்காலவினைமுற்று விகுதி; இது அஃறிணையில் பெறுவ என வருதலால் பொதுவினையெனப் படாது. (கூஎ)

என்று முளவாகு நாளு மிருசுடரும்
என்றும் பிணியுந் தொழிலொக்கு மென்றும்
கொடுப்பாருங் கொள்வாரு மன்னர் பிறப்பாரும்
சாவாரு மென்று முளர்.

(இ - ள்.) என்றும் - எக்காலத்தும், நாளும்-நாண்மீன்களும், இரு சுடரும் - சந்திரனும் சூரியனும், உள ஆகும் - உள்ளன ஆகும்; என்றும் - எக்காலத்தும், பிணியும் - (தொழிலுண்டாகாமைக்குக் காரணமாகிய) நோயும், தொழில் - (உழவுமுதலிய) தொழிலும் ஒக்கும் - உள்ளன ஆகும்; என்றும் - எக்காலத்தும், கொடுப்பாரும் - (ஒளிக்காமல்) கொடுப்பவர்களும், கொள்வாரும்-ஏற்போரும், அன் னர் - உளர் ஆவர்; என்றும்-எக்காலத்தும், பிறப்பாரும் - பிறப்பவர் களும், சாவாரும் - இறப்பவர்களும், உளர் - ஆவர், எ-று.

(வி-ரை.) ஒக்கும், அன்னரென்றது மேற்கூறிய உளவாதலை என்க. என்றுமென்றது நிகழ்காலத்திலேயே அன்றி இறந்தகாலத்தி

லும், எதிர்காலத்திலு மென்றபடி. நாண்மீன்களும் சந்திராதித்தர்களும் உள்ளவாதல் உதித்துத் தோன்றுதல். நாண்மீன்-நட்சத்திரம். உலகத்தில் நாண்மீன் முதலியவற்றின் தோற்றமும், பிணியும், தொழிலும், கொடுத்தலும், கொள்ளலும்,பிறத்தலும், சாதலும் இடையறுமலுள்ளன என்பது கருத்து. சுடர் - பண்பாகுபெயர். தொழிலென்பத னீற்றில் எண்ணும்மை விகாரத்தால் தொக்கது. பிணி - தொழிலடியாகப்பிறந்த பெயர்; பிணி-பகுதி, இ-வினைமுதற்பொருண்மைவிகுதி புணர்ந்துகெட்டது; பொருள்: தன்னை யடையப்பெற்றவரை ஒருமுயற்சியும் செய்யவிடாமல் தன்வசத்திலே தங்கும்படி கட்டுவது. விகுதி கருவிப்பொருண்மைவிகுதி யென்பாருளராயின், வினைமுதல் யாதெனவினவி, அவர் மடமையை ஒழிக்க; இங்ஙனமன்றி முதனிலைத்தொழிலாகுபெயரெனினு மொக்கும். (௫அ)

இனிதுண்பா னென்பா னுயிர்கொல்லா துண்பான்
முனிதக்கா னென்பான் முகனொழிந்து வாழ்வான்
தனிய னெனப்படுவான் செய்தநன் றில்லான்
இனிய னெனப்படுவான் யார்யார்க்கே யானும்
முனியா வொழுக்கத் தவன்.

(இ-ள்.) இனிது உண்பான் என்பான் - நல்லுணவை உண்பவனென்று சொல்லப்படுவான், உயிர் கொல்லாது - பிற உயிர்களைக் கொல்லாமையாலாகிய உணவை, உண்பான்-உண்டுவாழ்பவன்; முனிதக்கான் என்பான் - (யாவராலும்) வெறுக்கத்தகுந்தவனென்று சொல்லப்படுவான், முகன் ஒழிந்து - முகமலர்ச்சியில்லாதவனாகி, வாழ்வான்-வாழ்பவன்; தனியன் எனப்படுவான் - துணையில்லாதவனென்று சொல்லப்படுவான், செய்த நன்று இல்லான்-(பிறர்க்கு)உபகாரஞ்செய்தலில்லாதவன்; இனியன் எனப்படுவான்-நல்லானென்று சொல்லப்படுவான், யார் யார்க்கே ஆனும் - எவரெவரிடத்தே ஆனு

லும், முனியாத - வெறுக்கப்படாத, ஒழுக்கத்தவன் - நடையையுடையவன், எ - று.

(வி-ரை.) கொல்லாது - வினைமுதல் வினையைக் காரியத்தின் மேலேற்றிக் கூறும் எதிர்மறை வினையாலணையும்பெயர். இனிது - பண்படியாகப் பிறந்தபெயர்; குறிப்பு வினைப்பெயருமாம். முனியத்தக்கானென்பது முனிதக்கானெனத் தொகுத்தலாய்நின்றது. முகன்- பொருளாகுபெயர். செய்த நன்றில்லான் என்பதை நன்றுசெய்தவில்லானெனப் பின் முன்னாகநிறுத்திப் பொருள்கொள்க; அப்படிக் கொள்ளும்போது பெயரெச்சம் தொழிற்பெயர்ப் பொருள்பட நின்றது. அடுக்குப் பன்மைப்பொருளது. குவ்வுருபு இடப்பொருளில் வந்தது. ஏ-தேற்றம். ஆன்-ஆயினென்பதன் மரூஉ. உம்மை-முற்று. ஈற்றடி 'முனியாத வுள்ளத்தவன்' எனவும் பாடமுண்டு. (௬௧)

ஈத்துண்பா னென்பா னிசைநடுவான் மற்றவன்
கைத்துண்பான் காங்கி யெனப்படுவான் றெற்ற
நகையாகு நண்ணார்முற் சேறல் பகையாகும்
பாடறியா தானை யிரவு.

(இ - ள்.) ஈந்து - (வறியார்க்குக்) கொடுத்து, உண்பான் என்பான்-(தானும்) அநுபவிப்பவனென்று சொல்லப்படுவோன், இசை நடுவான் - புகழை நிறுத்தவல்லவன்; அவன் கைத்து - அவனுடைய பொருளை, உண்பான் - உண்பவன், காங்கி எனப்படுவான் - குடம் போலுஞ் சுதந்தர மில்லானென்று சொல்லப்படுவான்; நண்ணார் முன்-பகைவரிடத்து, சேறல் - (ஒருவன் நட்பை விரும்பிச்) செல்லுதல், தெற்ற நகை ஆகும் - (பிறர் தன்னைத்) தெளிய அவமதித்துச் சிரித்தற்குக் காரணமாகும்; பாடு - (பிறருடைய) வறுமைத் துன்பத்தை, அறியாதானை - உணரமாட்டாதவனிடத்து, இரவு-இரத்தல், பகை ஆகும் - இரப்போனுக்கு விரோதமாகும், எ-று.

(வி-ரை.) ஈந்து ஈத்தென வலித்தலாயிற்று. மற்று-கைத்துண் பானைச் சார்ந்ததாதலால் பிறிதென்னும் பொருளது. கைத்தென்பது செல்வப்பொருள்; கை-பகுதி, த்-சந்தி, து-ஒன்றன்படர்க்கைவிகுதி; ஒருவன் வசத்திலுள்ள தென்பது. காங்கி - பண்படியாகப் பிறந்த பெயர்; காங்கு - பகுதி, இது தமிழ்மொழி, இ - ஆண்பாற்படர்க்கை விகுதி, உகரக்கேடு சந்தி; காங்கு-பெரிய மட்பாத்திரம்; அது பொருளாகுபெயராய் அதன் தன்மையை யுணர்த்தியது. ஒருவனால் காக்கப் படுவோன் காங்கின் தன்மைபோலத் தனக்கென ஒரு சுதந்தரமில்லா தவனும், நிலைமையில்லாத வாழ்க்கை யுடையவனுமா யிருத்தலால் அவனைக் 'காங்கி' என்றார்; கருங்குழலி, தும்பி என மற்ற ஒருமையிலும் இகரவிகுதி வரும்; காங்க்ஷி என்னும் வடமொழியின் திரிபெனினு மொக்கும்; பொருள்: விருப்பமுள்ளவ னென்பது; அதாவது, யாதொரு முயற்சியும் இல்லானுகிப் பிறர் பொருளால் உயிர் வாழ்பவன். தன் வருத்த மறியமாட்டாமல் இல்லை என்பானிடத்தில் இரத்தல் அவ்விரப்போனுக்கு இனிமையைத் தராமையினாலே பகையாயிற்று. பகை - தொழிற்பெயர்; பகு - பகுதி, ஐ - புடைபெயர்ச்சி விகுதி, உகரக்கேடு சந்தி. நகை என்பதும் இப்பெயர். இவ்விரண்டி னடியாகப் பகைத்தல், நகைத்தலென வினை விகற்பங்களெல்லாம் பிறக்கும். பாடு - முதனிலைதிரிந்த தொழிலாகுபெயர். அறியாதானை - உருபுமயக்கம். (கூ0)

நெய்விதிர்ப்ப நந்து நெருப்பழற் சேர்ந்து
வழுத்த வரங்கொடுப்பர் தேவர் தொழுத்திறந்து
கன்றாட்ட நந்துங் கறவை கலம்பரப்பி
நன்றாட்ட நந்தும் விருந்து.

(இ - ள்.) நெருப்பு அழல் - தீயினது சுடர், நெய் விதிர்ப்ப - நெய்யைச் சிந்த, நந்தும் - ஓங்கும்; தேவர் - தேவர்கள், சேர்ந்து -

(தம்மை ஒருவன்) அடைந்து, வழுத்த - துதிக்க, வரம் கொடுப்பர் - (அவன் வேண்டிய) வரத்தைக் கொடுப்பார்; கறவை - கறக்கும் பசு, தொழுத் திறந்து - கொட்டிலைத் திறந்து, கன்று ஊட்ட - கன்றினை உண்பிக்க, நந்தும் - பால் பெருகும்; விருந்து - விருந்தாக வந்தவன், கலம் பரப்பி - உண்கலத்தை விரித்து, நன்று ஊட்ட - இனிமையாக உண்பிக்க, நந்தும் - மனங்களிப்பான், எ-று.

(வி-ரை.) அழல் எழுவாயாதலால் லகரந் திரியாது நின்றது. நெருப்பென்றது ஓமத்தீயை. விதிர்ப்ப முதலிய செயவெனெச்சங்கள் காரணப்பொருளன ஆதலால் இறந்தகாலத்துக்குரியன. ஊட்ட: உண்-பகுதி, பிறவினைப்படுத்தும் டு விகுதி புணர்ந்தபோது, ஆதி நீண்டு, ணகரம் டகரமாய் நின்ற ஊட்டு-பகுதி, அ - செயவெனெச்ச விகுதி, உகரக்கேடு சந்தி. கறவை - தொழிலடியாகப் பிறந்தபெயர்; கற-பகுதி, வ்-சந்தி, ஐ - வினைமுதற்பொருண்மை விகுதி. பரப்பி என்றமையால் கலம் இலைக்கலமெனக் . பரப்பி - பிறவினையாகிய இறந்தகால வினையெச்சம்; பர-பகுதி, பு-பிறவினைபடுத்தும் விகுதி, ப்-சந்திபெற்றுநின்ற பரப்பு - பகுதி, உகரத்தின் திரிபாகிய இகரம் விகுதி, உகரக்கேடு சந்தி; பரம்பென்னுந் தன்வினைப்பகுதி வலித்தல் பெற்றுநின்ற பரப்பு பகுதி எனினும் ஒக்கும். விருந்து - பண்பாகு பெயர். விருந்து - புதுமை. நன்றூட்டலாவது உபசரித்துண்பித்தல். நன்றென்பதை வினையுரியாகக் கொள்ளாமல் பண்படியாகப் பிறந்த பெயரெனக் கொண்டு நல்ல வுணவை என உரைக்கினும் பொருந்தும். 'வரங்கொடுக்கு நாகம்' எனவும் பாடமுளது; 'வரத்தைக் கொடுப்பர் விண்ணில் திரிபவராகிய தேவர்' என வுரைக்க. நாகம்-இடவாகு பெயர். (கக)

பழியின்மை மக்களாற் காண்க வொருவன்
கெழியின்மை கேட்டா லறிக பொருளின்

நிகழ்ச்சியா லாக்க மறிக புகழ்ச்சியால்
போற்றுதார் போற்றப் படும்.

(இ-ள்.) பழி இன்மை - (ஒருவர்) பழிக்கப்படுங் குணமிலரா யிருத்தலே, மக்களால் - (அவருக்கு) நன்மக்களுளராயிருத்தலால், ஒருவன் காண்க - ஒருவன் அறியக்கடவன்; கெழி இன்மை - (ஒருவர்) தன்னிடத்து நட்புரிமை இலராயிருத்தலே, கேட்டால் - தான் செல்வமிழத்தலால், (ஒருவன்) அறிக - (ஒருவன்) அறியக்கடவன்; ஆக்கம் - (ஒருவரது) நல்வினையை, பொருளின் நிகழ்ச்சியால் - (அவரிடத்துப்) பொருளினது நீங்காமையினாலே, (ஒருவன்) அறிக-(ஒருவன் அறியக்கடவன், புகழ்ச்சியால் - (ஒருவன் பலராலும்) புகழப் படுதலாலே, போற்றுதார் - பகைவராலும், போற்றப்படும் - வணங்கப்படுவான், எ - று.

(வி - ரை.) பழிக்கப்படுங் குணமென்றது நடுவுநிலையில்லாமையை. ஒருவர் நடுவுநிலை யுடைமைக்கு நன்மக்களுண்டாயிருத்தலும், நட்புரிமை யில்லாமைக்குத் தனது செல்வக்கேடும், நல்வினை யுடைமைக்குப் பொருளினது நீங்காமையும் சிறந்த குறியாதலால் ஒருவன் அறிதற்கு அவற்றை ஏது ஆக்கினர். பழி - முதனிலைத் தொழிலாகுபெயர்; செயப்படுபொருண்மை யுணர்த்தும் ஐ விகுதி புணர்ந்துகெட்ட தொழிற்பெயருமாம்; அது நடுவுநிலை யில்லாமைக் காயிற்று. கெழி-பண்புப்பெயர்; கெழு - பகுதி, இ-பகுதிப்பொருள் விகுதி, உகரக்கேடு சந்தி. இன்மை இரண்டும் குறிப்புத்தொழிற்பெயர். பழியின்மை, கெழியின்மை இரண்டும் எழுவாய்த் தொகாநிலைத் தொடர்; தொழிற்பண்புத் தற்கிழமைப்பொருட்டாகிய ஆறாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடராக உரைப்பினும் அவ்வினைமுதற் பொருளில் வந்ததேயாம். கேடு-முதனிலைதிரிந்த தொழிற்பெயர். ஆக்கம் - செல்வம்; அது தனக்கு ஏதுவாகிய நல்வினைக்காணமையினால் காரியவாகுபெயர்; ஆக்கம் செல்வத்தை யுணர்த்தியபோது ஆகு -

பகுதி, அம் - கருவிப்பொருண்மை விகுதி, பகுதி நெடிற்றொடராத லால் ககர மிரட்டியதும், உகரங் கெட்டதும் சந்தி; ஒருவனுநதற்கு ஏதுவானதென்பது பொருள். 'கெழுவின்மை' எனவும் பாடமுண்டு; 'நட்பு இல்லாமை' எனவுரைக்க; கெழு - பண்படி. (௪௨)

கண்ணுள்ளுங் காண்புழிக் காதற்றும் பெண்ணின்
உருவின்றி மாண்ட வுளவா மொருவழி
நாட்டுள்ளு நல்ல பதியுள பாட்டுள்ளும்
பாடெய்தும் பாட லுள.

(இ-ள்.) கண்ணுள்ளும் - (மக்களுடைய) கண்களிலும், காண்புழி - ஆராய்ந்தால், ஒருவழி-சிறுபான்மை, காதற்று-(கண்டோரால்) விரும்பப்படுங்கண், ஆம் - உளது; பெண்ணின் - பெண்களுள்ளும், உரு இன்றி - அழகிய உருவமில்லாதிருந்தும், (ஆராய்ந்தால் சிலரிடத்து) மாண்ட - மாட்சிமைப்பட்ட குணமுஞ் செய்கையும், உள - உண்டு; நாட்டுள்ளும் - நாடுகளிலும், நல்ல பதி - (ஆராய்ந்தால் சிறுபான்மை) நல்ல நாடுகள், உள - உண்டு; பாட்டுள்ளும் - பாட்டுகளிலும், பாடு எய்தும் - (ஆராய்ந்தறிந்தால் சிறுபான்மை) பேரழகு அமைந்திருக்கும், பாடல் உள - பாட்டுகள் உண்டு, எ - று.

(இ - ள்.) இவைநான்கு முண்டாத லருமைநோக்கி 'ஒருவழி' என்று கூறினர். காதற்று, பெண் இரண்டும் சாதியேகவசனம்; காதற்று-பண்படியாகப்பிறந்த குறிப்புவினைப்பெயர்; காதல் - பகுதி, று-ஒன்றன்படர்க்கை விகுதி, லகரம் றகரமானது சந்தி. முதலிலுள்ள உம்மை எதிரதுதழீஇயதும், ஈற்றிலுள்ளது இறந்தது தழீஇயது மாகவும், மற்ற இரண்டும் மேலுள்ளதை நோக்கத் தான் இறந்தது தழீஇயதும், கீழுள்ளதை நோக்கத் தான் எதிரதுதழீஇயதுமாக நின்றன. பெண்ணினென்பதனீற்றில் அவ்வும்மையும், எதிர்மறைக்குறிப்பு வினையெச்சமாகிய இன்றி என்பதனீற்றில் இழிவுசிறப்பும்மை

யும் தொகுத்தலாய் நின்றன; இல்-பகுதி, இ-வினையெச்ச விகுதி, த்-எழுத்துப்பேறு, லகரதகரங்கள் றகரமானது சந்தி, முன்னின்ற சந்தி றகரம் னகரமானது மெலித்தல்விகாரம்; றி - விகுதி எனினும் பொருந்தும். பாடல்-தொழிலாகுபெயர். காண்புழி - நிகழ்காலவினையெச்சம்; காண்-பகுதி,ப்-எழுத்துப்பேறு, உழி-நிகழ்காலவினையெச்ச விகுதி; இதையும், ஒருவழி என்பதையும் மற்றவற்றோடுங் கூட்டுக. அழகு - சுருங்கச்சொல்லல் முதலியன. பாடெய்தும் பாட்டேயன எனப் பாடமாயின், ஏகாரத்தை ஈற்றசையாக்கி உரைக்க. (௬௩)

திரியழல் காணிற் றொழுப விறகின்
எரியழல் காணி னிகழ்ப வொருகுடியில்
கல்லாது மூத்தானைக் கைவிடுப கற்றான்
இளமைபா ராட்டு முலகு.

(இ-ள்.) திரி - திரித்தநூலி லேற்றிய, அழல் காணின்-விளக்குச் சுடரைக் கண்டால், உலகு தொழுப - தேயத்தார் மதித்துக் கை கூப்புவர்; விறகின் - விறகினிடத்து, எரி அழல் காணின்-எரிகின்ற சுடரைக் கண்டால், இகழ்ப - அவமதிப்பர்; ஒரு குடியில்-ஒரு குடும்பத்தில், கல்லாது - (கல்வியைக்) கற்காமல், மூத்தானை - முதிர்ந்தவனை, உலகு கைவிடுப - தேயத்தார் ஏற்றுக்கொள்ளார்; கற்றான் - கல்வியை யறிந்தவனிடத்துள்ள, இளமை - இளமைப்பருவத்தை, உலகு பாராட்டும் - தேயத்தார் மதித்து ஏற்றுக்கொள்வர், எ-று.

(வி-ரை.) "உரோமபத னென்றுள னவ்வுலகை யாள்வோன்" என்பதுபோல உலகென்னும் பால்பகா அஃறிணைப்பெயர் தேயத்துக்காயிற்று. கொண்டு முடியும் சிறப்புவினையினால் பலவின்பாலாய் நின்ற உலகு இடவாகுபெயர்; தொழுப - பலவின்படர்க்கை வினைமுற்று; தொழு-பகுதி, ப்-எதிர்கால இடைநிலை, அ - பலவின்படர்க்கை விகுதி. திரி-தொழிலடியாகப்பிறந்தபெயர்; திரி-பகுதி,ஐ-செயப்

படுபொருண்மை விகுதி புணர்ந்து கெட்டது; பொருள்: திரிக்கப் பட்டதென்பது. கல்வி யறிந்தவனிடத்துள்ள இளமையை மதித்து ஏற்றுக்கொள்வா ரென்பதற்குக் கல்வி யறிந்தவனை இளமைநோக்கி யவமதியாமல் கல்வியறிவை நோக்கி மதித்து ஏற்றுக்கொள்வரென் பது கருத்து. அழல்காணி னென்பதில் நிலைமொழி அஃறிணைப் பெயராதலாலும், இது இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத் தொடராதலாலும், [நன்-மெய்-சூ-உச-இன்படி] திரியாமல், [உருபு-சூ-கக-இன்படி] விகாரத்தியல்பாயிற்று. ஒரு பொருளின் குணத் தைப்பற்றி அன்றி, உருவத்தைப்பற்றி மதித்தலும் அவமதித்தலுங் கூடா. (கச)

> கைத்துடையான் காமுற்ற துண்டாகும் வித்தின்
> முளைக்குழா நீருண்டே லுண்டாந் திருக்குழாம்
> ஒண்செய்யாள் பார்த்துறி னுண்டாகு மற்றவள்
> துன்புறுவ ளாயிற் கெடும்.

(இ-ள்.) கைத்து உடையான் - பொருளை யுடையவன், காமுற் றது - விரும்பிய பொருள், உண்டு ஆகும் - கிடைக்கும்; நீர் உண்டு ஏல் - (தன்னிடத்து) நீருள்ளதாயிருந்தால், வித்தின் முளைக்குழாம் உண்டு ஆம் - விதைகளினது முளைகளின் திரள் தோன்றும்; ஒள் செய்யாள் - அழகிய திருமகள், பார்த்து - (ஒருவனது நன்மையைக்) கண்டு, உறின் - சேர்ந்தால், திருக்குழாம் - பெருஞ்செல்வம், உண்டு ஆகும் - உண்டாகும்; அவள் - அத்திருமகள், துன்பு உறுவள் ஆயின் - (அவனது தீமையைப் பார்த்துத்) துன்பப்படுவாளானால், கெடும் - (அப்பெருஞ் செல்வம்) இலதாகும், எ-று.

(வி-ரை.) கைத்து - சாதியொருமை. காமுற்றது - இறந்தகால வினைப்பெயர்; காமுறு - பகுதி, அ - சாரியை, து - ஒன்றன்படர்க்கை விகுதி, பகுதி ஒற்றிரட்டியது விரித்தல்விகாரம், அதுவே காலங்

காட்டியது, உகரக்கேடு சந்தி; காமம் என்பது கடைக்குறையாய் அதனோடு உறு என்னும் உரிவினையடி புணர்ந்து ஒருசொல்லின் தன்மைப்பட்டுநின்றது. செய்யாள் - பண்படியாகப் பிறந்தபெயர்; செம்மை - பகுதி, ஆள் என்னும் விகுதிப்புணர்ச்சியில் மை விகுதி கெட்டு, மகரம் யகரமாகி, அது தனிக்குறின் முன்னொற்றாதலால் இரட்டி முடிந்தது; பொருள்: நடுவுநிலைமை யுடையாளென்பது. வித்தின்மூளை - வினைத்தற்கிழமைப்பொருளதாகிய ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடர். மூளைக்குழாம்-ஒன்றன்கூட்டத் தற்கிழமைப் பொருளதாகிய அவ்வேற்றுமைத்தொடர். பொருளுடையான் தான் விரும்பியதை விரும்பியபடி அடைவான்; விதைகள் நீரின் சம்பந்தமிருந்தால் முளைக்கும்; வஞ்சகமுதலிய தீக்குண மில்லான் செல்வப் பொருளைப் பெறுவான்; உடையான் பெறுமென்பது. (சுரு)

ஊனுண் டுழுவை நிறம்பெறூஉ நீர்நிலத்துப்
புல்லினா னின்புறூஉங் காலேய நெல்லின்
அரிசியா னின்புறூஉங் கீழெல்லாந் தத்தம்
வரிசையா னின்புறூஉ மேல்.

(இ-ள்.) ஊன் உண்டு - தசையையுண்டு, உழுவை - புலிகள், நிறம் பெறும்-(உடலின்) ஒளியை அடையும்; காலேயம் - பசுக்கூட்டம், நீர் நிலத்து - நீர்வளமுள்ள நிலத்தில் முளைத்த, புல்லினான் இன்புறூஉம் - புல்லினாலே சுகித்திருக்கும்; கீழ் எல்லாம்-கீழ்மக்களெல்லாம், நெல்லின் அரிசியான் - நெல்லிலுண்டாகிய அரிசியினால், இன்புறூஉம் - உள்ள மகிழ்வர்; மேல் - மேன்மக்கள், தத்தம் - (பிறரால் செய்யப்படும்) தத்தமக்குரிய, வரிசையான் - முறையாகிய உபசாரத்தினால், இன்புறூஉம் - உள்ள மகிழ்வர், எ-று.

(வி-ரை.) புல்லினரிசி முதலியவற்றி னீக்குதற்கு 'நெல்லி னரிசி' என்றும், அதுவுஞ் சிறந்ததென்பதற்கு அடை கொடாது

'செல்' என்றுங் கூறினர் கீழ்மக்கள் உபசாரத்தினலல்லாமல் நல்லுணவினலும், மேன்மக்கள் நல்லுணவினு லல்லாமல் தக்க உபசாரத்தினலும் மனமகிழ்வ ரென்பது. இன்பு-பண்புப்பெயர்; இன்-பகுதி, பு-பகுதிப்பொருண்மைவிகுதி; விகுதிமேல் விகுதியாய் அம் விகுதிபெற்று இன்பமெனவும் வரும். அளபெடைகள் இன்னிசை நிறைக்கவந்தன. கீழ், மேல்-பண்பாகுபெயர்கள். அடுக்குப் பன்மைப் பொருளது. (கூக)

பின்னவாம் பின்னதிர்க்குஞ் செய்வினை யென்பெறினும்
முன்னவா முன்ன மறிந்தார்கட்—கென்னும்
அவாவா மடைந்தார்கட் குள்ளந் தவாவாம்
அவாவிலார் செய்யும் வினை.

(இ - ள்.) பின் - (செய்யத் தொடங்கிய) பின்பு, அதிர்க்கும் - நடுக்கத்தைத் தருகின்ற, செய் வினை - செய்யப்படும் தொழில்கள், பின்ன-(ஆராய்ந்து துணியாதார்க்குப்)பின் தோன்றுவன; என்பெறினும் - பெரும்பயனை அடையக்கூடுமாயினும், முன்னம் - (செய்யத் தொடங்கும்) முன்னே, அறிந்தார்க்கு - ஆராய்ந்து துணிந்தவர்க்கு, முன்ன - (அச்செய்வினைகள்) முன்னே தோன்றுவன; என்னும் - (பரம்பொருளல்லாத) எதன் விருப்பத்தையும், அடைந்தார்கட்கு - கொண்டவர்க்கு, உள்ளம் - (அதுகாரணமாக) உள்ளத்தில், அவா ஆம் - (விட்ட) விருப்பங்கள் உண்டாகும்; அவா - அவ்விருப்பம், இலார் செய்யும் வினை - இல்லாத துறவிகள் செய்யும் துறவறத் தொழில்கள், தவா ஆம் - கெடாவாம், எ-று.

(வி - ரை.) பின்ன, முன்ன என்பன பண்படியாகப் பிறந்த குறிப்புவினைமுற்றுகள். அவாவா மென்பதில் ஆமென்பது செய்யு மென்முற்று, மற்ற மூன்றும் அசைகள். என் இரண்டும் வினைப் பெயர்கள்; எவனென்பதன் மரூஉ அல்ல. உம்மைகளிரண்டில் முன்

ணது உயர்வுசிறப்பு; பின்னது இழிவுசிறப்பு. தவா-பலவின்படர்க்கை எதிர்மறை வினைமுற்று; தவு - பகுதி, ஆ - பலவின்படர்க்கை எதிர்மறைவினைமுற்று விகுதி, உகரக்கேடு சந்தி. அவா - முதனிலைத் தொழிற்பெயர்; இம்முதனிலையடியாக அவாவுதல், அவாவினான், அவாவி, அவாவின என வினைவிகற்பங்கள் பிறக்கும். நடுங்குதற்கு ஏதுவாகிய தொழில்கள் முன்னே ஆராயுமியல்பில்லாதவர்க்குச் செய்யத் தொடங்கியபின் இப்படிப்பட்டவையென்று தோன்றும்; ஆராயுமியல்புள்ளவர்க்கு அத்தொழில்கள் இன்னவையெனச் செய்யத்தொடங்கு முன்னமே தோன்றும்; துறவிகளாயிருந்தும் கடவுளல்லாத மற்ற எப்பொருளிலாவது விருப்பம் வைப்பாரானால் அது காரணமாக, முன்னே விட்டிருந்த விருப்பங்களெல்லாம் உண்டாகும்; அவ்விருப்பமில்லாத துறவிகள் தாங்கள் செய்யுந் துறவறத் தொழில்கள் இனிது நிறைவேறும். 'பின்னவா முன்னார்க்குப் பின்னதிர்க்குஞ் செய்வினை' என முதலடியும், 'வரவிலார் செய்யும் வினை' என ஈற்றடியும் வேறுபாடுள்ள பாடமுமுள்ளன; முன்னார்க்கு-முற்பட ஆராயாதவர்க்கு எனவும், வரவு இலார் - யாதொரு வரவுமில்லார் எனவும் உரைக்க. (௬௭)

கைத்திலார் நல்லவர் கைத்துண்டாக் காப்பாரின்
வைத்தாரி னல்லர் வறியவர் பைத்தெழுந்து
வைதாரி னல்லர் பொறுப்பவர் செய்தாரின்
நல்லர் சிதையா தவர்.

(இ - ள்.) கைத்து - பொருள், உண்டு ஆக - உண்டாயிருக்க, காப்பாரின் - (பொருளாலாகும் பயனை அடையாமல்) அதைக் காப்பவரினும், கைத்து இலார் - அப்பொருளில்லாதவர், நல்லவர் - (உலகத்தாரால் பழிக்கப்படாமையால்) நல்லவராவர்; வைத்தாரின் - (பொருளை) வைத்து இறந்தவரினும், வறியவர் - தரித்திரர், நல்லர் - (வை

த்து இறவாமையால்) நல்லவராவர்; வைத்து எழுந்து - கோபித்து எழுந்து, வைதாரின் - நிந்தித்தவரினும், பொறுப்பவர் - (அந்நிந்தையைப்) பொறுத்துக்கொண்டிருப்பவர், நல்லர்-நல்லவராவர்; செய்தாரின் - உபகாரம் செய்தவரினும், சிதையாதவர் - அவ்வுபகாரத்தை மறவாதவர், நல்லர் - நல்லவராவர், எ - று.

(வி-ரை.) பொருளுண்டாயிருக்க, அப்பொருளினால் கிடைக்கும் அறத்தைச் செய்துகொள்ளாமல் வீணே அதைக் காப்பவரினும் அப்பொரு ளில்லாதவர் அறிவுடையோரால் பழிக்கப்படாமையால் அவரும், தாமும் அநுபவியாமல் பொருளைவைத் திறப்பவரினும் வைத்திறவாத தரித்திரரும், கோபித்து நிந்திப்பவரினும் அந்நிந்தையைப் பொறுப்பவரும், உபகாரஞ் செய்தவரினும் அதை மறவாதவரும் நல்லவர் என்பது. வைத்தாரினென இறந்தகாலத்தாற் கூறினமையால் இறந்தாரென்பது பெற்றாம். ஐந்தனுருபுகள் எல்லேப் பொருளன. ஒருவர் நிந்தித்த நிந்தையைப் பொறுக்குங் காலத்தும் அந்நிந்தை மனத்தால் நினைக்கப்படுதலால் மறத்தல்போல அவ்வளவு நன்மையுடைய தல்லாமையால் பொறுப்பவரை 'வைதாரினல்லர்'என்றார். ஆக என்பது ஈறு தொகுத்தலாய் நின்றது; வை என்னும் பகுதி பலபொருளொருசொல்லாதல் வைத்தார், வைதாரென்பவற்றிற் காண்க. 'கைத்திலார் நல்லவர் கைத்திழந்த மாக்களின்'எனவும், 'கைத்திலர் நல்லராங் கைத்துண்டாக் காவாரின்'எனவும் பாடமுண்டு. 'கைத்து இழந்த மாக்களின் - தாம் தேடியபொருளை (வீணே) இழந்த மக்களைப் பார்க்கினும், கைத்து இல்லார் நல்லவர் - பொருளில்லாதவர் நல்லவராவர்' எனவும், 'கைத்து உண்டாக - பொருள் தமக்குக் கிடைத்திருக்க, காவாரின்-(இரப்பவர் முதலோரைக்) காக்கமாட்டாதவரினும், கைத்து இலர் நல்லர் - பொருளில்லாதவர் நல்லவர்' எனவும் முறையே உரைக்க. (கஅ)

மகனுரைக்குந் தந்தை நலத்தை யொருவன்
முகனுரைக்கு முன்னின்ற வேட்கை யகனீர்ப்

பிலத்தியல் புக்கா னுரைக்கு நிலத்தியல்பு
வான முரைத்து விடும்.

(இ - ள்.) மகன் - புத்திரன், தந்தை - தந்தையினுடைய. நலத்தை - நற்குணத்தை, உரைக்கும் - (தான் நற்குண முடைமையால் பிறர்க்கு) அறிவிப்பான்; ஒருவன்முகன் - ஒருவனுடைய முகம், முன் நின்ற வேட்கை - (அவனது) மனத்திலுள்ள விருப்பத்தை, உரைக்கும் - (பிறர்க்கு) அறிவிக்கும்; அகல் நீர் - பரவின நீரை யுடைய, பிலத்து இயல் - பள்ளத்தினது நிலைமை, புக்கான் உரைக்கும் - (அதில்) இறங்கினவன் (பிறர்க்கு) அறிவிப்பான்; நிலத்து இயல்பு - நிலத்திலுள்ள மக்களது தன்மையை, வானம்-மழை, உரைத்துவிடும் - (பெய்தும் பெய்யாதும் அவர்க்கு) அறிவிக்கும், எ-று.

(வி-ரை.) ஒருவனது நற்குணம் அவனது புத்திரனது நற்குணத்தினாலும், உள்ளக்கருத்து முகக்குறியினாலும், மிக்க நீரையுடைய பள்ளத்தினது ஆழம் அதில் இறங்கிவந்தவனாலும், மனிதர்களது நன்மை காலமழை பெய்தலினாலும், தீமை பெய்யாமையினாலும் விளங்குமென்பது கருத்து. புக்கானுரைக்கும் என்பதொழிய மற்ற மூன்றும் கிளக்குநபோலக் கூறும் மரபுவழுவமைதியாகிய இலக்கணை. நிலம், வானம்-இடவாகுபெயர். மகனுரைக்குந் தந்தை நலத்தை என்பதற்குத் தந்தைசெய்த நல்வினையை அவன் புத்திரன் கல்வி யறிவு செல்வமுடையவனா யிருத்தலால் அறிவிப்பானென்றும், அகனீர்ப்பிலத் தென்பதற்கு அகன்ற தன்மையையுடைய பிலத்தின தென்றும், நிலத்தியல்பு வானமுரைத்துவிடு மென்பதற்கு நிலத்தினது தன்மையை அதில் விழுந்த மழைநீர் அறிவித்துவிடுமென்றும் உரைக்கினும் பொருந்தும். முன்னமென்பது முன் என நின்றது; இது தொழிலாகுபெயர். முகத்தில் தோன்றுதற்கு முன்னமே மனத்தில் தோன்றிய தாதலால் மனத்தை முன்னென்றா ரெனினும் பொருந்தும். (௯௧)

பதிநன்று பல்லா ருறையி னொருவன்
மதிநன்று மாசறக் கற்பின்—நுதிமருப்பின்
ஏற்றான்வீ றெய்து மினநிரை தான்கொடுக்கும்
சோற்றான்வீ றெய்துங் குடி.

(இ - ள்.) பல்லார் - (முயற்சியுடைய) பலகுடிகள், உறையின் - வசித்தால், பதி நன்று - நாடு சிறப்புடையதாகும்; மாசு அற - (விபரீதம் ஐயம் ஆகிய) குற்றமில்லாமல், கற்பின் - (கற்கத்தகும் நூல்களைக்) கற்றால், மதி நன்று - (ஒருவனது) அறிவு தெளிவுடையதாகும்; நிரை இனம் - பசுக்கூட்டம், நுதி மருப்பின் - கூர்மையாகிய கொம்புகளுடைய, ஏற்றான் - ரிஷபத்தினாலே, வீறு எய்தும் - (அச்சமில்லாமல்) தைரியத்தை யடைந்திருக்கும்; குடி - தன் குடும்பம், தான் கொடுக்கும் - (முயற்சியுடைய ஒருவன்) தான் கொடுக்கின்ற, சோற்றான் - உண்டியினால், வீறு எய்தும் - பெருமை யடைந்திருக்கும், எ - று.

(வி - ரை.) பசுக்கூட்டத்துக்குப் பிறவுயிர்களால் வரும் துன்பம் நீக்கவல்லது என்பார் 'நுதிமருப்பினேற்' என்றார். நுதிமருப்பின் ஏற்றான் வீறெய்து மென்பதற்கு ஒருபுலத்தில் மேய்கையில் தம்மில் கூர்மையாகிய ஒருரிஷப மிருந்தால் பசுக்கூட்டம் அச்சமில்லாமல் மேயுமென்பது கருத்து. நிரை பசுவுக்கும், பசுக்கூட்டத்துக்கும் பெயராயினும் இனமென்றமையால் பசுவுக்காயிற்று. தலைமை பற்றிச் சோற்றானென்றாராயினும், "ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே" என்பதனால் கறி முதலியவற்றையும், ஆடையணி முதலியவற்றையுங் கொள்க. நன்றென்னும் இரண்டும் ஆக்கவினைக் குறிப்புமுற்றுகளாதலால் ஆக்கச் சொற்கள் தொகுக்கப்பட்டு நின்றன; நன்மை - பகுதி, ஒன்றன்பாற்கை றுவ் விகுதிப் புணர்ச்சியில் மை கெட்டு, லகரம் றகரமாதலாகிய சந்தி பெற்று, அது னகர

மாதலாகிய விகாரம்பெற்று நன்றெனமுடிந்தது. ஆர் விகுதி புணர்ந்தமையால் பல்லாரென்னும் பல்லோர்படர்க்கைப் பெயரில் லகரம் இரட்டியது. இனநிரை - ஒன்றன்கூட்டத் தற்கிழமைப் பொருளில் புணர்ந்த ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகிய நிரையின மென்பது பின் முன்னாக மாறிநின்றது; நிரை என்பதற்குப் பசுக் கூட்டமெனப் பொருள் கொண்டு இன நிரை என்பதை இருபெயரொட்டுப் பண்புத்தொகைநிலைத்தொடரெனினும் ஒக்கும். (௪௦)

ஊர்ந்தான் வகைய கலினமா நேர்ந்தொருவன்
ஆற்றல் வகைய வறஞ்செய்கை தோட்ட
குளத்தனைய தூம்பி னகலங்க டத்தம்
வளத்தனைய வாழ்வார் வழக்கு.

(இ - ள்.) கலின மா - கடிவாளம் பூண்ட குதிரைகள், ஊர்ந்தான் - (தம்மேல்) ஏறி நடத்துவோனுடைய, வகைய - (நடத்தும்) வகைக் கிசைந்தன ஆம்; அறம் செய்கை - துறவறத்தைச் செய்யுஞ் செய்கைகள், நேர்ந்து ஒருவன் - (செய்ய) உடன்பட்ட ஒருவனது, ஆற்றல் வகைய - வலியின் வகைக்கிசைந்தன; தூம்பின் அகலங்கள் - தூம்புகளினுடைய விரிவுகள், தோட்ட - தோண்டப்பட்ட, குளத்து அனைய - குளங்களின் அளவின ஆம்; வாழ்வார் - (இல்லாளோடு கூடி) வாழ்வாரது, வழக்கு - செய்கைகள், தத்தம் வளத்து அனைய - தம்முடைய வருவாயின் அளவின ஆம், எ - று.

(வி-ரை.) நேர்ந்த என்னும் பெயரெச்சத்தீறு தொகுக்கப்பட்டது. ஆற்றல் வகைய என்பதனால் அறம் துறவறத்துக்காயிற்று. துறவறத்துக்குரிய விரதங்கள் பல ஆதலால் அவற்றைச் செய்யுஞ் செய்கைகளும், தூம்புகள் பல ஆதலால் அவற்றின் பன்மை நோக்கி அகலமும், பிரமசாரி முதலிய பதின்மருக்கும் பகுத்துண்ணல் முதலியவற்றால் வாழ்வாரது செய்கையும் பலவாயின. விரதங்கள் பல

ஆவன - தன் வலிக்குத் தக்கபடி இன்ன அறம் செய்வேனென்றும், இன்ன பாவம் ஒழிவேனென்றும் ஏற்படுத்திக்கொள்ளுவன. வகைய- தொழிலடியாகப் பிறந்த குறிப்புவினைமுற்று; வகு-பகுதி, ஐ-புடை பெயர்ச்சி விகுதி, உகரக்கேடு சந்தி, இயற்றால் முடிந்தவகைபகுதி,ய்- சந்தி, அ-பலவின்படர்க்கை விகுதி. அனைய - பண்படியாகப் பிறந்த குறிப்புவினைமுற்று; அத்தனை என்பதன் மரூஉ ஆகிய அனை-பகுதி, ய் - சந்தி, அ - பலவின்படர்க்கைவிகுதி. தூம்பு - பண்பாகுபெயர்; உட்டொளை. வழக்கு - முதனிலை திரிந்த தொழிற்பெயர்; அது செய்கையை யுணர்த்திற்று. தோட்ட-இறந்தகாலப் பெயரெச்சம்; தோள்- பகுதி, ட் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்சவிகுதி; ளகரம் டகரமானது சந்தி. (எக)

ஊழியு மாண்டெண்ணி யாத்தன யாமமும்
நாழிகை யானே நடந்தன தாழ்வியாத்
தெற்றென்றார் கண்ணே தெளிந்தனர் வெற்றென்றார்
வெஞ்சொலா லின்புறு வார்.

(இ - ள்.) ஊழியும் - யுகமுடிவுகளும், ஆண்டு எண்ணி - வருடங்களால் எண்ணப்பட்டு, யாத்தன - அளவு செய்யப்பட்டன; யாமமும் - சாமப்பொழுதும், நாழிகையானே - ஏழரை நாழிகையினாலேயே, நடந்தன - (அளவு செய்யப்பட்டுக்) கழிந்தன; தாழ்வியாமல் - காலத்தை நீட்டிக்காமல், (விரைவில்) தெற்றென்றார் கண்ணே - தெளிந்தவரிடத்திலே, தெளிந்தனர் - (நல்லோர்) ஐயமறக் கற்றனர்; வெற்றென்றார் - அறிவாகிய பயனில்லாதவர், வெம் சொலால் - (பிறரை வைத) கடுஞ் சொற்களினால், இன்பு உறுவார்-உள்ள மகிழ்வார், எ-று.

(வி-ரை.) யுகங்களும் இத்தனை வருடங்களெனக் கணக்கிடப் பெற்றன; சாமப்பொழுதுகளும் இத்தனை நாழிகையென எண்ணப்

பட்டன; இவ்வாறு பெருகவும், சிறுகவுங் காலங்கழிதலை உணர்ந்த நல்லவர் தம் காலத்தை வீண்கால மாக்காமல், கற்று வல்லாரிடத்தில் நூல்களை ஆராய்ந்து தெளிந்து இன்புறுவார்; அறிவில்லாத தீயோர் பிறரை நிந்தை கூறி, அதனால் மகிழ்வாரென்பது கருத்து. யாத்தல்-கட்டுதல். யாத்தன - பலவின்படர்க்கைச் செயப்பாட்டுவினையாகிய இறந்தகால வினைமுற்று; யா-பகுதி, க்-சந்தி, கு, அ-சாரியை, உகரக் கேடும், பகரத்தோற்றமும் சந்தி, படு - செயப்பாட்டுவினைப்பொருண்மை விகுதி, அனைத்து மொருபகுதி, பகுதி ஒற்றிரட்டலும், உகரக் கேடும் சந்தி, அன்-சாரியை, அ-பலவின்படர்க்கைவிகுதி; படு விகுதி முதலியன தொகுத்தல். ஆண்டு - யாண்டென்பதன் மரூஉ. தேற்றென்றார் - பல்லோர்படர்க்கை இறந்தகாலச் செயப்பாட்டு வினைமுற்று; இது செயப்பாட்டு வினைப்பொருண்மைப் படு விகுதி முதலியன தொகுத்தலாய் நின்றது. ஏ இரண்டும் தேற்றம். தாழ்வியாமமென்னும் பிறவினையாகிய எதிர்மறைவினையெச்சம் ஈறு தொகுக்கப்பட்டது. வெற்றென்று ரென்பதில் வெறுமை அறிவின்மைக் காயிற்று. வெற்றென்று ரென்பது 'வெட்கின்றார்' எனவும் பாடபேதமுளது; 'வெள்ளறிவினர்' என்பது பொருள். (எஉ)

கற்றான் றளரி னெழுந்திருக்குங் கல்லாத
பேதையான் வீழ்வானேற் சான்முரியு மெல்லாம்
ஒருமைதான் செய்த கருவி தெரிவெண்ணின்
பொய்யாவித் தாகி விடும்.

(இ-ள்.) கற்றான் - கல்வியறிவுடையான், தளரின்-(ஒருகாலத்தில்) தளர்ச்சியடைவானாயின், எழுந்திருக்கும் - (அத்தளர்ச்சியினின்று) நீங்குவான்; கல்லாத - கல்வியறிவில்லாத, பேதையான் - பேதையானவன், வீழ்வான் எல்-(தன்னிலையினின்றும்) தளர்ந்தால் கால் முரியும் - (அதற்கு) ஊன்றுகோலாகிய முயற்சி கெடுவான்; ஒருமை - ஒருபிறப்பிலே, தான் செய்த எல்லாம் - ஒருவன் செய்

தன ஆகிய வினைகளெல்லாம், கருவி - (மறுமைப்பயனுக்குக்) காரணங்களாகும்; எண்ணின் - ஆராயுமிடத்து, தெரிவு - (ஐயமில்லாமல் தெளிந்த) தெளிவு, பொய்யா வித்து - (முத்தியடைதற்கு உண்மையாகிய காரணம், ஆகிவிடும் - ஆகாமற்போகாது, எ-று.

(வி-ரை.) ஐயமாவது-மறுபிறப்பும், இருவினைப்பயனும், கடவுளும் உண்டோ இல்லையோ எனத் துணிவுபிறவாமை. வீழ்ந்தவனெழுதற்கு ஊன்றுகோல்போலவுள்ளது அவன் முயற்சியே ஆதலால் காலென்பதற்கு முயற்சியென்றும். கால் - உவமையாகுபெயர். கல்வியறிவுடையான் இடுக்கணேரிட்டபோது, அதினின்றும் நீங்குதற்குரிய உபாயம் இன்னதென வுணர்ந்து செய்து நீங்குவான்; கல்வியறிவில்லாதவன் இடுக்கணில் அகப்பட்டால் தான் நீங்குதற்குச் செய்யும் முயற்சியும் பயன்படாமல் அழிவான்; ஒருபிறப்பில் ஒருவன் செய்த இருவினைகளும் மறுமையில் அவன் அநுபவிக்கும் இன்பத்துக்கும், துன்பத்துக்கும் காரணங்களாகும்; ஐயத்தி னீங்கிய அறிவாளனுக்கு அவ்வறிவு முத்தியடைதற்குச் சிறந்த கருவியாகுமென்பது கருத்து. எழுந்திருக்கும் - செய்புமென்முற்று; எழு - பகுதி, த் - சந்தி, து - சாரியை, இரு - பகுதிப்பொருள் விகுதி, உகரக்கேடு சந்தி, சந்தித்தகரம் நகரமானது மெலித்தல் விகாரம், அனைத்துமொருபகுதி, க்-சந்தி, கு - சாரியை, உம் - எதிர்கால விகுதி, உகரக்கேடு சந்தி; இது பெயரெச்சம் வினைமுற்றுனது. எல்-எனிலென்பதன் மரூஉ; இது தானடுத்த வினைமுற்றை வினையெச்சமாக்கினது. பேதையான்-பண்படியாகப் பிறந்தபெயர்; பேதைமை ஆன் விகுதிப் புணர்ச்சியில் மையீறு கெட்டு, யகர மெய்ச்சந்தி பெற்றது; இப்பகுதியே பண்பாகுபெயராய் அவனை உணர்த்தலு முண்டு. செய்த-பலவின்படர்க்கை இறந்தகால வினையாலணையும்பெயர். பொய்யா வித்து-பொய்யாத வித்தென ஈறுகெட்ட பெயரெச்சத்தொகாநிலைத் தொடராகவும், பொய்யாமையாகிய வித்தெனப் பண்புத்தொகை

நிலைத்தொடராகவுங் கொள்க. ஆகிவிடு மென்பதில் விடு துணிவுப் பொருண்மை விகுதி. (௭௩)

தேவ ரனையர் புலவருந் தேவர்
தமரனைய ரோரூ ருறைவார் தமருள்ளும்
பெற்றன்னர் பேணி யொழுகுவார் கற்றன்னர்
கற்றாரைக் காத லவர்.

(இ-ள்.) புலவரும் - அறிவுடையாரும், தேவர் அனையர்-தேவரை ஒப்பாவர்; ஓர் ஊர் - அவ்வறிவுடையோ ரிருக்கும் ஊரில், உறைவார் - வசிப்பவர், தேவர் - அத்தேவர்களுக்கு, தமர் அனையர் - உறவினரை ஒப்பாவர்; பேணி-(அவர் நட்பினைப்)பாதுகாத்துக்கொண்டு, ஒழுகுவார் - (அவர் குறிப்பின்படி) நடப்பவர், தமருள்ளும் - அவ்வுறவினருள்ளும், பெற்றன்னர்-(அப்புலவர்களது அறிவைப்)பெற்றாரொப்பர்; கற்றாரை - அக்கல்வியறிவினரை, காதலவர் - விரும்பு மாணாக்கர், கற்றன்னர் - (எல்லா நூல்களையும்) கற்றாற்போல்வர், எ - று.

(வி-ரை.) மேல் வருவனவற்றைத் தம் அறிவால் முன் ஆராய்ந்தறிதலால் புலவரைத் 'தேவரனையர்' என்றும், அப்புலவர் கூறும் நூற்பொருள்களைப் பலமுறையும் கேட்டு அக்கல்வியறிவைச் சிறிது பெறலால் ஊராரைத் 'தமரனையர்' என்றும், பிரியாமல் சார்ந்து நடத்தலால் அச்சார்ந்து நடப்பவர் அப்புலவரறிவை மிகுதியும் பெறலால் அவரைப் 'பெற்றாரொப்பர்' என்றும், அவர்பால் முறையே கற்கு நன்மாணாக்கர் அவரறிவை முற்றும் பெறலால் அவரைக் 'கற்றாரொப்பர்' என்றுங் கூறினர். புலவர் - பண்படியாகப் பிறந்த பெயர்; புலமையென்னும் பகுதி, பல்லோர்படர்க்கை அர் விகுதிப் புணர்ச்சியில் மையீறு கெட்டு, வகரவுடம்படு மெய்யாகிய சந்தி பெற்று முடிந்தது; அறிவைப்பற்றியே புலவரென்பது தேவர்க்கும்,

அறிஞருக்கும் வழங்கும். தமர்-பொருளடியாகப் பிறந்தபெயர்; தாம்-பகுதி, அர்-பல்லோர்படர்க்கை விகுதி, பகுதி ஆ அவ்வானது குறுக்கல் விகாரம். தமருள்ளும் என்ற உம்மை உயர்வுசிறப்பு. எழனுருபு கூட்டிப் பிரித்தற்பொருளது. காதலவர்-ஈறு திரிந்த குறிப்புவினைப் பெயர். (எ௭)

தூர்ந்தழியும் பொய்பிறந்த போழ்தே மருத்துவன்
சொல்கென்ற போழ்தே பிணியுரைக்கும் நல்லார்
விடுகென்ற போழ்தே விடுக வுரியான்
தருகெனிற் றாயம் வகுத்து.

(இ-ள்.) பொய்-(நட்புக்கொண்ட இருவரில் ஒருவனிடத்துப்) பொய், பிறந்தபோழ்தே - முளைத்தபோதே, தூர்ந்தழியும் - (நட்பாகிய பாத்தி) தூர்ந்துபோம்; மருத்துவன் - வைத்தியன், சொல்க என்றபோழ்தே - (பிணியாளியை நோக்கிச்) சொல்லுக என்று கேட்டபோதே, பிணி உரைக்கும்-(அவன்) நோயைச் சொல்லுவான்; நல்லார் - நல்லறிவினர், விடுக என்றபோழ்தே - தீச்செயலை ஒழிக என்று சொல்லினபோதே, விடுக-(அதை) ஒருவன் ஒழியக்கடவன்; உரியான் - பாத்தியதை யுடையவன், தருக என்னின் - (தன் பாகத்தைத்) தரக்கடவாயென்று கேட்டால், தாயம் வகுத்து - உரிமைப் பொருளைப் பங்கிட்டு, விடுக - (ஒருவன்) தரக்கடவன், எ-று.

(வி-ரை) விடுக என்னுஞ் சொல்லைப் பின்னுங் கூட்டுக. நட்பின ரிருவருள் ஒருவனிடத்துப் பொய்யொழுக்க முண்டாயின் அந் நட்புக்கெடும்; நோயாளியை நோக்கி, யாது நோயென வைத்தியன் கேட்டபோதே நோயை உள்ளபடி சொல்வான்; நாணத்தால் மறைத்து வேறொன்றைக் கூறுவானாயின், வைத்தியன் கொடுக்கு மருந்தால் உள்ள நோய் தீராமல் வேறு நோயு முண்டாம்; அறிவுடையார் ஒருவனிடத்துத் தீச்செயலைக் கண்டு, இதை நீ ஒழிக என்ற

மட்டில் அதை அவன் செய்யாமலொழியக்கடவன்; ஒழியானாயின் அச்செயல் அவனுக்குக் கேட்டைத்தரும்; பாத்தியதை யுடையவன் தனக்குரிய பாகத்தைக் கொடுவென்றமட்டில், மற்றவன் பங்கிட்டுத் தரக்கடவன்; தரானாயின், வழக்குதளதாகிப் பொருள் குறைந்துபோமென்பது கருத்து. பொழுதென்னுஞ் சொல் போழ்தெனச் சிதைந்தது; போதெனவுஞ் சிதைந்துவரும்; இம்மரூஉ மொழுகல் ஒழுகலெனவும், விழுதல் வீழ்தலெனவும் வினையிலும் வரும். எ - தேற்றம். மருத்துவன்-பொருளடியாகப் பிறந்தபெயர்; மருந்து - பகுதி, வ் - பெயரிடைநிலை, அன் - ஆண்பாற்படர்க்கை விகுதி பகுதி நகரம் தகரமானது வலித்தல் விகாரம்; பொருள் : மருந்தை இழைத்துக் கூட்டுவோனென்பது. 'தூர்ந்தழியும்' என்பது 'தூர்ந்தொழியும்' எனவும், 'சொல்கென்ற' வென்பது 'சொல்லென்ற' எனவும் 'உரியான் தருகெனின்' என்பது 'அதற்குரியான் தாவெனின்' எனவும் பாடபேதமுண்டு. (எ௫)

நாக்கி னறிப வினியசுவை மூக்கினான்
மோந்தறிப வெல்லா மலர்களு நோக்குள்ள
கண்ணினாற் காண்ப வணிபவற்றைத் தொக்கிருந்
தெண்ணினா னெண்ணப் படும்.

(இ-ள்) இனிய சுவை - இனிய சுவையுடைய பொருள்களை, நாக்கின் - நாக்கினால், அறிப-(யாவரும்) அறிவார்கள்; எல்லா மலர்களும் - எல்லா நன்மலரின் மணத்தையும், மூக்கினான் மோந்து அறிப - மூக்கினால் மோந்து அறிவார்கள்; அணிபவற்றை - அழகுள்ள பொருள்களை, நோக்கு உள்ள-காணுந்தொழிலமைந்த, கண்ணினான் காண்ப - கண்களினால் காண்பார்கள்; தொக்கு இருந்து-(அறிவுடையோர் பலரோடு) கூடியிருந்து, எண்ணினான் - கருததினால், எண்ணப்படும் - (கருத்துப்பொருள்) ஆராய்ந்தறியப்படும், எ-று.

(வி - ரை.) காட்சிப்பொருள்களில் உணவுப் பொருளினது சுவையை நாக்கினாலும், மலர்களினது மணத்தை மூக்கினாலும், அழகுள்ள பொருளைக் கண்ணினாலும் அறிவார்கள்; "ஒருமொழி யொழிதன், இனங்கொளற் குரித்தே" என்பதனால் மெய்யினால் வெம்மை, தண்மை முதலிய பரிசத்தையும், செவியினால் இன்னோசை முதலியவற்றையும் உணர்வார்க ளென்பதுங் கொள்க. கருத்துப்பொருளை எண்ணத்தினால் ஆராய்ந்துணர்வார்கள்; சுவை - பண்பாகுபெயர். எண்ணினா னென்றமையால் கருத்துப்பொருளென்பது அவாய் நிலையால் வந்தது. மூன்றனுருபு மூன்றும், ஐந்தனுருபொன்றும் கருவிப்பொருளன. நோக்கு - முதனிலைத்தொழிற்பெயர். எண்ணப்படும்-செயப்பாட்டுச் செய்யுமென்முற்று. தொக்கிருந்து-இறந்தகால வினையெச்சம்; தொகு-பகுதி, இரு - பகுதிப்பொருள் விகுதி, பகுதி ஒற்றிரட்டியது விரித்தல் விகாரம், உகரக்கேடு சந்தி, அனைத்து மொருபகுதி, த்-சந்தி, த்-இறந்தகால இடைநிலை, உ - வினையெச்ச விகுதி, சந்தித் தகரம் நகரமானது மெலித்தல் விகாரம். (எகூ)

சாவாத வில்லை பிறந்த வுயிரெல்லாம்
தாவாத வில்லை வலிகளு மூவா
திளமை யியைந்தாரு மில்லை வளமையில்
கேடின்றிச் சென்றாரு மில்.

(இ-ள்) பிறந்த உயிர் எல்லாம் - பிறந்த எல்லா வுயிர்களிலும், சாவாத இல்லை - சாகாதவை இல்லை; வலிகளும் - வன்மைகளிலும், தாவாத இல்லை - கெடாதவைகளில்லை; மூவாது - மூத்தலக்கழியாமல், இளமை இயைந்தாரும் இல்லை-இளமை நிலைக்கப்பெற்றவருமில்லை; வளமையில் - (பெற்ற) செல்வங்களில், கேடு இன்றி - (இடையே) அழிவை யடையாமல், சென்றாரும் இல் - முற்றும் அநுபவித்தவரும் இல்லை, எ-று.

(வி-ரை) உடல், வலி, இளமை, செல்வமென்னும் இவற்றின் நிலையில்லாமையை உணர்ந்து, விரைந்து அறஞ்செய்க என்பது கருத்து. சாவாத, தாவாத - பலவின்படர்க்கை எதிர்மறை வினையாலணையும்பெயர். மூவாது-எதிர்மறை வினையெச்சம்; மூ-பகுதி, வ் - சந்தி, ஆ - எதிர்மறை விகுதி, அனைத்துமொருபகுதி, த் - எழுத்துப்பேறு, உ - வினையெச்சவிகுதி, இதுவும் சாவாத என்பது குச்சாரியை பெற்று மூக்காது, சாகாது எனவும் வரும். பொதுப்பட வலிக ளெனப் பன்மையாற் கூறினமையால் அறிவின் வலி, உடலின்வலி முதலியவை கொள்க. வளமை-பண்புப்பெயர்; வள் - பகுதி, அ-சாரியை, மை-பகுதிப்பொருள் விகுதி, மை - விகுதிப்புணர்ச்சியில் அகரச்சாரியை வருதல் "பாலமை யுணர்ந்தவன் பக்கம் பூண்டவே" என்னுங் கம்பநாடர் செய்யுளிலுங் காண்க. இப்பெயர் தன் காரணமாகிய பொருட்கானமையால் காரியவாகுபெயர்; கேடு - முதனிலைதிரிந்த தொழிற்பெயர். (எஎ)

சொல்லா னறிப வொருவனை மெல்லென்ற
நீரா னறிப மடுவினை யார்கண்ணும்
ஒப்புரவி னானறிப சான்றாண்மை மெய்க்கண்
மகிழா னறிப நறா.

(இ - ள்.) ஒருவனை - ஒருவனது தன்மையை, சொல்லான் - (அவன் பேசும்) சொல்லினாலே, அறிப-(அறிவுடையோர்) அறிவார்கள்; மடுவினை - மடுவினது தன்மையை, மெல் என்ற - மென்மையாகிய, நீரான் அறிப-(அதிலுள்ள) நீரினாலே அறிவார்கள்; சான்று ஆண்மை - பல குணங்களாலும் நிறைந்து அவற்றை யாளுந்தன்மையை, யார் கண்ணும் - எவரிடத்தும், ஒப்புரவினான் - (ஒப்ப நடக்கும்) உலக நடையினால், அறிப - அறிவார்கள்; நறா - (ஒருவன்) மது உண்டமையை, மெய்க்கண் - (அவனது) உடலிற்றோன்றும், மகிழான் - களிப்பின் குறியால், அறிப - அறிவார்கள், எ-று.

(வி-ரை.) அறிவுடையார் ஒருவனது தன்மையை அவன் சொல்லினாலும், மதியின் தன்மையை அதனீரினாலும், ஒருவன் நற்குணங்களினால் நிறைவுடையனா யிருக்கையைச் செல்வரிடத்தும் வறியாரிடத்தும் உலகநடைக்குத் தவறுதலில்லாமல் அவன் நடக்கும் நடையினாலும், ஒருவன் கள்ளுண்டதை அவனுடலில் தோன்றும் களிக்குறியினாலும் அறிவார்கள். மெல்லென்ற-பண்புப்பொருண்மை குறித்த இடைச்சொலடியாகப் பிறந்த இறந்தகாலப் பெயரெச்சம்; மெல்லென் - பகுதி, ற் - இறந்தகால இடைநிலை, அ - பெயரெச்சவிகுதி. ஒருவன், மதி - பொருளாகுபெயர். மகிழ்வின் காரியமாகிய குறியை மகிழென்றது காரணவாகுபெயர். சான்று-இறந்தகாலவினையெச்சம், ஆண்மை தொழிற்பெயர். இரண்டு சொல்லுந் தொக்கு சான்றாண்மை யென ஒருசொல்லின் தன்மைப்பட்டு இது நின்றது. யார்-யாவரென்பதன் மரூஉ. உம்மை முற்றும்மை. (எஅ)

நாவன்றோ நட்பறுக்குந் தேற்றமில் பேதை
விடுமன்றோ வீங்கிப் பிணிப்பி னவாஅப்
படுமன்றோ பன்னூல் வலையிற் கெடுமன்றோ
மாறு ணிறுக்குந் துணிவு.

(இ-ள்.) நா-(இதம் பேசாத) நாக்கு, நட்பு அறுக்கும் அன்றோ-(ஒருவரோடு கொண்ட) நட்பினை நீங்கச் செய்யுமன்றோ; வீங்கி - (ஒருவர் அன்பு) மிகுந்து, பிணிப்பின் - (சிநேகத்தால்) கட்டினும், தேற்றம் இல் - (நட்பின் தன்மையை) அறியமாட்டாத, பேதை - அறிவிலி, விடும் அன்றோ - (அந்நட்பை) ஒழியானல்லனோ; அவா - (நன்மாணாக்கனுடைய) விருப்பம், பல் நூல் வலையில் - பலநூல்களாகிய வலையில், படும் அன்றோ-உட்படுமன்றோ; மாறுள்-(பலரோடு கொள்ளும்) பகையில், நிறுக்கும் - நிறுத்தவல்ல, துணிவு - துணிவினால், கெடும் அன்றோ - (அத்துணிவுடையான்) கெடுவானல்லனோ,

(வி - ரை.) கடுஞ்சொல் பேசுவோனை ஒருவருஞ் சிநேகியார்; தெளிவில்லாத மூடனை நல்வழிப்படுத்தக் கருதி, நல்லவர் மிகுந்த அன்பு காட்டிச் சேரினும் அவரைச் சாராமல் நீங்குவான்; நன் மாணாக்கனுடைய ஆசை பல நூல்களிலேயே தங்கும்; யாவரிடத்தும் அன்பு செய்யாமல் பகை செய்பவன் கெடுவானென்பது திண்ணம். அன்று-எதிர்மறைக் குறிப்புவினைமுற்று. ஒ-எதிர்மறை. அறுக்கும் முதலிய நான்கனோடு இரண்டு எதிர்மறைச் சொற்களைப் புணர்த்தது அத்தொழில்கள் நடந்தேவிடுமென்னுந் துணிவை யுணர்த்தற் கென்க. பண்பாகுபெயராகிய பேதை சொல்லால் அஃறிணையாத லால் அன்றென்னும் அத்திணைவினை கொண்டது; அன்றி இது அருகி இருதிணைபைம்பாற்கும் பொதுவாதலால் புணர்த்ததெனினும் ஒக்கும். அவா, மாறு-முதனிலைத்தொழிற்பெயர். அளபெடை செய்யு ளிசை நிறைக்கவந்தது. பிணிப்பினுமென்ற உயர்வுசிறப்பும்மை விகாரத்தால் தொக்கது. (எக)

கொடுப்பி னசனங் கொடுக்க விடுப்பின்
உயிரிடை யிட்ட விடுக்க வெடுப்பின்
கிளையுட் கழிந்தா ரெடுக்க கெடுப்பின்
வெகுளி கெடுத்து விடல்.

(இ-ள்.) கொடுப்பின்-(ஒருவன் ஒருவருக்கு ஒரு பொருளைக்) கொடுக்க வேண்டினால், அசனம் கொடுக்க - உணவைக் கொடுக்கக் கடவன்; விடுப்பின் - துறக்கவேண்டினால், உயிரிடை - உயிரினிட த்து, இட்ட - வைக்கப்பட்ட குற்றங்களைத்தையும், விடுக்க - துறக் கக்கடவன்; எடுப்பின்-தாங்கவேண்டினால், கிளையுள் - சுற்றத்தாருள், கழிந்தார் - பொருளில்லாரை, எடுக்க - தாங்கக்கடவன்; கெடுப்பின்- கெடுக்கவேண்டினால், வெகுளி கெடுத்துவிடல் - கோபத்தைக் கெடு த்துவிடக்கடவன், எ-று.

(வி-ரை.) ஒருவன் உடலில் உயிர்வாழச் செய்வதும், போது மென்னுந் திருப்தியைத் தரவல்லதும் உணவே ஆதலால் அதனை வறியவர்க்குக் கொடுக்கவேண்டும்; உயிர்க்குற்றங்களைந்தும் முத்திக்குத் தடை ஆதலால் அவற்றை ஒழிக்கவேண்டும்; சுற்றத்தாரில் பொருளில்லாரைத் தாங்காவிட்டால் பழியும் பாவமும் உண்டாமாதலால் அவர்களைத் தாங்கவேண்டும்; நல்லோரைச் சாரவொட்டாமல் செய்தலால் கோபத்தைக் கெடுக்கவேண்டு மென்பது கருத்து. வெகுளி குற்றங்களைந்தனுள் ஒன்றாயினும், மற்ற நான்கையும் போலாமல் ஒருவனுக்கு நன்மை தருவனவற்றைக் கூறும் நல்லோரை நீங்கச் செய்யுங் கொடுமைபற்றி 'வெகுளி கெடுத்துவிடல்' என்றார். குற்றங்களைந்தாவன: மயக்கம், அகங்காரம், அவா, ஆசை, கோபம் என்பன; இவை உயிர்க்குணமாதலின் 'உயிரிடை இட்ட' என்றார்; இவ்வாறு சொல்லியது இலக்கணை. இட்ட-இறந்தகாலவினைப்பெயர். வெகுளி-தொழிற்பெயர்; இ - புடைபெயர்ச்சி விகுதி. அசனம்-வடமொழிப்பெயர். கெடுத்துவிடல் அல்லீற்று வியங்கோள்வினை; இதில் விடு துணிவுப்பொருண்மை விகுதி. (௮௦)

நலனு மிளமையு நல்குரவின் கீழ்ச்சாம்
குலனுங் குடிமையுங் கல்லாமைக் கீழ்ச்சாம்
வளமில் குளத்தின்கீழ் நெற்சாம் பரமல்லற்
பண்டத்தின் கீழ்ச்சாம் பகடு.

(இ-ள்.) நல்குரவின் கீழ் - வறுமையின் கீழமைந்த, நலனும் - நற்குணமும், இளமையும் - இளமையுருவும், சாம் - விளங்கமாட்டா - கல்லாமைக் கீழ் - கல்வியறியாமையின் கீழமைந்த, குலனும் - உயர்குலமும், குடிமையும் - உயர்குடிப்பிறப்பும், சாம் - விளங்கமாட்டா; வளம் இல் - நீராகிய வளப்பமில்லாத, குளத்தின் கீழ் - குளத்தின் கீழமைந்த, நெல் சாம் - நெற்பயிர் விளையமாட்டா; பரம் மல்லல் -

றம் - அறம் கூற்றுவனும்; இல் - தன் குடும்பத்துக்கு, இருந்து - அக்குடும்பத்தி லிருந்துகொண்டு, தீங்கு ஒழுகுவாள் - கெட்டவழியில் நடப்பவள், கூற்றமே - கூற்றுவனேயாம், எ-று.

(வி-ரை.) பேதையர் மிகுதியும் பொய், குறளை, வன்சொற்களைப் பேசுவாராதலால் அவர்க்கு அவர் வாய்ச்சொல்லும், பாவத்தொழிலைச் செய்வார்க்கு அறமும், தன் குடும்பத்துக்குக் கெட்ட நடையுள்ள பெண்ணும் கூற்றம்போலு மென்பது கருத்து. அவை நீங்காத துன்பஞ் செய்தலால் 'கூற்றம்' என்றார். சொல், காய், அறமாகிய அஃறிணைப் பொருள்களைக் கூற்றமென்னும் உயர்திணைப் பொருளாகவும், ஒழுகுவாளென்னும் பெண்பாற்பொருளைக் கூற்றமென்னும் ஆண்பாற்பொருளாகவும் உருவகப்படுத்தியது ஓர் மரபு வழுவமைதி. வாய்ச்சொல்லுக்கும், அல்லவைக்கும் அரசர் தண்டனை முதலிய பரிகாரத்தால் அவ்விருவருந் திருந்துதல்கூடும்; தீங்கொழுகுவாள் கெட்ட கற்பை மீண்டும் பெறக்கூடாமையால் தேற்றேகாரம் கொடுத்துக் 'கூற்றமே' என்றார். இல் - இடவாகுபெயர். இச்செய்யுளின் மூன்றாமடியை "என்பிலதனை" என்னுங் குறளுக்குப் பரிமேலழகர் ஆசிரிய வசனமாகக் கொண்டனர். (அங.)

நீரான்வீ றெய்தும் விளைநில நீர்வழங்கும்
பண்டத்தாற் பாடெய்தும் பட்டினங் கொண்டாளும்
நாட்டான்வீ றெய்துவர் மன்னவர் கூத்தொருவன்
ஆடலாற் பாடு பெறும்.

(இ - ள்.) விளை நிலம் - விளைநிலத்துப் பயிர், நீரான் - (தன்னில் பாய்கின்ற) நீரினால், வீறு எய்தும் - செழிப்பை அடையும்; பட்டினம் - பட்டினமானது, நீர் வழங்கும் - கடலால் வழங்கப்படும், பண்டத்தான் - பொருள்களால், பாடு எய்தும் - பெருமைபெறும்; மன்னவர் - அரசர், கொண்டு ஆளும் - தமக்குள்ளாக்கி ஆளுகின்ற,

நாட்டான் - நாட்டிலுள்ள குடிகளால், வீறு எய்துவர் - பெருமை பெறுவர்; கூத்து - கூத்தாடுதல் செய்யும் சபை, ஒருவன் ஆடலால் - (நடனத்தில் வல்ல) ஒருவனது கூத்தினாலே, பாடு பெறும்-பெருமை பெறும், எ-று.

(வி-ரை.) விளைநிலம், நாடு - இடவாகுபெயர். முதனிலைபெருத தொழிற்பெயராகிய கூத்து-தானியாகுபெயர். விளைநிலம் என்பதில் விளை-வினைத்தொகைக்குறிப்பு. பல தீபங்களிலிருந்து கடலின் வழியாய் அத்தீபத்தார் கொண்டுவரும் பண்டங்களை, இடத்து நிகழ் பொருளின் றொழிலை இடத்தின்மேலேற்றி 'நீர் வழங்கும் பண்டம்' என்றார்; இதை ''பலபல தீவிற் பண்டம் பகர்வபட் டினமென் றோதும்'' என்னும் நிகண்டுச் செய்யுளாலு முணர்க. 'நாட்டான்வீ றெய்துமா மன்னன்' எனவும், 'பாடலாற் பாடு பெறும்' எனவும் பாடமுண்டு. இரண்டாவது நீர் தலைமைபற்றியபெயர். (அ௪)

ஒன்றாக்கல் பெண்டிர் றொழினல மென்றும்
அறனாக்க லந்தண ருள்ளம் பிறனாளும்
நாடுகோண் மன்னர் றொழினலங் கேடுக்கம்
கேளி ரொரீஇ விடல்.

(இ-ள்) பெண்டிர்-குலப்பெண்களுடைய, தொழில்-தொழில்களில், நலம் - சிறப்புள்ளது, என்றும் - கணவன் அழகு செல்வ முதலிய கெட்டகாலத்தும், ஒன்று ஊக்கல் - கற்பாகிய ஒன்றை மனவெழுச்சியோடு காத்தல்; அந்தணர் உள்ளம் - பிராமணருடைய ஊக்கம், (என்றும்)-மிக்க வறுமை வந்தகாலத்தும், அறன் - தம் குல தருமத்தை, ஊக்கல் - மனவெழுச்சியோடு செய்தல்; மன்னர் - அரசர்களது, தொழில்-தொழில்களில், நலம் - சிறப்புள்ளது, (என்றும்)- பெருஞ் செல்வத்தை அடைந்தகாலத்தும், பிறன் ஆளும் - பகைவனால் ஆளப்படும், நாடு - நாட்டை, கோள் (அவனை வென்று) தம்

வசப்படுத்துதல்; கேளிர் - (ஒருவன்) உறவினரை, ஒரீஇவிடல் - நீக்கிவிடுதல், (என்னும்) - மிக்க வலியுடையனாகிய காலத்தும், கேடு ஊக்கம் - (தனக்கு) வரும் கேட்டை மனவெழுச்சியோடு செய்த லாம், எ-று.

(வி ரை.) குலப்பெண்களுக்குக் கற்பும், அந்தணர்களுக்குக் குல தருமம் கெடாத ஒழுக்கமும், அரசர்களுக்குப் பகைவனை வென்று அவனது நாட்டைத் தம் வசமாக்கும் முயற்சியும், நன்மையையும், உறவினரை நீக்கிவிட்டவனுக்கு அம்முயற்சி கேட்டையும் தருவன என்பது கருத்து. குலப்பெண்களுக்குரிய குணம், செய்கை என்பவ ற்றில் கற்போடொப்பது இல்லாமையால் அதனை 'ஒன்று' என எண் ணலளவையாகுபெயராற் கூறினர். கோள், கேடு - முதனிலை திரிந்த தொழிற்பெயர். நாடு கோள் என்பது இரண்டாம் வேற்றுமைத் தொகைப் புணர்ச்சியாதலால் நிலைமொழி [நன் - உயிர் - ௬௫ - ௩௩ - இன்படி] டகரவொற்றிரட்டலும், [௧௫-இன்படி] வருமொழிக் ககர மிகுதலும் பெறாமல், [உருபு - ௧௯ - இன்படி] விகாரத் தியல்பாயி ற்று. செயப்படுபொருளில்வந்த ஆறாம்வேற்றுமைத் தொகைநிலைத் தொடராயின் நாட்டுக்கோளென வரும்; கேடூக்கம் என்பதற்கும் இவ் வாறு உரைக்க. ஒரீஇவிடல் - தொழிற்பெயர்; அளபெடை சொல் லிசை யளபெடை. என்று மென்பது முதனிலைத் தீவகவணியாத லால் மற்றவற்றோடும் கூட்டுக. பெண்டிர், கேளிர் - பண்படியாகப் பிறந்த பல்லோர் படர்க்கைப்பெயர்; இர்-பல்லோர்படர்க்கை விகுதி; பெண்-பகுதி, டு - பகுதிப்பொருள்விகுதி, தகரம் டகரமாதல் சந்தி; பெண்டு - பெண்மை. (௮௫)

கள்ளாமை வேண்டுங் கடிய வருதலால்
தள்ளாமை வேண்டுந் தகுதி யுடையன
நள்ளாமை வேண்டுஞ் சிறியரோ டியார்மாட்டும்
கொள்ளாமை வேண்டும் பகை.

(இ-ள்.) கடிய - (பிறர் பொருளைக் களவு செய்தால் பின்) அஞ்சத்தக்கவை, வருதலால் - நேரிடுதலால், கள்ளாமை வேண்டும்-களவு செய்யாமையே தகுதி; தகுதி உடையன - (பெரியோரால் சொல்லப்படும்) தகுதியுடைய சொற்களை, தள்ளாமை வேண்டும் - தள்ளாமல் கொள்ளலே தகுதி; சிறியாரோடு - பேதையாரிடத்தில், நள்ளாமை வேண்டும் - சிநேகியாமையே தகுதி; யார்மாட்டும் - இளையாரிடத்தும், பகை கொள்ளாமை வேண்டும் - பகை கொள்ளாதிருத்தலே தகுதி, எ - று.

(வி-ரை.) பேதையரிடத்து நட்புக்கொண்டால், அந்நட்பு கொண்டவனுக்குப் பழியையும், பெருந் துன்பத்தையுந் தருதலால் சிறியரோடு நள்ளாமையும், இடுக்கண் நேரிட்டவிடத்து இளையாரா லும் ஒருதவி பெறவேண்டியிருக்குமாதலால் யாரிடத்தும் பகை கொள்ளாமையும் தகுதியாயின. அஞ்சத்தக்கவை இம்மையில் தண்டனையும், பழியும், மறுமையில் நரகத் துன்பமுமாம். கள்ளாமை முதலிய நான்கும் எதிர்மறைத் தொழிற்பெயர். வேண்டு மென்பவை நான்கும் தேற்றப்பொருள்பட்டே நிற்குந் தொழிற்பெயர்கள். கடிய-கடி என்னும் உரிச்சொலடியாகப் பிறந்த பலவின் படர்க்கைப்பெயர்; குறிப்பு வினைப்பெயருமாம். இங்ஙனமன்றிக் கடுமை என்னும் பண்படியாகப் பிறந்த அவ்விருவகைப் பெயரெனினும் குற்றமன்று. ஓடென்னும் மூன்றனுருபு எழாவதனிடப்பொருளில் வந்தது. (அசு)

பெருக்குக நட்டாரை நன்றின்பா லுய்த்துத்
தருக்குக வொட்டாரைக் கால மறிந்தாங்
கருக்குக யார்மாட்டு முண்டி சுருக்குக
செல்லா விடத்துச் சினம்.

(இ - ள்.) நட்டாரை - சிநேகரை, நன்றின்பால்-சுகவாழ்க்கையில், உய்த்து-நடத்தி, பெருக்குக - (ஒருவன்) பெருகச் செய்யக்கட

வன்; காலம் அறிந்து - (பகைவர்மேல் செல்லும்) காலத்தை அறிந்து, ஆங்கு - அந்தக்காலத்தில், ஒட்டாரைத் தருக்குக - பகைவரிடத்துக் களிப்போடு (போர்க்குச்) செல்லக்கடவன்; யார்மாட்டும் - மிக்க நட்பினரிடத்தும், உண்டி - (பலமுறை சென்று) உண்ணுதலை, அருக்குக - தவிரக்கடவன்; சினம் செல்லாத இடத்து - (தன்) கோபம் செல்லுதற்குரியதாகாத இடத்தில், சுருக்குக - (அதைத்) தணியச் செய்யக்கடவன், எ - று.

(வி-ரை.) தன்னின் எளியாரிடத்துத் தான் கோபங் கொள்வாரயின் அது இம்மையில் புகழைத்தராமல் தன் வெற்றிக்குப் பழிப்பையும், மறுமையில் பாவத்தையும் தருதலால் அவ் வெளியாரைச் 'செல்லாவிடம்' என்றார். ஒருவன் தன் உறவினரைச் சுகவாழ்வில் வைத்துப் பெருகச்செய்யக்கடவன்; வெற்றிகொள்ளுங் காலமறிந்து பகைவரிடத்துத் துணிவோடு போர்க்குச் செல்லக்கடவன்; நெருங்கிய உறவினரிடத்தும் பலமுறை சென்று உண்ணுதலைத் தவிரக்கடவன்; எளியாரிடத்துத் தன் கோபந் தணியக்கடவனென்பது. செல்லாவிடத் தென்பதற்குத் தன்னினும் வலியாரிடத்திலென உரைத்தால், அவரால் தனக்குத் தீங்கு வருதலை உணர்ந்து தானே சினங் கொள்ளாதலால் அஃது உரை அன்மை அறிக. ஒட்டாரை - உருபுமயக்கம்; அச்சொல் எதிர்மறைவினைப்பெயர்; ஒட்டு - பகுதி, ஆ - எதிர்மறை விகுதி, உகரக்கேடு சந்தி, அனைத்து மொரு பகுதி, ஆர் - பல்லோர்படர்க்கை விகுதி, விகுதி ஆ கெட்டது முதற்குறை; இப்பகுதி தன்வினைக்கும், பிறவினைக்கும் பொது ஆயினும் இங்குத் தன்வினைப் பகுதியாய் நின்றது. அருக்குக - பிறவினையாகிய வியங்கோள்வினை. உருகுதல் உருக்கென ஆனதுபோல அருகென்னுந் தன்வினைப்பகுதி தல் விகுதி புணர்ந்து கெட்டமாத்திரையில் அருக்கெனத் தன்னொற்றிரட்டிப் பிறவினைப் பகுதியானது. நெருங்குதல் நெருக்கென்றானதுபோலச் சுருங்கென்னுந் தன்வினைப்

பகுதி அவ்வாறு விகுதிபுணர்ந்து கெட்டமாத்திரையில் சுருக்கென மெல்லொற்று வல்லொற்றாகிப் பிறவினைப் பகுதியானது. உண்டி-தொழிற்பெயர்; உண் - பகுதி, தி - புடைபெயர்ச்சி விகுதி, தகரம் டகரமானது சந்தி; இவ்வாறன்றித் தொழிலடியாகப் பிறந்த பெயரெனக்கொள்ளின், உண்-பகுதி, து-சாரியை, இ - செயப்படுபொருண்மைவிகுதி, தகரம் டகரமாதலும், உகரங்கெடுதலும் சந்தி என்க; இங்ஙனங் கொள்ளுகையில் உண்ணுமென்னுஞ் சொல் வருவிக்க. ( )

மடிமை கெடுவார்க ணிற்குங் கொடுமைதான்
பேணுமை செய்வார்க ணிற்குமாம் பேணினுன்
நாணின் வரைநிற்பர் நற்பெண்டிர் நட்டமைந்த
தூணின்க ணிற்குங் களிறு.

(இ-ள்.) மடிமை - சோம்புந்தன்மை, கெடுவார்கண் - (கல்வி, செல்வ முதலியவை) கெடுவாரிடத்து, நிற்கும்-நிலைபெறும்; கொடுமை-தீமை, பேணுமை-(காக்கவேண்டு மவற்றைக்) காவாமையை, செய்வார்கண் - செய்யும் பேதையரிடத்து, நிற்கும்-நிலைபெறும்; நல்பெண்டிர்-நல்ல பெண்கள், பேணினுன் (வரை)-விரும்பிக்கொண்டவனது எல்லையிலும், நாணின் வரை-நாணத்தினது எல்லையிலும், நிற்பர்-நிலைபெறுவர்; களிறு-யானை, நட்டு - நடப்பட்டு, அமைந்த-(தனக்குத்) தகுந்த அளவாயுள்ள, தூணின்கண் நிற்கும் - தூணில் நிலைபெறும், எ-று.

(வி-ரை.) காக்கவேண்டுமவை குடிப்பிறப்பு, கல்வி, ஒழுக்க முதலியவை. கொண்டவனது எல்லை-அவன் சொல்லிய சொல்லினெல்லையும், அவன் வீட்டினெல்லையுமாம்; இக்கருத்தே பற்றித் திருவள்ளுவர் "பிறன்வரையாள்" எனக் கூறுதலுங் காண்க. வரை என்பதைப் பேணினு னென்பதனோடுங் கூட்டுக. கல்வி செல்வம் கெட

வேண்டியவர்களிடத்துச் சோம்பலும், குடிப்பிறப்பின் மேன்மை, கல்வி, ஒழுக்க முதலானவற்றைக் காத்துக்கொள்ளாதவரிடத்துத் தீய செயலும், நற்பெண்டிரிடத்துக் கணவனுடைய சொல்லி னெல்லையையும், அவன் வீட்டி னெல்லையையும் கடவாமையும், காணத்தி னெல்லையைக் கடவாமையும், கட்டுத்தறியினிடத்து யானையும் நிலைபெறும். பேணுமை-எதிர்மறைத் தொழிற்பெயர். தான், ஆம்-அசை.

மறையறிப வந்தண் புலவர் முறையொடு
வென்றி யறிப வரசர்க ளென்றும்
வணங்க லணிகலஞ் சான்றோர்க் கஃதன்றி
அணங்கை வணங்கலள் பெண்.

(இ-ள்.) அம் தண் - அழகிய கருணையையும், புலவர் - அறிவையுமுடைய பிராமணர், என்றும் - எக்காலத்தும், மறை அறிப - வேதங்களை யாராய்வார்; அரசர்கள் - அரசர்கள், முறையோடு-(குடிகளைக் காக்கும்) முறையோடு, வென்றி - (பகைவரை) வெல்லுந் தொழிலையும், அறிப - ஆராய்வார்; சான்றோர்க்கு - (கல்வியறிவு கேள்விகளால் நிறைந்தவர்க்கு, அணிகலம்-அணிதற்குரிய ஆபரணம், வணங்கல் - (யாவருக்கும்) பணிவுடையாரா யிருத்தலாம்; பெண் - பெண்ணெனப்பட்டவள், (என்றும்)-எக்காலத்தும், அஃது அன்றி-(தன் கணவனாகிய) அத்தெய்வத்தை அல்லாமல், அணங்கை - வேறு தெய்வத்தை, வணங்கலள் - வணங்கல் செய்யாள், எ-று.

(வி-ரை.) அருளையும், அறிவையுமுடைய பிராமணர்கள் வேதப் பொருளை ஆராய்வர்; அரசரெனப்படுவார் நீதியையும், பகைவரை வெல்லுந் திறத்தையும் ஆராய்வர்; கல்வி அறிவு கேள்விகளால் நிறைந்த பெரியவர்களுக்கு ஆபரணம் வணங்கத்தக்கவர்க்கு வணங்கலாம்; பெண்ணென்பவள் தன் கணவனை அன்றித் தெய்வங்களை வணங்காள். அணங்கு பொருளால் உயர்திணையாயினும், சொல்லால் அஃ

றிணையை ஒத்தலால் 'அஃதென' அஃறிணைச் சொல்லாற் கூறினார். அகரச்சுட்டு உயர்த்தற்பொருளது. மனைவிக்குரிய தெய்வம் கணவனே ஆதலால் 'அஃது' என்றார். அஃது-சுட்டுப்பெயர்; அ-பகுதி, து - ஒன்றன்படர்க்கை விகுதி, ஃ - விரித்தல் விகாரம்; இவ்விகாரம் பெறாமல் அது எனவும் வரும். வணங்கலென உடலுக்குரிய வினையைக் கூறினாராயினும், "ஒருமொழி ஒழிதன் இனங்கொளற் குரித்தே" என்பதனால் பணிவை யுணர்த்துஞ் சொல்லையும் சிந்தித்தலையுங்கொள்க. மறை-இறைவனுடைய குணங்களைக் கூடமாகச் சொல்வதாதலால் முதனிலைத் தொழிலாகுபெயர்; இப்படியல்லாமல் பிராமண ரொழிந்த மற்ற வருணத்தார்க்கு ஓதுவித்தல் முதலியனவாக மறுக்கப்பட்டதாதலால் மறு-பகுதி, ஐ-செயப்படுபொருண்மைவிகுதி, உகரக்கேடு சந்தி எனத் தொழிலடியாகப் பிறந்தபெயரெனினும் பொருந்தும். வென்றி -தொழிற்பெயர்; வெல்- பகுதி, இ - புடைபெயர்ச்சி விகுதி, லகர தகரங்கள் றகரமானது சந்தி, பகுதியீற்றுச் சந்தி றகரம் னகரமானது மெலித்தல் விகார; இச்சொல் மெலித்தல் விகாரமடையாமல் வெற்றி எனவும் வழங்கும். (௮௧)

பட்டாங்கே பட்டொழுகும் பண்புடையாள் காப்பினும்
பெட்டாங்கே பெட்கும் பிணையிலி முட்டுறினும்
சென்றாங்கே சென்றொழுகுங் காமங் காப்பினும்
கொன்றான்மே னிற்குங் கொலை.

(இ - ள்) பண்பு உடையாள் - நற்குணமுடைய பெண், பட்டாங்கே - (காவல் செய்யாவிடினும்) தன்னியற்கையாகிய கற்புசே, பட்டு - உட்பட்டு, ஒழுகும் - நடப்பாள்; பிணையிலி - (கணவனோடு) உடன்படுதலில்லாதவள், காப்பினும் - காவல் செய்தாலும், பெட்டாங்கே-(காவல் செய்வதற்கு முன் சாரர்களை) விரும்பினாற்போலவே, பெட்கும் - விரும்பி நடப்பாள்; காமம் - (ஒருவனுடைய) காமம், முட்டு உறினும் - இடையூறு நேரிடினும், சென்றாங்கே - (இடை

பூறு நேரிடுதற்கு முன்) சென்றாற்போலவே, சென்று - போய், ஒழுகும் - (தீயவொழுக்கத்தில்) நடக்கும்; கொலை - கொலைப்பாதகம், காப்பினும் - (பலர் நின்று) மறைக்கினும், கொன்றான்மேல் - அக்கொலை செய்தவன்மேல், நிற்கும் - நிலைபெறும், எ - று.

(வி-ரை.) கற்பில்லாளுக்குக் காப்பினும் என்றமையால் கற்புடையாளுக்குக் காவல் செய்யாவிடினும் என்ற சொல் வருவிக்கப்பட்டது. பட்டாங்கு-இயற்கை; இது பண்புப்பெயர். நற்குணமுடைய பெண் தனக்குரிய கற்பின்வழியில் நடப்பாள்; தீக்குணமுடைய பெண் தன் விருப்பின்படி நடப்பாள்; காமுகன் என்ன தடை நேரிட்டாலும் அதை மதிக்காமல் வழக்கப்படி நடப்பான்; கொலையைப் பலர் கூடி மறைத்தாலும் அக் கொலைப்பாவம் தன்னைச் செய்தவனிடத்து நிற்கும். பெட்டாங்கு, சென்றாங்கு என்பவற்றைப் பெட்டால் ஆங்கு, சென்றால் ஆங்கு எனப் பிரிக்க; இவ்விருவினையெச்சங்களினீறும் தொகுக்கப்பட்டன. ஏ - இரண்டும் பிரிநிலை. உடையானது தொழிலை உடைமையாகிய காமத்தின்மேலேற்றிக் கூறினாராயினும் காமமுடையான் முட்டுறினும் சென்றாங்கே சென்றொழுகுவானென்பது கருத்தாகக் கொள்க. காப்பினும் முட்டுறினுமென்ற உம்மைகள் உயர்வுசிறப்பும்மைகள். கொலை-காரணவாகுபெயர். (கூ0)

வன்கண் பெருகின் வலிபெருகும் பான்மொழியார்
இன்கண் பெருகி னினம்பெருகு மச்சான்ற
மென்கண் பெருகி னறம்பெருகும் வன்கட்
கயம்பெருகிற் பாவம் பெரிது.

(இ - ள்.) வன்கண் - (சேனைக்கு) வீரம், பெருகின் - மிகுந்தால், வலி பெருகும் - (அரசனுக்கு) வலி மிகும்; பால் - பால்போலுஞ் சுவையுள்ள, மொழியார் - சொல்லையுடைய மனைவியரிடத்து, இன்கண் - (கடுகடுத்து நோக்காத) இனிய பார்வை, பெருகின் -

மிருந்தால், இனம் பெருகும் - (கொண்டவனுக்கு) நல்லுறவினர் மிகுவார்; சான்ற - நிறைந்த, மெல் - மென்மையாகிய, அக்கண் - அவ்வருள், பெருகின் - (ஒருவனிடத்து) மிகுமானால், அறம் பெருகும்-(அவன்மேற் கொண்ட) துறவறம் மிகும்; வன்கண்-கொடுமையுள்ள, கயம் - கீழாகியதன்மை, பெருகின் - (ஒருவனிடத்து) மிகுமானால், பாவம் பெரிது - பாவம் மிகும், எ - று.

(வி-ரை.) இனம் பெருகுதற்கு இனிய பார்வையோடு இன்சொல்லும் வேண்டுமென்பார் 'பான்மொழியார்' என்றார்; இவ்விரண்டும் இல்லாயின், அவள் வீட்டில் இனம் நெருங்காதென்பது "இல்லாள் வலிகிடந்த மாற்ற முரைக்குமே லவ்வில், புலிகிடந்த தூறாய்விடும்" என்பதனாலுமுணர்க. சேனை வீரமுடையதானால் அரசனுக்கு ஆண்மை மிகும்; மனைவியர் குளிர்ந்த பார்வையும் இன்சொல்லு முடையரா யிருந்தால் அவர் கணவருக்கு உறவினர் பெருகுவார்; ஒருவனுக்கு அருள் மிகுமானால் அவனது துறவறம் பெருகும்; கொடுமையாகிய குணம் பெருகுமானால் பாவம் பெருகும். இனகண், மென்கண் என்பவற்றில் கண் - கருவியாகுபெயர். உடையாரது மென்மை அருளின்மே லேற்றப்பட்டது. அகரசுட்டு உயிர்க்குணம் பலவற்றுள்ளும் அருள் சிறந்ததாதலின் அச்சிறப்புப் பொருள்தந்து நின்றது.

இளமைப் பருவத்துக் கல்லாமை குற்றம்
வளமிலாப் போழ்தத்து வள்ளன்மை குற்றம்
கிளைஞரில் போழ்திற் சினங்குற்றங் குற்றம்
தமரல்லார் கைத்துள்ள தூண்.

(இ-ள்.) இளமைப் பருவத்து - (கல்வி யேறுதற்குரிய) இளமைப்பருவத்தில், கல்லாமை - (அக் கல்வியைக்) கற்காமல் விடுதல், குற்றம் - குற்றமாம்; வளம் - பொருள், இல்லாத போழ்தத்து - இல்லாதகாலத்தில், வள்ளண்மை குற்றம் - ஈகைக்குணம் உடைமை குற்ற

மாம்; கிளைஞர் இல் போழ்தில்-உறவினர் (தன் பக்கத்தில்) இல்லாத காலத்தில், சினம் - (பகைவர்மேற் கொள்ளும்) கோபம், குற்றம் - குற்றமாம்; தமர் அல்லார் - உள்ளன்பில்லாருடைய, கைத்து உள்ளது - இடத்திலுள்ள உணவை, ஊண் - உண்ணுதல், குற்றம்-குற்றமாம், எ-று.

(வி-ரை.) கல்லாமை முதலிய காரணப்பெயர்கள் குற்றமென்னும் தங்காரியப் பெயர்களின்மேல் நின்றன. கல்லாமை முதலியவை தம்மையுடைய ஒருவனுக்கே அன்றி அவனைச் சார்ந்தவர்க்கும் தீராத் துன்பத்தைத் தருமென்பது கருத்து. கல்வி கற்பதற்குரிய இளமையை வீணே கழித்தலும், தான் உயிர்வாழ்தற்கு மேற்பட்டுப் பொருளில்லாத காலத்தில் ஈகைத்தன்மை யுடையனாயிருத்தலும், தனக்குப் பக்கத்துணையாக உறவின ரில்லாதகாலத்தில் பகைவரைக் கோபித்தலும், உள் அன்பில்லாரிடத்து உணவு கொள்ளுதலும் ஒருவனுக்குக் குற்றந்தருவனவாம். தமரென்றது இங்குஉள்ளன்புடையாரை. வளம்-காரியவாகுபெயர். வெள்ளன்மை-பண்புப்பெயர்; வள்-பகுதி, ள்-சந்தி, அல்-பகுதிப்பொருள்விகுதி, அப்பொருளதாகிய மை விகுதி விகுதிமேல் விகுதி. போழ்தத்து, கைத்து என்பவற்றில் அத்துச்சாரியை ஏழாம்வேற்றுமைப் பொருட்புணர்ச்சிக்கண் வந்தது. கிளைஞரில், தமரல்லர் இரண்டும் எழுவாய்த்தொகாநிலைத்தொடர். தமரென்பதில் தாம்-பகுதி. 'தமரல்லா ரில்லகத் தூண்' எனவும் பாடமுண்டு. (கஉ)

எல்லா விடத்துங் கொலைதீது மக்களைக்
கல்லா வளர விடறீது நல்லார்
நலந்தீது நாணற்று நிற்பிற் குலந்தீது
கொள்கை யழிந்த விடத்து.

(இ-ள்.) எல்லா இடத்தும் - (வேள்வி முதலிய) எல்லா இடங்களிலும், கொலை - (ஓருயிரைக்) கொலை செய்வது, தீது - (செய்தா

னுக்குத்) தீயதாகும்; மக்களை - தன் புத்திரர்களை, கல்லாமல் வளர - (கல்வியைக்) கற்காமலே வளரும்படி, விடல் தீது-(தந்தை) விடுதல் (தனக்கே அன்றி அச்சிறுவர்க்கும்) தீயதாகும்; நல்லார் - மாதர்கள், நாண் அற்று - நாணமில்லாமல், நிற்பின் - (பல ஆடவர் முன்னும்) நின்றால், நலம் - (அவருடைய) அழகு, தீது - (அவர்க்கே அன்றித் தங் கணவருக்கும்) தீயதாகும்; கொள்கை-(வருணத்துக்குத் தக்கபடி) கொண்ட ஒழுக்கம், அழிந்தவிடத்து - கெட்டபின், குலம் - (அக் கெட்டோனுடைய) குலம், தீது-கெட்டதாகும், எ - று.

(வி-ரை.) வேள்வி முதலிய எல்லாவிடமாவன-வேள்வி, தன்னுடம்பைப் பெருக்கல், வேட்டையாடல் என்பன. எவ்விதத்திலும் ஓருயிரைக் கொலை செய்தலும், தம் சிறுவர்களைக் கல்வி கற்காமலே [illegible]ரவிடுதலும், பெண்கள் நாணமில்லாமல் பல ஆடவர்முன் நிற்பாராயின் அவரது அழகும், வருணத்துக்குரிய நடை அழிந்தால் அக் குலமும் கேட்டைத் தருவனவாம். கொள்கை - தொழிலாகுபெயர்; தொழிலடியாகப் பிறந்த பெயருமாம்; கொள் - பகுதி, கு - சாரியை, ஐ - செயப்படுபொருண்மை விகுதி. அழிந்தவிடத்து இறந்தகால வினையெச்சம்; அழி - பகுதி, ந் - சந்தி, து: அ - சாரியைகள், உகரக்கேடும் வகரத்தோற்றமுஞ் சந்தி, இடம் - இறந்தகால வினையெச்ச விகுதி, சந்தித் தகரம் நகரமானது மெலித்தல் விகாரம், விகுதிகள் யாவும் இடைச்சொலாதலால், இடம்பகுதியாய் நிற்க, இதனோடு து என்னும் பகுதிப்பொருள் விகுதி, தகரச்சந்தியோடு புணர்ந்தது என்க. கல்லாமலென்னும் எதிர்மறை வினையெச்சம் மல் ஈறு தொகுத்தலாய் நின்றது. (கஅ)

ஆசார மென்பது கல்வி யறஞ்சேர்ந்த
போக முடைமை பொருளாட்சி யார்கண்ணும்
கண்ணோட்ட மின்மை முறைமை தெரிந்தாள்வான்
உண்ணாட்ட மின்மையு மில்.

(இ - ள்.) ஆசாரம் என்பது - நல்லொழுக்கமென்று சொல்லப் படுவது, கல்வி - (ஒருவன் கற்ற) கல்விப்பயனாகும்; அறம் சேர்ந்த - அறத்தோடு பொருந்திய, போகம் உடைமை-சுகாநுபவம், பொருள்- உடைய - பொருளின் பயனாகும்; யார்கண்ணும் - எல்லாரிடத்தும், கண்ணோட்டம் இன்மை - தாட்சிணியமில்லாதிருத்தல், ஆட்சி - ஆளுகையாம்; உள் நாட்டம் இன்மை - (குடிகளுடைய நன்மையைத் தன்னுள்ளத்தில்) ஆராய்தலில்லாமை, இல் - இல்லாதிருத்தல், தெரிந்து ஆள்வான் - (பெரியாரோடு) எண்ணி அரசாள்வானது, முறைமை - நீதியாம், எ-று.

(வி-ரை.) தான் கற்ற கல்விக்குப் பயன் அக்கல்விக்குத் தகுதி யாக நடக்கும் ஒழுக்கமாம்; தான் தேடிய பொருளுக்குப் பயன் அற நெறி தவறாமல் சுகங்களை அநுபவித்தலாம்; அரசாளுகை யாவரிடத் தும் தாட்சிணியம் வையாமல் நீதியைச் செலுத்துவதாம்; அரசு செய்வோன் தன் குடிகளினுடைய நன்மையை ஆராய்ந்து நடத்தல் அரசுக்கு முறைமையாம். இல் என்னும் பண்படி எதிர்மறைத்தொழிற் பெயர்ப் பொருள்பட நின்றது. இன்மையும் என்கிற உம்மை சாரியை. முறைமை தெரிந்தாள்வான் என்பது பின்முன்னாகத் தொக்க ஆறாம் வேற்றுமைப் புணர்ச்சி ஆதலால் தெரிந்தாள்வான் முறைமை எனக்கூட்டுக. யார்கண்ணும் என்பதில் யாவரென்னும் வினாப்பெயரின் மரூஉ ஆகிய யார் என்பதில் முற்றும்மையால் யா எஞ்சாமைப் பொருள் தந்து நின்றது; "முற்றும்மை யொரோவழி எச்சமும் ஆகும்" என்பதனால் யார்கண்ணும் என்னும் முற்றும் மையை எச்சவும்மையாக்கிச் சிலரிடத்துக் கண்ணோட்டம் உண்மை யுங் கொள்க; அச்சிலராவார் தன்னோடு பழகினவர், துறவியர், தாய் தந்தையர் முதலானோர். (கஃ)

கள்ளி யிடும்பை களியறியு நீரிடும்பை
புள்ளினு ளோங்க லறியு நிரப்பிடும்பை

பல்பெண்டி ராள னறியுங் காப்பிடும்பை
கள்வ னறிந்து விடும்.

(இ - ள்.) கள்ளின் இடும்பை - கள்ளினு லுண்டாம் துன்பம், களி - கள்ளுண்டு களிப்பவன், அறியும் - அறிவான்; நீர் இடும்பை - நீரினு லுண்டாம் துன்பத்தை, புள்ளினுள் - பறவைகளுள், ஓங்கல் அறியும் - உயர்ந்து பறக்கும் சாதகப்பறவை அறியும்; நிரப்பு இடும்பை - (மனக் குறைவுகளை) நிரம்பச் செய்தலினு லுண்டாம் துன்பத்தை, பல் பெண்டிர் ஆளன் - பல மனைவியரை ஆளுகின்ற கணவன், அறியும்-அறிவான்; காப்பு-(உடையவன் தன் பொருளை) ஒளித்து வைப்பதினு லுண்டாம், இடும்பை - துன்பத்தை, கள்வன் - பொருளைக் களவுசெய்வோன்,அறிந்துவிடும்-அறியாமலிரான், எ-று.

(வி-ரை.) கள்ளினிடும்பை முதலிய நான்கும் பண்புத்தற்கிழமைப் பொருளதாகிய ஆறும் வேற்றுமைத் தொகைநிலைத் தொடர்களாயினும் அந்த ஆறுவது மூன்றுவதற்குரிய ஏதுப்பொருண்மையில் வந்ததாதலால், அப்பொருள் தோன்ற அந்நான்கிற்கும் உரை சொல்லப்பட்டது. ஒருவன் கள்ளுண்டதினுல் மனம் மொழி மெய் மூன்றும் தன் வசப்படாதவனுதலே அன்றி அறிவழிந்து வரம்பு கடந்த நடையை யுடையானு மாதலாலே பலராலும் பழிப்பையும், தண்டித்தலையும் பெறுகின்றமையின் கள்ளி னிடும்பையைக் களியும், கண்ணொளி மழுங்காதபடி மின்னலுக்கும், செவிப்புலன் கெடாதபடி இடியோசைக்கும், தான் கெடாதபடி இடிக்குந் தப்பி மேக தாரையை யுண்டு உயிர்வாழ்வதாதலால் நீரிடும்பையைச் சாதகப்புள்ளும், தன் மனைவியரிருவருக்கும் ஆடையணி முதலியவற்றைச் சமனுகத் தான் கொடுக்கினும் மற்றவளோடு என்னை ஒத்தவளாகக் கருதினனெனவும், ஒருத்தியோடு தான் முகமலர்ந்து பேசின் மற்றொருத்தி அவளோடு இனிது பேசினுனெனவும், மற்றும் பலவாறுகவும் அவர்கள் தன்னோடு பிணங்கும் பிணக்கைத் தீர்க்கும் இடுக்க

ணில் தேர்ச்சியுடையானாதலால் சிரப்பிடும்பையைப் பல் பெண்டிராள னும், உடையவன் தன் பொருளை மண்முதலிய இடங்களில் சேமித் தும், காவல் செய்து மிருக்க, அவைதறிந்து சோர்வு பார்த்துத் தான் வருந்திக் களவு செய்தலால் கரப்பிடும்பையைக் கள்வனும் அறிவ னென்றார். சாதகப்புள் தரையிலுள்ள நீரை உண்டால் உயிர்மாயு மாத லால் மேகதாரையை ஆகாயத்திலேயே உண்ணும். களி என்னும் முதனிலைத் தொழிற்பெயரும், ஐகமென்னும் விகுதிபெற்ற தொழிற்பெயரும் களிப்பவனுக்கும், பறவைகளில் உயர்ந்து பறக்கும் சாதகப்பறவைக்கும் முறையே தொழிலாகுபெயராய் வந்தன; களி - வினைமுதற் பொருண்மை விகுதியாகிய இகரம் புணர்ந்து கெட்டதெனினும் பொருந்தும். சிரப்பு - பிறவினை முதனிலைத்தொழிற்பெயர்; தன்வினை முதனிலை சிரப்பு. கள்வன் - எதிர்கால வினையாலணையும்பெயர். (௧௫)

வடுச்சொ னயமிலார் வாய்த்தோன்றுங் கற்றார்வாய்த்
சாயினுந் தோன்றா கரப்புச்சொ றீய
பரப்புச்சொல்சான்றோர்வாய்த் தோன்றா கரப்புச்சொல்
கீழ்கள்வாய்த் தோன்றி விடும்.

(இ-ள்.) வடுச்சொல் - (பிறருடைய) குற்றத்தை வெளிப்படுக் குஞ் சொற்கள், நயம் இலார் வாய் - நீதியில்லாதவருடைய வாயில், தோன்றும் - பிறக்கும்; கரப்புச் சொல் - வஞ்சித்தலமைந்த சொற் கள், கற்றார் வாய்-(அறநூல்களைக்) கற்றவர் வாயில், சாயினும்-செல் வங் கெடுவாராயினும், தோன்றா-பிறவா; தீய - (ஒருவர்க்குத்) தீமை யாயினவற்றை, பரப்புச் சொல் - மிகுத்தலைச் செய்கின்ற சொற்கள், சான்றோர் வாய் (நற்குணங்களால்) நிறைந்தோரது வாயில், தோற்றா- பிறவா; கரப்புச் சொல் - (இரப்பவர்க்குப்) பொருளை மறைத்து மறக்குஞ் சொற்கள், கீழ்கள் வாய் - கீழ்மக்கள் வாயில், தோன்றி விடும் - பிறவாமலிரா, எ-று.

(வி-ரை.) தீய பரப்புச் சொற்களாவன-ஒருவரிடத்து இல்லாத குற்றங்களை அவர்மேல் ஆரோபித்து அவர்க்குத் தீமையைத் தரக் கூறுஞ் சொற்கள். வஞ்சனைச்சொல் செல்வங் கெட்டகாலத்தில் உண்டாகுவதாதலால் சாயினுமென்ற உம்மை உயர்வுசிறப்பு. பிறர் குற்றத்தை வெளிப்படுக்குஞ் சொற்கள் நீதியில்லாதவர் வாயில் பிறக்கும்; வஞ்சகமாகிய சொற்கள் தங்கள் செல்வப்பொருள் கெடுவதா யிருந்தாலும், அறநூல்களைக் கற்றறிந்தவர்வாயில் உண்டாகமாட்டா; பிறர்க்குத் தீமையாயினவற்றைப் பெருக்குகின்ற சொற்கள் நற்குணங்களையுடையார் வாயில் பிறக்கா; பொருளுடையரா யிருந்தும் இல்லையென மறுக்குஞ் சொற்கள் கீழ்மக்கள் வாயில் பிறக்காமலிரா. பரப்பு-பிறவினை முதனிலைத்தொழிற்பெயர்; இதனைப் பரம்பு என்னுந் தன்வினைப்பகுதி மெல்லொற்று வல்லொற்றாதலாகிய விகாரம் பெற்றதென்றாவது, பர என்னுந் தன்வினைப்பகுதி, பிறவினை படுத்தும் புவ்விகுதி பகரச் சந்தியோடு புணர்ந்த பதமென்றாவது கொள்க. பரப்புச்சொல்-இரண்டாம்வேற்றுமைத் தொகைநிலைத்தொடர்; விரிந்தால் பரப்பையுடைய சொல்லென விரியும். தீய - பண்படியாகப் பிறந்த பலவின்படர்க்கைப் பெயர். (கக)

வாலிழையார் முன்னர் வனப்பிலார் பாடிலர்
சாலு மவைப்படிற் கல்லாதான் பாடிலன்
கற்றா னொருவனும் பாடிலன் கல்லாதார்
பேதையார் முன்னர்ப் படின்.

(இ - ள்.) வால் இழையார் முன்னர் - குற்றமில்லாத ஆபரணத்தை அணிந்த மாதரிடத்து, வனப்பு இலார் - அழகிலாத ஆடவர்,

பாடு இலர்-பெருமையடைதலில்லார்; கல்லாதான்-(பல நூல்களைக்) கற்காதவன், சானும்-(கல்வியறிவு கேள்விகளால்) நிறைந்த, அவைப் படின் - சபையில் சேர்ந்தால், பாடு இலன் - பெருமையடைதலிலன்; கற்றான் ஒருவனும் - கல்வியறிவுடையானாகிய ஒருவனும், கல்லாதார் (முன்னர்ப்படின்) - கல்வியில்லாரிடத்துச் சேர்ந்தால், பாடு இலன் - பெருமை யடைதலிலன்; பேதையார் முன்னர்ப் படின் - யாதும் அறியாரிடத்தும் சேர்ந்தால், (பாடு இலன்) பெருமையடைதலிலன், எ-று.

(வி-ரை.) சானுமென்னும் இடத்து நிகழ்பொருளின்தொழில் இடத்தின்மேல் நின்றது. உம்மை இறந்ததுதழீஇய எச்சவும்மை. முன்னர்ப்படின் என்பதனைக் கல்லாதார் என்பதனோடுங் கூட்டுக. மூன்றுமடியையும், நான்காமடியையும் தனித்தனி இரண்டு முடிபாகப் பொருள்கொள்ளாமல் ஒரே முடிபாகக் கொள்ளின் நூற்பெய ரோடு முரணுமாதலால் இரண்டு முடிபாகக் கூறினும். மங்கையர்களிடத்து அழகில்லாத ஆடவர்களும், கற்று வல்லவர் கூட்டத்தில் படியாத மூடனும், கல்வியறிவில்லாதவ ரிடத்தும், ஒன்றும் அறியாத பேதையாரிடத்தும் கற்றுவல்லனும் நன்குமதிப்பை அடையார்கள். இலர் என்னுங் குறிப்பு வினைமுற்று செயப்படுபொருள் குன்றியதும், செயப்படுபொருள் குன்றாததுமாய் வருவதாதலால், வனப்பிலார் பாடிலார் என்பவற்றைத் திணைவழுவமைதியாகவும், வனப்பையிலார் பாட்டையிலார் எனக்கொண்டு இரண்டாம் வேற்றுமைத் தொகைநிலைத்தொடராகவுங் கூறுக. (கஎ)

**மாசு படினு மணிதன்சீர் குன்றாதாம்**
**பூசிக் கொளினு மிரும்பின்கண் மாசேறும்**

பாசத்து ளிட்டு விளக்கினுங் கீழ்தன்னை
மாசுடைமை காட்டி விடும்.

(இ-ள்.) மணி - இரத்தினங்கள், மாசு படினும் - அழுக்குச் சேர்ந்தாலும், தம் சீர் குன்றா ஆம்-தம்முடைய ஒளி குறையா ஆகும்; பூசிக்கொளினும்-(ஒருவன்) கழுவிக்கொண்டாலும், இரும்பின்கண்-இரும்பில், மாசு ஒபெம் - துருப்பாவும்; கீழ் - கீழ்மகன், தன்னைப் பாசத்துள் இட்டு - தன்னைத் தளையிலிட்டு, விளக்கினும் - அறிவு விளங்கச் செய்தாலும், மாசு உடைமை - (தான்) குற்றமுடையனு யிருத்தலை, காட்டிவிடும்-(பிறர்க்குக்) காட்டாமலிரான்; தளையிலிட்டு அறிவு விளங்கச் செய்யாவிடினும் குற்றமுடையனு யிருத்தலைக் காட்டாமலிரான், எ-று.

(வி-ரை.) பாசத்துளிட்டு விளக்காவிடினும் மாசுடைமை காட்டி விடும் என்னும் நான்காம் வாக்கியத்தை உம்மையால் தழுவவைத்தார்; ஆதலால், இச்செய்யுளும் நான்கு பொருளையே கூறியதாகக் கொள்க. முன் செய்யுளையும், இச்செய்யுளையும் மூன்று பொருளையே கூறியன ஆகக்கொண்டு நான்மணிக்கடிகை என்னும் பெயர், மிகுதி பற்றிய பெயரெனினுமாம். இரத்தினங்கள் அழுக்குப்படிந் திருந்தாலும் தம்மொளி கெடா; அதுபோல, உயர்குடியில் பிறந்தவர்கள் வறுமையினுல் இடுக்கண்பட்டாலும் தம்மியற்கையாகிய மேன்மைக் குணம் கெடார்கள்; கழுவிவைத்தாலும் இருப்புக்கருவிகள் துரு ஏறுதல் நீங்கா; கீழ்மக்கள் தங்களை விலங்குபூட்டி நல்லறிவை விளங்க உணர்த்தினுலும், அவ்வாறு செய்யாமல் உணர்த்தினுலும் தங்கள் இயற்கையாகிய இழிகுணத்தைக் காட்டாமலிரார். படின் என்னும்

எதிர்கால வினையெச்சத்துக்குப் பகுதி படு. உடைமை - செயப்படு பொருள் குன்றாத குறிப்புத் தொழிற்பெயர். (கூ௮)

எண்ணொக்குஞ் சான்றோ ரரியாத் தீராமை
புண்ணொக்கும் போற்றா ருடனுறைவு—பண்ணிய
யாழொக்கு நட்டார் கழறுஞ்சொல் பாழொக்கும்
பண்புடையா ளில்லா மனை.

(இ - ள்.) சான்றோர் - (கல்வியறிவு கேள்விகளால்) நிறைந்தவரை, அரியர் ஆக - (கிடைத்தற்கு) அருமையுடையாராக, தீராமை - (ஒருவன்) நீங்காதிருக்குங் கருத்து, எண் ஒக்கும் - ஆராய்ச்சியை ஒக்கும்; போற்றாருடன் - பகைவரோடு, உறைவு - வசித்தல், புண் ஒக்கும் - புண்போலத் துன்பஞ் செய்வதாகும்; நட்டார் - சிநேகர், கழறும் சொல் - இடித்துச் சொல்லுஞ் சொல், பண்ணிய - குறைவில்லாத நரம்புக்கட்டமைந்த, யாழ் ஒக்கும் - யாழினிசைபோல் (செவிக்கு) இனியதாகும்; பண்பு உடையாள் - நற்குணமுடைய மனைவி, இல்லா மனை - இல்லாத வீடு, பாழ் ஒக்கும் - பாழாகிய மனையை ஒத்திருக்கும், எ - று.

(வி-ரை.) கல்வி யறிவு கேள்விகளினால் நிறைந்த பெரியவர்களைத் தனக்குக் கிடைத்தற்கு அருமையுடையவர்களாக எண்ணி அவர்களைவிட்டு நீங்காத எண்ணம் ஒருவனுக்கு நல்ல ஆலோசனையாம்; பகைவரோடு வசித்தல் புண்போலத் துன்பந்தரும்; சிநேகர் பேசுஞ் சொல் யாழி னிசைபோலக் காதுக்கும் மனத்துக்கும் இன்பந் தருவதாகும்; நற்குணமுடைய மனையாளில்லாத வீட்டைப் பாழ் வீட்டைப்போல உறவினர் முதலானோர் நெருங்கார். 'சான்றோர்

மரியாரிற் றீராமை' எனவும் பாடமுண்டு; பொருள்: 'பெரியோரை கெடுகோள் பழகினவரைப்போல நீங்காமலிருத்தல்' என்பது. மரீஇய வென்பது மரியவெனக் குறுக்கல் பெற்றது. எண் - முதனிலைத்தொழிற்பெயர். அரியாராக என்பதில் விகுதி முதலியவை தொகுத்தல். பாழ் - பண்பாகுபெயர். யாழ் - கருவியாகுபெயர். (கக)

ஏரி சிறிதாயி னீரூரு மில்லத்து
வாரி சிறிதாயிற் பெண்ணூரு மேலைத்
தவஞ்சிறி தாயின் வினையூரு மூரும்
முரண்சிறி தாயிற் பகை.

(இ - ள்.) ஏரி - (ஊரிலுள்ள) ஏரியானது, சிறிது ஆயின் - நீர் குறைந்ததானால், நீர் ஊரும் - (அவ்வூர்க் கிணறு முதலியவற்றின்) நீர் குறையும்; இல்லத்து - இல்வாழ்க்கையில், வாரி - (கணவனுக்கு) வருவாய்ப் பொருள், சிறிது ஆயின் - குறைந்ததானால், பெண் - மனையாள், ஊரும் - (அவனை) மேற்கொள்வாள்; மேலைத் தவம் - முற்பிறப்பிற் செய்த நல்வினை, சிறிது ஆயின் - (ஒருவனுக்குக்) குறைந்ததானால், வினை ஊரும் - தீவினை (அவனை) மேற்கொள்ளும்; முரண் - (அரசனுக்குப் படை முதலான) வலி, சிறிது ஆயின் - குறைந்ததானால், பகை - பகைவர், ஊரும் - (அவ்வரசனை) மேற்கொள்வர், எ - று.

(வி - ரை.) கணவனுக்குப் பொருள்வருவாய் குறைந்தகாலை மனைவி அவனை மேற்கொள்வாளென்றது அவன் சொல்வழி நில்லாமல், அதற்கு மாறாக நடத்தலை. வாரி - தொழிலடியாகப் பிறந்த பெயர்; வார் (ஒழுகு) - பகுதி, இ - வினைமுதற்பொருண்மை விகுதி;

ஆதாவது இடையறாது வரும்பொருள்; இவ்வாறன்றி வா - பகுதி, று - விரித்தல்விகாரம், உகரக்கேடு சந்தி எனக்கொண்டு, அவ்வாறு பொருளுரைக்கினும் பொருந்தும். மேலே - பண்புப்பெயர்; மேல் - பகுதி, ஏ-பகுதிப்பொருள்விகுதி. ஏரி நீர் குறைந்ததானால், அவ்வூரிலுள்ள கிணறு முதலியவை நீர் குறையும்; இல்வாழ்க்கையில் கணவனுக்குப் பொருள்வருவாய் குறையுமானால் அவன் மனைவி அவனை மதிக்காள்; முன்செய்த நல்வினை தேய்ந்ததானால் பின்செய்த தீவினை வந்து அவனை மேற்கொள்ளும்; அரசனுக்குச் சேனை முதலியவற்றின் வலி குறைந்தால் பகைவர் அவனை வெல்லுவார்கள். பகை - பண்பாகுபெயர். (௧௦௦)

வைதததனா லாகும் வசையே வணக்கமது
செய்ததனா லாகுஞ் செழுங்கிளை—செய்த
பொருளினா லாகுமாம் போக நெகிழ்ந்த
அருளினா லாகு மறம்.

(இ - ள்.) வசை - (ஒருவனுக்கு) நிந்தை, வைததனால் - (பிறரை) நிந்தித்ததனால், ஆகும் - உண்டாகும்; செழு கிளை - மிக்க உறவு, வணக்கமது - (தகுந்தவர்க்கு) வணக்கத்தை, செய்ததனால் - செய்தமையால், ஆகும் - உண்டாகும்; போகம் - சுகம், செய்த பொருளினால் - தேடிய பொருளால், ஆகும் - உண்டாகும்; அறம் - அறமானது, நெகிழ்ந்த - (பிறவுயிர்களின் துன்பத்தைக் கண்டவிடத்து மனம்) நெகிழ்தற்குக் காரணமாகிய, அருளினால் ஆகும் - கருணையினால் உண்டாகும், எ-று.

(வி-ரை.) ஒருவனுக்கு அறிவுடையோரால் நிந்திக்கப்படும் நிந்தை பிறரை நிந்திப்பதனால் உண்டாகும்; வணக்கமாய் நடப்பா

னால் அவனுக்கு உறவினர் மிகுதியாய்ச்சேர்வார்; தேடியபொருளினால் அவனுக்குச் சுகம் உண்டாகும்; அருளுடையானுக்கு அறம் உளதாகும். வைததனாலாகும் வசையே என்பதற்கு ஒருவன் வைததனால் உளதாவது அவனுக்கு நிந்தை அல்லாமல் புகழன்று. ஏ-தேற்றம். வணக்கமெனப் பொதுப்படக் கூறினமையின் உடல் வணக்கம், சொல்வணக்க மிரண்டுங் கொள்க. வணக்கந் தருந்தவர்க்குத் தான் வணங்குவானாயின் பகைவ ரின்மையால் 'செழுங்கிளை ஆகும்' என்றார். வணக்கமது - தொழிற்பெயர்; வணங்கு - பகுதி, அம் - புடை பெயர்ச்சி விகுதி, பகுதி மென்றொடர்க் குற்றுகரமாதலால் இவ்விகுதிப்புணர்ச்சியில் மெல்லொற்று வல்லொற்றானது வலித்தல் விகாரம், உகரக்கேடு சந்தி; இவ்வாறு முடிந்துநின்ற பெயர் பகுதிப் பொருள் விகுதியாகிய ககரத்தையும், அது பற்றிவந்த அகரச்சாரியையும் பெற்றுநின்றது. வைதது, செய்தது-இறந்தகாலத் தொழிற்பெயர். கிளை-உவமையாகுபெயர். நெகிழ்ந்த - காரியப்பொருட்டாக வந்த இறந்தகாலப் பெயரெச்சம். (௧0௧)

ஒருவ னறிவானு மெல்லாம்யா தொன்றும்
ஒருவ னறியா தவனும்—ஒருவன்
குணனடங்கக் குற்றமு ளானு மொருவன்
கணனடங்கக் கற்றானு மில்.

(இ-ள்) எல்லாம்-எல்லாக் கலைகளையும், அறிவான் ஒருவனும்-அறிந்திருப்பவனாகிய ஒருவனும், யாது ஒன்றும்-எதொருகல்வியையும், அறியாதவன் ஒருவனும்-அறியாதவனாகிய ஒருவனும், குணன் அடங்க - நல்லியற்கை இல்லாதிருக்க, குற்றம் உளான் ஒருவனும்-

குற்றமுள்ளவனாகிய ஒருவனும், கணன் அடங்க - (சந்தேக விபரீதமாகிய) சிறுமையில்லாதிருக்க, கற்றான் ஒருவனும் - கற்றறிந்தவனாகிய ஒருவனும், இல்-(இவ்வுலகத்தில்) இல்லை, எ-று.

(வி-ரை.) எவனுக்கும் ஓர் கல்வியறிவும், ஒரு குற்றமும், தெரிந்த கல்வியில் சந்தேக விபரீதமும் உண்டென்பது கருத்து. அறிவான் என்பதில் வகரம் இயல்புணர்ந்து நின்றது. குணம், கணம் இரண்டும் இருகுறிலையடுத்த மகரவீற்று அஃறிணைப்பெயராதலால் மகரத்துக்கு னகரம் போலியாய்க் குணன், கணன் என வந்தன. (௧0௨)

> மனைக்கு விளக்க மடவார் மடவார்
> தமக்குத் தகைசால் புதல்வர்—மனக்கினிய
> காதற் புதல்வர்க்குக் கல்வியே கல்விக்கும்
> ஓதிற் புகழ்சா லுணர்வு.

(இ-ள்.) மனைக்கு-இல்லறத்துக்கு, விளக்கம்-தீபம், மடவார்-கற்புடையபெண்டிர்; மடவார்தமக்கு - அக்கற்பையுடைய பெண்டிருக்கு (தீபம்), தகை சால் - நற்குணம் நிறைந்த, புதல்வர் - புத்திரர்; மனக்கு - (தாய்தந்தையருடைய) மனத்துக்கு, இனிய காதல்-இனிமையான ஆசையுள்ள, புதல்வர்க்கு - அப்புத்திரருக்கு, (தீபம்) கல்வியே - (தாம் கற்ற) கல்வியே ஆம்; கல்விக்கும் - அக்கல்விக்கும், ஓதின் - சொல்லுமிடத்து, (தீபம்) புகழ் சால் - புகழ் நிறைதற்குக் காரணமாகிய, உணர்வு-மறவாமைஆம், எ-று.

(வி-ரை.) மனை என்னும் வீட்டின் பெயர் தலைமைபற்றி இல்வாளுக்காகி, அது இல்லாளோடு கூடிச் செய்யும் அறத்துக்கானமையால் இருமடியாகுபெயர். விளக்கம்-தொழிற்பெயர்; விளக்கு-பகுதி

அம்-புடைபெயர்ச்சிவிகுதி, பகுதி மெல்லொற்று வல்லொற்றனது வலித்தல் விகாரம், உகரக்கேடு சந்தி; தீபத்துக்குத் தொழிலாதுபெயராய் நின்றது; இப்படிக் கொள்ளாமல் அம் விகுதி வினைமுதற்பொருண்மைவிகுதி எனக்கொண்டு, தொழிலடியாகப்பிறந்தபெயராய்த் தீபத்தை உணர்த்திற்று எனினும், பிற பொருள்களை விளங்கச் செய்தலாகிய காரியம் தன் காரணமாகிய தீபத்துக்காணமையால் காரியவாகுபெயரெனினும் ஒக்கும்; அம் விகுதிப்புணர்ச்சியில் ஆய்தத்தொடர், வன்றொடர்க் குற்றுகர மல்லாத குற்றுகரப் பகுதிகள் இவ்வாறு விகாரப்படும்; இச் சொல்லை மற்ற மூன்றிடத்துங் கூட்டுக; இது முதனிலைத்தீவகம். இச்செய்யுள் பாலாதீவகம். இல்லறம் கற்புடையாராலும், அக்கற்புடையார் நல்ல புத்திரராலும், அப்புத்திரர் கல்வியினாலும், அக்கல்வி மறவாமையாலும் புகழடைந்து விளங்குதலால் 'விளக்கம்' என்றார். உம்மை உயர்வுசிறப்பு. (௪௦௩)

இன்சொலா னாகுங் கிழமை யினிப்பிலா
வன்சொலா னாகும் வசைமனம்—மென்சொலின்
நாவினா னாகு மருண்மன மம்மனத்தான்
வீவிலா வீடாய் விடும்.

(இ-ள்.) இன் சொலான்-(பிறரிடத்து ஒருவன் பேசும்) இன் சொற்களால், கிழமை - (அவர் தனக்கு) உரியராகுதல், ஆகும்-உண்டாகும்; இனிப்பு இலா - (பிறருடைய செவிக்கு) இனித்தலில்லாத, வல் சொலான் - கடுஞ் சொற்களால், வசை மனம் - குற்றமான எண்ணம், ஆகும் - உண்டாகும்; மென் சொலின் - மிருதுவாகிய சொற்களைப் பேசுகின்ற, நாவினான் - நாவினது அடக்கத்தினால், அருள் மனம்-(பிறவுயிர்களின்மேல் வைக்கும்) கருணையுள்ள மனம், ஆகும் - உண்டாகும்; அம் மனத்தான் - அருளுடைய மனத்தினால், வீவு இலாத - அழிவில்லாத, வீடு ஆய் விடும் - முத்தியுலகம் உண்டாகிவிடும், எ - று.

*

(வி-ரை.) நா என ஒன்றைக் கூறினாராயினும் "ஒருமொழி யொழிதன் இனங்கொளற் குரித்தே" என்பதனால் மெய்யினடக்க மும் மனத்தினடக்கமுங் கொள்க. இன்சொலால் யாவரும் தனக்கு உரியராகுதலும், கடுஞ்சொலால் பிறர்க்குத் தன்னைக் குறித்துக் கெட்ட எண்ணமும், மனமொழி மெய்களின் அடக்கத்தால் அருளும், அவ்வருளால் மோட்சமும் உண்டாகும் என்பது கருத்து. ஆனென்னும் மூன்றனுருபுகள் நான்கும் ஏதுப்பொருள். இனிப்பு-இனிமையென்னும் பண்புப் பெயரடியாகப் பிறந்த தொழிற்பெயர். இன்சொல் - பண்புத்தொகைநிலைத்தொடர்; விரித்தால் இன்பமாகிய சொல்லென விரியும். வீவு - தொழிற்பெயர், வு - புடைபெயர்ச்சி விகுதி; இம்முதனிலையின் அடியாக வீழ்ந்தான், வீகின்றான், வீவான் என வினைவிகற்பங்கள் பிறக்கும். வீடு-தொழிலாகுபெயர்; எல்லாப் பற்றையும் விடுதலால் உண்டாவதாதலால் காரணவாகுபெயரென்னலும் ஆம். ஆய்விடும்-செய்யுமென்முற்று; ஆ-பகுதி, யகரமெய்-விரித்தல் விகாரம், விடு-துணிவுப்பொருண்மை விகுதி, அனைத்துமொரு பகுதி, உம் - எதிர்கால வினைமுற்றுப் பொருண்மை விகுதி, உகரக் கேடு சந்தி; இது பெயரெச்சமே முற்றுனது. பகுபத இலக்கணப் புலமையில்லாதவொருவர் இவ்வாறு வருஞ்சொற்களை இருசொலாகக் கொள்வர். (க0ச)

## நான்மணிக்கடிகை மூலமும் உரையும்

முற்றுப்பெற்றது.

ஸ்ரீ விருத்திப்பிரபாகரம்:—விசாரசாகர நூலாசிரியராகிய சாது ஸ்ரீ நிச்சலதாஸரவர்கள் ஹிந்திபாஷையில் இயற்றிய அரிய வேதாந்த நூலின் தமிழ்மொழிபெயர்ப்பு வசனம் 4 0 0

ஸ்ரீ விசாரசாகரம்:—ஷை மொழிபெயர்ப்பு (3-ம் பதிப்பு) 3 4 0

பஞ்சதசப் பிரகரணம்:—சதுர்வேத பாஷ்ய கர்த்தாவாகிய ஸ்ரீ வித்யாரண்ய சுவாமிகள் அருளிச்செய்த இந்நூல் தமிழில் வினாவிடை ரூபமாக எழுதப்பட்டுள்ளது ... 1 0 0

சூதசம்ஹிதை:—இதுல் பிரமகீதையும் சூதகீதையும் அடங்கியுள்ளன (109 அத்தியாயம், 3003 செய்யுள்) ... 1 8 0

ஸ்ரீ பகவத்கீதை:— ஸ்ரீமத் பொன்னம்பலசுவாமிகளியற்றிய கூடார்த்ததீபிகை என்னும் உரையுடன் ... ... 2 0 0

ஒழிவிலொடுக்கம்:—ஸ்ரீ சிதம்பர சுவாமிகள் உரையுடன் 1 0 0

ஸ்ரீ குமாரதேவர் சாஸ்திரக்கோவை:—மஹாராஜா துறவு முதலிய பதினாறு சாஸ்திரங்க ளடங்கியது ... 0 10 0

ஸ்ரீ சங்கர விஜயம்:—ஆதி சங்கரர் சரித்திரமும் படமும், சிருங்கேரி ஸ்ரீ சாரதாம்பாள் படமும் கூடியுள்ளது... 1 0 0

ஸ்ரீ விவேகாநந்த விஜயம்:—விவேகாநந்த சுவாமிகளின் திவ்விய சரித்திரமும், அவர் செய்த அற்புதமான பிரசங்கத் திரட்டும் [சுவாமிகள் படத்துடன்] ... ... 1 4 0

ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ச விஜயம்:—ஸ்ரீ விவேகாநந்த சுவாமிகளின் குருமூர்த்தியாகிய ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சரின் அற்புத சரித்திரமும், உபதேசங்களும் [பரமஹம்சர் படத்துடன்] ... ... ... 1 4 0

பிரபோத சந்திரோதய வசனம் அல்லது மெய்ஞ்ஞானவிளக்கம் (வேதாந்தத்தை நாடகரூபமா யுணர்த்துவது) ... 1 0 0

பிரபுலிங்கலீலை வசனம்:—நூதனமாய்த் தமிழில் வசனப்படுத்தப்பட்ட அரிய நூல் ... ... ... 0 12 0

இந்து பைபில் என்னும் ஆரியர் சத்தியவேதம்:—உபநிஷத்துக்கள் முதலிய ஹிந்துமதத்தின் உண்மைகள் ... 1 12 0

மதவிருக்ஷம்:—உலகத்திலுள்ள பெரிய மதங்களின் சரித்திரமும் வரலாறும் (மூன்று பாகம் அடங்கியது) ... 1 12 0

விநோதரசமஞ்சரி:—நூதனமாய்ச் சேர்க்கப்பட்ட தமிழறியும்பெருமாள் கதையுடன்: அழகான கிலிட்டு பயிண்டு 1 2 0

ஸ்ரீ பக்தலீலாம்ருதவசனம்:—(82 பக்தர்களின் சரித்திரம்) 3 0 0

அகம்புற ஆராய்ச்சி விளக்கம்:—வேதாந்த சாஸ்திரத்தின் பல அரிய விஷயங்களைத் தமிழில் வசனரூபமாகத் திரட்டி ஸ்ரீமத் சச்சிதாநந்த சுவாமிகள் மாணாக்கர் ஒருவர் இயற்றிய அரியநூல் [நூலாசிரியர் படத்துடன்] ... 1 4 0

திவ்யதேச யாத்திரையின் சரித்திரம்:—இந்தியாவிலுள்ள பல திவ்விய ஸ்தலங்களின் மகிமையும் விசேஷங்களும், அந்த ஸ்தலங்களுக்கு இந்நூலின் ஆசிரியர் யாத்திரை செய்த வரலாறும (ஷை ஸ்தலங்களைக் காட்டும் இந்தியா படத்துடன்) ... ... ... ... 2 0 0

கல்லாடம் மூலமும் உரையும்:—கடைச்சங்கப்புலவர் நாற்பத்தொன்பதின்மரில் ஒருவராகிய கல்லாடர் திருக்கோவையாரின் கருத்தமைய இயற்றிய அரிய தமிழ் நூல் ... 3 0 0

திருவெங்கைக்கோவை:—துறைமங்கலம் சிவப்பிரகாச சுவாமிகள் அருளிய இவ்வரிய கோவைக்கு நூதனமாய் எழுதப்பட்ட பதவுரை, கருத்துரை, விசேஷ உரைகளுடன் 2 8 0

நைடதம் மூலமும் உரையும்:—இதில் அன்னமும் தமயந்தியும் அமைந்த உயர்ந்த ஹாப்டோன் வர்ணப்படமும், 27 சித்திரப் படங்களும் அடங்கியுள்ளன ... ... 2 0 0

ஷை மூலமாத்திரம் தனி (செய்யுள் முதற்குறிப்பகராதியுடன்) 0 12 0

பழமொழி அகராதி:—இதில் தமிழ் நாடுகளில் வழங்கும் சுமார் 12,000 பழமொழிகள் அகராதி வரிசையாகத் திரட்டி அச்சிடப்பட்டுள்ளன ... ... ... 2 0 0

தாயுமானசுவாமிகள் திருப்பாடற்றிரட்டு:—முதல் மூன்று பாடல்களுக்கு விரிவான உரையும், நூல் முழுதும் வரும் பாடல்களிலுள்ள அரும்பதங்கட்குக் குறிப்புரையும் அடங்கியது (சுவாமிகள் சரித்திரம், படத்துடன்) ... 1 0 0

பட்டினத்துப்பிள்ளையார் பாடல் முற்றும், புராண முற்றும், பத்திரகிரியார் புலம்பல் முற்றும் (பட்டினத்தார், பத்திரகிரியார் சரித்திரங்களுடன்) ... ... ... 1 0 0

நாலடியார்:—மூலம், பதவுரை, பொழிப்புரை, விசேஷவுரை, இங்கிலீஷ் மொழிபெயர்ப்புகளுடன் ... ... 1 2 0